# அன்பெனும் நிழலில்

நாராயணி கண்ணகி



# அன்பெனும் நிழலில்

நாராயணி கண்ணகி

மூவர் நிலையம்
32/107, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600014

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : அன்பெனும் நிழலில் |
| ஆசிரியர் | : நாராயணி கண்ணகி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : செப்டம்பர், 2007 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 10 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 224 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : மூவர் நிலையம்<br>32/107, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14. |
| கணினி அச்சு | : வேலன் லேசர்<br>சென்னை-18. ✆:94441-01753 |

**விலை: ரூ.80.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : கே.வி.எஸ். ஆப்செட்<br>சென்னை-14. ✆:28480166 |


# அன்பெனும் நிழலில்

உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | அன்பெனும் நிழலில் | 5 |
| 2. | காதல் எனும் கானல்..! | 64 |
| 3. | குடும்பம் ஒரு கோயில் | 159 |


# அன்பெனும் நிழலில்



## 1



போன் ஒலித்தது.

ஆர்வம் பொங்க எடுத்தாள். ''ஹலோ!''

''ஐ லவ் யூ.''

''அடிவிழும் நாயே... எத்தனை முறை சொல்லி இருக்கேன். போன் பண்ணாதேன்னு... இப்போ ஒரு அவசியமான போனுக் காகக் காத்திருந்தேன்.''

''நான் உன் கடைக்கண் பார்வைக்காகக் காத்திருக்கேன்.''

''உதை விழுந்தாத்தான் உனக்குப் புத்தி வருமா?''

''போன்ல ஒண்ணும் பண்ண முடியாதுன்னுதான் தைரியமா பேசறேன். நான் ஹெல்மெட்ல வர்றது, பைக் ஆக்ஸிடண்ட் ஆயிட்டா அடிபடாம இருக்கிறதுக்கு இல்லை. உன்னை மாதிரிப் பொண்ணுங்க தர்ற அடி விழாம இருக்கவும், மத்த

ஜனங்க முகத்தைப் பார்க்காம இருக்கவும்தான்... மானம் போகக் கூடாதில்லை.''

''வைடா பொறுக்கி! மறுபடியும் போன் பண்ணாத...''

''ஒரு நிமிஷம்.''

''போனை வைடா...''

''ஐ லவ் யூன்னு சொல்லேன்.''

''வாழ்நால்ல கெட்ட வார்த்தை எதுவும் பேசக்கூடாதுன்னு நினைக்கிறேன். பேச வைச்சிடாதே. போனைக் கட் பண்ணு.''

''மாட்டேன்... நீ ஐ லவ் யூ சொன்னாத்தான்...''

''டேய்... விருந்தாளிக்குப் பொறந்தவனே... போனை வைடா.''

''ஆமா அது எங்க அப்பாதான்... திருவிழாவுக்குப் பாட்டி வீட்டுக்கு விருந்துக்கு வந்திருக்கார்... ஆமாண்டி அந்த ரகசியம் உனக்கு எப்படிடி தெரியும்? நான் விருந்தாளிக்குத் தாண்டிப் பொறந்தேன்.''

''டேய் பொணமே... எனக்கு முக்கியமான ஒரு போன் வரணும்டா. தயவு செஞ்சி வைச்சிடுடா...''

''நான் என்ன இளிச்சவாயனா? ஏமாளியா? லைன் கிடைக்கும்போதே பேசிடணும். அப்புறம் கட் பண்ணி வைச்சிருப்பே... உன்னை லைன்ல புடிக்கிறதே என் வாழ்நாள் சாதனைடி... நீ எம்மாம் பெரிய கேடின்னு எனக்குத் தெரியாதா?''

''ப்ளீஸ்டா ஒரு கால் மணி நேரம் கழிச்சுப் பண்ணுடா...''

''மாட்டேன். ஐ லவ் யூ சொல்லு.''

''லவ்வுங்கிறது வாயில சொல்லி காதுல கேட்டுக்கிற வார்த்தை இல்லைடா... வெறும் வார்த்தை! மனசுல இருந்து வரணும். அது வந்துச்சுன்னா ஐ லவ் யூன்னு சொல்லாம



லேயே மனசுல காதல் இருக்கும். உன் மேல எனக்குக் காதல் வரலை... அவ்ளோதான். போனை வை. உனக்கு ஒரே ஒரு அப்பான்னா போனை வைச்சிடு.''

''ஏண்டி முண்டம். உனக்கு ஜுவாலஜி தெரியாதா? ஒரு உயிருக்கு ஒரு தந்தைதான் இருக்க முடியும்.''

''போனை வைடா.''

''ஐ லவ் யூ சொல்லு.''

''நீ எங்கிருந்து பேசற சொல்லேன். நான் அங்க வந்து நேர்ல சொல்றேன்.''

''ஆ... அசுக்கு புசுக்கு. போலீசைக் கூட்டினு வருவே. எனக்குத் தெரியாதா?''

''டேய் பன்னி.''

அதற்கு மேல் பொறுமை இல்லாமல் போனை வைத்தாள் சௌந்திரி.

அடுத்த நொடியே போன் அடித்தது.

எடுத்து ''ஹலோ!'' என்றாள்.

''ஐ லவ் யூ.''

மீண்டு போனை வைத்தாள்.

அடுத்த நொடியே போன் அடித்தது.

''ஹலோ!''

''ஐ லவ் யூ.''

போனை வைத்தாள்.

மீண்டும் ரிங்.

'எப்படிச் சாத்தியம்?'

சௌந்திரி போனை எடுத்துக் கீழே வைத்துவிட்டு 'எவ்ளோ நேரமானாலும் கத்திட்டு இருடா நாயே..' என்று போனைப் பார்த்துச் சொல்லிவிட்டு கதவை மூடிக் கொண்டு வெளியே வந்தாள்.

சாலையில் இறங்கி நடந்தாள்.

செருப்பு கடைக்குள்ளிருந்த டெலிபோன் பூத்திற்குள் போனாள்.

ஐ.எஸ்.டி. செய்தாள்.

''ஹலோ ப்ரேம்'' என்றாள்.

''போ. என் கூடப் பேசாத...''

''ஸாரி, போன்ல அக்கா பேசிட்டிருந்தாங்க.''

''அக்கா கூடவே பேசு. என் கூடப் பேசாத... ஒரு மணி நேரம் ட்ரை பண்ணி, ட்ரை பண்ணி என் விரல் தேய்ஞ்சிருச்சு.''

''ஸாரி ப்ரேம்......''

''நான் போன் பண்றேன்னு சொன்னேன் இல்லையா? கடல் கடந்து இருக்கிறவனோட கஷ்டம் தெரியணும். பேசாத போனை வைச்சிடு.''

''ப்ளீஸ் ப்ரேம்.''

''வேணாம்.''

பில் மீட்டர் வேகமாக ஓடி, பணம் எகிறிக் கொண்டிருந்தது.

சௌந்திரிக்கு அழுகை வரும் போலிருந்தது.

''ஐ லவ் யூ ப்ரேம்.''

''வேணாம் நீயே வைச்சுக்க...'' என்று கூறி போனை வைத்து விட்டான்.

கண்களைத் துடைத்தபடி போனை வைத்தாள்.



நூற்றியம்பது ரூபாய்க்கு மேல் பில் ஆகிவிட்டது.

அது பெரிதில்லை.

பணம் சுலபமானது.

இந்தியாவில் ஆயிரம் ஆயிரமாய் சம்பாதிக்கலாம், மலேஷியா, சிங்கப்பூரில் பத்தாயிரம், இருபதாயிரம் சம்பாதிக்கலாம், லண்டனில் லட்ச லட்சமாய் சம்பாதிக்கலாம். பணம் பெரிசில்லை. மனம் பெரிசு.

ப்ரேமின் மனமெல்லாம் சௌந்திரி.

சௌந்திரியின் மனமெல்லாம் ப்ரேம்.

உருகி, உருகி வளர்ந்த காதல்.

''மலேஷியா போய்த்தான் ஆகணுமா ப்ரேம்?''

''கண்டிப்பா.''

''என்னை மறந்துட்டு உங்களால மலேஷியாவுல இருக்க முடியுமா?''

''முடியாது, முடியாதுன்னு நிறைய விஷயங்கள் இருக்கு சௌந்திரி. அதையெல்லாம் பார்த்தா வாழவே முடியாது. இப்போது உலகம் சுழல்றது, உயிர்களுக்காக இல்லை. பணத்துக்காக. கடவுள் படைச்ச எல்லாமே இங்க பணமா மாறிட்டிருக்கு... மண்ணு, மணலு, கல்லு, புல்லு, சாணி, தங்கம், வைரம், தகரம்னு எல்லாம் பணமாயிட்டிருக்கு... பணம் இல்லேன்னா எல்லாமே அம்பேல்... கணவன் மனைவி உறவு, காதல், பாசம், அன்பு எல்லாமே அம்பேல்.''

''அப்படியெல்லாம் இல்லை ப்ரேம். பணத்தால மண்ணும் மலையும் வாங்கலாம், தங்கமும், தகடும் வாங்கலாம். அன்பு, பாசம், காதல் எதையும் வாங்க முடியாது. பணத்துக்காக எவளாவது லவ் பண்ணா அது லவ் இல்ல... வேற.''

பிரேம் சிரித்தான்.

அவனுடைய சிரிப்பிற்கு அர்த்தம் புரியாமல் பார்த்தாள்.

''ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு கொள்கை உண்டு. அவங்கவங்க கொள்கையில் அவங்கவங்க உறுதியா இருக்கோமான்னு பார்ப்போம். ஆனா நான் மலேஷியா போற முடிவை மாத்திக்கப் போறதில்லை.''

''எத்தனை வருஷம்?''

''ரெண்டே ரெண்டு வருஷம்.''

''ரெண்டு வருஷமா?''

''என்ன அரண்டு போய் கேட்கிற?''

''இல்லை, ரெண்டு நாள் பார்க்கலைன்னா பாடாப் படுவீங்க. ரெண்டு வருஷம் எப்படி? உங்களுக்கு மட்டும் இல்லை எனக்கும்தான் கஷ்டம்.''

''திடீர்னு இன்னைக்கு நான் செத்துப் போறேன்னு வைச் சுக்க... என்ன பண்ணுவே? வாழ்நாள்ல எப்பவும் பார்க்க முடியாதே.''

''சே... இப்படிப் பேசறதை விட்டுடு பிரேம்.'' கோபமாய்ப் பார்த்தாள்.

''நாளைக்கு என்ன நடக்கும்னு இன்னைக்குச் சொல்ல முடியுமா?''

''இப்படிப் பேசற ஆளுக்கு அன்பு வேணாம். லவ்வும் வேணாம், பணமும் வேணாம். நாளைக்கு உயிர் வாழ மாட்டோம்ங்கிற சித்தாந்தத்திலேயே சாகனும்.'' மேலும் கோபமாகி ''போய்யா போ... சாவுய்யா சாவு...'' என்றாள்.

பிரேம் சௌந்திரியைப் புன்னகைத்தவாறு இழுத்தான். காது மடலுக்குக் கீழே கழுத்தில் முத்தமிட்டான்.



மெல்லிய குரலில் காதலோடு சொன்னான். ''உன்னை விட்டுட்டு நான் செத்துப் போக மாட்டேண்டி, உன் கூட வாழனும். பொறந்ததுக்கு அர்த்தம் வேணும். உன்னோட வாழனும்'' என்றபடி ஏறி இறங்கிய குரல் வளையைக் கடித்தான். ''குரல் வளையைக் கடிச்சித் துப்பினா ஆத்திரம் தீருமாம்... உன் குரவலையைக் கடிச்சித் துப்பினாத்தான் என் காதல் தீரும்.''

''போடா... போடா...'' என்றாள் காதல் அதிகமாகி.

''உன்னை அப்படியே தூக்கினு போய் புதைச்சிடறேன்.''

''சுடுகாட்லயா?''

''என் நெஞ்சுக்குள்ள...''

இறுக்கி அணைத்தாள். முதுகில் கிள்ளினாள். அவனுடைய வலது மார்பில் பதிகிற மாதிரிக் கடித்தாள்.

''ஆ...'' அலறினான்.

காதல் புரிவதில் நூல் அளவிற்குக் கூடக் குறைவில்லை. உருக உருகக் காதலித்தார்கள்.

மலேஷியா புறப்பட்டான்.

அழுகை அழுகையாக வந்தது.

துக்கம் அடைக்க நின்றான் பிரேம். ''இப்போ தோணுது பணம் வேணாம், நாம பிரியாம இருந்தாப் போதும்னு...''

''கான்சல் பண்ணிடுங்களேன்.''

''ஒரு லட்சம் செலவு பண்ணியிருக்கேன். அது போயிடுமே...''

''ஒரு லட்ச ரூபாயை இங்கே முதலீடு பண்ணி இருந்தா மலேஷியாவுல சம்பாதிக்கிறதைவிட அதிகமா சம்பாதிக் கலாம். சொந்த மண்ணுல, சொந்த ஜனங்களோட, முக் கியமா என்னோட சந்தோஷமா இருந்திருக்கலாம்.''

''இதுக்கு மேல யோசிக்க அவகாசம் இல்லை. போய் வருகிறேன் கண்ணே!''

பிரிந்தார்கள்.



2



மலேஷியாவின் தலைநகர் கோலாலம்பூரில் உலகத் தரத்துடன் கூடிய பெரிய ஓட்டல்.

தமிழகத்திலிருந்து பிரபல தமிழ் நடிகர்கள், நடிகைகள் வந்து தங்கி இருந்தார்கள்.

கலைச்சேவை.

அந்த ஓட்டலில்தான் பிரேம் ரூம் பாயாக வேலை செய்து கொண்டிருந்தான்.

அவனோடு வந்த முகமது இஸ்மாயில், அத்தாவுல்லா, அற்புததேவன் இந்த மூவரும் கூட ஓட்டலில்தான் வேலை செய்கிறார்கள்.

கம்ப்யூட்டர் பயின்றவர்களுக்கு இங்கே மேனாமினிக்கி வேலை கிடைக்கும் என்று வந்தார்கள். தங்களுக்குத் தனியாக ஏ.சி.யில் அலுவலகம், தங்குவதற்கு ஏ.சி. அறை, ஆளுக்கொரு ஏ.சி. கார் என்று இங்கே சொர்க்கம் அனுபவிக்கலாம் என்று வந்தார்கள்.

எம்.சி.ஏ. படித்த படிப்பிற்காக ஓட்டலில் வேலை கிடைத்தது. மற்றவர்கள் ரப்பர் தோட்டத்திற்குப் போய் விட்டார்கள். சிலர் பாமாயில் தயாரிக்கிற ஆலைகளுக்குப் போய் விட்டார்கள். ஆசை வார்த்தைகள் காட்டி ஏஜென்ட் அன்வர்



இப்ராஹீம் அழைத்து வந்து இப்படித் தண்டித்து விட்டான். இந்த கீழ் மட்டமான எடுபிடி வேலைக்கே ஓட்டல் நிர்வாகத்திடம் சம்பளம் நேரடியாக வாங்க முடியாது. அன்வர் இப்ராஹீமிடம் போய்த்தான் வரும்.

மலேஷியா நாணயம் ரிங்கிட்.

அந்த ரிங்கிட்டிற்கு என்ன மதிப்பு? இந்திய ரூபாய்க்கும் அதற்கும் எவ்வளவு ஏற்றத் தாழ்வு? இந்திய நேரத்திற்கும் மலேஷிய நேரத்திற்கும் எவ்வளவு வித்தியாசம்?

எதுவும் தெரிந்துகொள்ள அவகாசம் இல்லை.

மிலிட்டிரி வாழ்க்கையைவிட மோசமானது. தேசத்தோடு சொந்தங்களோடு உறவுகள் இன்றி, எல்லைகளில் பனிப் பிரதேசங்களில் வாழ்கிற மாதிரி ஓட்டலுக்குள்தான் சகலமும்.

முகமது இஸ்மாயிலுக்கும், அத்தாவுல்லாவிற்கும் ஓட்டல் ரொம்பவும் பிடித்து விட்டது. ராஜ வாழ்க்கையாகப் பட்டது. விலை உயர்ந்த மது வகைகள், உணவுகள், சிகரெட்டுகள், சில வேளைகளில் சுலபமாகவும், இலவசமாகவும் கிடைத்தது. எதற்கும் ஐந்து பைசா, ஸாரி, ஐந்து ரிங்கிட் செலவு கிடையாது.

கூடுதல் சந்தோஷம் ஒன்றும் உண்டு. அது கலை நிகழ்ச்சி செய்வதற்காக தமிழ் நட்சத்திரங்கள் அங்கே வந்து ஜொலிப்பதுதான். அதுவும் இந்த ஓட்டலில் வந்து தங்கினார்கள்.

''ஏண்டா, அந்தப் பையா சைலண்ட்டா இருக்கான்?'' மானேஜர் கேட்டார்.

''அவங்க லவ்வருக்குப் போன் பண்ணான். ரொம்ப நேரம் எங்கேஜ்டு, அதனால கோபம்.''

''லவ் பண்ற பேட்டா, நாடு தாண்டி ஏன் வரணும்? பய்யா! உன் லவ்வர் வேறொரு பார்ட்டியோட ஜூட் போயிட்டா என்னா பண்ணுவே...? உன் லவ்வரும் அப்படித்தான், இப்போ உன்னை மறந்து போயிருப்பா... உன் மேல லவ் இருந்தா நீ சொன்ன டைமுக்கு அவள் காத்திருக்கணும். போன்ல உயிரே பறந்து வரணும்.'' மேனேஜர் சொல்லச் சொல்ல பிரேமின் மனம் வாடியது.

எல்லோரும் தூங்கி விட்டார்கள்.

பிரேம் தூங்கவில்லை.

உட்கார்ந்து கொண்டிருந்தான்.

சௌந்திரியின் முகம் நெஞ்சக் கண்களில், ஞாபகமாகப் படங்களாய் வந்து போயின.

''என்ன பணம்? ஏன் நான் இங்கே வந்தேன்? நான் போற வரைக்கும் சௌந்தரி எனக்காகக் காத்திருப்பாளா?''

'விடுவேனா? அவள் வேற கை மாறினா விடுவேனா? வெட்டிடுவேன். சம்பாதிக்கிறதுக்காக மலேஷியா வந்தேன். காதலுக்காக ஜெயிலுக்குப் போவேன்.' மனம் குளுரைத்தது.

மாடியிலிருந்து சத்தம். கதவை உடைக்கிற மாதிரி தட்டிக் கொண்டிருந்தார்கள்.

மாடி ஏறிப் போனான்.

அந்தக் காட்சியைப் பார்த்து அதிர்ந்தான்.

பிரபலமான அந்த நடிகர் ஒரு அறையின் கதவைத் தட்டிக் கொண்டிருந்தார். அந்த அறையில் முன்னணி நடிகை தங்கிக் கொண்டிருந்தாள்.

நடிகர்தான் கதவை உடைக்கிற மாதிரி தட்டினார்.



நீண்ட நேரத் தட்டலுக்குப் பிறகு நடிகை கதவைத் திறந்து வெளியே வந்தாள்.

நெருப்பு போன்று முகம் வைத்திருந்தாள். நடிகரின் முகத்தில் காறித் துப்பினாள். நடிகரோ முகத்தில் பதிந்த எச்சிலைத் துடைத்தபடி அவளைத் தீண்டப் போனான்.

அவள் ஹிந்தியில் கெட்ட கெட்ட வார்த்தைகளால் திட்டினாள்.

அந்த மாபெரும் நடிகர் பல்லிளித்தார். நடிகையைத் தெய்வமாய்ப் போற்றிக் கைகளைக் குவித்தார்.

அவள் மேலும் அசிங்கமாய்த் திட்டிவிட்டுக் கதவை மூடிக் கொண்டாள்.

தூக்கம் வராமல் பார்த்துக் கொண்டிருந்தான் பிரேம்.

அந்தப் பெரிய அற்புதமான நடிகர் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு போனார்.

உட்கார்ந்திருந்த பிரேமைப் பார்த்துப் புன்னகைத்து விட்டு வேறொரு நடிகையின் அறையைப் போய்த் தட்டினார். அவள் கையில் சிகரெட்டோடு தள்ளாடியபடி கதவைத் திறந்தாள்.

அற்புதமான நடிகரைப் பார்த்ததும் போதையிலும் வாயைப் பிளந்தாள். சிகரெட் புகை நடிகரின் முகத்தில் பரவியது. அணைத்துக் கொண்டு அறைக்குள் புகுந்தார்கள்.

பிரேம் தலையில் அடித்துக் கொண்டான்.

அந்த முன்னணி நடிகை அறையை விட்டு வெளியே வந்தாள்.

அற்புதமான நடிகரை விசை பாடினாள். பிரேமைப் பார்த்து என்னத்துக்கோ வெட்கமடைந்தாள். நடிகையின் வெட்கம் ஆச்சர்யமளித்தது. காமிரா இல்லாமல் டைரக்டர் சொல்லித் தராமல் நடிகையால் வெட்கப்பட முடிகிறதே...

''ஹலோ!'' என்றாள் பிரேமைப் பார்த்து.

''ஹலோ!'' என்றான் இவனும்.

''டமிலா?''

''யெஸ்.''

''என் ஃபிலிம் பார்த்திருக்கியா?''

''பார்த்திருக்கேன். ரோஸ், மனதில் காதல், காதல் பூங்கா, இப்போ லேட்டஸ்ட்டா வந்த பெருமாள் எல்லாம் பார்த் திருக்கேன்.''

''என் ரூமுக்கு வாயேன் பேசலாம்.''

பெரிய அற்புதமான நடிகரைத் காறித் துப்பித் துரத்திய நடிகை பிரேமை ரூமுக்கு அழைத்தாள்.

திரையில் பார்த்துப் பார்த்து மயங்கிய நடிகை அவனுக்கு எதிரே நின்றாள். எந்தப் பெண்ணையாவது பார்த்தால் சினிமா நடிகையைப் போன்று அழகாக இருந்தாள் என்று வர்ணிக்கலாம். சினிமா நடிகையை என்னவென்று வர் ணிப்பது? முப்பது படத்தில் கதாநாயகியாக நடித்தவள். இளம் நடிகர்கள் முதல் கிழம் நடிகர்கள் வரை ஜோடி சேர்ந்து டூயட், பாடி ஆடி விட்டார்கள். டான்ஸ் மூவ்மெண்ட் அபாரமாக இருக்கும். இந்த நடிகைக்கு ஈடு கொடுத்து, இவளின் வேகத்தில் வேறு எந்த நடிகராலும் ஆட முடியாது. சிங்கப்பூர் மலேஷியா கலை நிகழ்ச்சிகளில் டான்ஸ் க்ரூப் போடு நடிகை மட்டும் தனியாக ஆடுவாள். சொக்க வைக்கும் ஆட்டம்.



மின்னல் ஒன்று பெண்ணாக மாறி
மேக மேடையில் ஆட்டம்
தென்றல் காற்று சூடேறிப் போக
தேக வளைவினில் ஓட்டம்

- என்ற பாட்டு சென்ற வருடத்து ஹிட். நடிகையின் டான்ஸிற்காகவே பாட்டு ஹிட்டாகி, படமும் ஹிட்டானது.

அப்படிப்பட்ட பேரழகி, பிரகாசமான நடிகை. அவளின் கடைக்கண் பார்வைக்காகக் கோடிக்கணக்கானோர் காத் திருக்க பிரேமைத் தன் ரூமுக்கு அழைத்தாள்.

அவன் தயக்கத்துடன் உள்ளே போனான்.

''ஆர்ட்டிஸ்ட் லைஃபே வேணாம்பா. அதைவிடப் பிச்சைக் காரியா ப்ராஸ்ட்டியூட்டா லைஃப் பண்ணலாம். புரொட் யூஸர் டார்ச்சர், டைரக்டர் டார்ச்சர், ஹீரோக்கள் டார்ச்சர், சுத்தி வளைச்சி அதுக்காகன்னு யூஸாகறதைவிட டைரக்டா அதுக்காகத்தான்னு லைஃப் பண்ணலாம் இல்லையா?''

புரிந்தும் புரியாமலும் தலையாட்டினான்.

அவள் கட்டிலில் அமர்ந்தாள்.

அவனையும் உட்காரச் சொன்னாள்.

உட்கார்ந்தான்.

''அந்த ஆக்டர் உனக்குத் தெரியுமா?''

''இப்போ வந்து போனாரே அவரா?''

''யெஸ். தெரியுமா?''

''ஓ... அவரை எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவர் படம்னா முதல் நாள் முதல் காட்சி பார்த்துடுவேன். அவரோட நடிப்பு ரொம்பப் பிடிக்கும்.''

''எல்லாம் ஃபிக்ச்சர்ல.. நேர்ல பார்த்தியா? எத்தனை ரூம் கதவைத் தட்றான். அறிவு வேற, உடம்பு வேறன்னு தத்துவம் பேசுவானுங்க. நான்வெஜ் ஃபுட்டுன்னு எடுத்துக்க ஆரம்பிச்சிட்டா ஆடு, கோழி, மாடு மனுஷன் எதுன்னாலும் நான்வெஜ் தான்னு நினைக்கிறவன். வெஜ்ஜின்னா அரிசி, கோதுமை, பால், முட்டை, பொம்பளை எல்லாமே வெஜ்ஜின்னு நினைக்கிறவன்.''

என்ன கோபமோ அவள் அப்படிப் பேசினாள்.

பிரேம் மௌனமாக நின்றான்.

''நீ எந்தப் பெண்ணையாவது கதவைத் தட்டிக் கூப்பிட்டு இருக்கியா?''

''இல்லை.''

''எந்தப் பெண்ணையாவது கையைப் பிடிச்சி இழுத் திருக்கியா?''

''இல்லை.''

''எந்தப் பெண்ணையாவது ஆசை. வார்த்தை காட்டி ஏமாத்தி இருக்கியா?''

''இல்லை.''

''எந்தப் பெண்ணையாவது உன்னைக் கொன்னுடுவேன் அட்ரஸ் இல்லாமப் பண்ணிடுவேன்னு பயமுறுத்திக் கெடுத் திருக்கியா?''

''இல்லை.''

''எந்தப் பெண்ணையாவது நீ இல்லேன்னா நான் செத்துப் போவன்னு ஆசைகாட்டி ஏமாத்திக் கெடுத்திருக்கியா?''



''இல்லை.

''இதெல்லாம் அவன் செய்வான்... இன்னும் அதிகமாகவே செய்வான். அவனைவிட நீ லட்சம் மடங்கு உயர்ந்தவன். உன்னை மாதிரி நல்லவனுக்கு ரூம் கதவைத் திறக்கலாம். மனசுல இடம் தரலாம்.''

நெஞ்சில் ஐஸ் இறங்கின மாதிரி இருந்தது.

நடிகையின் அருகாமை அழகில் மயங்கி சகலமும் மறந்து அமர்ந்திருந்தான்.

சௌந்தரியை மறந்தான். இந்த உலகை மறந்தவன். சுற்றுப்புறத்தை மறந்தான்... தன்னையே மறந்தான்.

''உன் பேரென்ன?''

''பிரேம்.''

அவன் கையைப் பறித்து முத்தமிட்டாள்.

உடம்பெல்லாம் நடுங்கிற்று. அவள் முத்தம் பதித்த இடங்களில் அவன் உயிர் குவிந்தது. சொர்க்கம் தெரிந்தது.

''இது நிஜமா?''

''இது கனவா?''

''கடவுளே...!''

மூச்சு நின்றுவிடும் போல இருந்தது.

நடிகை அவனைக் கட்டி அணைத்தாள்.

அவளுக்குள் புதைந்தான்.

அந்த நேரத்தில் கதவைத் தட்டுகிற சத்தம்.

''மறுபடியும் அவன் வந்துட்டான்'' என்றபடி பிரேமை விடுவித்தாள். எழுந்து போய் கதவைத் திறந்தாள்.

அற்புதமான நடிகர் உள்ளே வந்தார்.

''உலகத்துல நீ ஒருத்திதான் பொம்பளையா? எனக்குப் பொம்பளையே இல்லையா? எல்லாப் பொம்பளையும் ஒண்ணுதான் தெரியுமா?''

''தெரியும். உனக்கு மாட்டுக்கறி, ஆட்டுக்கறி, மனுஷக்கறி எல்லாம் ஒண்ணுதான்...'' என்றாள்.

''உன் கறியில், அழகான கறியில் திமிர் அதிகம்.''

''உனக்கு ரொம்ப அறிவுன்னு திமிர்.''

''எதிர்த்துப் பேசற? நான் பெண்களை ஆண்களுக்குச் சமமா மதிக்கிறவள். அதனால என்னை எதிர்த்துப் பேசற... வேற ஆளுன்னா உன்னை மிரட்டிப் பணிய வைச்சிடுவான்.''

''எனக்கு எல்லா ஆண்களும் ஒண்ணுதான், அவங்களுக்குத் தேவை பெண்கள்.''

''பேசக் கத்துகிட்ட, என்கிட்ட இருந்து பேசக் கத்துக்கிட்ட...''

''யெஸ்.''

அந்த நடிகர் பிரேமைப் பார்த்தார்.

''இவன் யாரு. டான்ஸரா?''

''ஆம்பளை.'' என்றாள்.

''டான்ஸராடா நீ?''

''இல்லைங்க ஸார். ஓட்டல் வேலை செய்றேன்.''

பளாரென்று கன்னத்தில் அறைந்தான்.

பிரேம் கண்களில் நீர் முட்ட நின்றான்.



நடிகர், பிரேமின் இன்னொரு கன்னத்தில் பேயாய் அறைந்தான். அறை வாங்கின வேகத்தில் கட்டில் மீது விழுந்தான். கன்னம் சிவந்து விரல்கள் பதிந்தது.

நடிகர் சிரித்தார். ''இவன் ஆம்பளையா, ஆம்பளை அடி வாங்குவானா?''

நெற்றியில் இன்னொரு அறை விழுந்தது. மூளை கலங்கி விடும் போலானது. ''இவன் ஆம்பளையா? இவன்தான் உனக்குப் பிடிச்சிருக்கா?'' சிரித்தான்.

பிரேமிற்குத் துக்கமாய் வந்தது. கண்கள் பொங்கிற்று. அடி வாங்கினதைவிட ஆம்பளையா என்று கேட்டுப் படுத்தியது நெஞ்சைக் குத்தியது. ஆத்திரம் பொங்கிற்று.

எழுந்தான் நடிகரின் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான். நடிகர் தடுமாறி நன்றார்.

''ஆம்பிளை.'' என்றான் பிரேம்.



## 3

சௌந்தரி படுக்கையிலிருந்து எழுந்தாள்.

''ஏண்டி சௌந்து, நைட் சாப்பிடாமப் படுத்துட்டே?'' ரூம் மேட் சௌமாவினி கேட்டாள். நைட் ட்யூட்டி முடித்து அப்போதுதான் வந்திருந்தாள்.

''பசிக்கல.''

''கண்களெல்லாம் ஒரு மாதிரியா இருக்கு... தூங்கலையா?''

''இல்லை.''

''ஏண்டி?''

''அஸ்வினை இன்னைக்குப் பளீர்னு அடிக்கணும்.''

''வழக்கம்போலப் பிரச்சினையா? ஓ... நேத்து ஒண்ணாம் தேதியா? பிரேம் போன் பண்ணி இருப்பார். இவன் டிஸ்டர்ப் பண்ணி இருப்பான். இன்னும் பத்து நாளைக்கு அவன் உன் முன்னாடி வரமாட்டான்.''

''அவன் எங்கே இருக்கான் தெரியுமா?''

''தெரியாதே.''

சௌமாலினி உடைகளை எடுத்துக்கொண்டு சோப்பு, டவலோடு குளிப்பதற்கு பாத்ரூம் போனாள்.

சௌமாலினி இளம் விதவை. இரயில்வேயில் டிக்கெட் தருபவராகப் பணிபுரிகிறாள். அவளின் கணவர் பிரபாகரன் ரயில் டிரைவராகப் பணிபுரிந்தார். ஆனால் பஸ் விபத்தில் இறந்து போனார். சௌமாலினிக்கு வேலை கிடைத்தது.

சௌந்தரிக்குக் கிடைத்த வேலை அப்பாவுடையது. அப்பா ஹார்ட் அட்டாக்கில் பயணமாகிவிட, டிக்கெட் பரிசோதகர் வேலை. சொந்த ஊர் வேலூர் மாவட்டத்தில் ஜோலார் பேட்டை, அப்பா ஜோலார்பேட்டையில்தான் வேலை செய் தார். சௌந்தரிக்கு சென்னை சென்ட்ரலில் போஸ்டிங்.

நல்லதாகத் தேடி லேடீஸ் ஆஸ்டலில் தங்கி விடத்தான் திட்டம். போஸ்ட்டிங் கிடைத்ததும் தினசரி ஜோலார் பேட்டை ரயிலில் போய் வந்தாள். அது சிரமமானதாக இருந்தது. நான்கு மணி நேரப் பயணம். போக நான்கு மணி நேரம் வருவதற்கு



நான்கு மணி நேரம். எட்டு மணி நேரம்... வேலை செய்வதற்கு எட்டு மணி நேரம் பயணம் செய்ய வேண்டும்.

சௌந்தரிக்கும், சௌமாலினிக்கும் நட்பு உண்டானது. இருவரும் சேர்ந்து வில்லிவாக்கத்தில் சின்னதாக வீடு பார்த்துத் தங்கிவிட்டார்கள்.

இருவருக்கும் சம வயதுதான். சௌந்தரி திருமண மாகாமல் காதலித்துக் கொண்டிருப்பவள், சௌமாலினி திருமணமாகி விதவையானவள்.

கம்ப்யூட்டர் கற்றுக்கொண்டதால் தானும் டிக்கெட் பதிவு செய்யும் அலுவலராகப் போய்விடலாம் என்றெண்ணி தினமும் கம்ப்யூட்டர் சென்டருக்குப் பயிற்சிக்குப் போகத் தொடங்கினாள் சௌந்தரி. அங்கேதான் பிரேம் காதல் உருவானது.

பிரேம் திரவியம் தேட திரைகடல் ஓடிவிட்டான்.

காதல் ஓடுமா?

அஸ்வின் இடையில் புகுந்து இம்சை செய்கிறான்.

காதல் மாறுமா?

அஸ்வின் ஆறடி உயரம். சிவப்பு நிறம். திடகாத்திரம். நாளொன்றுக்கு மூன்று முறை உடை மாற்றுவான். அடர்த்தி யான மீசை, மீசையோடு போட்டிக்கு நிற்கும் புருவம், இனிமையான குரல், சாதுர்யமான பேச்சு. எந்தப் பெண்ணை யும் எளிதில் மயக்கிவிட முடியும் என்கிற நம்பிக்கை, திமிர்.

அஸ்வின் மெகா சீரியல் நடிகன், நான்கைந்து சீரியல்களில் முக்கியமான பாத்திரம். சினிமாவிலும் நடிக்கிறான். செகண்ட் ஹீரோவாக காதல் மாளிகை படத்தில் நடித்தான். ஏற்கனவே

வசதியான குடும்பம். நடிப்பதால் கிடைக்கும் பணம், கார், பங்களா, ஆடம்பரம், அவனிடம் மினுமினுப்பு இருந்தது.

ஒருமுறை.

அஸ்வினோடு நடிக்கும் நடிகை ஸ்ரீகவியை மைசூர் அனுப்பி வைப்பதற்காக ஒரு நாள் சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன் வந்தான். எல்லா நடிகைகளுக்கும் இது போன்ற உதவிகள் செய்வான். அவர்களின் உதவிகள் அவ்வப்போது தேவைப்படுகிறதே...

சதாப்தி சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸில் ஸ்ரீகவியை ஏற்றி விட்டுத் திரும்பும் போது சௌந்தரி அவனை வாயிலில் நிறுத்திக் கொண்டாள்.

''டிக்கெட்?''

அவன் அவளை ஏளனமாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு நகர்ந்தான்.

''மிஸ்டர்... உங்களைத்தான்... டிக்கெட்?'' சத்தம் போட்டாள்.

அவன் முறைத்துப் பார்த்து நகர்ந்தான்.

''போலீஸ்... போலீஸ்...'' என்றழைத்தாள்.

தமிழ்த் தெரியாத வடநாட்டு போலீஸ்காரர்கள் இரண்டு பேர் துப்பாக்கியுடன் ஓடி வந்தார்கள்.

கூடி இருந்தவர்கள் வேடிக்கை பார்த்தார்கள்.

அஸ்வினுக்கு அவமானமாகிவிட்டது.

''உன்னை ரேப்பா பண்ணிட்டேன். போலீஸைக் கூப்பிடற?''

''டிக்கெட் எடுடா பொறுக்கி.''



பற்களைக் கடித்தான்.

போலீஸ்காரர்கள் வந்து அவன் அருகே வந்து இரண்டு பக்கம் நின்று கொண்டார்கள்.

''நான் யாருன்னு உனக்குத் தெரியல, ஆர்டிஸ்ட், ஒன்பது மணிக்கு வளையல் ஓசை சீரியல் பார்க்கறதில்லையா? பாரு... அதுல நடிச்சிருக்கேன்.''

''இருக்கட்டும், டி.வி. சீரியல்ல நடிச்சா டிக்கெட் வாங்காம ட்ரெயின்ல போலாம்னு எதுனா சட்டம் இருக்கா?''

''ஏய்...''

''மரியாதையா பேசு. உள்ள போனா ஆறு மாசம்.''

''நான் டிராவல் பண்ணலை. ஒருத்தரை ட்ரெயின் ஏத்த வந்தேன்.''

''ஸ்டேஷனுக்குள்ள வந்தா பிளாட்ஃபார்ம் டிக்கெட் வாங்கணும் தெரியுமில்லை?''

''எவ்ளோ பிராட்ஃபார்ம் டிக்கெட், த்ரீ ரூபிஸ்?'' என்றபடி பாக்கெட்டில் கைவிட்டுச் சில்லறை எடுத்தான்.

''ஃபிப்ட்டி ரூபிஸ் ஃபைன் ப்ளஸ் த்ரீ ரூபிஸ். கிவ் மீ ஃபிப்டி த்ரீ ரூபிஸ்.''

அஸ்வின் முறைத்தான்.

அவனிடம் பணம் இல்லை. கிரெடிட் கார்டுதான் இருந்தது. எடுத்து நீட்டினான்.

''ஸாரி, கிரெடிட் கார்டு வாங்கறதில்லை. பணம்தான் வேணும்.''

அதற்குள் அங்கே அதிகாரிகள் வந்து விட்டார்கள்.

''என்னம்மா பிரச்சினை?''

''ஐம்பத்து மூணு ரூபாய்க்கு கிரெடிட் கார்டு தர்றார் ஸார்.''

''யாரது, ஹலோ! நீங்க டி.வி. ஆக்டர் இல்ல?''

''ஆமா ஸார்! எனக்கு இந்த ப்ளாட்ஃபார்ம் டிக்கெட் விவரம் தெரியல. ஃப்ரெண்டை ட்ரெயின் ஏத்த வந்தேன்.''

''சரி, சரி, ஓ.கே. நீங்க போங்க.'' என்றார் அதிகாரி.

''ஸாரி ஸார்! அவர் ஃபைன் கட்டணும். பணம் இல்லாத ஏழைங்க வந்தா விடறோமா? இவர்கிட்ட பணம் இருக்கு. கட்டட்டும். அரைமணி நேரம் அவகாசம் வேணும்னா தர்றேன். அவர் போய் பணம் கொண்டு வரட்டும்.''

''என்ன சௌந்தரி அவர் வி.ஐ.பி.''

''வி.ஐ.பி.ங்கதான் ஸார் முன்னுதாரணமா இருக்கணும்.''

''சௌந்தரி.''

''ஸாரி ஸார். எத்தனை பேர் காசு இல்லாம அழுது இருக்காங்க. ஒருத்தரையாவது கருணை காட்டி விட்டிருக்கோமா?''

''ஸார்! நான் பணம் கட்டிடறேன். பத்து நிமிஷம் போதும்.'' என்றவாறு அஸ்வின் போனான்.

ஏ.டி.எம்.மில் பணம் மாற்றிக் கொண்டு உடனே வந்தான்.

பணம் கட்டினான்.

ரசீது கொடுத்தாள்.

''தங்கப் பதக்கம் சௌத்ரி ஞாபகம் வருது சௌந்தரி. உன் நேர்மையைப் பார்த்தா... என்ன மீசையும், தொப்பியும் இல்லை.'' என்றான் அஸ்வின். 'உன்னைப் பழி வாங்கறேன்டி



என்னை அவமானப்படுத்திட்டே இல்லை. நீ காலம் பூரா அழணும்' மனதில் திட்டினான்.

சௌந்தரி வேலை முடிந்தது என்று வேறு பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''சௌந்தரி! உன்னை எனக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு. எனக்கு வொய்ஃப்பா, உன்னை மாதிரி பொண்ணுதான் வரணும்.''

நான்கைந்து கல்லூரிப் பெண்கள் திபுதிபுவென்று ஓடி வந்து அஸ்வினை சூழ்ந்து கொண்டார்கள். ஆட்டோகிராப் வாங்கினார்கள். அவன் மீது உரசினார்கள். பெரும் பெருமையில் அவன் திளைத்தான்.

சௌந்தரி முகம் திருப்பிக் கொண்டாள்.

கல்லூரி மாணவிகளைப் பார்த்து அஸ்வின் கேட்டான். ''உங்ககிட்ட டிக்கெட் இருக்கா, இல்லேன்னா அவங்க விட மாட்டாங்க.''

''ஸீஸன் டிக்கெட் ஸார்!''

''உங்களுக்கு எப்போ ஸார் கல்யாணம்?''

''ஜஸ்ட் இப்பதான் பொண்ணு பார்த்திருக்கேன். விரைவில் டும், டும் தான்...''

''பொண்ணு எப்படி இருப்பாங்க ஸார்?''

அவன் சௌந்தரியைக் காட்டினான். ''அச்சு அசல் இப்படித்தான் இருப்பாங்க... எப்படி, அழகா இல்லை?''

''சூப்பரா இருக்காங்க ஸார். நிஜமாகவே இவங்கதான் உங்க வருங்கால வொய்ஃப்பா?''

''எனக்குப் பிடிச்சிருக்கு.''

சௌந்தரி முறைத்துக் கொண்டே அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

''நிஜமாவே அவங்களா ஸார்?''

''ஏன், உங்கள்ல ஒருத்தரா இருக்கக்கூடாதா?'' என்றான் அஸ்வின்.

கல்லூரிப் பெண்கள் குதூகலம் கொண்டார்கள்.

''அப்போ அவங்க இல்லையா?''

''தேடறேன். உங்க மாதிரியா, அவங்க மாதிரியா, அல்லது வேற மாதிரியா, எந்த மாதிரி இருந்தா பொருந்தும்னு... உங்களுக்கு வாஸ்து சாஸ்திரம் தெரியுமா? தெரிஞ்சா சொல்லுங்களேன். எந்த மாதிரிப் பொண்ணு பெட்டர்னு...''

மாணவிகள் சிரித்தார்கள்.

''அதுக்குப் பேர் வாஸ்து இல்லை ஸார்.''

''ஓ... வாஸ்துங்கிறது மனை சாஸ்திரம். மனைவி சாஸ் திரத்துக்கு என்ன பேரு? அத்தினி, பத்தினி, சித்தினின்னு சொல்வாங்களே... வெரைட்டிக்கு ஒவ்வொண்ணு இருந்தா பெட்டராச்சே...''

''ஜாலியாப் பேசறீங்க ஸார்.''

''ஜாலியா பேசறதா, ஜாலியாவும் இருப்பேன்.''

மாணவிகள் சிரித்தார்கள்.

''வர்றீங்களா, காலேஜ்ல ட்ராப் பண்ணிடறேன்.''

மாணவிகளுக்கு சந்தோஷமாகி விட்டது.



அவனோடு காரில் பயணம் செய்தார்கள்.

சௌந்தரி தலையில் அடித்துக் கொண்டாள்.

'இந்த மக்கள் திருந்த மாட்டாங்களா? நடிகன்னா ஆகாயத் துல இருந்தா குதிக்கிறான்? காலேஜ் பொண்ணுங்களே இப்படி இருந்தா படிக்காத கிராமத்துப் பொண்ணுங்க எப்படி இருப்பாங்க?' பொருமினாள்.

அடுத்த நாள்! அந்த மாணவிகள் ரயிலிறங்கி வந்தபோது சௌந்தரியைப் பார்த்து ''வணக்கம் மேடம்!'' என்றார்கள்.

''வணக்கம்'' என்றாள்.

''யூ ஆர் லக்கி மேடம்'' என்றாள் ஒரு மாணவி.

''ஏய்?''

''ஃபேமஸ் ஆக்டரோட ஒய்ப்பா ஆகப் போறீங்களே...''

''யார் சொன்னது?''

''அஸ்வின் ஸார்தான் சொன்னார்.''

''அஸ்வின் ஸார் சொன்னாரா? அவன் பைத்தியக்காரன். எல்லாரையும் பண்ணிக்குவான். தசரத மகாராஜா மாதிரி நினைப்பு. காலேஜ் போற பொண்ணுங்களுக்கு கண்ட நாயோட என்ன பேச்சு.'' கோபமாகச் சொன்னாள்.

''மேடத்துக்குக் கோபம். ஸார் எங்களோட பேசிட் டார்னு.''

''ஏய் போங்கடி... படிச்சிப் பாஸ் பண்ணுங்க...''

''தாங்க்யூ மேடம்... மேரேஜுக்கு இன்விடேஷன் தருவீங்கதானே? நீங்க தரலைன்னாலும் ஸார் தருவார். அவருக்கு நாங்க பெஸ்ட் ஃப்ரண்டு. சண்டே ஷூட்டிங்

ஸ்பாட்டுக்கு வரச்சொல்லி இருக்கார். ஏ.வி.எம். வரார்றீங் களா மேடம்?''

''ஏய், போங்கடி...'' உதட்டைக் கடித்துத் துரத்தினாள்.

இரண்டு நாள் கழித்து அஸ்வின் ரயில்வே ஸ்டேஷன் வந்தான்.

''ஹலோ!'' என்றான்.

அவனைப் பார்த்தவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''ஃபிப்ட்டி த்ரீ...''

அவள் அவனைப் பார்க்கவே இல்லை.

''ஹலோ! ஃபிப்டி த்ரீ...'' மீண்டும் அழைத்தான்.

''மிஸ்டர்! என்ன வேணும் உங்களுக்கு?''

''காதல் வேண்டும்.''

போலீஸைக் கூப்பிடுவேன்.''

கையிலிருந்து காசை நீட்டினான்.

''யெஸ் மேடம்! கீவ் மீ ப்ளாட் பா∴ர்ம் டிக்கெட்.''

''போங்க மிஸ்டர். டிக்கெட் கவுண்டர்ல வாங்கிக்க...''

''அங்கே மூணு ரூபா. உங்ககிட்ட ஐம்பது ரூபா ஃபைனோட வாங்கிக்கறேன்.''

ஐம்பத்தி மூன்று ரூபாய் வாங்கிக் கொண்டு ரசீது எழுதிக் கொடுத்தாள்.

''சௌந்தரி!''

முறைத்துப் பார்த்தாள்.

''ஐ லவ் யூ.''



''மிஸ்டர்! இனிமே மரியாதை இல்லை. ப்ளாட்ஃபார்ம் டிக்கெட் வாங்கலைன்னா ஐம்பது ரூபாதான் அபராதம். ஈவ் டீசிங்ல உள்ள போனா ரெண்டு வருஷம். சென்ட்ரல் ஜெயில்.''

''உனக்காக எத்தனை வருஷம்னாலும் ஜெயில்ல இருப் பேன் கண்ணே...''

''ரொம்ப நல்லது. போலீஸ்...''

''அய்யோ! எனக்கு ஷூட்டிங் இருக்கு. நாளைக்கு வர்றேன். போலீஸ் கிட்ட சொல்லி வை.''

ஓடிப்போய் காரில் ஏறினான்.

அதன்பிறகு அடிக்கடி இரயில்வே ஸ்டேஷன் வருவதும் வரும்போதெல்லாம் ஐம்பத்தி மூன்று ரூபாய் தண்டம் கட்டு வதும் சௌந்தரியிடம் திட்டு வாங்குவதும் தொடர்ந்தது.

அந்த வாரத்திலேயே பத்திரிகையில் கிசுகிசு வந்தது.

நடிகர் அஸ்வின் அடிக்கடி சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன் போய்விடுகிறார். ரயில்வேயில் பணிபுரியும் ஒரு பெண்ணோடு நேசம் கொண்டுள்ளார்.

இந்தக் கிசுகிசு வந்த பத்திரிகை ரயில்வே ஸ்டேஷனில் ஒன்று விடாமல் விற்பனையாகிவிட்டது. ரயில்வே ஊழியர்கள் அனைவர் கைகளிலும் ஒன்று இருந்தது.

கோபத்தில் பொங்கினாள் சௌந்தரி. பத்திரிகை ஆபீ ஸிற்கு ஓடினாள். ஆசிரியரை சந்தித்து முறையிட்டாள்.

''பாரும்மா... இது கிசுகிசு. அவ்ளோதான்... உன்னை எங்களுக்குத் தெரியவே தெரியாது. உன் பேர் தெரியாது. நீயா வந்து பெரிசு பண்ணாத, இதை அப்படியே விட்டுடு. ஒண்ணுமில்லாம ஆயிடும். எனக்கென்ன அடுத்த இஷ்யூவி

லேயே மன்னிப்பு கேட்டு எழுதிடுவேன். மற்ற பத்திரிகை சும்மா இருக்குமா? நோண்டும். என்ன செய்வே?''

''ஸார்! ஸ்டேஷன்ல எல்லோரும் என்னை ஒரு மாதிரியா பார்க்க ஆரம்பிச்சுட்டாங்க... புத்தகம் வந்த அஞ்சு நிமிஷத்துல உங்க மொத்த புத்தகமும் சேல் ஆயிடுச்சு. புரிஞ்சுக்குங்க எவ்ளோ வேகமா என் மானம் போயிருக்கு.''

வயசான பத்திரிகை ஆசிரியர். ஞானியைப் போன்று காட்சி அளித்தார். ''ஸாரிம்மா! என் பத்திரிகை, வியாபாரத்தை மட்டும் கணக்குல வைச்சுக்காது. அப்படி நாங்க வியாபாரத்தை மட்டும் பாக்கறதா இருந்தா அன்னைக்கே. மேலும் ஐநூறு காப்பீஸ் ரயில்வே ஸ்டேஷன் கடைக்குக் கேட்டாங்க... நாங்க அனுப்பல... தயவு செய்து புரிஞ்சுக்கணும். வியாபாரம்னா ஐநூறு காப்பீஸ் அனுப்பி பணம் பண்ணிட்டு இருப்போம்.''

''ஸார்! என் மானம் போச்சே... அதுக்கு என்ன சொல் றீங்க... நான் கேஸ் போடப் போறேன். மான நஷ்ட கேஸ்.''

''அப்புறம் எதுக்கும்மா இங்கே வந்தே... ஒரு நல்ல லாயரா பார்க்க வேண்டியதுதானே? எனக்கு ஆட்சேபணை கிடையாது. ஏற்கனவே நூறு கேஸ் கோர்ட்ல ஓடிட்டிருக்கு இது மற்றும் ஒன்று. உன்னைத்தான் குறிப்பிடறோம்ங்கிறதுக்கு என்ன ஆதாரம்? ப்ளீஸ். இந்த விஷயத்தை இங்கேயே மறந்துடுங்க. ஒரு அஞ்சு நாளைக்குப் பொறுமையா இருங்க. அடுத்த இஷ்யூல பாருங்க...'' சொல்லி அனுப்பி வைத்தார்.

அடுத்த இதழ் வந்தது.

அதில் இன்னொரு கிசுகிசு.

'நடிகர் அஸ்வின் ரயில்வே ஸ்டேஷன் அடிக்கடி போவது பெங்களூரிலிருந்து சென்னை மருத்துவக் கல்லூரியில் பயிலும் ஒரு மாணவியை சந்திக்கத்தான் என்பது தெரிகிறது. விடுமுறையில் மாணவி ஊருக்குப் போகும்போது வழியனுப்பி



வைப்பதும், வரும்போது அழைத்து வருவதும் நடிகர் அஸ்வின் தான், கல்யாணம்தான் பண்ணிகிட்டு பரீட்சையா? பரீட்சை எழுதிட்டு கல்யாணமா?' என்றிருந்தது.



# 4

கோலாலம்பூர் கலை நிழ்ச்சியில் அந்த அற்புதமான நடிகர் கலந்து கொள்ளவில்லை. பிரேமிடம் குத்து வாங்கிய தில் உதடுகள் வீங்கி முகம் விகாரமாகி பார்க்கவே பரிதாப மாய், அருவெறுப்பாய் தெரிய, ஓட்டல் அறைக்குள்ளேயே இருந்தான்.

அற்புதமான நடிகரை எல்லோரும் வந்து பார்த்தார்கள். நடிகர்கள், நடிகைகள், டான்ஸ் மாஸ்டர்கள், டான்ஸர்கள், டெக்னீஷியன்கள், நிகழ்ச்சி ஏற்பாடு செய்தவர்கள் அனைவரும் பொக்கேயுடன் வந்து பார்த்தார்கள்.

மலேஷிய பத்திரிகைக்காரர்கள் வந்தார்கள்.

''என்ன ஸார் என்ன ஆச்சு?''

''என்னைக் கடத்திட்டுப் போக இன்டர்நேஷனல் லெவல்ல தீவிரவாதிங்க ட்ரை பண்றாங்க... இரவு ஒரு மணி இருக்கும் நாலு பேர் துப்பாக்கியோட என் அறைக்குள்ளே நுழைஞ் சிட்டாங்க... மனோ தைரியத்தோட அவங்ககிட்ட மோதினேன். சென்னையில் நான் துப்பாக்கி வைத்திருக்கிறேன். இங்கே கொண்டு வரவில்லை. என் கையில் மட்டும் துப்பாக்கி இருந் திருந்தால் அந்த நால்வரையும் சுட்டுப் பிணமாக்கி இருப்பேன். அமெரிக்காவின் ட்வின்ஸ் கட்டிடத்தை விமானம் மூலம் தகர்த்தவர்கள் அவர்களாகத்தான் இருக்கும் என்பது என்

கணிப்பு. அவர்களை மட்டும் பிடித்திருந்தால் பின்லேடனின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்திருக்கலாம்.'' அற்புதமான கதையை அளந்தார், அந்த அற்புதமான நடிகர், ''மயிரிழையில் தப்பிச்சேன். இல்லையென்றால் இப்படி மலர்க்கொத்து கொண்டு வந்து என்னைப் பார்த்து இருக்க மாட்டீர்கள். மலர் வளையம் கொண்டு வந்து இருப்பீர்கள். கடவுள், ஸாரி நமக்கு மேலே உள்ள ஏதோ ஒரு சக்தி என்னைக் காப்பாற்றியது.''

தொலைக்காட்சியில், பத்திரிகையில் உடனே செய்திகள் வந்தது. மலேஷிய போலீஸ் வந்தது. தீவிரவாதிகளைப் பற்றி அடையாளம் கேட்டது. எத்தனை திரைக்கதைகளைப் பார்த்தவர் அவரால் எதைத்தான் சொல்ல முடியாது? அழகாகக் கதை அளந்தார்.

போலீஸ் ஓட்டலை இஞ்ச், இஞ்ச்சாக அளந்தது.

ஒரே பரபரப்பு.

தமிழ்நாட்டில் அவரின் ரசிகர்கள் இரண்டு பேர் தீக்குளித்து உயிருக்குப் போராடுவதாய் தகவல் வந்தது.

ஒரு நடிகை பார்க்கப் போனாள்.

எதுவுமே தெரியாதது போல் கண்ணீர் சிந்தினாள்.

கிளிசரின் இல்லாமலேயே பழகிவிட்டாள்.

''எனக்கு எதுவும் ஆகலை. நல்லா இருக்கேன்.'' நடிகர், அவளைத் தேற்றினார்.

'எமக்குத் தொழில் நடிப்பு.'

'ஆம். எமக்கும் நடிப்புதான் தொழில்.'

நடிகையின் அழுகையை மலேஷிய பத்திரிகையின் புகைப் படக்காரர் 'க்ளிக்' செய்தார்.

''அந்தப் பையனை நீ லவ் பண்றியா?'' நடிகையின் காதருகே மெதுவாகக் கேட்டான்.



''சே... சும்மா ஒரு விளையாட்டு, எல்லா சிகரெட்லயும் புகைதான் வருது. நான் அப்பப்போ பிராண்டு மாத்துவேன்.''

''இப்போ மட்டும் அவனை நான் கை காட்டிட்டா போதும்; உனக்கு புகையா இருந்த அவன் சாம்பலாயிடுவான். என்னைக் கடத்தி வந்த கும்பலோடும் அவனும் இருந்தான், எப்படி?''

''ப்ளீஸ், வேண்டாம்.''

''ஏன். இன்னும் அவன் வேண்டுமா?''

''வேண்டாம். பாவம்.''

''நான் அவனைப் பலியிட மாட்டேன். ஆண் பிள்ளை நேருக்கு நேர் மோதுவேன்.''

''வேண்டாம்.''

''வேண்டும். நீ வேண்டும்... இல்லை அவன் உயிர்.''

''சரி. நான்.''

மெல்லியக் குரலில். ரகசியமாய் பேசி முடித்தார்கள்.

பிரேமின் நெஞ்சில் சுத்தமாக சௌந்தரி இல்லை. புஷ்ப நடிகையே வியாபித்திருந்தாள்.

கோடி ரசிகர்களின் கனவு தேவதை. தன் உள்ளம் வந்தது அதிசயமாக உணர்ந்தான்.

நினைக்க நினைக்க நெஞ்சம் மலர்ந்தது.

அதைவிட தமிழின் முதன்மை நடிகரில் ஒருவரைக் குத்து விட்டது. 'நான்தான் இப்போ நிஜமான ஹீரோ, ஆனா வெளியே சொல்ல முடியாது. சினிமா கதைபோல நிஜம். நாயகியை தொட்டேன். எதிர்த்தவனை குத்தினேன். நினைத்து நினைத்து ஏகாந்தமடைந்தான்.

'இனி வாழ்நாளில் அந்த நடிகையை மறக்க முடியாது. அவளோடுதான் வாழ்க்கை.'

'செளந்தரி?'

'என்ன பெரிய செளந்தரி... பிளாட்டினம் கிடைக்கிறபோது தங்கம் எதற்கு? தேவதை கிடைத்திருக்கும்போது மனுஷி எதற்கு? நிலா கிடைத்திருக்கும்போது மின் விளக்கு எதற்கு?''

'எல்லாம் சரி. கிடைப்பாளா?'

'என்ன சந்தேகம்?'

'அவளாத்தானே வந்தாள்.'

மனம் அலைபாய்ந்தது.

ஓட்டலுக்கு ஏகப்பட்ட கெடுபிடி. நிறைய போலீஸ்களைக் குவித்தார்கள். நடிகரை விசாரிக்க அமைச்சர்கள் எல்லாம் வந்தார்கள். ஓட்டலில் வேலை செய்யும் அனைவரையும் போலீஸ் துருவித் துருவி விசாரித்தன.

முகமது இஸ்மாயிலும், அத்தாவுல்லாவும்தான் போலீஸ் துருவலில் அதிகம் மாட்டினவர்கள்.

அன்று இரவும் தூக்கம் வரவில்லை.

எங்கு பார்த்தாலும் போலீஸ்.

அற்புதமான நடிகரின் அறை முன்பு நான்கு போலீஸ் காரர்கள் துப்பாக்கியோடு. நடிகர் எழுந்து வெளியே வந்தார்.

போலீஸ்காரர்கள் சூழ்ந்து நின்றார்கள்.

அவர் நடந்தார். அவர்களும் பின் தொடர்ந்தார்கள்.

''தயவு செய்து இங்கேயே நில்லுங்கள். நான் வந்து விடு கிறேன்'' என்றான். தயக்கத்தோடு நின்றார்கள்.

நடிகர் அந்த நடிகையின் கதவைத் தட்டினார். அது தானே திறந்து கொண்டது.

நுழைந்தான்.

தாழிட்டான்.



நடிகை கட்டிலில் அமர்ந்திருந்தாள்.

பிரேம் பூனையாய்த் தவித்தான்.

எங்கு பார்த்தாலும் போலீஸ்.

'எப்படிப் போவது?'

மனம் அமைதியாக இல்லை.

அலையாய் அலைந்தது.

நடிகையை இப்போது சந்திக்காவிட்டால் உயிரே போய் விடும்போல இருந்தது.

அவள் முகம், அவள் வாசம், முத்தமிட்ட உதடுகள் சொக்கி இழுக்கும் காந்தக் கண்கள், அருகாமை உஷ்ண மூச்சு, காதலான பேச்சு, பாற்கடல் அமுதம் என்பது அவள் தானே?

'அவளை எப்படிச் சந்திப்பது?'

'கடவுளே...'

'போலீஸை எப்படி ஏமாற்றுவது?'

'என்ன காரணம் கூறி அவள் ரூமுக்குப் போவது?'

அற்புதமான நடிகர் சிரித்தார். சிரிக்க முடியாமல் அடி வாங்கிய உதடுகள் வலித்தது.

''என்ன சிரிப்பு?''

''முட்டாள் உலகம். முட்டாள் போலீஸ்.''

''உன் நடிப்புக்கு ஆஸ்கார் விருது தரலாம்.''

''தேவையில்லை. நீ போதும்.''

''என்ன ஸ்பெஷல்?''

''எனக்கு எதுவுமே ஸ்பெஷல் கிடையாது. எல்லாத்தையும் டேஸ்ட் பார்ப்பேன்.''

''துளியும் காதல் இல்லாத உறவு சுவைக்குமா?''

''அந்தப் பையன் மீது காதலா?''

''ம். அவன் என்னை ஆராதிப்பதை உணர்ந்தேன். என் மீது அவன் உயிரை வைத்திருப்பான். செத்துப்போடா என்றால் செத்துப் போவான்.''

''அவனிடம் நீ சொல்ல வேண்டாம். நான் செய்கிறேன். சொல் அவன் சாகவேண்டுமா?''

''அவன் உயிர் பிழைக்கவே இப்போது உன்னை அனுமதிக்கிறேன்.''

''அவ்வளவு காதலா?''

''எதுவோ, என்னால் அவன் பாதிக்கப்படக்கூடாது.''

பிரேம் தவியாய்த் தவித்தான்.

'இப்போது சந்திக்காம விட்டால், மறுபடியும் சந்திக்க முடியாது.'

''நாளைக்குப் புறப்பட்டுப் போயிடுவாங்க...''

''வாழ்நாள்ல மறுபடியும் எப்போ பார்க்கறது?'

''என்னதான் நடக்கும் பார்க்கலாமே...''

துணிந்து எழுந்தான்.

நடந்தான்.

மாடி ஏறினான்.

இரண்டு போலீஸ்காரர்கள் அவனைப் பிடித்தார்கள்.

நடிகர் கேட்டார். ''கண்டதும் காதல் எப்படி?''

''உனக்கு கண்டதும் காமம் எப்படியோ அப்படி.''

''ஆட்டை நேசிப்பதற்கும், ஆட்டிறைச்சி உண்பதற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது.''



''இறைச்சியை எவ்வளவு சாப்பிட முடியும்? அளவோடத்தானே சாப்பிட முடியும்? அன்புக்கும் நேசத்திற்கும் அளவு கிடையாது.

''அழகாகப் பேசுகிறாய்.''

''நிறையப் படித்திருக்கிறேன்.''

''பையன் பாவம்.''

''ஏன்?''

''உன் நினைவு அவனுக்குப் பெரும் தண்டனை.''

''அவனுக்கு ஏதாவது செய்ய வேண்டும்.''

வெளியே கதவு தட்டப்பட்டது.

''சே...''

நடிகன் எழுந்து வந்து கதவைத் திறந்தான்.

நான்கு போலீஸ்காரர்கள் பிரேமை பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

நடிகை படபடப்போடு ஓடி வந்தாள்.

''பார்த்தாயா, இப்போது ஒரு வார்த்தை நான் சொன்னால் போதும் அவன் ஒழிந்தான்.''

''வேண்டாம். அவனை எதுவும் செய்ய வேண்டாம்.''

''மடையா! இவங்ககிட்ட எதுக்கு மாட்டினே?'' தமிழில் கேட்டார் நடிகர். ''இங்க உன்னைக் காப்பாத்த இந்தம்மா தயாராய்ட்டாங்க...''

''மேடம்! உங்களுக்கு எதுனா பிரச்சினையா?''

''பைத்தியம்! உனக்குத்தான்டா பிரச்சினை நீ எவ்ளோ பெரிய ஆபத்துல இருக்கே தெரியுமா?''

''என் உயிரே போனாலும் சரி. அவங்க விருப்பம் இல் லாம நீ அவங்களைத் தொடாதே.''

''சினிமா ஹீரோ செத்தான்டா...''

''மேடம், நீங்க பயப்படாதீங்க நான் இருக்கேன்.''

''அறிவு இருக்கா... உன்னைச் சுத்தி போலீஸ் இருக்கு. நேத்து ஒரு ஆள்கிட்ட ஃபைட் பண்ணி ஜெயிச்சுட்டே. இன்னைக்கு சிச்சுவேஷன் வேற, இவரு என்னென்ன கதை விட்டிருக்கார் தெரியுமா? நீ மாட்டினா உலக அளவுல பெரிய குற்றவாளி. ஒவ்வொரு நரம்பிலயும் எலக்ட்ரிக் ஒயர் மாட்டு வாங்க... ஒவ்வொரு நகத்திலயும் லைட் எரியுதான்னு பார்ப்பாங்க...''

''உங்களுக்காக உயிரை விடுவேன் மேடம்.''

''ஆகா, இதான்டா காதல்.'' நடிகர் மலை சிரித்த மாதிரி சிரித்தார்.

''கண்ணா! நல்ல பிள்ளையா இரு. நான் நடிகை... அதைப் புரிஞ்சுக்கோ... எனக்கு ஒண்ணும் இல்லை. இவரும் நானும் ஒரே இண்டஸ்ட்ரில வொர்க் பண்றவங்க... நாங்க சண்டை போடுவோம், கூடுவோம். அவர் என் கழுத்துல நாலு முறை தாலி கட்டி இருக்கார். அவரோட எட்டு முறை சாந்தி முகூர்த்தம் நடந்திருக்கு. ஆயிரம் முறை கட்டிப் பிடிச்சிருக் கோம். எல்லாம் சினிமாவுல. ஒரே ரூம்ல நூறு முறை தங்கி இருக் கோம், இது நிஜத்துல... இன்னைக்கு நூற்றி ஒன்றாவது முறை.''

''பழைய கதை விடுங்க. இனிமே உங்களை யாரும் தொடக் கூடாது.'' பிரேம் ஆவேசம் பொங்கினான்.

''மனோகரா! பொங்கியது போதும் பொறுத்துப் போ'' நடிகன் கிண்டலடித்தான்.

''புரியாத ஜென்மம். போடா இவரோட கலை நிகழ்ச்சி பத்தி டிஸ்கஸன் பண்றேன். வேற ஒண்ணுமில்லை போ.''



மலேஷியா போலீஸ்காரர்களிடம் நல்லவிதமாகப் பேசி பிரேமை அனுப்பி வைத்தார்கள்.

''பையனுக்கு காதல் முத்திருச்சு'' சிரித்தார் நடிகர்.



## 5



**சௌ**ந்தரி மனக்கவலையோடு உட்கார்ந்து இருந்தாள்.

''என்னடி அழகான முகம் வாடி இருக்கு.''

''இந்த அஸ்வினினுக்கு என்ன முடிவு?''

சௌமாலினி அருகே வந்தாள்.

''நான் சொல்றேன்னு கோபிச்சுக்க மாட்டியே...''

''சொல்லு.''

''அஸ்வினுக்காக எத்தனை பெண்கள் அலையறாங்க... அவரோ உனக்காக அலையறார். அவருக்குன்னு ஒரு இமேஜ் இருக்கு. அதைக்கூட விட்டுட்டார். உனக்காகச் சுத்தறார். நீ அவரை நிறைய முறை அவமானப்படுத்தி இருக்கே. ஆனா லும் அவர் எதையும் மனசுல வைச்சுக்கல... கொஞ்சம் யோசி. அஸ்வினையே லவ் பண்ணேன்.''

சௌமாலினியைக் கோபமாகப் பார்த்தாள்.

''பைத்தியமா உனக்கு... ஒரு வி.ஐ.பி. பின்னாடி சுத்தினா லவ் பண்ணிட முடியுமா? சௌமி! எனக்கும் பிரேமுக்கும் உள்ள லவ் எப்படிப்பட்டது தெரியுமா? சினிமாலயும் சீரியல்ல யும் நடிச்சா பெரிய ஆளுன்னு அவனை லவ் பண்ணிடறதா. ஏன் பிரேம்னால நடிக்க முடியாதா? பாரு சௌமி, பிரேம் ஒரு

நடிகனாக முடியும். அந்தஸ்து, கௌவரம், புகழ்னு உயர முடியும். எந்த நடிகனும் பிரேம் ஆக முடியாது. என் லவ்வர் ஆக முடியாது.''

''அடேங்கப்பா... இவ்ளோ பஞ்ச் வைக்கிறியா?''

''அதுதான் நிஜம் சௌமி.''

''சரி.''

''அஸ்வின் என் பின்னாடி அலையறதை நிறுத்தணும். ஒரு வழி சொல்லேன்.''

''என்ன சொல்லட்டும்?''

''போலீஸ்ல ரிப்போர்ட் பண்ணலாமா?''

''அஸ்வின் பற்றி எது நடந்தாலும் பேப்பர்ல பெரிசா நியூஸ் வந்துடும். நீ போலீஸ்ல ரிப்போர்ட் பண்ணா அது பெரிய இஷ்யூவாயிடும். சும்மா ஊதிப் பெரிசு படுத்துவாங்க. தமிழ்நாடு பூராவும் பரவ ஆரம்பிச்சுடும்.''

''எப்படி அவனை ஆஃப் பண்றது?''

''பேசிப் பார்க்கலாமே...''

''என்ன பேச்சு...?''

''அஸ்வின் கிட்டேயே பேசலாம்.''

''அஸ்வின்கிட்டயா?''

''ஆமாம், பேசு. மனசுல - இருக்கிறதைப் பேசு. நான் ஏற்கனவே ஒருத்தரை லவ் பண்றேம்பா. அவர் என் மேல உயிரை வைச்சிருக்கார். என்னோட நல்லா வாழணும்கிறதுக்காக நாடு விட்டு நாடு பணம் சம்பாதிக்கப் போயிருக்கார். தயவு செய்து என்னை தொல்லை பண்ணாதே, ஆளை விடுன்னு பேசிடலாம்.''

''கேட்பானா?''



''சொல்வோம். அதுக்கு மேலேயும் பிடிவாதமா தொல்லை தந்தா போலீஸ் போயிடுவோம்.''

சௌமாலினி சொன்ன யோசனை சரி என்று பட்டது.

செல்போனில் அஸ்வினைப் பிடித்தாள்.

''உங்களோட தனியா பேசணும்.''

''ஆஹா...''

''எங்கே பேசலாம்?''

''ரெஸிடென்ஸி வந்துடுங்க... கார் அனுப்பறேன்.''

''வேண்டாம். நாங்க ஆட்டோல வந்துடறோம்.''

''நான் கார் அனுப்பிடறேன்.''

''வேண்டாம்.''

''சரி, ஆட்டோ வேணாம். கால் டாக்ஸில வந்துடுங்க...''

''ஓ.கே. எப்போ வரட்டும்?''

''இப்பவே, பக்கத்துலதான் ஒரு பங்களாவுல ஷூட்டிங். நான் கான்ஸல் பண்ணிட்டு வந்துடறேன்.''

''எதுக்கு ஷூட்டிங் கான்ஸல் பண்றீங்க... அரை மணி நேரம் போதும் சும்மா பேசத்தானே...''

''வாங்க... ஷூட்டிங்கைப் பத்தி ஏன் கவலைப்படறீங்க... அது என் பொறுப்பு. என்னமோ ப்ரொட்யூசர் மாதிரி கவலைப் படறீங்க...?''

சிரித்தான். ''நல்ல முடிவுதானே?''

''பேசத்தான் வர்றோம்.''

அரைமணி நேரத்தில் ரெஸிடென்ஸி ஓட்டலில் வந்து இறங்கினார்கள்.

இவ்வளவு பெரிய ஓட்டல் அவர்களுக்கு புதிது. பிரமிப்பு அளித்தது.

அஸ்வின் அவனுடைய காரிலேயே அமர்ந்திருந்தான்.

இவர்களைப் பார்த்ததும் இறங்கி வந்தான்.

''வெல்கம்... வெல்கம்...'' என்றான்.

செளந்தரி பெரிய ரோஜாப் பூ ஒன்று நடந்து வருவதைப் போன்று தெரிந்தாள். ரோஸ் நிற சல்வார் கம்மீஸ், ரோஸ் நிற தேகம். இயற்கையான, எளிமையான மேக்கப் பயம் காட்டாத அழகில் மயங்கினான்.

செளமாலினி எலுமிச்சை நிற புடவையில் எடுப்பாய் தெரிந்தாள்.

'ரெண்டு பேருமே அழகா இருக்காங்க...'

ஓட்டலுக்குள் அழைத்துப் போனான்.

வெளியே பளிச்சென்று வெயிலடிக்க உள்ளே ஏசி குளிர்ச்சியும், மிதமான வெளிச்சமும் இதம் அளித்தன.

குகைக்குள் நுழைகிற மாதிரி தெரிந்தது. அழகான குகை. மேற்கத்திய இசை இனிமையாய் அலைந்தது.

ஒரு அறைக்குள் நுழைந்து அமர்ந்தார்கள்.

''என்ன சாப்பிடறீங்க?''

''எதுவும் வேணாம். சொல்ல வந்ததைச் சொல்லிட்டுப் புறப்படறோம்.''

''அதுக்கு டெலிகிராம் இருக்கு. ஈமெயில் இருக்கு. போன் இருக்கு.''

''கொஞ்சம் விவரமா பேசணும்.''

''ஆப்பிள் ஜூஸ்.''

''ப்ளீஸ் வேணாம்.''

''ஜூஸ்ல மயக்க மருந்து போட்டு உங்களை மயக்க மாட்டேன்.''



பேரர் வந்தார், ஆர்டர் தந்தான்.

''நாங்க சொல்றதைக் கொஞ்சம் கவனமாக் கேளுங்க... புரிஞ்சுக்குங்க...''

''பத்து நிமிஷம். முதல்ல ஜூஸ்.''

''எங்களுக்கு நேரமாகுது. ட்யூட்டி இருக்கு.''

''இப்படி ப்யூட்டியா ட்யூட்டிக்குப் போனா எப்படி? எத்தனை பையன்களுக்கு ஹார்ட் அட்டாக், வரப் போகுதோ...'' சொல்லிவிட்டுப் புன்னகைத்தான்.

செளந்தரி எழுந்து நின்றாள். முகத்தில் கோபத்தைக் காட்டினாள்.

''ஏன்... ஏன்...?'' பதைபதைப்புடன் கேட்டான்.

''நான் ப்யூட்டியோ, டர்ட்டியோ என்னைப் பத்தி எதுவும் பேசக்கூடாது. நாங்க சொல்ல வந்ததைச் சொல்ல விடுங்க... கேட்டுக்குங்க...''

''சரிங்க மேடம்.'' வாய்பொத்தினான். ''உட்காருங்க.''

''இவர் திருந்த மாட்டார் செளமி. வா, போகலாம்.''

''என்ன இது பேசினாலும் தப்பு, வாய்பொத்தினாலும் தப்பு.''

''உட்கார் செளந்தரி, பேச வந்ததைப் பேசிடு.''

''கொஞ்சம் நீயே சொல்லு செளமி.''

ஆப்பிள் ஜூஸ் கண்ணாடிக் கோப்பைகளில் வந்தது.

''ஸார்! செளந்தரி ஏற்கனவே ஒருத்தரை விரும்புறா. பிரேம்னு அவர் பேரு. மலேஷியா போயிருக்கார். ரெண்டு வருஷத்துல திரும்பிடுவார். வந்ததும் கல்யாணம். உங்களைக் கொஞ்சம் கூட அவள் விரும்பலையாம். நீங்க மேலும் தொந்தரவு செய்றது நல்லதில்லை.''

அஸ்வின் புன்னகைத்தபடியே கேட்டுக் கொண்டான்.

''ஜூஸ் சாப்பிடுங்க.''

''நாங்க சொல்றது?''

''ஜூஸ் சாப்பிடுங்க...''

''ப்ளீஸ் வேண்டாம். பிறன் மனை நோக்காப் பேராண்மை உங்களிடம் இருக்குன்னு நினைக்கிறேன். இனிமே எந்த விதத்திலும் டிஸ்டர்ப் பண்ண மாட்டிங்க...''

''ஜூஸ் சாப்பிடுங்க...''

''சொல்லுங்க...''

''ப்ளீஸ் ஜூஸ் சாப்பிடுங்க...''

''இல்லை. முடிவா நீங்க சொல்லணும். சௌந்தரியை நீங்க எந்த விதத்திலும் இனி டிஸ்டர்ப் பண்ணக்கூடாது.''

''அதானே... ஃபர்ஸ்ட் ஜூஸ் சாப்பிடுங்க...'' அஸ்வின் கையில் ஆப்பிள் ரச கண்ணாடிக் கோப்பையை எடுத்தான்.

''பர்ஸ்ட் நீங்க என் கெஸ்ட். பிரச்சினையெல்லாம் நெக்ஸ்ட்.''

சௌமாலினியும் கோப்பை இரண்டையும் கையில் எடுத்து ஒன்றை சௌந்தரியிடம் கொடுத்தாள்.

பருக மனமின்றிப் பருகினார்கள்.

அதுவரை மௌனமாக இருந்தான்.

காலி கோப்பைகள் டீப்பாயின் மீது இடம் பிடித்தது.

''உங்க பக்க விஷயத்தை நீங்க சொல்லிட்டிங்க... ஓ.கே! என் பக்கம் நான் சொல்றதைக் கேளுங்க...''

என்ன சொல்லப் போகிறான் என்று ஆவல் ஓங்கப் பார்த்தார்கள்.



''வோர்ல்ட்ல நிறையப் பெண்கள் இருக்காங்க... லட்சம், கோடின்னு... சௌந்தரி மட்டுமேதான் பொண்ணா? ஒரு பொண்ணை எத்தனை பேர் லவ் பண்ண முடியும்? பிரேம்னு ஒருத்தர் லவ் பண்ற மேட்டர் ஃபர்ஸ்ட்டே தெரிஞ்சிருந்தா, டெபனட்டா நான் சௌந்தரியை டிஸ்டர்ப் பண்ணியிருக்க மாட்டேன். தெரில. ஒரு பொண்ணை ஒருத்தர் தான் லவ் பண்ண முடியும். விவரம் தெரியாம பண்ணிட்டேன். ஸாரி, விவரம் தெரிஞ்சுக்கிட்டேன். இப்போ சொல்றேன். சௌந் தரியை நான் லவ் பண்றேன்.''

அதிர்ந்து பார்த்தார்கள்.

''இப்போ சொல்றேன். சௌந்தரியை நான் லவ் பண்றேன். சௌந்தரியை நான் லவ் பண்றேன். இப்போ என்கிட்டே சொல்றீங்களே... அதை அந்த பிரேம்கிட்ட சொல்லுங்க. மறந்துடச் சொல்லுங்க... வோர்ல்ட்ல நிறையப் பெண்கள் இருக்காங்க. லட்சம், கோடின்னு... அந்த பிரேமுக்குச் சொல் லுங்க. சௌந்தரி மட்டுமேதான் பொண்ணா? ஒரு பொண்ணை எத்தனை பேர் லவ் பண்ண முடியும்? நான், நான் மட்டும்தான் சௌந்தரியை லவ் பண்ணுவேன். வேற யார் குறுக்கே வந்தாலும் கொன்னுடுவேன்'' மிகுந்த ஆத்திரத்தோடு, ஆவே சத்தோடு கூறினான். கண்களில் அனல் பறந்தது.

எழுந்தான்.

சௌந்தரியின் அருகாமையில் முகம் கொண்டு வந்தான்.

''ஐ லவ் யூ...'' இழுத்து உதட்டோடு உதடு வைத்து முத்த மிட்டான்.

சௌந்தரி பதறி விலகினாள்.

''நான், ஹீரோ. வில்லனாக்கிடாதே...'' எச்சரித்தான்.

கோபமும், பயமும் அவர்களைத் தாக்கிற்று.



# 6



மலேஷியா.

மானேஜர் வெடிச் சிரிப்பு சிரித்தார்.

''பையாங்களே... என்னா சொல்றீங்கடா...?''

''அந்த எஸ்... ஆக்டரை இவன்தான் ஸார் அடிச்சது.''

''நிஜமாவா?''

''சத்தியமா ஸார்! தீவிரவாதிங்கன்னு என்னா வுட்டான் கதை. நைட் ஒரு மணிக்கு சார் அந்த நடிகை ரூம் கதவை தட்டிட்டு இருந்தான். அவ, அவனைத் திட்டி அனுப்பிட்டா... பிரேமைப், பார்த்ததும், இவனுக்கு பிராக்கெட் போட்டு இழுத்துட்டா... நடிகை ரூம்ல பிரேம் இருக்கும்போது 'எஸ்' நடிகர் வந்துட்டார். அவரு இவனை அடிக்க, இவன் அவரை அடிக்க... இதான் சார் சீன்...''

மானேஜர் வாயைப் பிளந்தார்.

''டேய்.. டேய் பய்யா. உனக்கு எங்கேடா இருக்கு மச்சம்? ஆமா, இவன் நாட்ல ஒரு பொண்ணை லவ் பண்ணானே?''

''அது பணால் சார். இது இரண்டாம் காதல் சார். ஆட்டக்காரியைப் பார்த்ததும் நாட்டுக்காரியை விட்டுட்டான். அஞ்சு வருஷ காதலை அஞ்சு நிமிஷத்துல மறந்துட்டான் சார். நாசமாப் போக...''

''நடிகையாச்சேடா... என்னா ஸ்டெக்சர். என்னா ஸ்டெக்சர்... ஆனா கல்ச்சர்தான் சரியில்லை. முன்னே, பின்னே பார்க்காத ஒருத்தனை வீடுக்கு கூப்பிடறவ உருப்படுவாளா? குடும்பம் நடத்துவாளா?''



''சார்! அவங்க இங்கே இன்னும் எத்தனை நாள் தங்கி இருக்காங்க?''

''இன்னைக்கு மட்டும்தான்.''

''ஆ...'' ஏதோ பறிபோகிற மாதிரி கத்தினான்.

''என்னடா வாயைப் பொளக்கற...?''

''அவங்களோட நானும் நாட்டுக்குப் போயிடறேன் சார். அவங்கள மறந்து என்னால இருக்க முடியாது.''

''டேய்... இவனை வெட்டி மலேஷிய மண்ணுலயே புதைங்கடா... பாடிகூட நாட்டுக்குப் போகக்கூடாது. ஃபூல், நான் என் சம்சாரத்தைப் பார்த்து மூணு வருஷம் ஆகுது. என் குழந்தைகளைப் பார்த்து மூணு வருஷம் ஆகுது. இந்த கோல்டு பாயிண்ட்ல வேலைக்குச் சேர்ந்து பதினைந்து வருஷம் போயிடுச்சு. உங்களைப் போல ஆபீஸ் பாயாத் தான் சேர்ந்தேன். மிலிட்டரிக்காரன் வாழ்க்கை. மிலிட்டரிக் காரனாவது நாட்டுக்காகப் பாடுபடறான். நாம நோட்டுக் காக, வருஷத்துக்கு ரெண்டு மாசம் நாட்டுக்குப் போய் குடும்பத்தைப் பாக்கறேன். உறவுங்கிறது பணத்தாலன்னு ஆகிப் போச்சு. வாழ்க்கைங்கறது பணத்தாலதான்னு ஆகிப் போச்சு. இங்கே நான் நினைச்சா எவ்வளவோ ஆடலாம். ஒரு நிமிஷம் யோசிச்சுப் பார்ப்பேன். இங்கே நான் தப்பு பண்ற மாதிரி, நாட்ல என் மனைவியும், என் மகளும் தப்பு பண்ணா என்னாகும்னு யோசிப்பேன். நல்லவனா வாழ்றதுக்கு நாம மகாத்மா காந்தியா பிறக்கத் தேவையில்லை. நாம குடும்பஸ்தனா இருந்தா போதும். குடும்பத்தை கிட்ட இருந்து கவனிக்கணும். பய்யா... அவ நடிகைடா மும்பைக்காரி. டிரெஸ் மாத்தற மாதிரி ஜோடி மாத்துவா... நம்ம தெற்கு பொண்ணுங்க வேற, தன் புருஷனுக்காக வாழ்க்கை பூரா காத்திருப்பா... மனசுல அவளை நினைக்காதே... மறந்துடு! நாட்ல நீ லவ் பண்ண பொண்ணையே கன்டினியூ பண்ணு

என்ன?'' மானேஜர் மூச்சு வாங்க அவனுக்கு புத்திமதிகள் கூறினார்.

அவனுக்கு எதுவும் மண்டையில ஏறுகிற மாதிரி இல்லை.

''ஸாரி சார்!'' என்றான்.

''முட்டாள்! நான் சொல்றதைக் கேளு.''

''ஸார்! நீங்க சொல்றது எல்லாம் சரி. அவங்க வடநாட்டு நடிகைதான். ட்ரெஸ் மாத்தற மாதிரி ஆண்களை மாத்து வாங்கதான். எனக்கு அதைப் பத்தி கவலை இல்லை. எனக்கு அவங்க மனைவியா வந்த பிறகு கரெக்டா இருந்தா போதும். கண்டிப்பா இருப்பாங்க...''

''பூல்! உன்னை நம்பி நாட்ல ஒருத்தி இருக்காளேடா...''

''மறந்துட்டேன் சார். எப்படி மறந்தேன்னு எனக்கே தெரியலை. மறந்துட்டேன். காதல் கூட நிரந்தரமில்லைன்னு எனக்கு நானே புரிஞ்சுக்கிட்டேன்.''

அப்போது -

'டக், டக்' என்று யாரோ நடந்து வருகிற சத்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தார்கள்.

புஷ்ப நடிகை.

அவள் அழகில் மயங்கியபடி அனைவரும் பார்த்தார்கள்.

பிரேம் எழுந்து நின்றான்.

பிரேமின் அருகே வந்து நின்றாள்.

''போறேன். என் ஞாபகமா உனக்கு ஒரு பரிசு கொடுக்க வந்தேன்.''

தங்க நிறத்தில் வாட்ச் கொடுத்தாள். புதிய வாட்ச்.

''என்னை மறந்து விடாதே... சென்னை வந்ததும் என்னைப் பார்'' என்றாள்.



பேச முடியாமல் வாயடைத்து நின்றான் பிரேம்.

நடிகை பின்னழகில் நளினம் காட்டிப் போனாள்.

பிரேம் அவளைப் பின் தொடர்ந்தான்.

''ஏங்க... ஏங்க...''

மின்னல் போல் நடந்து கொண்டே இருந்தாள்.

''ஏங்க... ஏங்க...''

அவளை நோக்கி ஓடினான்.

''உங்களை மறந்து என்னால இருக்க முடியாதுங்க...''

''மறக்க வேண்டாம். மெட்ராஸ் வந்தா என்னைப் பாருங்க...''

''எனக்கு என்ன பேசறதுன்னு தெரியலை. என் மனதில் இருக்கிறதை அப்படியே சொல்லத் தெரியலை.''

நடிகை புன்னகைத்தாள்.

பிரேமின் கன்னத்தை வருடினாள்.

போலீஸ்காரர்கள் பாதுகாப்போடு அற்புதமான நடிகர் வந்தார்.

''என்ன பிரியா விடையா?'' என்றார்.

அடி வாங்கிய உதடுகளில் வீக்கம் குறைந்திருந்தது.

இந்த ஜென்மத்தில் பெரிய எதிரி என்பதாய் நடிகரைப் பார்த்தான் பிரேம்.

''ஒரு சின்ன விஷயத்தை பெரிசா பண்ணிட்டேன் பார்த்தியா?'' என்றார்.

பிரேம் முறைத்துப் பார்த்தபடி நின்றான்.

''சென்னை வந்ததும் என்னைப் பார். நிறைய நடிகைகளை அறிமுகம் செய்றேன்'' கிண்டலாக சொல்லிச் சிரித்தார்.

நடிகையும் சிரித்தாள்.

''பை... பை'' என்று கையசைத்தாள்.

நடிகரோடு கைகோர்த்துக் கொண்டு போனாள்.

வயிறு எரிந்தது.



# 7



இரவு பன்னிரண்டு மணி.

சௌந்தரிக்கு தூக்கம் வரவில்லை.

மனதில் இனம் புரியாத அலைகள்.

பிரேம் போன் பண்ணுவதை சுத்தமாக நிறுத்தி விட்டான். சௌந்தரி போன் செய்து அழைத்தாலும், அவன் வந்து பேசுவதில்லை. 'இப்போது பேச நேரமில்லை' என்று சொல்லி விடுகிறான்.

'ஏன்? ஏன்?' மண்டையில் பூச்சிகள் புகுந்து ரீங்காரம் செய்து இம்சை புரிகின்றன.

பிரேமின் முகம் கண் முன்னே வந்து நிற்கிறது.

கண்களில் தூக்கம் வேறு. ஆனால் வரவில்லை. மனம் ஓய்வெடுக்கவில்லை.

எழுந்து டி.வி.யை ஆன் செய்தாள்.

**காதல் வெண்ணிலா கையில் சேருமா.**

**சொல்லு பூங்காற்றே...**

**பதில் சொல்லு பூங்காற்றே...**

மனம் மேலும் உடைந்தது.



சேனல் மாற்றினாள்.

**காதலி... காதலி... காதலால் தவிக்கிறேன்.**

**ஆதலால் வா... வா... அன்பே அழைக்கிறேன்...**

சேனல் மாற்றினாள்.

**எங்கே செல்லும் இந்த பாதை**

**யாரோ யாரோ அறிவாரோ**

இதுதான் பட்ட காலுக்கே படும்னு சொல்றது.

புத்தி கெட்டு இருக்கும்போது மேலும் புத்தி கெடுகிற மாதிரி பாடல்கள் ஒலிக்கும்.

டி.வி.யை நிறுத்தினாள்.

கதவைத் தட்டுகிற சத்தம்.

'இந்த நேரத்திற்கு யார் கதவைத் தட்டுகிறார்கள்?'

அமைதியாக இருந்தாள்.

மீண்டும் கதவின் சத்தம்.

''யாரது?'' என்றாள்.

''நான்தான்...''

''நான்தான்னு சொன்னா பேரு?''

''அஸ்வின்...''

பெயர் கேட்டதும் அதிர்ந்தாள்.

''சௌந்தரி! ப்ளீஸ் கதவைத் திற...''

''மாட்டேன், போயிடு.''

''ப்ளீஸ் செந்தளரி! நானொரு ஆபத்துல இருக்கேன். என்னைக் காப்பாத்தேன்.''

''ப்ளீஸ் போயிடுங்க... நீங்க போடற கூச்சல்ல அக்கம் பக்கம் இருக்கிறவங்க வந்துடுவாங்க... என் மானம் போகும்.''

''என் நிலைமையைக் கொஞ்சம் புரிஞ்சுக்க சௌந்தரி. நான் பெரிய ஆபத்துல இருக்கேன்.''

''நடு ராத்திரில வந்து எந்தத் துணையும் இல்லாம தனியா இருக்கும்போது நீ பண்றது சரியா இல்லை.''

''சௌந்தரி! உன்னை நான் லவ் பண்றதா சொல்றது, லவ் பண்றது சத்தியம். இப்போ வந்தது உன்னோட டுயட் பாட இல்லை. இன்னும் அஞ்சு நிமிஷம் நீ கதவைத் திறக் கலைன்னா என் உயிர் போயிடும். ப்ளீஸ்...'' கதறலாக வெளி வந்தது.

''உன்னை நம்ப மாட்டேன். நீ பொறுக்கி, நடிக்கிறது உன் தொழில். நீ பேசறது எல்லாம் பொய், கதவைத் திறந்தா வந்து என்னை நாசம் பணணிடுவே...''

''சத்தியமா இல்லை சௌந்தரி. நம்பு சௌந்தரி.''

''டிஸ்டர்ப் பண்ணாதே, போ...''

''சௌந்தரி!''

நான்கைந்து பேர் ஓடி வருகிற சத்தம் கேட்டது.

அஸ்வினில் அலறல் கேட்டது.

''அய்யோ...'' கத்தினான் அஸ்வின்.

சௌந்தரி நெஞ்சில் திக் பரவிற்று.

'நிஜமாவே ஆபத்தில் இருக்கிறாரா?'

மனம் படபடத்தது. கண்களில் நீர் முட்டியது.

''என்ன செய்வது?'' உள்ளுக்குள் பதட்டம். உண்மையான ஆபத்திலிருந்து ஒருவரைக் காப்பாற்ற முடியவில்லையே என்கிற வேதனை.



''அய்யோ...'' மீண்டும் அலறினான். அடி விழுகிற சத்தம்.

'கடவுளே...'

வெளியே 'லைட்' போட்டாள்.

எங்கேயோ, எப்போதோ பத்திரிகையில் படித்த தற்காப்பு உத்திகள் ஞாபகத்திற்கு வந்தது.

மிளகாய்த் தூள் டப்பாவைத் தூக்கிக் கொண்டு, கதவைத் திறந்து ஓடினாள்.

நான்கு பேர் கீழே தள்ளி புரட்டி அடித்துக் கொண்டிருந் தார்கள்.

மின்னல் வேகத்தில் செயல்பட்டாள். மிளகாய்த் தூளை அள்ளி அள்ளி வீசினாள். சக், சக், சக், சக்....

நால்வரும் தடுமாறினார்கள். கண்களைக் கசக்கினார்கள்.

வீட்டுக்குள் ஓடி வந்தாள்.

பெரிய இரும்புக் கரண்டி ஒன்றைத் தூக்கிக் கொண்டு ஓடினாள்.

நான்கு பேரையும் மாறி மாறி மண்டையில் அடித்தாள்.

கால் மூட்டு, கை மூட்டு என்று பார்த்துப் பார்த்து அடித் தாள்.

அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. 'இது நிஜமா?'

'நாலு பேரை நான் அடித்து விட்டேனா?'

அஸ்வினைத் தூக்கி கைத்தாங்கலாகப் பிடித்து அழைத்து வந்தாள்.

போலீசுக்கு போன் செய்தாள்.

போலீஸ் வருவதற்குள் நால்வரும் தப்பி விட்டார்கள்.



## 8



பிரேம் பெட்டியில் துணிமணிகள் நிரப்பிக் கொண்டு மானேஜரிடம் வந்து நின்று விட்டான்.

''ஸார்! நான் நாட்டுக்குப் புறப்படறேன்.''

''பய்யா, என்னடா இது?''

''முடிவு எடுத்தாச்சு சார். கொஞ்சமும் பின்வாங்கற எண்ணம் இல்லை. அட்வைஸ் பண்ணி மாத்தலாம்னு நினைக்க வேணாம். எனக்கு கணக்கு போட்டு பணம் தாங்க...''

''முட்டாள்...''

''ஸார்.''

''நீ செலவு பண்ணி வந்த பணத்தைக்கூட இன்னும் சம்பாதிக்கலை.''

''எனக்கு பணம் வேண்டாம் சார். பணம் எப்போ வேணும்னாலும் சம்பாதிக்கலாம்...''

''ஆமாடா பய்யா பணம் சம்பாதிக்கலாம். காதலை சம்பாதிக்கவே முடியாது. நீ போய் அந்த நடிகையோட காலைப் பிடி போ. பய்யா நான் லீவ்ல வரும்போது உன் அட்ரஸ்ல வந்து பாக்கறேன். அப்போ நீ பிச்சைக்காரனா இருப்பே. இது கொடுமாம்பட்டி கேப்பை மாரியம்மன் மேல சத்தியம். நீ உன் ஏஜெண்ட் கிட்ட சொல்விட்டு புறப்படு. பணம் அவங்ககிட்ட சேர்ந்துடும். உன்னைக் கணக்கு முடிச்சி அனுப்பி வைக்கிற உரிமை எங்களுக்கு இல்லை. உன்னைக் கொண்டு வந்த ஏஜெண்ட்தான் உன் முதலாளி. அவன்



கிட்டேயே போய் சாவு. மறுபடியும் இங்கே வந்தா சேர்த்துக்க மாட்டாங்க... நாடு விட்டு நாடு வந்தா போதாது. அறிவு நல்லா இருக்கணும். ஒழிக! ஓடு!''

மானேஜரை நின்று முறைத்துவிட்டுப் புறப்பட்டான்.

''போடா... போ...'' என்றார் மானேஜர் சத்தமாக.



## 9



போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் அஸ்வின் படுத்திருந்தான்.

பத்திரிகையாளர்கள், புகைப்படக்காரர்கள், டி.வி. ரிப்போர்ட்டர்கள் மற்றும் நடிகர், நடிகைகள் பெருங்கூட்டமாக வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

போலீஸ் காவல் இருந்தது.

''தெரியலை சார். அவங்க யார் என்னன்னு தெரியலை. ஒரு டைரக்டரோட அசிஸ்டெண்ட்டுன்னு சொன்னாங்க. அடுத்த படத்துல கமிட் பண்றதுக்காக பேசணும்னு சொன்னாங்க. சரின்னு புறப்பட்டேன். 'என் கார்லயே வர்றேன்'னு சொன்னேன். 'வேண்டாம் சார், நீங்க சாரை சந்திக்கிறது ரகசியமா இருக்கட்டும்'னு சொன்னாங்க... அவங்களோட குவாலிஸ்ல உட்கார்ந்தேன். சாரோட படத்துல நடிக்கப் போறோம்ங்கிற சந்தோஷம். கார் எங்கெங்கோ போச்சு. டவுட்டாச்சு. கேட்டேன். மூஞ்சுல ஒரு குத்து விட்டாங்க. செல்போன் பிடுங்கிகிட்டாங்க. அப்பதான் எனக்கு என் நிலைமை புரிஞ்சது. ''யார் நீங்க, உங்களுக்கு என்ன

வேணும்னு கேட்டேன்'' அதுக்கும் அடி விழுந்தது. அதுக்கு பிறகு பேசல. அமைதியா வந்தேன். ஒரு ரயில்வே பாலத்துக்குக் கீழே நிறுத்திட்டு ட்ரிங்ஸ் பண்ணாங்க. அந்த ஏரியாவைப் பார்த்தேன். அது என் ஃப்ரெண்டு ஏரியாதான். கிடைச்ச கொஞ்சம் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தப்பித்து ஓடினேன். என் சிநேகிதி ரொம்ப கெட்டிக்காரி. டெக்னிக்கலா என்னைக் காப்பாத்தினா.''

பத்திரிகைக்கும், டி.வி.க்கும் சௌந்தரியைப் பற்றி கூற அவர்கள், சௌந்தரியின் ஃபோட்டோவிற்கும், பேட்டிக்கும் அவளைத் தேடினார்கள்.

சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன்.

சௌந்தரி ட்யூட்டியில் இருந்தாள்.

பெரிய பத்திரிகையின் நிருபரும், ஃபோட்டோகிராபரும் வந்து விட்டார்கள்.

''எக்ஸ்க்யூஸ் மீ.''

''யெஸ்...'' என்று திரும்பினாள்.

''இங்கே சௌந்தரின்னு...''

''ஏன்?''

''நான் பத்திரிகை ரிப்போர்ட்டர். அவங்ககிட்ட பேட்டி எடுக்கணும்.''

''ஸாரி சார். அவங்க சாதாரண மனுஷி. ரயில்வே பிளாட்ஃபார்ம்ல நின்னுட்டு டிக்கெட் கலெக்ட் பண்ற ரயில்வே தொழிலாளி. பேட்டியும் வேணாம். ஒண்ணும் வேணாம். ப்ளீஸ் போங்க...''

''மேடம். நீங்கதானா? ப்ளீஸ் மேடம். ஒரே ஸ்டில். ரெண்டே கேள்வி.''

''ப்ளீஸ் தயவு செய்து போங்க...''

''நடிகர் அஸ்வினுக்கும் உங்களுக்கும் மேரேஜ்னு...''



''ப்ளீஸ் போங்க...''

''சொல்லுங்க மேடம்...''

''நான் போலீசைக் கூப்பிட வேண்டி வரும்.''

சௌந்தரி அவர்களை விலகி நகர்ந்தாள்.

எதிரே -

சௌந்தரி எதிர்பாராத இன்ப அதிர்ச்சி.

பிரேம் வந்து கொண்டிருந்தான். கண்களில் ஆனந்தம் பொங்கிற்று.

''பிரேம்.''

பிரேம் அவளை நெருங்கி வந்தான்.

சௌந்தரி பத்திரிகையாளர் பக்கம் திரும்பினாள்.

''ரிப்போர்ட்டர் சார்! இவர்தான் என் லவ்வர். இவரைத்தான் நான் மேரேஜ் பண்ணிக்கப் போறேன்'' என்றாள்.

''பிரேம்!''

அவன் அருகே வந்து நின்றான்.

''ரெண்டு பேரையும் சேர்ந்து ஃபோட்டோ எடுத்துக்குங்க. இவர்தான் என் வருங்காலக் கணவர்'' பிரேமின் தோளில் கை போட்டாள்.

பிரேம் விலகினான்.

''ஸாரி சௌந்தரி! என்ன இது ஃபோட்டோ? ஸாரி என்னை! மறந்திடு. சொல்லிட்டுப் போலாம்னுதான் வந்தேன். எதுவுமே நிரந்தரமில்லை. காதலும் நிரந்தரமில்லை. மனுஷன் வாழ்க்கை கனவு மாதிரி. கனவுல எதுவும் நடக்கும். மறந்துடு. நான் ஒரு நடிகையை லவ் பண்றேன். இல்லை, அந்த நடிகை என்னை லவ் பண்றாங்க... நல்ல மாப்பிள்ளையா பார்த்துக் கல்யாணம் பண்ணிக்க...'' சொல்லிவிட்டு, எந்தவித பதிலையும் எதிர்பார்க்காமல் நடந்தான்.

அடி வயிற்றிலிருந்து துக்கம், வேதனை, கோபம், குமுறல், ஆத்திரம் பொங்கிற்று.

''பிரேம்'' கத்தினாள்.

பயணிகள் நின்று அவளைப் பார்த்தார்கள்.

பிரேம் நின்றான். அவளிடம் வந்தான். ''சும்மா ஆர்ப்பாட்டம் பண்ணக் கூடாது. உனக்கு தாலி கட்டல. உன்னைக் கெடுத்து விடலே. அப்போ லவ் பண்ணேன். இப்போ லவ் பண்ணலை. அவ்ளோதான். கல்யாணம் பண்ணிக்கிட்டே பலபேர் விவாகரத்து பண்ணிக்கிறாங்க... உன்னை ஏமாத்தணும்னு நினைச்சா, இப்போ தாலி கட்டிட்டு நான் அந்த நடிகையோட ரகசியமா உறவு வைச்சுக்கலாம். எனக்கு அது பிடிக்கலை. இதைவிட விளக்கமா சொல்ல முடியாது. புரிஞ்சுக்கிற அறிவு உனக்கு இருக்குன்னு நினைக்கிறேன். உன் அழகைப் பார்த்து மயங்கி உன்னை லவ் பண்ணேன். நடிகை உன்னைவிட அழகு. மிஸ் பண்ண முடியுமா? அவங்களுக்காக என் உயிரைக்கூட விடுவேன்'' சொல்லிவிட்டு அவன் போனான்.

சௌந்தரி சிலை மாதிரி நின்றாள்.

அறைக்குள் பேயறைந்த மாதிரி உட்கார்ந்திருந்தாள் சௌமாலினி.

சௌந்தரி விம்மி விம்மி அழுதாள்.

''அழாத சௌந்தரி.''

''இல்லை சௌமி. இவன் எப்படியெல்லாம் உருகி உருகி லவ் பண்ணினான் தெரியுமா?''

சௌமாலினி எங்கோ வெறித்து பார்த்தாள்.

''சௌந்தரி! நான் ஒரு உண்மையைச் சொல்லட்டுமா?''

அவள் தலையை உயர்த்தி சௌமாலினியைப் பார்த்தாள்.

''பிரேமுக்கும் உனக்கும் இருக்கிறது உண்மைக்காதல்னு நம்பி, உனக்கு இடைஞ்சலா இருந்த அஸ்வினை அடிக்கிறதுக்கு கூலிப் படையை அனுப்பி வைச்சதே நான்தான். காலும், கையும் உடைஞ்சி ஆறு மாசம் பெட்ல இருந்தா திருந்துவான்னு பார்த்தேன்.''



''சௌமி!'' பிரமிப்பாய்ப் பார்த்தாள்.

''இப்போ பிரேம் காலை உடைக்கிறேன். புருஷன் செத்துட்டாரு. அவரையே என் மனசுல இருந்து நீக்க முடியலை. மறக்க முடியலை. உயிருக்குயிரா காதலிச்சுட்டு எப்படி மறக்கறாங்க? நாமெல்லாம் மாறணும் சௌந்தரி. கட்டின புருஷனுக்கு, காதலனுக்கு கொத்தடிமையா வாழ்ற புத்தியை மாத்திக்கணும். கணவர் செத்தா மனைவியை சிதையில தூக்கிப் போட்டாங்க. மனைவி செத்தா கணவனுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வைக்கிறாங்க. சமூகம் மாறும்போது பெண்களும் மாறணும். தேவையில்லைன்னா தூக்கி எறியணும். அவனையே நினைச்சி அழக்கூடாது. செருப்புல அவனை நாலு அடி போட்டுடு. ஆத்திரம் தீரும். காதலும் தீரும்'' சௌமாலினி தீர்க்கமாகச் சொன்னாள்.

சௌந்தரி துக்கம் அடக்க முடியாமல் கண்ணீர் வடித்தாள்.

பிரேம், புஷ்ப நடிகை, வீட்டு வாசலில் காத்திருந்தான். காவலாளி உள்ளே விடவில்லை. எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தான், பலனில்லை.

நீண்ட நேரம் காத்திருந்த பிறகு கார் வெளியே வந்தது.

காருக்குக் குறுக்கே நின்றான்.

டிரைவர் திட்டினான்.

நடிகை, கண்ணாடிக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள். அவள் முகத்தை உரசினபடி ஒரு வடநாட்டு இளைஞன்.

''யார் நீ, என்ன வேணும்?'' என்றாள்.

''நான், நான்... என்னைத் தெரியலையா?''

''ப்ளீஸ் என்ன வேணும்? ஆட்டோகிராப் வேணுமா? ஸ்டில் வேணுமா?''

''மேடம்! நான் மலேஷியாவுல பார்த்தேன்.''

''மலேஷியாவுல லட்சம் பேர் பார்த்தாங்க. ஞாபகம் வைச்சுக்க முடியுமா? பர்ஸிலிருந்து நூறு ரூபாய் நோட்டை எடுத்து அவன் மீது போட்டுவிட்டு ''டிரைவர்! போ!'' என்றாள். காவலாளியிடம் ''இவனை இனிமே சேர்க்காதே...'' என்றாள்.

நடிகைக்குப் பக்கத்திலிருந்த இளைஞன் அவளின் மேல் கை போட்டான்.

காவலாளி கீழே விழுந்த நூறு ரூபாயை எடுத்து வைத்துக் கொண்டு திட்டினான்.

''டேய், புறம்போக்கு, எச்சிகலை, திருந்துங்கடா... பெத்த தாய்க்கு கோயில் கட்டுங்கடா...'' கத்தினான்.

கற்பனைகள், கனவுகள் தூள் தூளாகி உடைய நொடிந்து போய் நடந்தான்.

மனம் அமைதியாகவில்லை.

'அவளா?'

'நிஜமாவே என்னைத் தெரியலையா?'

ஷூட்டிங் ஸ்பாட்டிற்குப் போனான்.

புஷ்ப நடிகைக்குப் பின்னாடியே அந்த வடநாட்டு இளைஞன் சுற்றினான். ஒரு 'ஷாட்' முடிந்ததும் இருவரும் காருக்குள் நுழைந்து கொண்டார்கள்.

அடுத்த ஷாட்டிற்காக நடிகை காரிலிருந்து வந்தபோது எதிரே போய் நின்றான்.

''நிஜமாவே என்னைத் தெரியலையா?'' என்றான்.

''வாட் நான்சென்ஸ்'' என்றாள். முகம் திருப்பினாள்.

அசிஸ்டண்ட் டைரக்டர்கள் துரத்தினார்கள்.



## 10

இரயில்வே ஸ்டேஷன்.

பணியில் இருந்தாள் சௌந்தரி.

அவளிடம் வந்தான் பிரேம்.

''மன்னிச்சிடு சௌந்தரி. நான் திடீர்னு மனசைக் கெடுத்துகிட்டேன். மன்னிச்சிடு திருந்திட்டேன். ஐ லவ் யூ...''

சௌந்தரி அவனை முறைப்போடு பார்த்தாள். தூரத்தில் துப்பாக்கியோடு நின்றிருந்த போலீஸ்காரரை அழைத்தாள்.

''ஸார்! இந்த ஆள் என்கிட்ட வம்பு பண்றார்...''

போலீஸ்காரர் பிரேமின் கன்னத்தில் 'பளார்... பளார்' வைத்தார். இழுத்துக்கொண்டு போனார்.

அப்போது -

அஸ்வின் வந்தான்.

''ரொம்ப தாங்க்ஸ் சௌந்தரி. நீ இல்லேன்னா செத்துப் போயிருப்பேன். இப்பவாவது ஐ லவ் யூ சொல்லு சௌந்தரி'' கெஞ்சலாகப் பார்த்தான்.

''காதலா? சத்தியமா வேணாம். வீட்ல பாக்கற மாப்பிள்ளை தான்... ஸாரி. நீங்க வேணும்னா எங்கப்பாகிட்ட பேசுங்க... கல்யாணத்துக்கு பிறகுதான் காதல்...'' முடிவாக சொல்லி விட்டு இருநூற்றி ஐம்பத்தி மூன்று ரூபாய், ப்ளீஸ்' என்றபடி பில் போட்டாள்.

''இப்பவெல்லாம் ஃபைன் அதிகமாயிடுச்சு.''

# காதல்
# எனும்
# கானல்..!

## 1

**நா**ன்கு கல்லூரி மாணவர்கள் ஒன்று சேர்ந்தால் அவர்கள் ஆடும் ஆட்டத்தில், போடுகிற கூச்சலில் ஏரியாவே அமர்க் களமாய்க் காணப்படும் என்று தான் உங்களுக்குத் தெரியும்.

நான்கு கல்லூரி மாணவிகள் கூடிவிட்டால் என்னென்ன நடக்கும் என்பது உங்களுக்குத் தெரியுமா? அந்த ஏரியாவில் அகப்பட்ட அத்தனை இளைஞர்களும் அலாப்ஸ், கொலாப்ஸ் ஆகிவிடுவார்கள். சிலருக்கு ஃப்யூஸ் போகும். சிலருக்கு பெஸ்ட் டே ஆகும்.

''ஸார்! இங்கே நாலு பொண்ணுங்க பயங்கர கலாட்டா பண்றாங்க... ரோட்ல ஒரு பையன் நிம்மதியா நடக்க முடியலை. தயவு செஞ்சி அவங்களைப் பிடிச்சி ஜெயில்ல



போடுங்க...'' என்று போலீஸில் புகார் செய்ய முடியாது. புகாரை எடுத்துக் கொள்ளவும் மாட்டார்கள். சட்டங்கள் ஆணுக்கொன்று, பெண்ணுக்கொன்று.

லட்சுமி சரஸ்வதி பொறியியல் கல்லூரி. சுருக்கமாக l.s.e.c.

தேசிய நெடுஞ்சாலை ஒட்டி, இயற்கை எழில் கொஞ்சும் ஏலகிரி மலையின் அடிவாரம் கல்லூரி அமைந்திருந்தது. தொடங்கி நான்கு ஆண்டுகள் ஆகிறது. எம்.பி. ஒருவர் பங்கு தாரராய் இருக்கிறார்.

இப்போதைய நிலையில் நல்ல வியாபாரம் என்றால் அது பள்ளிக் கூடமோ, கல்லூரியோ நடத்துவது தான். கார் தொழிற் சாலை, சைக்கிள் தொழிற்சாலை என்று இருக்கிற மாதிரி, கல்லூரியும் தொழிற்சாலை! எம்.ஏ, எம்.காம், பி.இ, எம்.பி.பி.எஸ் பட்டங்களைத் தயாரித்து விற்கிற தொழிற் சாலைகளாக ஆகிவிட்டன கல்லூரிகள். விலை எவ்வளவு சொன்னாலும் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஐம்பதா யிரம், லட்சம் என்று கொட்டுவதற்குக் காத்திருக்கிறார்கள், பாவப்பட்ட பெற்றோர்கள்.

எல்.எஸ்.இ.சியில் படிக்கும் பெண்கள் பணக்காரப் பெண் கள்! காரிலும், ஸ்கூட்டரிலும் கல்லூரிக்கு வருபவர்கள் அழகிப் போட்டிக்குப் போகிறவர்களைப் போல் உடை உடுத்துப வர்கள், இங்கிலிஷ்காரன் வாழ்க்கை வாழ்கிற தமிழச்சிகள்.

**ஸ்**நேகலதாவை நீங்கள் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். சிவில் இஞ்சினியரிங் கடைசி வருடம் படித்துக் கொண்டிருக்கும் அழகான ராட்சஸி! அப்பாவிற்கு ஆம்பூரில் பெரிய லெதர் ட்ரேடிங் கம்பெனி இருக்கிறது. அது அச்சடிக் கிற மாதிரி பணத்தை அள்ளி வீசுகிறது.

ஸ்நேகலதாவின் அண்ணன் சாய்குமார் போன வருஷம் வரைக்கும் தமிழ் சினிமாவில் நெம்பர் ஒன் நடிகையாக இருந்த சுஷ்மாவைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டான். சாய்குமார் காதலித்த நடிகைகள் பெரிய லிஸ்ட்.. வேறு வேலை இருந்தால் தானே? சென்னை வேப்பேரியில் பெரிய பங்களா இருக்கிறது, உல்லாசமாய் தங்குவதற்கு. வாரி வாரி செலவழிக்கப் பணத்தைச் சம்பாதித்துக் குவித்துக் கொண்டிருக்கிறது அப்பாவின் லெதர் ட்ரேடிங் கம்பெனி. 'சினிமா தயாரிப்பாளர்களுக்கு பைனான்ஸ் பண்ணுகிறேன் அப்பா' என்று கோடிகள் சில வாங்கி தன் பெயரில் வங்கியில் போட்டுக் கொண்டு, நடிகைகளிடம் காதலைப் போட்டுக் கொண்டிருக்கிறான்.

எதிலும் சாய்குமார் திருப்தி அடைந்ததில்லை.

''கேமிராவையும், லென்ஸையும், மேக்கப் சாதனங்களையும் கண்டுபிடிச்சது எவ்வளவு தப்பு. சினிமாவுல போட்டோவுல பார்க்கிறதுக்கு ப்யூட்டியாத் தெரியறாளுங்க, நேர்ல ஒண்ணும் காணுமே. கிராமத்துல ஆடு மேய்க்கிற வெள்ளைச்சிக்குக் கால்தூசு வருவாங்களா'' என்பான்.

ஒரு ராத்திரியோ, ரெண்டு ராத்திரியோ அனுபவித்து விட்டுக் கை கழுவிய நடிகைகள் அதிகம். சுஷ்மாவிடம் தான் சுத்தமாய் மாட்டிக் கொண்டான். சுஷ்மா தமிழ் சினிமாவில் கலைச் சேவை செய்தது முற்றுப் பெற்றது. டைரக்டர் வருண் குமார் 'பத்து லட்சம் தருகிறேன். ஒரே ஒரு பாடல் காட்சிக்கு மட்டும் ஆடிவிட்டுப் போய் விடுங்கள்' என்று கெஞ்சிப் பார்த்தான். சாய்குமார் சம்மதிக்கவில்லை.

''நீ எவ்வளவு பெரிய நடிகையானாலும் சரி. இப்போது எனக்கு ஒய்ஃப். எனக்குப் பணிவிடை செய்றதுதான் உன்



ட்யூட்டி. பத்து லட்சமா? டைரக்டரோட வொய்ஃப்பை நம்ம வீட்ல வந்து ஒரு மணி நேரம் ஆடச்சொல்லு நான் தர்றேன், வொய்ஃப் இல்லையா, சிஸ்டரை வந்து ஆடச் சொல்லு. நான் தர்றேன்'' என்று கூறி விட்டான்.

''அட அசிங்கமா இருந்தாலும் நான் ரசிக்கிறேண்டி.'' இவ்வாறாக இந்தக் குடும்பத்தின் நரம்புகளில் ஓடுவது இரத்தம் அல்ல, பணத்திமிர்.

ஸ்நேகலதாவின் நரம்புகளிலும் பணத் திமிர் ஒட்டமாய் ஓடிக்கொண்டிருந்தது. கல்லூரி அவளின் கட்டுப்பாட்டில் இருந்தது.

வகுப்பறையின் ஜன்னலோரம் ஸ்நேகலதாவிற்கு இருக்கை. அவளாக, அக்கிரமம் செய்வதற்கு வசதியாகத் தேடி உட்கார்ந்த இடம். கல்லூரிக்குள் போகிறவர்களை வருகிறவர்களை அழைத்து ஜன்னலோரம் நிறுத்திப் பேசிக் கொண்டிருப்பாள். பாடத்தை கவனித்துக் கொண்டிருந்தால் தூக்கம் வருகிறது. ஜன்னலோரம் உட்கார்ந்து போகிறவர்களை, வருகிறவர்களைக் கலாய்த்துக் கொண்டிருந்தால் பொழுது ஜாலியாகப் போகிறது. பாடமாவது, பேராசிரியராவது...!

கண்ணாடி அணிந்த மெல்லிய ஆசாமி ஒருவர் கல்லூரி கேட்டைத் தாண்டி உள்ளே வந்து கொண்டிருந்தார்.

''ஹலோ ஸார்!'' அவரைப் பார்த்து ஸ்நேகலதா அழைத்தாள்.

அவர் நின்று கண்ணாடியை ஒரு முறை ஏற்றியும் இறக்கியும் பார்த்தார். அவருக்கு எதுவும் விளங்கவில்லை. 'என்னைத் தான் அழைக்கிறார்களா, அல்லது வேறு யாரையாவது... ஸார் என்பது ஆணைத்தான் குறிக்கிறது. இங்கு என்னைத் தவிர வேறு யாரும் இல்லை' புரியாமல் விழி பிதுங்கினார்.

ஸ்நேகலதா முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு ஓரக் கண்ணால் பார்த்து ரசித்தாள்.

அவர் தன்னை யாரும் அழைக்கவில்லை என்கிற முடிவை எடுத்துக் கொண்டு திரும்பவும் நடக்க ஆரம்பித்தார்.

''யோவ் ஓமக்குச்சி நரசிம்மா...'' என்று குரல் கொடுத்தாள்.

அவளைச் சுற்றி இருந்த தோழிகள் கொல்லெனச் சிரித்துக் கொண்டனர்..

அவருக்கு வியர்த்து விட்டது. மனிதன் ஒரு மாதிரி நடுங்கி விட்டார். கோபத்தில் மூக்கின் நுனி வியர்ந்தது.

மீண்டும் நடக்கத் தொடங்கினார்.

''பார்த்துங்க அத்தான். பெரிசா காத்தடிக்குது. பறந்திடப் போறீங்க...'' என்றாள் மீண்டும் சிரிப்பு.

அவர் புரிந்து கொண்டார். இது மாணவிகளின் கிண்டல் தான் என்று. என்ன ஆனாலும் சரி, திரும்பிப் பார்க்கவே கூடாது என்று முடிவு செய்து நடந்தார்.

''போகாதே போகாதே என் கணவா. பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன்'' என்று பாட ஆரம்பித்தாள். வெடிச் சிரிப்புக் கிளம்பிற்று. ''பெரிதாகக் காற்றொன்று அடிக்கக் கண்டேன். அதில் சிக்குண்டு நீதான் பறக்கக் கண்டேன். போகாதே போகாதே என் கணவா பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன்'' பெரிதாகப் பாடினாள்.

வகுப்பறை குதித்து சிரித்தது.

அவர் ஓட்டமும் நடையுமாக, வேகமாய் நகர்ந்து பிரின்ஸ் பால் அறையை நோக்கி நகர்ந்தார்.

அவர் நகர்ந்த பின்னும் கூட கலாட்டா ஓயவில்லை.



''ஏய் ரம்யா, எங்க அத்தான் நான் சொல்றதைக் காதுல வாங்கிக்காம போறார்டி.'' ஸ்நேகலதா செயற்கையான சோகம் காட்டினாள்.

''எங்கடி போறார்?''

''போருக்கு.''

''உன் அக்கப் போரைவிட போரே பரவால்லைனு போறார்டி.''

திடீரென வகுப்பறை அமைதியானது. ஊசி விழுந்தால் சத்தம் கேட்கும். அப்படியொரு அமைதி. புரொபஸர் தேவ ராசன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்.

''குட்மார்னிங் ஸார்!'' வகுப்பறை மாணவிகள் கோர ஸாய் எழுந்து நின்று கூறி விட்டு உட்கார்ந்த பிறகு, ஸ்நேக லதா மட்டும் தனியாக கடைசியாக எழுந்து ''குட்மார்னிங் ஸார்!'' என்றாள்.

''என்னம்மா நீ மட்டும் ஒரு முறை தனியாச் சொல்றே...''

''நீங்க வந்ததை நான் கவனிக்கலை ஸார்.''

''ஜன்னல் ஓரம் உட்கார்ந்திருக்கே. இல்லையா? சைட் அடிச்சிட்டிருந்திருப்பே...''

''நோநோ ஸார். என் மேல் களங்கம் சுமத்தாதீர்கள். நான் கண்ணும் கருத்துமாகப் புத்தகம் படித்துக் கொண்டிருந்தேன்.''

''அப்படியா குழந்தாய்? உன் அறிவை மெச்சுகிறேன். இப்போது நான் பாடம் நடத்துகிறேன். மிக கவனமாக அதை நீ கவனிக்க வேண்டும் என்று நான் சொல்லமாட்டேன். மற்ற வர்களை இடைஞ்சல் பண்ணாமல் இருக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

''உத்திரவு ஸார்!'' என்று உரக்கக் கத்தினாள். மெதுவான குரலில் பக்கத்தில் உட்கார்ந்த மாணவிகளுக்கு மட்டும் கேட்கிற மாதிரி ''பாருங்கடி தாமசை. இந்த ஆள் பாடம்

நடத்தறானாம். அதை நாம கேட்கணுமாம்? மாங்காய்த் தலையன்!'' என்றாள்.

பக்கத்தில் உட்கார்ந்திருவர்களால் சிரிக்கவும் முடிய வில்லை. சிரிக்காது இருக்கவும் முடியவில்லை.

புரொபஸர் பாடம் நடத்தத் தொடங்கினார்.

ஸ்நேகலதா, 'வேறு யாராவது மாட்ட மாட்டார்களா!' என்று ஜன்னலிலேயே பார்வையை வைத்துக் கொண்டிருந் தாள்.

''நானென்ன படிக்கவா வந்தேன்... பொழுது போகணும் அதுதான் முக்கியம். ஜாலியா பொழுது போகணும். அது ரொம்ப ரொம்ப முக்கியம். படிச்சிட்டு நானென்ன வேலைக்கா போகப் போறேன்...?''

வழி மேல் விழி வைத்து அவள் காத்திருந்தது வீண் போக வில்லை. கூரியர் ஆபிஸில் வேலை செய்யும் டெலிவரி பாய் தோல்பை மாட்டிக் கொண்டு உள்ளே நுழைந்தான். இருபத் திரண்டு வயது இளைஞன் விடுவாளா?

''ஹலோ...!'' என்றழைத்தாள், குரல் கேட்டுத் திரும்பினான்.

இனிமையான குரல், அழகான முகம், கல்லூரிப் பெண் 'ஹலோ' என்று கூறினால் கட்டான இளைஞன் கிறங்க மாட் டானா?

''என்னங்க?'' என்றான்.

'இங்கே வா.' என்பதாய்ச் சைகை காட்டினாள். சத்தமாய் பேசினால் புரொபஸருக்கு கேட்கும்.

அவன் ஜன்னலருகே போனான்.

''கூரியரா?''

''யெஸ்.'' அவன் நெளிந்தான். வெட்கம் வெளிப்பட்டது. ஸ்நேகலதாவின் ஜொலித்த அழகில் மயங்கினான்.



''டெய்லி வர்றீங்களா?''

''யெஸ்.''

''ரொம்ப அழகு!'' என்றாள். கிண்டல் பண்ணுகிறாளா, வேறென்ன? அவன் இளித்து நின்றான்.

''அழகா இருக்கீங்க...''

''....'' திக்கு முக்காடினான்.

''டெய்லி வருவீங்கதானே...?'' நெகிழ்ந்து கேட்டாள்.

தலையாட்டிவிட்டு நகர்ந்தான். அவளால் அவன் வாழ்க்கை சிக்கலாகப் போகிறது என்று அப்போது அவன் உணர வில்லை.

## 2

கூரியர் அலுவலகம்.

சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது. தபால்களைப் பிரித்துக் கொண்டிருந்தார்கள்.

செலுலாரில் மானேஜர் பேசிக் கொண்டிருந்தார்.

அவரின் அருகே போய் கோவிந்தசாமி நின்றான்.

மானேஜர் அவனைக் கண்டு கொள்ளாமல் செலுலாரில் மெய் மறந்திருந்தார். மனைவியோடு பேச வேண்டும். அல்லது மனைவி மாதிரியான ஆளோடு பேச வேண்டும்.

''எவ்வளவு நேரம் பேசறான் பார். பில் இவனா கட்டப் போறான். கம்பெனி கட்டப் போகுது' என்று உள்ளுக்குள் சபித்த படி நின்று கொண்டிருந்தான் கோவிந்தசாமி.

பேசி முடித்து செலுலாரை மடக்கி வைத்து விட்டு,

''என்ன பிரதர், என்ன மேட்டர், என்னை எதிர்பார்த்து நிற்கிறே?''

''வந்து... வந்து...''

''தைரியமாச் சொல்லு... லோன் வேணுமா... எவ்ளோ...?''

''இல்லை சார்...''

''வேற?''

''என்னை வெளியூர் ரூட்லப் போடாதீங்கன்னு கேட்க லாம்னு வந்தேன். லோக்கல் டெலிவரி பண்றேன்.''

ஆச்சர்யமாய்ப் பார்த்தார். வேலை செய்பவர்கள் எல் லோரும் தபால் லோடு எடுத்துக் கொண்டு வெளியூர் போகத் தான் விரும்புவார்கள். டிராவலிங் அலவன்ஸ், பேட்டா நிறைய கிடைக்கும். இரயில் ரிசர்வேஷன் டிக்கட்டைக் கம்பெனி புக் செய்து தரும். அதை ஏமாந்த பயணிகள் தலைக்கு விற்று விட்டால் அதுவும் லாபம். போர்ட்டருக்கு இவ்வளவு, ஆட் டோவுக்கு இவ்வளவு என்று வவுச்சர் போட்டு வேறு அடிக்க லாம். லோக்கல் டெலிவரி என்றால் எந்த வருமானமும் கிடை யாது. சம்பளத்தோடு சரி. அதனால் யாரும் லோக்கல் டெலிவரி கேட்க மாட்டார்கள். ஆகவே தினமும் வேறு வேறு ஆள் மாற்றிப் போட்டு வந்தார்.

ஸ்நேகலதா ரெண்டு வார்த்தை பேசினதும் மயங்கி விட் டான் கோவிந்தசாமி. லோக்கல் டெலிவரி பார்த்தால் தினமும் ஸ்நேகலதாவைப் பார்க்க முடியும். வருமானமா முக்கியம்? அழகுப் பெண்ணின் காதல் தானே?

''ஓ.கே. பிரதர்! பெப்சி உங்கள் சாய்ஸ்.'' என்றார், மானேஜர். 'லோக்கல் டெலிவரி பார்த்தே நாயாய் அலைந்து சாவுடா மகனே...''



கோவிந்தசாமி சந்தோஷத்தில் குதித்தான்.

ஸ்நேகலதா மீண்டும் மீண்டும் அவன் நெஞ்சில் சுழன் றாள்.

'சினிமா நட்சத்திரம் மாதிரி என்னவொரு அழகு.'

இதயத்தில் குளிர்ச்சியால் பனி அருவி ஓடிற்று.

'அழகான பெண், என்னை அழைத்துப் பேசுகிறாள் என்றால்... நான் எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலி!'

'அதுவும் சாதாரணப் பெண்ணா, தேவலோகத்திலிருந்து குதித்தவள் மாதிரி கொள்ளை அழகில் இருக்கிறாள்.'

'அதுக்கு மச்சம் வேணும்.'

'மச்சம் எனக்கு இருக்கிறது.'

'நான் அழகா?'

இரவெல்லாம் தூக்கம் வரவில்லை. தூங்காமலேயே கனவு வந்தது. ஆஸ்திரேலியா, ஸ்விட்சர்லாந்து எல்லாம் போய் ஸ்நேகலதாவோடு டூயட் பாடினான்.

'இது சினிமா காதல் போல்தான் ஆகப் போகிறது. ஏழை இளைஞனைப் பணக்காரப் பெண் காதலிக்கப் போகிறாள்.'

'எனக்கு பணம் எதுவும் வேண்டாம். கட்டின புடவை யோடு வந்தால் போதும். தவறு, சுடிதாரோடு வந்தால் போதும்.'

கனவில் மிதந்தான். கற்பனையில் பொழுதைக் கழித்தான்.

**ஸ்**நேகலதா தோழிகளோடு அவளின் மாடி அறையில் உட்கார்ந்திருந்தாள். கல்லூரி முடிந்ததும் தன்னுடைய காரில் தோழிகளை உட்கார வைத்துக் கொண்டு வந்துவிட்டாள்.

வேலைக்காரப் பெண் அனைவருக்கும் நொறுக்குத் தீனி யும், காபியும் கொண்டு வந்து பரப்பினாள், பரிமாறினாள், பணிவோடு.

டி.வி. ஓடிக் கொண்டிருந்தது.

''டி.வி. போருடி, வேற காசெட் இருந்தாப் போடேன்.''

''நாளைக்கு என்னென்ன படம் ரிலீஸ்?''

''டைரக்டர் ஷங்கர் ஒரு படம், மணிரத்னம் ஸாருடையது ஒரு படம்.''

''நாளைக்கு ரிலீஸாகிற படத்தை இன்னைக்கே பார்க்கிறீங்களா?'' என்று கேட்டாள்.

''எப்படி?''

''பணம்! பணம் தந்தாக் கிடைக்கும். அண்ணனுக்கு ஒரு போனடிச்சாப் போதும். ரெண்டு மணி நேரத்துல நம்ம கைக்கு காஸெட் வரும்.''

''உங்க அண்ணனும், அண்ணியும் இங்கே வரமாட்டாங்களா?''

''வருவாங்களே..''

''வரும்போது சொல்லுடி. உங்க அண்ணியைப் பார்க்கணும். கனவுக்கன்னி சுஷ்மான்னா சும்மாவா?'' திவ்யாவின் கண்களில் ஏக்கம் தெரிந்தது.

''ஆமாம் ஸ்நேகலதா! உங்க அண்ணியை ஒரே ஒரு முறை பார்க்கணும். எங்களோட பேசுவாங்களா?'' - இது சித்ரலேகா.

''உங்க அண்ணன் பெரிய அதிர்ஷ்டாலி ஸ்நேகா. இல்லேன்னா நடிகை சுஷ்மா மனைவியாக் கிடைப்பாங்களா? எத்தனை ஹீரோக்கள் அவங்களைக் கல்யாணம் பண்ணிக்கத் தவமா இருந்தாங்களாமே...'' இது கனகா.

அனைவரையும் முறைத்துப் பார்த்தாள் ஸ்நேகலதா.

''ஏய் காட்டு ஜென்மங்களே... உங்களை, உங்களை துண்டுத் துண்டா வெட்டி ஜவ்வாது ஹில்ஸ் பாரஸ்ட்ல



தூவணும். நடிகைன்னா பெரிய இவளா? என்னமோ சுஷ்மா சுஷ்மான்னு உருகி வழியறீங்க... நடிகைன்னா என்ன அர்த்தம் தெரியுமா...

''நடிகையோட உடம்பும் எலும்பாலையும், தோலாலையும் தான் இருக்கு. தங்கத்துல, வைரத்துல இழைச்சிடலை. எங்க அண்ணனை வளைக்க எத்தனை நடிகைங்க போட்டி போட்டாங்க தெரியுமா? போனா போகட்டும்னு சுஷ்மாவுக்கு வாழ்க்கை தந்தார். உங்களுக்கு வேணும்னா சுஷ்மா பெரிய ஸ்டாரா இருக்கலாம். எங்களுக்கு வேலைக்காரி. இந்த வீட்டு மருமகள். நாங்க சொல்ற வேலையைச் செய்யணும். என்ன கேட்டீங்க? ஒரே ஒரு முறை பார்க்க முடியுமான்னுதானே? உங்களுக்கு விழுந்து விழுந்து பணிவிடை செய்யச் சொல்றேன். என்னோட ஃபிரண்ட்ஸ் என்கிற காரணத்தால... நீங்க சுஷ்மாகிட்ட மிரட்டி மிரட்டி உங்களுக்கு தேவையானதைக் கேட்கலாம். 'தண்ணீர் கொண்டு வா, டீ கொண்டு வா. இந்த டேபிளைக் கொஞ்சம் க்ளீன் பண்ணு.' இப்படி நீங்க அவங்களுக்கு வேலை வைக்கலாம். என்னோட ஃபிரண்டா இருக்கிற ஒரே பாக்கியத்துக்காக... எங்க அண்ணனுக்கு மனைவியா வர்றதுக்கு சுஷ்மா அதிர்ஷ்டம் பண்ணி இருக்கணும்டி. பெரிய பெரிய கோடீஸ்வரன் வீட்டுப் பொண்ணுங்க தயாரா இருந்தாங்க...'' ஸ்நேகலதா ஒரு வித ஆவேசம் கலந்து கூறினாள். கண்கள் சிவந்த மாதிரி ஆகிவிட்டது.

''ஸாரி ஸ்நேகலதா...'' என்றார்கள்.

''இட்ஸ் ஓ.கே. இனிமே காட்டுத்தனமா இருக்காதீங்க என்ன?''

''.......''

''நான் நினைச்சா நாளைக்கே பெரிய ஸ்டாரா ஆக முடியும். நடிக்கிறேன்னு ஒரு வார்த்தை சொன்னா போதும். டைரக்டர்களும், புரொடியூசர்களும் க்யூவில் நிப்பாங்க. நான்

நடிக்கப் போறதை அண்ணன் விரும்ப மாட்டார். முதல்லயே சொன்னேன் இல்லையா? நடிப்பு என்பது பணம் சம்பாதிக் கிற ஒரு தொழில். என்கிட்டப் பணமா இல்லை, நடிப்புத் தொழிலுக்குப் போறதுக்கு?''

தோழிகள் வாயடைத்து, மௌனமாகி ஸ்நேகலதா பேசு வதையே கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

''பணத்துக்காக நடிக்கலை. நிஜமாவே நடிக்கிறேன் பாரேன், நாளைக்குக் காலேஜ்ல என்ன செய்றேன் பாருங்க. எத்தனை ஆண்களைக் கதி கலங்க வைக்கிறேன். நாளைக்கு யார் யாரைப் பார்க்கிறேனோ அவங்க எல்லார்க்கும் 'ஐ லவ் யூ' சொல்லப் போகிறேன். நடிப்புன்னா அது தாண்டி! டைரக்டர் சொல்ற மாதிரி செய்றதா? ஹீரோவுக்கு 'ஐ லவ் யூ' சொல்லுன்னு சொன்னாச் சொல்றது. டான்ஸ் மாஸ்டர் சொல்லித் தர மாதிரி ஆடறது! நாளைக்குக் காட்றேன். பாரு டைரக்டர் வேணாம், காமிரா வேணாம். நான்... நான் நடிக் கிறேன்.''

''எதுக்கு ஸ்நேகா... இதெல்லாம் வேணாம்...''

''பொழுது போக்கு! செய்யத்தான் போறேன்'' ஆவேச மான குரல்.

''வேணாம்.''

''கண்டிப்பாச் செய்வேன். நாளைக்கு பார், எத்தனை பேருக்கு ஐ லவ் யூ சொல்றேன்னு...''

''சொன்னாக் கேளு. நீ ஐ லவ் யூ சொன்னா எத்தனை ஆண்களுக்கு என்னென்ன ஆகுமோ? நம்ம முருங்கக்காய் மாதிரி ஆளுங்களிடம் சொன்னா ஹார்ட் அட்டாக் வந்து செத் துடுவாங்க.''

''சாகட்டும்.'' என்றாள்.



முருங்கைக்காய் என்பது அலுவலக நிர்வாகம் பாடம் நடத்தும் லெக்ச்சரர் ஜொள்ளர். பெயர் முருகேசன். ஜொள் மன்னனாக இருப்பதால் அவனுக்கு முருங்கைக்காய் என்று பெயர் சூட்டி இருந்தார்கள். கல்லூரியில் எல்லாப் பேராசிரி யர்களுக்கும் பட்டப் பெயர்கள் உண்டு.

''முடிவு பண்ணிட்டியா நாளைக்கு காலேஜைக் கலக்கற துக்கு.''

''நாளைக்குப் பாருங்க...''

தோழிகள் ஒரு வித த்ரிலிங்கோடு புறப்பட்டுப் போனார் கள்.

''ஸ்நேகலதா! செய்வாடி.''

''செய்யட்டும். நாம வேடிக்கைப் பார்க்கலாம். பணக் காரி, அவ எந்தத் தப்புப் பண்ணாலும் பெரிசாத் தெரியாது.''

பேசிக் கொண்டே புறப்பட்டுப் போனார்கள்.

கல்லூரி ஒருவிதக் காய்ச்சலில் இருந்தது.

எல்லா மாணவிகளுக்கும் ஸ்நேகலதா இன்று செய்யப் போகிற காரியம் அப்படியே பரவிவிட்டது.

ஸ்நேகலதா ரோஸ் நிறத்தில் சல்வார் அணிந்திருந்தாள். ஆகாயத்தில் நடக்க வேண்டிய தேவதை தரையில் நடக்கிற மாதிரி தெரிந்தாள்.

காரை அவளாகவே ஓட்டிக் கொண்டு வந்தாள். தோழி களோடு மெதுவாக ஓட்டினாள். எதிரே இளைஞர்கள் யாரே னும் வந்தால் ''ஹலோ!'' என்று அழைத்து, அவர்கள் திரும்பிப் பார்த்ததும் ''ஐ லவ் யூ'' என்றாள். இளைஞர்கள் சில நிமிடம் ஒன்றும் புரியாமல் தவித்து நிற்பதும், புரிந்து கொண்ட பிறகு அதை எப்படி எதிர் கொள்வது என்பது புரியாமல் மேலும்

தவிப்பதுமாக நிற்க. காரை இயக்கிக் கொண்டே கண்டு கொள்ளாமல் விரைந்தாள்.

எதிரே டூவீலரில் வந்த ஒரு இளைஞனிடம் சொன்னாள். அவன் வளைந்து கொண்டு கார் பின்னாடியே தொடர்ந்து வந்தான்.

மாணவிகளுக்கு ஒரே ஆர்ப்பரிப்பு.

கொஞ்ச நேரத்தில் ஐந்தாறு டூ வீலர்கள் பின் தொடர்ந்தன.

காலேஜுக்குள் நுழைந்தாள். அவளின் கார் நுழைந்ததும் கேட்டை மூடி விட்டார்கள். டூ வீலர்களில் பின் தொடர்ந்த இளைஞர்கள் தலையைக் கோதிக் கொண்டு வெளியே நின்றார்கள்.

கல்லூரிக்குள் போனதும், புரொபஸர் முருகேசனிடம் போனாள்.

''ஸார்! ராத்திரி என் கனவில் வந்தீங்க ஸார். ஐ லவ் யூ ஸார்!''

என்று கூறிவிட்டு ஸ்லோ மோஷனில் வந்தாள். முருகேசனுக்கு இதயம் நின்று விடும் போல் ஆனது. திமிராய்த் திரும்பி நடந்தாள்.

வகுப்பில் வந்து உட்கார்ந்தாள். அதே ஜன்னலோரம்.

சற்று நேரத்தில் கூரியர் இளைஞன் கோவிந்தசாமி தபால்களை எடுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தான். ஸ்நேகலதாவிற்காகவே வந்தான்.

''ஹலோ!''

இதை, இதைத்தான் எதிர்பார்த்தாள்.

அவனும் ''ஹலோ!'' என்றான், அவளைத் திரும்பிப் பார்த்து.



''ஐ லவ் யூ'' என்றாள்.

ஒரு நொடி, உயிர் பிரிந்து ஓடிப் போய் அவனுக்குத் திரும்பியது.

''ஐ லவ் யூ'' மீண்டும் கூறினாள்.

பின்னால் நிகழப்போவதை அவன் உணரவில்லை.

விளையாட்டு வினையாகும் என்பதை அறியவில்லை.

ஆகாயத்தில் பறக்கிற மாதிரி ஆனான் கோவிந்தசாமி.

## 3

இன்றும் மானேஜர் முன்னாடி போய் நின்றான். இன்றும் அவர் செலுலாரில் தன்னைச் சொருகிக் கொண்டிருந்தார். அதிலிருந்து அவர் மீண்டு வரும் வரை தவமாய் நின்றிருந்தான்.

மீண்டு... வந்தார்.

''ஹலோ பிரதர் இன்னைக்கு என்ன டிமாண்ட், லோக்கல் வேணாம். வெளியில் அனுப்புன்னு கேட்கப் போறியா? தெரியும் பிரதர் எனக்குத் தெரியும். எனக்கு எத்தனை வருஷம் சர்வீஸ் தெரியுமா? இங்கு பிராஞ்ச் ஆரம்பிச்சப் பதினைஞ்சி வருஷம் ஆகுது. ஆரம்பிச்ச நாள்ல இருந்து நான் மானேஜர். அப்போது கஸ்டமர்ஸே கிடையாது. பிராஞ்ச்ல உட்கார்ந்து ஈ ஓட்டுவேன்...! ஒரு வாரம் கன்ட்டினியூவா யாரும் லோக்கல்ல ட்யூட்டி பார்த்ததில்லை. சரி மாமூலா போடற மாதிரி ஷிப்ட் கணக்குலயே போட்டுறலாம். இன்னைக்கு எங்கே

போற, கொச்சினா, பெங்களூரா?'' படபடவென்று பேசினார் மானேஜர்.

''ஸார்! நான் எங்கேயும் போகலை. லோக்கல் லோக்கல் தான். நான் இந்த ஊரை விட்டு எங்கேயும் போக மாட்டேன்.''

''பிரதர்.'' ஆச்சர்யத்தில் உறைந்த மாதிரி ஆனார் மானேஜர்.

''ஆமா ஸார். இப்போது நான் உங்க கிட்ட வந்த விஷயம் வேற.''

''என்ன?''

''பணம் வேணும், ரெண்டாயிரம் அட்வான்ஸ்.''

''ரெண்டாயிரமா, அவ்வளவு பணம் அட்வான்ஸ் கேட்க மாட்டியே...?''

''இப்போது வேணும் ஸார்.''

''எதுக்கு?''

''நம்ம ஆபீஸ் ஸ்டாப்புகளுக்கு ட்ரீட் வைக்கணும்.''

''பிரதர் என்ன சொல்ற? ஏழு பேருக்கு ட்ரீட் தர ரெண்டா யிரமா? அப்படி என்ன பிரதர் விசேஷம்?'' மிகுந்த எதிர் பார்ப்போடு கேட்டார்.

கோவிந்தசாமி மிகவும் வெட்கப் பட்டான். தரையில் கால் விரலால் கோலம் போட்டான், உதட்டைக் கடித்துக் கொண் டான்.

''ஸார்! அது, அது... வந்து...''

''சொல்லு பிரதர்.''

''வந்து ஸார்!''

''அட சொல்லு பிரதர் மேரேஜ்ஜா? வீட்ல பொண்ணு பார்த்துட்டாங்களா? அதுக்கு மேரேஜ் அன்னைக்குப் பார்ட்டி வைச்சிடு பிரதர். இப்போ எதுக்கு?



''அது இல்லை ஸார்.''

''என்னப்பா.... க்விக்கா சொல்லிடு.''

''ஒரு பொண்ணு என்னை லவ்ஸ் பண்றா ஸார்!''

''என்னது...?''

''ஆமா சார். காலேஜ் படிக்கற பொண்ணு இன்னிக்கு எங்கிட்ட 'ஐ லவ் யூ' சொல்லிட்டா...'' பெரிய வெட்கத்துடன் கூறினான்.

''இப்போ உன் கால் தரையில தானே இருக்கு...''

அவர் எதற்கு கேட்கிறார் என்பது புரியாமல் கீழே குனிந்து பார்த்து விட்டு ''தரையில் தான் ஸார்!'' என்றான்.

''இல்லை பிரதர். ஒரு பொண்ணு 'ஐ லவ் யூ' சொன்னா கால் தரையில் இருக்காதே. கொஞ்சம் மேலே தானே பறக்கும். அதான் கேட்டேன்.'' சொல்லி விட்டுச் சிரித்தார். அவனும் சிரித்தான்.

''ரெண்டாயிரம்?''

''தர்றேன்.'' மேசை டிராயரைத் திறந்து நூறு ரூபாய்த் தாள்கள் இருபது எண்ணி நீட்டினார். ''என் காசையா உனக்கு தரப்போகிறேன்? உன் காசு, உன்னோட சம்பளத்துலப் பிடிக்கப் போறேன்.''

''ஸார்! ஒட்டலுக்குப் போலாமா?''

''போகலாம் பிரதர். ஒன் அவர் டைம். வேலை பாதிக்கக் கூடாது. அது ரொம்ப முக்கியம். விஸ்கி, பிராந்தி, ரம் எதை யும் தொடக்கூடாது. பீர் மட்டும் அனுமதி. கூல்டிரிங்ஸ் எனி. புரியுதா? பிரதர்! இன்னொரு விஷயம். அந்த சுப்பிரமணிக்குச் சொல்லிடு என் எதிர்ல ஸ்மோக் பண்ணக் கூடாது. அப்புறம் மானேஜருக்கும், ஒர்க்கருக்கும் என்ன வித்தியாசம்?''

''எக்ஸ்க்யூஸ் மீ சார். நான் ஒண்ணு சொல்லட்டுமா?''

''சொல்லு பிரதர்.''

''பார்ட்டி உங்களுக்கு மட்டும் இங்கேயே... நாங்க மட்டும் ஓட்டலுக்கு போறோம்.''

''யோவ். நான் கொடுத்த ரெண்டாயிரம் திருப்பித் தா. அட்வான்ஸ் கிடையாது.''

''ஸார்!''

''கிடையாது பிரதர்.''

''ஸார்! நீங்களும் வாங்க. உங்க முன்னாடி சுப்பிர மணியை ஸ்மோக் பண்ண வேணாம்னு சொல்லிடறேன்.''

''அப்படிப் போடு.''

அடுத்த ஐந்து நிமிடத்தில் கூரியர் சர்வீஸ் பணியாட்கள் பாரில் இருந்தார்கள்.

''கோவிந்தசாமிக்கு 'ஓ' போடுங்கப்பா... ஒரு பொண்ணு அவனுக்கு ஐ லவ் யூ சொல்லிட்டாளாம்.''

''ஓ...'' கோரஸாய்க் கத்தினார்கள்.

''கோவிந்தசாமி.''

''வாழ்க!''

''பொண்ணு பேரையும் சொல்லுப்பா.''

''அதுவும் கரெக்ட் தான். பொண்ணு பேர் என்ன கோவிந்த சாமி?''

''தெரியலை.''

''பேர் தெரியலை? ஆனா லவ்வு... கொடுமைடா சாமி?''

''போய்த் தொலையட்டும். கோவிந்தசாமிக்கு ஐ லவ் யூ சொன்ன மிஸ் எக்ஸ்''



''வாழ்க!''

''மிஸ். எக்ஸ்.''

''வாழ்க.''

பீரில் மூழ்கினார்கள். மானேஜர் மட்டும் பிராந்தி.

மானேஜர் சுப்பிரமணியைக் கூப்பிட்டார். ''ஏன் சுப்பிர மணி ஸ்மோக் பண்ணலையா?''

''கோவிந்தசாமி வேணாம்னு சொல்லிட்டான் ஸார். உங்க முன்னாடி வேணாமாம்?''

''அடி செருப்பால... யோவ் பிரதர். நான் என்ன உங்க ளோட மானேஜர் மாதிரியாப் பழகி வர்றேன். ஃபிரண்டா பழகல. ஆபீசுக்குள்ள தான் நான் மானேஜர். இங்க நீயும் குடிகாரன். நானும் குடிகாரன் அடி டம்மு'' என்றார்.

சுப்பிரமணி மானேஜர் கையிலிருந்த சிகரெட்டையே வாங்கி வாயில் வைத்துக் கொண்டான்.

மானேஜர் கோவிந்தசாமி காலரைப் பிடித்து இழுத்தார். ''பிரதர் அந்தப் பொண்ணு பேர் உனக்குத் தெரியாது. உன் பேர் அந்தப் பொண்ணுக்குத் தெரியுமா?''

''தெரியாது ஸார்.''

''வெரி குட் தப்பித் தவறி கூட உன் பேரை அந்த பொண் ணுக்குச் சொல்லிடாதே. லவ்வே பண்ண மாட்டா. பேரைப் பார் பேரை...''

''கரெக்டாச் சொன்னீங்க ஸார்.'' சுப்பிரமணி ஒத்து ஊதி னான்.

''இந்த நிமிஷத்துல இருந்து உன் பேர் கோபி!''

''ஆஹா. சூப்பர்!''

''கோபி.''

''வாழ்க.''

''கோபி.''

''வாழ்க.''

காதல் மலர்வதற்காக கோவிந்தசாமி கோபி ஆனான். பார்ட்டி முடிந்தது.

தபால்களை எடுத்துக் கொண்டு கல்லூரிக்குள் நுழைந் தான். கோபி (எ) கோவிந்தசாமி.

ஜன்னலில் அந்த பௌர்ணமி 'பவுர்'ணமியாய் தெரிந்தது.

ஸ்நேகலதா எதிர்பார்த்திருந்தாள். 'நேற்று சொன்ன ஐ லவ் யூ விற்கு தம்பி, தவிடு பொடியாயிட்டிருப்பான். ராத்திரி தூங்கியே இருக்க மாட்டான்.

இன்னைக்கு காலேஜுக்கு அதற்காகவே வருவான் என்று இன்றும் அவனைக் கலாய்க்க முடிவு செய்தாள். 'ஏமாளிப் பையன் மாட்டிக்கிட்டான்.'

''ஹலோ!'' என்றான்.

''ஹலோ! என் பேர் கோபி!'' என்று நெளிந்து கொண்டு கூறினான். அவனாகவே.

''என் பேர் கோவிந்தம்மா.'' என்றாள், அவன் பெயர் கேட் காமலேயே.

''என்ன, என்ன... என்ன சொன்னீங்க?'' மூச்சு அடைத்தது.

''நிஜமாத்தான் கோபி. எங்கப்பாவுக்கு திருப்பதி ஏழு மலை வெங்கடேசா பேர்ல லவ்வு, அதனால எனக்கு கோவிந் தம்மான்னு வைச்சிருக்காங்க...''

''கோவிந்தா கோவிந்தா...''



''நீங்க கூட ஏழுமலையான் பக்தரா? ரொம்ப நல்லதாப் போச்சு. திருப்பதி ஏழுமலை வெங்கடேசா... காதலுக்கு பச்சைக் கொடி காட்டு ராசா.''

''அது இல்லைங்க...''

''ஏங்க கோபி, என்னை லவ் பண்ண மாட்டீங்களா?''

''அய்யய்யோ ஏழுமலையான் சத்தியமா லவ் பண் றேங்க... ஆனா...''

''ஆனா?''

''கோவிந்தம்மாங்கிற பேரை மாத்திக்குங்களேன்.''

''அய்யய்யோ...''

''ஏங்க முடியாதா?''

''முடியவே முடியாதுங்க... பிளாஸ்டிக் சர்ஜரி பண்ணி, என் முகத்தை குரங்கு முகமா மாத்திக்கிறதா சொன்னாக் கூட வீட்ல ஒத்துக்குவாங்க. ஏன்னா குரங்கு அனுமார் ஆச்சே... அவரும் ஏழுமலையான் பக்தராச்சே.. பேரை மட்டும் மாத் திக்க அனுமதிக்க மாட்டாங்க... நீங்க லவ் பண்றதுக்கு என்னை விட என் பேர் முக்கியமா?''

''இல்லைங்க உங்களுக்கு பேரே இல்லைன்னாலும் நான் லவ் பண்ணுவேன்.''

''கோபி.'' சிலிர்ப்புடன் பெயரை உச்சரித்தாள். ''நான் உங்களை லவ் பண்றதுக்கு ஏழு ஜென்மத்துல தவம் பண்ணி இருக்கணும்.''

ஸ்நேகலதா சினிமா வசனம் போல் பேச, தோழிகள் சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியாமல் வாயில் கர்சீப்பை வைத்துக் கொண்டுச் சிரித்தார்கள்.

''அதென்னங்க உங்களுக்குப் பின்னாடி சிரிப்புச் சத்தம்?''

''அதுவா? டி.வி. பார்க்கிறீங்களா?''

''ம். நிறையப் பார்ப்பேங்க.''

''காமெடி காட்சி வரும்போது சிரிக்கிற மாதிரி ரிக்கார்டிங் பண்ணிப் போடுவாங்க இல்லையா?''

''ஆமா.''

''அதான் இது.''

கோவிந்தசாமி புரியாமல் தலையைப் பிய்த்துக் கொண்டான்.

ஸ்நேகலதா சிரித்தாள்.

''புரொபஸர் பார்க்கிறார் புறப்படுங்க. மீதி நாளைக்கு.''

''போகட்டுமா?''

''போங்க.''

''இன்னைக்கு ஒருமுறை சொல்லுங்களேன்.''

''என்னது?''

''நேத்து சொன்னீங்களே அது.''

''அதுவா? ஐ லவ் யூ.. ஐ லவ் யூ...''

கோவிந்தசாமி உருகினான். உருகினான். உருகினான்.

''ஐ லவ் யூ.. ஐ லவ் யூ... ஐ லவ் யூ...''

ஸ்நேகலதா விடாமல் சொல்லிக் கொண்டிருந்தாள்.

## 4

எத்தனையோ காதல் சினிமாக்கள் பார்த்திருக்கிறான். எத்தனையோ காதல் கதைகளைப் படித்திருக்கிறான். இப்படி



ஒரு 'ஐ லவ் யூ' ஸீனை இதுவரை அவன் பார்த்ததுமில்லை. படித்ததுமில்லை. மந்திரம் மாதிரி வாய்ப்பாடு ஒப்பிக்கிற மாதிரி திரும்பத் திரும்ப கேட்டதுமில்லை. நம்பமுடியாத ஆச்சர்யமாக இருந்தது அவனுக்கு.

'அதிகப் படியான எண்ணிக்கையில் காதலனுக்கு 'ஐ லவ் யூ சொன்ன முதல் பெண் இவளாகத்தான் இருக்கும். என்ணவே முடியாது. கின்னஸ்காரர்களுக்கு முன்னதாகத் தெரியப் படுத்தி இருந்தால் இதை ஒரு சாதனையாகப் பதிவு செய்திருப்பார்கள்!' சந்தோஷம் பொங்க எண்ணிப் பார்த்துக் கொண்டான்.

'ஐ லவ் யூ' என்ற வார்த்தையை மட்டுமே பதிவு செய்யப்பட்ட ஆடியோ அண்ட் வீடியோ கேஸட் மாதிரி சொல்லிக் கொண்டே இருந்தாளென்றால், கோவிந்தசாமி மனதில் கல்லூரி விட்டு வெளியே வந்த பிறகும் அதுவே ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு 'ஐ லவ் யூ' காதில் விழுந்தாலே மனுஷன் பாதி செத்து விடுவான், நூற்றுக்கணக்கில் ஆயிரக் கணக்கில் கேட்டால் என்ன ஆவது? செத்தே விட்டான். உயிர் அவனிடத்தில் கிடையாது. அது ஸ்நேகலதாவின் ஞாபகத்தின் மீது படர்ந்திருந்தது.

'ஐ லவ் யூ, ஐ லவ் யூ, ஐ லவ் யூ... யூ சொன்னாளே...ளே உள்ளத்தை அள்ளி அள்ளித் தந்தாளே...' மனம் பாடிற்று குதித்துக் குதித்து ஆடிற்று. துள்ளித் துள்ளி ஓடிற்று.

கோவிந்தசாமி வீட்டில் உட்கார்ந்து கவிதை எழுதிப் பார்த்தான். கவிதை வராமல் மேஜையில் தலையை முட்டிக் கொண்டான். 'மரமண்டை நான், அப்சரஸ் மாதிரி காதலி கிடைச்சிருக்கா. கவிதை வரலையே...'

'கவிதை அருவியா ஊத்தணுமே...'

'காதல் கவிதை எழுதித் தந்தாத்தானே மேலும் மயங் குவா...'

பேப்பரோடும், பேனாவோடும் அவன் அவதிப்பட்டுக் கொண்டிருந்த போது.

''கோவிந்தா... கோவிந்தா...'' என்று அம்மாவின் குரல்.

காதில் வாங்காமல் உட்கார்ந்திருந்தான்.

''கோவிந்தா... கோவிந்தா...'' அம்மா மீண்டும் உரக்கக் கூவி அழைத்தாள்.

கோபம் உச்சிக்குப் போயிற்று. கைகளையும் கால்களை யும் உதைத்துக் கொண்டான். டேபிளில் இருந்தப் பேப்பரை ஒவ்வொன்றாக அவசர அவசரமாகப் பிய்த்துப் போட்டான்.

''கோவிந்தா... கோவிந்தா..'' மீண்டும் அம்மாவின் குரல்.

கண்களை உருட்டிக் கொண்டு அம்மாவிடம் வந்தான். பற்களைக் கடித்தபடி ''நேத்து என்ன சொன்னேன். கோவிந் தான்னு கூப்பிடாதே, கோபின்னு கூப்பிடுன்னு சொன்னேன் இல்லையா?''

''இருபத்தைஞ்சி வருஷமாப் பழகிட்டப் பேராச்சே... திடு திப்புன்னு மாத்த முடியுமா? உனக்கு ஏன் அந்தப் பேரை வைச்சாங்க தெரியுமா?

''கடவுளை நினைச்சிட்டே இருக்கணும்னு.. உன்னை கூப் பிடறது. மூலம் கடவுளை அடிக்கடி கூப்பிட்ட மாதிரி இருக்கு மில்லையா?''

''வேணாம். கடவுளை டைரக்டா போய்க் கும்பிடுங்க... இப்படி என்னைக் கூப்பிட்டு என் மூலம் சுத்தி வளைச்சிப் போக வேணாம்.''

''உனக்கு பேர் வைக்கும் போது எப்படியெல்லாம் விசேஷமா செஞ்சோம் தெரியுமா? சொந்த பந்தமெல்லாம் கூட்டி வாழப்



பந்தல் போட்டு, வடை பாயசத்தோடு சாப்பாடு பரிமாறி, நல்ல நாள், நட்சத்திரம்னு பார்த்து, தொட்டில்ல போட்டு பேர் வைச்சோம்.''

''பேரை மாத்தி வைக்கிறதா இருந்தாலும் அப்படிச் செய்யணுமா?''

அவனுக்கு கனவு விரிந்தது. சொந்தமும், நட்பும் புடை சூழ மீசை முளைத்த இளைஞனான அவனைத் தொட்டிலில் போட்டு அழாமல் இருப்பதற்காக வாயில் புட்டிப் பாலை திணித்து, 'கோபி' என்ற பெயர் சூட்டின மாதிரி. எல்லோரும் ''கோபி.... கோபி...'' என்று கத்துகிற மாதிரி.

''கோவிந்தா... கோவிந்தா...'' வீட்டுக்கு வெளியே இருந்து மீண்டும் அந்த குரல்.

கோபத்தோடு வெளியே வருகிறான்.

நெற்றியில் நாமத்தோடு பிச்சைக்காரன் நின்றிருந்தான்.

''இனிமே இங்கே வந்து கோவிந்தான்னு கத்தினே கொன் னுடுவேன். கோபி, கோபின்னு தான் கத்தணும்.'' என்றான்.

அப்போது அவனுடைய நண்பன் முரளி வந்தான்.

''என்னடா பிச்சைக்காரனோட பிரச்சினை?''

'பிச்சைக்காரனா இவன். நம்பவே நம்பாதே... கோடீஸ் வரனா இருப்பான். உண்டியல் பார்த்தியா? திருப்பதி உண் டியல் மாதிரி.''

''கோவிந்தா...'' பிச்சைக்காரன் மீண்டும் கூவுகிறான்.

''யோவ் பிச்சை. வாயை உடைச்சிடுவேன். ஓடிப் போயிடு'' என்று கத்தினான் கோபி. கவுண்டமணி ஸ்டைலில்.

பிச்சைக்காரன் ''நாடு வரவர மோசமாயிருச்சுப்பா... பிச்சை எடுக்கக்கூடச் சுதந்திரம் கிடையாது'' என்று புலம்பியவாறு போனான்.

முரளியோடு வீட்டுக்குள் வந்தான்.

''என்னடா நீ அப்புறம் மென்ட்டலா ஆயிடப் போற, உன் பேரை கோபின்னு மாத்திகிட்டயா, அல்லது முன்கோபின்னு மாத்திகிட்டயா?''

''சும்மா இருடா. எனக்கு கோவிந்தான்னு யார் எப்படிச் சொன்னாலும் கோபமாகத்தான் இருக்கு. அந்த ஃபீலிங் உனக்குத் தெரியாது. அனுபவிச்சாத்தான் தெரியும். உனக்கென்ன முரளின்னு அழகான பேர்.''

முரளி காலரைத் தூக்கி விட்டுக் கொள்கிறான். பெருமிதத்தோடு.

அறைக்குள் நுழைகிறார்கள்.

அறை முழுவதும் கிழித்துக் கிழித்துக் கசக்கிப் போட்ட காகிதங்களைப் பார்த்த முரளி. ''இதென்னடா இது. வீடெல்லாம்?'' என்று கேட்டான்.

''நீ தமிழ் சினிமாப் பார்க்கிறதில்லையா? அடப்பாவி. காதலிக்கும் போது காதலன் இப்படிச் செய்யணும்டா. எழுதி எழுதிக் கிழிக்கணும். இதெல்லாம் சினிமா டைரக்டரா வந்து சொல்லிட்டிருப்பார்? நாமதான் செய்யணும். கவிதை எழுதறேண்டா. எங்க ஆளுக்கு.''

''கவிதை எழுதறியா? இனிமே வைரமுத்து, வாலி, பழனி பாரதியெல்லாம். காணாமப் போயிடப் போறாங்க.'' என்றான் முரளி, சிரித்தபடி.

''நல்ல நேரத்துக்கு அவங்களை ஞாபகப்படுத்தினே. நம்மால கவிதை எழுத முடியுமா? அவங்க எழுதின கவிதைகள்ல இருந்து கொஞ்சம் கொஞ்சம் பிய்ச்சிப் புதுசா ஒரு கவிதை தயார் பண்ணி, தந்திடலாம்.''

''என்னென்ன செய்றியோ செய்.''



அன்றிரவு பாட்டுப் புத்தகங்கள் வாங்கிக் கொண்டுவந்து பரப்பினான். அதில் கொஞ்சம், இதில் கொஞ்சம் வெட்டி வெட்டி எடுத்து ஒட்டினான். புதியதாக ஒரு காதல் பாடல் தயாரித்தான்.

இவனே சொந்தமாகப் பாடல் எழுதியதைப் போன்றதொரு உற்சாகம் ஊற்றெடுத்தது.

வெள்ளைக் காகிதத்தில் வண்ண வண்ணமாய் ரோஜாப் பூக்கள் வரைந்து பாடலையும் எழுதினான்.

அழகான பூப்போட்ட உறையில் வைத்து மடித்தான். மார்க்கெட் சென்று ஒரு பொக்கே வாங்கி அதனுடன் இணைத்துக் கொண்டான்.

சினிமாப் பாடலைத் தந்தால் மட்டும் போதுமா? சினிமாக்காரன் போல் ஆளும் மாற வேண்டாமா?

மாறினான்.

அப்பாஸைப் போன்று ஹேர் கட்டிங் செய்தான். அஜீத் குமாரைப் போன்று மீசை ஒதுக்கினான். ரஜினிகாந்தைப் போன்று கையில் செம்புக் காப்பு மாட்டிக் கொண்டான். பிரசாந்த்தைப் போன்று உடுத்திக் கொண்டான். கமல்ஹாசனிடமிருந்து என்ன எடுத்துக் கொள்வது? அவளுக்கு முத்தம்தான் தர வேண்டும் என்று ஆசை எழுந்தது. முத்தம் தருகிற மாதிரி கனவுகள் வந்தது. கனவுக்குள் விழுந்து அவன் தொலைந்து போனான்.

கல்லூரிச் சாலை. ஸ்நேகலதா மையத்திலும் தோழிகள் சுற்றிலுமாக கையில் புத்தகக் கட்டோடு வருகிறார்கள்.

கல்லூரிக்கு போனவர்களும், கல்லூரிக்குப் போகாதவர்களும் யதார்த்தத்தைக் கொஞ்சம் மறந்து விட்டு விடுங்கள். அதுதான் தர்மம். இதனுடைய பலனை அடுத்த ஜென்மத்தில்

பெரிய சினிமா நட்சத்திரமாகி அனுபவிப்பீர்கள். இப்போது சினிமாக்களில் வருகிற மாதிரி கதாநாயகி மட்டும் நல்ல அழகோடு மத்தியில் நடந்துவர, தோழிகள் அவளைச் சுற்றி வருகிற மாதிரியான கற்பனையைக் கண்முன் கொண்டு வந்து விடுங்கள்.

எதிரே இரண்டு இளைஞர்கள் ஏகமாய் ஜொள்ளுடன் வருகிறார்கள். கறுப்புக் கண்ணாடியை மேலே தூக்கிப் போட்டு சுழற்றி முகத்தில் அணிவதும் ஸ்டைலாய் நடப்பதும், ஏற்கனவே பட்டன் போடப்பட்டிருந்த சட்டையில் மேலும் பட்டன்கள் போடுவதும் என்று வேடிக்கை பண்ணுகிறார்கள்.

ஸ்நேகலதா சும்மா இருப்பாளா? அவளும் ஸ்டைலாக நடக்கிறாள். கறுப்புக் கண்ணாடியை சுழற்றி, வளைத்து மாட்டுகிறாள். இடுப்பை வளைத்து வளைத்து நடை போடுகிறாள். இளைஞர்கள் ஆடிப் போகிறார்கள்.

தலையை கோதி விட்டுக் கொண்டு அவர்களை நோக்கி நடந்தாள்.

''ஹலோ.'' என்றாள்.

வீரநடை போட்ட இளைஞர்கள் நெளிந்தார்கள். ''ஹலோ..'' என்று பயங்கர ஜொள்ளுடன் விளித்தார்கள்.

''சைட் அடிக்கிறீங்களா?''

''வந்து... வந்து...''

''லேடீஸ் தூரமா இருக்கும்போது தான் ஆம்பளையா? இவ்வளவு நடுங்கறீங்க...''

''எப்படிப்பட்ட நெருப்பும் தண்ணீர் பட்டதும் அணைஞ்சிடறதில்லையா? அப்படித்தான். உங்க பார்வை மழை மாதிரி விழுந்து எங்களை நனைச்சிருச்சி...'' வளைந்து நெளிந்து கூறினான் ஒருவன்.



''ரொம்பக் குளிருமே...?''

''குளிர்ச்சியா இருக்கு. உங்க ஃபிரண்ட்ஷிப் கிடைச்சதுக்கு.''

''அப்படியா?''

''வானத்திலிருந்து இறங்கி வந்த தேவதை போன்ற நீங்கள் ஹலோ சொல்லியதில் என் இதயம் உருகிவிட்டது. சிறைகளை உடைத்து வெளி வந்த பறவை போன்று ஒரு துள்ளல். காதல் வானில் பறக்கலாம் கண்ணே...'' என்று வசனம் பேசினான் ஒருவன்.

''இந்த வண்டு இந்த கல்லூரிப் பூங்காவைச் சுற்றிச் சுற்றி வந்தது. எந்த மலர் கிடைக்கும் என்று தேடித் தேடி அலைந்தது. ராஜமல்லிகையே எனக்குக் கிடைத்து விட்டது. ஆஹா... ஆஹா...'' இன்னொரு இளைஞன் வசனம் பேசினான்.

இரண்டு பேரின் வசனங்களையும் காதில் வாங்கி, தலையை உதறிக் கொண்டாள் ஸ்நேகலதா, தோழிகளைப் பார்த்துப் புன்னகைத்தாள். பிறகு இரண்டு இளைஞர்களைப் பார்த்து கூறினாள். ''சும்மா ஜொள்ளுதான்னு நினைச்சேன். சைட் அடிச்சிட்டுப் போயிருவீங்கன்னு நினைச்சேன். லவ்வுலயே ரெண்டு பேரும் டியர் ஃபிரண்ட்ஸா?''

''யா...''

''யா...''

இருவரும் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டார்கள்.

''எத்தனை வருஷமா ஃபிரண்டா இருக்கீங்க...?''

''ஜட்டி ஃபிரண்டு.''

''அப்படின்னா?''

''ஜட்டி போட்டிருந்த காலத்திலிருந்தே ரெண்டு பேரும் ஃபிரண்டு. ஒருத்தர் ஜட்டியை இன்னொருத்தர் மாத்தி போட்

டுப்போம். அவ்ளோ திக் ஃபிரண்டு.'' இருவரும் ஒருத்தரை ஒருத்தர் கட்டிக் கொண்டார்கள்.

ஸ்நேகலதாவிற்கு குமட்டல் வருகிற மாதிரி ஆனது. ''ஜட்டியை வேணும்னா ரெண்டு பேரும் மாத்திக்கலாம். வொய்ஃப்பை மாத்திக்க முடியுமா? ரெண்டு பேருக்கும் லவ்வரா என்னால இருக்க முடியாதுப்பா. யாராவது ஒருத்தரைத் தான் லவ் பண்ணுவேன்.''

இரண்டு இளைஞர்களும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்து விட்டுத் திரும்பினார்கள்.

''நான், நான் மட்டும் தான் லவ் பண்றேங்க...'' என்றான் ஒருத்தன்.

''இல்லைங்க, நான் தான்... நான்தான்...'' என்றான் இன்னொருத்தன்.

''ஸாரி! எனக்கு காலேஜுக்கு டைமாச்சு ரெண்டு பேரும் பேச்சு வார்த்தை நடத்தி முடிவு பண்ணுங்க... பை...'' சொல்லி விட்டு ''வாங்கடி போலாம்!'' என்று தோழிகளை அழைத்துக் கொண்டு அன்னநடை போட்டு நடந்தாள்.

இரண்டு இளைஞர்களும் ஒருத்தருக்கொருத்தர் சட்டையைப் பிடித்துக் கொண்டு சண்டையில் புரண்டு கொண்டிருந்தார்கள். அவர்களைத் திரும்பிப் பார்த்து, ரசித்துச் சிரித்து விட்டு நகர்ந்தாள் ஸ்நேகலதா.

**கா**லேஜுக்குள் போனதும் புரொபஸர் முருகேசன் எதிர் பட்டார்.

''ஸ்நேகலதா! உன் கூட கொஞ்சம் பேசணும்.'' கண்ணாடியைக் கழட்டிக் கர்ச்சீப்பால் துடைத்துக் கொண்டே கூறினார்.

''யெஸ் ஸார்!''



ஸ்நேகலதா மட்டும் நிற்க, தோழிகள் நகர்ந்து போனார்கள்.

மரத்தின் நிழல் அவர்களின் மீது விழுந்துபரவிக் கொண்டிருந்தது. ஒரு அணில் இன்னொரு அணிலைத் துரத்திக் கொண்டு ஓடி மரத்தில் ஏறிற்று. பசேலென்று அரச இலை ஒன்று மரத்திலிருந்து பறந்து வந்து அவளின் மீது உட்கார்ந்தது.

''கொஞ்சம் பேசணும்னு சொன்னீங்களே ஸார்?''

அவருக்கு வியர்த்தது. கண்கள் படபடத்தது. ''பேசணும். எப்படி பேசறதுன்னு தான் தெரியலை. முதல் மரியாதை சிவாஜி கணேசன் ரேஞ்சில என்னைக் கொண்டு போய் விட்டுட்டே... சினிமாலன்னு இல்லை நிஜ வாழ்க்கையிலும் நடந்திருக்கு.. அறுவது வயசு ஆப்பிரிக்க தலைவர் மண்டேலாவை சின்னப் பொண்ணு காதலிக்கலையா? புகழ் பெற்ற எழுத்தாளர் சல்மான் ருஷ்டியை சின்னப் பொண்ணு காதலிக்கலையா? காதல் மன்னன் ஜெமினிகணேசனை சின்னப் பொண்ணு காதலிக்கலையா? இந்த காலத்துல இதெல்லாம் சகஜம் தான் ஸ்நேகலதா, ஆனா...'' கண்களில் அவருக்கு கண்ணீர் வந்தது.

''சொல்லுங்க ஸார்! ஆனா?''

''மனசை கொஞ்சம் திடப்படுத்திக்கோ ஸ்நேகலதா. நான் இப்போ சொல்லப் போறது. உனக்குப் பெரிய அதிர்ச்சியை உண்டாக்கும், நானும் நிறைய யோசனை பண்ணிதான் இந்த முடிவுக்கு வந்தேன். நீ ஐ லவ் யூ சொன்னதில் இருந்து தூக்கமில்லை. சாப்பாடில்லை. இவ்வளவு வெளிப்படையா நீ ஐ லவ் யூ சொல்றேன்னா. என்னை எவ்ளோ டீப்பா லவ் பண்றேன்னு புரியுது. பட்.'' மீண்டும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

''சொல்லுங்க ஸார்.''

''மனசை திடப் படுத்திக்கோ ஸ்நேகலதா!'' கண்ணீரை அடக்க முடியாமல் தவித்து, துடைத்துக் கொண்டார்.

ஸ்நேகலதாவிற்கு அடக்க முடியாமல் சிரிப்பு வந்தது. கட்டுப் படுத்திக் கொண்டாள்.

''சொல்லுங்க சார்.''

''ஒத்தை வரில சொல்லணும்னா... என்னை மறந்திடு.''

''சார்!''

''அதிர்ச்சியா இருக்கா? நான் இப்படி சொல்வேன்னு எதிர்பார்த்து இருக்க மாட்டியே... மனசை திடப்படுத்திக்கோ ஸ்நேகலதா. அடுத்த ஜென்மம்னு ஒண்ணு இருந்தா... ரெண்டு பேரும் காதலர்களாப் பிறப்போம். எல்லாக் காதலர்களுக்கும். பேரண்ட்ஸ் எதிரியா இருப்பாங்க. நம்ம காதலுக்கு என் பிள்ளைங்க எதிரியா இருக்காங்க.... நான் உன்னை லவ் பண்றது என் பையனுக்குத் தெரிஞ்சா கொலையே பண்ணிரு வான். ஸாரி ஸ்நேகலதா! என்னை மறந்திடு! அதுக்காக என்னோட ஞாபகத்தில் முதல் மரியாதை ராதா மாதிரி கல்யாணமே பண்ணிக்காம வாழனும்னு முயற்சிக்காதே... என்னைவிட அழகா... என்னைவிட அறிவா, எல்லா வகை யிலும் என்னைவிட கெட்டிக்காரத்தனமான ஆண்கள் இந்தப் பரந்த உலகத்துல நிறைய இருப்பாங்க... யாரையாவது ஒருத்தரைக் கல்யாணம் பண்ணிட்டு சந்தோஷமா வாழ்க்கை நடத்து. என்னை மறந்திடு ஸ்நேகலதா.''

''ஸார்!'' சிரிப்பை அடக்க முடியாமல் கர்சீப்பை எடுத்து வாயைப் பொத்திக் கொண்டாள்.

அவள் அழுவதாக எண்ணிக் கொண்டார் புரொபசர்.

''அழாதே ஸ்நேகலதா. பார்க்கிறவங்க தப்பா நினைப் பாங்க. என் மனைவியாகும் அதிர்ஷ்டம் தான் இல்லை. மாணவியா இருக்கிற அதிர்ஷ்டமாவது எனக்குத் தொடர்ந்து இருக்கட்டும். நான் உன்னை லவ் பண்ணலேன்னு காலேஜை விட்டு நின்னுடாதே. தற்கொலை முயற்சிக்குப் போகாதே.



ஸாரி ஸ்நேகலதா, நான் வர்றேன், என்னை மறந்திடு.'' கண்ணீரைத் துடைத்துக் கொண்டே புறப்பட்டு போனார். புரொபசர் முருகேசன்.

சிரிப்பை அடக்க முடியாமல் அடக்கிக் கொண்டு போன ஸ்நேகலதா தோழிகளிடம் வந்து சிவகாசி பட்டாசுகளை மொத்தமாக கொட்டி வெடித்த மாதிரி சிரித்தாள். புரொபஸர் முருகேசன் பேசிய வசனங்களை சொல்லிச் சொல்லி, அவ ருடைய அழுகையை விவரித்து சிரித்தாள், தோழிகளும் சிரித் தார்கள்.

''பாவம்டி புரொபஸர் இப்படியா அவரைக் காய விடறது?'' என்றாள் ஒருத்தி.

''நீ நிறைய ஆண்களோடப் பாவத்தைக் கொட்டிக்கிற... அந்த பாவமெல்லாம் உன்னைச் சும்மா விடாது.'' என்றாள் இன்னொருத்தி.

வகுப்பு தொடங்கிற்று.

புரொபஸர் உள்ளே நுழைந்து பாடம் நடத்தத் தொடங் கினார்.

ஸ்நேகலதாவின் பார்வை ஜன்னல் பக்கமாகவே இருந்தது. பாடத்தில் கவனம் போகவில்லை.

கோவிந்தசாமி கூரியர் தபால்களை எடுத்துக் கொண்டு வந்தான். சினிமா நடிகர்களின் கலவையாக அவன். சினிமாப் பாடல்களை கலவையாக்கி ஸ்நேகலதாவிற்கும் ஒரு பாடல் பொக்கேயுடன்.

''ஹலோ!'' என்றான்.

''ஹலோ! இன்னைக்கு நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க...'' என்றான்.

''அப்படியா?'' மிகவும் வெட்கப்பட்டுக் கொண்டே கடித உறையையும் பொக்கேவும் கொடுத்தான்.

''என்ன இது?''

''படிச்சுப் பாருங்க. என் மனசை உருக்கி கவிதையாக்கிக் கொண்டு வந்திருக்கேன்.''

''கவிதை எழுதுவீங்களா?''

''காதல் வந்தால் கவிதை வரும். ஐ... லவ்... யூ...'' அடி நெஞ்சிலிருந்து கூவி விட்டு நகர்ந்தான். அவன் நகர்ந்ததும், பொக்கேயும், கவிதையும் குப்பைக்குப் போனது. ஸ்நேக லதாவும், தோழிகளும் சிரித்தார்கள்.

## 5

ஸ்நேகலாதவின் அண்ணனும், அண்ணியாகிய முன்னாள் நடிகை சுஷ்மாவும் வந்தார்கள்.

''வாங்க அண்ணா வாங்க அண்ணி.'' ஸ்நேகலதா வரவேற்றாள்.

விடுமுறை நாள் என்பதால் ஸ்நேகலதா வீட்டிலேயே இருந்தாள். சுஷ்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு ''என்ன அண்ணி. இந்தப் பக்கம் வரவே மாட்டேன்றீங்க...? சினி ஃபீல்டுல இருந்து நீங்க வந்துட்டாலும், உங்களுக்குப் பஞ்சமில்லாத விசிறிங்க... என் ஃபிரண்ட்ஸ்ங்க எல்லாம் உங்களைப் பார்க்கணும்னு ஆவலா இருக்காங்க...''

''எத்தனை யுகம் மாறினாலும் ஜனங்களுக்கு அந்த க்ரேஸ் போகாது போலிருக்கு ஸ்நேகா. காலம் மாறிப் போச்சு, கம்ப்யூட்டர் யுகம் வந்தாச்சுங்கிறதும், இருபத்தியோராம் நூற்றாண்டுங்கிறதும் பொய்யோன்னு தோணுது. நானும் சக



மனுஷிதானே...? சினிமா ஒரு தொழில். நான் ஒரு சினிமா தொழிலாளியா இருந்தேன். நடிகையா இருந்து என்னை விட சேத்துல இறங்கி நாத்து நடற பெண்கள். எனக்கு அழகாத் தெரியறாங்க... கட்டிடம் கட்ட செங்கல்லும், மணலும் தலையில் சுமக்கிற பெண்கள் அழகாத் தெரியறாங்க.''

''இதையெல்லாம் என் ஃபிரண்ட்ஸ்ங்க கிட்ட சொல்லுங்க... போன் போட்டு வரச் சொல்லிடறேன்.''

''இப்போ வேணாம். சாயந்திரம் வரச் சொல்லு. ரொம்ப டயர்டா இருக்கு. உன் ஃபிரண்ட்ஸ்ங்க எப்படிப் பாக்கறதுக்கு லட்சணமா இருப்பாங்களா? நானும் கொஞ்சம் சைட் அடிச்சுக்கிறேனே...'' அண்ணன் சாய்குமார் கூறினான்.

''சுமாரா இருப்பாளுங்க...''

''என்ன ஸ்நேகா நீ காலேஜ் போய் ஒழுங்கா படிக்கிறியா? இப்போ நிறைய பசங்க காலேஜ் போறதே லவ் பண்றதுக்கும் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கும் தானே?''

''லவ்வுன்னா லவ்வு, லாட் ஆப் லவ் பிரதர். பிளாட் ஃபார்ம்ல ஐஸ் விக்கிற பையன்ல இருந்து புரொபஸர் வரைக்கும் லவ்தான். அவனவன் என்னைக் கண்டா பாம்பைக் கண்ட மாதிரி பயந்து ஓடறான்.'' சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

உள்ளிருந்து அம்மா வந்தாள். ''அண்ணனும் தங்கச்சியும் நல்ல விஷயமாப் பேசறீங்களா பார். லவ்வு கிவ்வுன்னிட்டு. நீதான் லவ் பண்ணி நாசமா போனே. சினிமாவுல நூறு பேரை கட்டிப் பிடிச்சி லவ் பண்ணி ஆடினவளை மனைவி ஆக்கிகிட்டே ஒரு நடிகை என் மருமகள்னு சொல்லிக்கவே வெட்கமா இருக்கு. என்ன பண்றது உனக்காக ஏத்துக்க வேண்டியதா இருக்கு. நேத்து டி.வி.ல ஒரு படம் பார்த்தேன். அதுல உன் பொண்டாட்டி போட்டிருந்த ட்ரெஸ்ஸும், போட்ட ஆட்டமும் சகிக்கலை. வாந்தி வந்தது.''

அம்மா சொல்ல சுஷ்மாவின் முகம் வாடிற்று.

அவள் அழுதபடி உள்ளே போனாள்.

''பரவாயில்லையே. உன் மனைவி கிளிசரின் இல்லாம லேயே அழறா...'' மேலும் குத்தினாள் அம்மா.

''அம்மா! வந்ததும் ஆரம்பிச்சிட்டியா? அதுக்காகத்தான் சுஷ்மாவைக் கூட்டிட்டு இங்கே வர்றதில்லை, நடிகைன்னா ஏன் கேவலமாப் பார்க்கிறீங்க? ஒரு பக்கம் நடிகைன்னா வானத் துல இருந்து குதிச்சவன்னு உயர்வா நினைக்கிறாங்க. இன் னொரு பக்கம் இப்படி உன்னை மாதிரி இழிவா பேசறாங்க. அவ நடிச்சிட்டிருக்கும்போது நீ கூட அவளோட விசிறி தெரியுமா?'' சாய்குமார் கத்தினான்.

''இப்போது விசிறி கிடையாது, எதிரி. நான் வேணாம்னு சொல்லலை. இப்போது கூட நடிக்கப் போகட்டும். உன்னை விட்டுட்டு நான் ரசிக்கிறேன். மறுபடியும் விசிறியா இருக் கேன். என் மருமகளா என்னால ஏத்துக்க முடியாது.''

''நீ மாற மாட்டே நான் என்ன பண்றது?'' என்று கூறிய வாறு சுஷ்மாவிடம் போனான் சாய்குமார்.

சுஷ்மா கட்டிலில் கவிழ்ந்தவாறு அழுது கொண்டிருந் தாள். ''ப்ளீஸ் சுஷ்மா அழாதே. அம்மாவை உனக்கு ஏற்கனவே தெரியும்தானே? அதைப் பெரிசா எடுத்துக்காதே'' என்று கட்டிலில் பக்கத்தில் அமர்ந்து கூறினான்.

''இங்கே வேணாம். நாம போயிடலாம்...''

''ஓ.கே. அவ்வளவுதானே. போலாம். நீ அழாம இருந்தா போதும்.'' ஸ்நேகலதா உள்ளே வந்தாள். ''ப்ளீஸ் இப்போ போகாதீங்க. என் ஃபிரண்ட்ஸ்ங்க வந்து போனதும் போங்க. அண்ணி! அம்மா சார்பா நான் உங்ககிட்ட ஸாரி கேட்டுக் கிறேன்'' கண்ணீரைத் துடைத்து விட்டாள்.



''இல்லை ஸ்நேகலதா.''

''எதுவும் பேசாதீங்க. இன்னைக்கு போகக் கூடாது'' வலி யுறுத்திக் கூறி நிறுத்தி விட்டாள். ஸ்நேகிதிகளிடம் வாக்குறுதி தந்திருக்கிறாளே...

''அண்ணி இன்னொரு கோரிக்கை.''

''சொல்லு சிநேகா...''

''என் ஃபிரண்ட்ஸ்ங்களுக்கு உங்க கையால டீயும் டிபனும் தரணும்.''

''கண்டிப்பா...'' கண்களைத் துடைத்துக் கொண்டு புன் னகைத்து சொன்னாள்.

அன்று மாலை -

ஸ்நேகலதாவின் தோழிகள் வந்து விட்டார்கள்.

சுஷ்மா சமையற் கூடத்தில் சமையல் செய்து கொண்டிருந் தாள். சேலையில் கரி படிந்திருந்தது. முகமெல்லாம் வியர்வை பூக்க, தலை வாராமல் சாதாரண உடையில் பணிப் பெண்ணைப் போன்று காணப்பட்டாள். எல்லாம் ஸ்நேகலதாவின் ஏற் பாடு.

ஸ்நேகலதா தோழிகளை வரவேற்பறையில் உட்கார வைத்து விட்டு சமையற் கட்டிற்குள் ஓடினாள்.

''அண்ணி... அண்ணி! என் ஃபிரண்ட்ஸ்ங்க வந்திட்டாங்க வாங்க.''

''அய்யய்யோ வந்துட்டாங்களா...? நான் இப்படி கோரமா இருக்கேனே... அஞ்சு நிமிஷம் குளிச்சிட்டு ட்ரெஸ் மாத்திட்டு வர்றேன்.''

''வேணாம் அண்ணி இப்படியே வாங்க.''

''வேணாம்மா ஸ்நேகா. இந்த கோரத்துல பார்த்தா என்ன நினைப்பாங்க?''

''ஒண்ணும் நினைக்க மாட்டாங்க அண்ணி, நீங்க இப்படி வர்றது எனக்கு ஒரு வகையில் நல்லது. என்னைவிட நீங்க அழகாத் தெரிய மாட்டீங்க? இந்த ஏரியாவுலேயே நான் அழகுங்கிற இமேஜை கிரியேட் பண்ணி வைச்சிருக்கேன். அதை நீங்க உடைச்சிடாதீங்க... இப்படியே வாங்க. எனக்காக இன்னொன்னும் செய்யணும். என்கிட்ட நீங்க ரொம்ப பயப்படற மாதிரி பண்ணணும். என் ஃபிரண்ட்ஸ்ங்களுக்கு எல்லா பணிவிடைகளும் செய்யணும். நான் உங்களை அதட்டி அதட்டி வேலை வாங்குவேன். சும்மா நடிப்புதான். நடிப்பைப் பற்றி உங்களுக்குச் சொல்லியா தரணும்?'' என்றாள்.

சுஷ்மா மௌனமாகத் தலையாட்டினாள்.

அதன்பின் பெரிய தடபுடல்தான்.

ஸ்நேகலதா தோழிகளோடு இருந்த அறைக்கு டிபனும் டீயும் எடுத்துப் போனாள் சுஷ்மா.

''பாருங்கடி கனவுக்கன்னி சுஷ்மாவை. என்னவோ பெரிசா சொன்னீங்களே... இப்போ கனவுக் கன்னி இல்லை, அண்ணி வேலைக்காரி!'' என்றவள். ''வேலைக்காரி மாதிரி!'' என்றாள்.

''நான் வேலைக்காரிதான் ஸ்நேகா'' என்றாள் சுஷ்மா.

தோழிகள் பிரமித்துப் போனார்கள்.

''நிஜமாவே நடிகை சுஷ்மாவா நீங்க?''

''இல்லைம்மா அது ஒரு காலம். இப்போ இந்த வீட்டு வேலைக்காரி.'' என்று கூறியபடி, தோழிகளுக்கெல்லாம் டீ தந்துவிட்டு ஸ்நேகலதாவிற்கு தந்தபோது அவள் வேண்டுமென்றே தவற விட்டாள்.



''என்ன நீ கொஞ்சம்கூட பொறுப்பே இல்லாம. அம்மா சொன்னது சரிதான் பயன் இல்லை,'' சீற்றமாய் கத்தினாள்.

''ஸாரிம்மா! இப்போ எல்லாம் துடைச்சி விட்டுடறேன்'' என்று பணிவோடு சுஷ்மா கூறினாள்.

ஸ்நேகலதா குரூரமாய்ச் சிரித்தாள். நடிகை சுஷ்மா உள்ளுக்குள் அழுதாள்.

**கோ**விந்தசாமி வீட்டிற்குள் அமர்ந்து கனவில் மிதந்து கொண்டிருந்தான்.

அவனுடைய சிந்தனை முழுவதும் ஸ்நேகலதாதான் பரவிக் கொண்டிருந்தாள்.

''டேய்...'' அம்மா உலுக்கினாள்.

தூக்கத்திலிருந்து விழிப்பவன் போல துள்ளி எழுந்தான். ''முழிச்சிட்டே கனவா?''

''என்னம்மா என்ன, ஏன் என்னை டிஸ்டர்ப் பண்றே?''

''ஒண்ணாந்தேதி போய் அஞ்சு நாள் ஆகுது. இன்னும் சம்பள காசை தரலை?''

''இந்த மாசம் சம்பளம் கிடையாது.''

''சம்பளம் கிடையாதா? அம்மா முகம் வாடிற்று. ''ஏன்டா?''

''செலவு நிறைய இருக்கு. வயசுப் பையனுக்கு எத்தனையோ செலவு. அதை உன் கிட்ட சொல்ல முடியுமா?''

''மளிகை பாக்கி, பால் பாக்கி, வீட்டு வாடகை தரணுமே...''

''அடுத்த மாசம் சேர்த்துத் தரலாம்.''

''இந்த மாசம் சாப்பாட்டுக்கு?''

''என்ன நீ நை நைன்னு நல்ல மூடைக் கெடுக்கிற... இந்த மாசமும் கடன் வாங்கு. அடுத்த மாசம் தரலாம். எனக்கு லவ் கண்ட்னியு ஆகணும். அதுதான் முக்கியம். நான் எவ்ளோ தவிப்பா இருக்கேன். அதைப் புரிஞ்சிக்காம படபடன்னு பொறியறியே. விதவிதமா ட்ரெஸ் பண்ணனும். சினிமா ஸ்டார் மாதிரி போகணும். அப்பதான் மதிப்பா. பிச்சைக் காரன் மாதிரி போய் நிற்க முடியுமா? சோப்பு, பவுடர், ட்ரெஸ் எடுக்கவே சம்பளம் போதலை. அவ சாதாரணப் பொண்ணா, கோடீஸ்வரன் வீட்டுப் பொண்ணு'' முகத்தைக் கோபமாகக் காட்டி கத்தினான்.

''வேணாம்டா பணக்கார சகவாசம் வேணாம். நமக்கு ஏத்த மாதிரி நானே நம்ம ஜாதில பார்த்துக் கட்டி வைக்கி றேண்டா.''

''பாரு அந்தக் கால நடிகை கண்ணாம்பா மாதிரி அட் வைஸ் பண்ணாதே. என் லவ்வுக்குக் குறுக்கே நிக்காதே... கோபம் வரும்.''

''நான் நல்லதுக்குச் சொல்றேண்டா.''

''எதுவும் சொல்லாத என்னை ஃப்ரியா விடு'' மீண்டும் கனவில மூழ்கினான்.

காதல் கனவு!

அம்மா பருப்பு டப்பாவை, அரிசி டப்பாவை திறந்து திறந்து பார்த்துச் சோகமானாள். எல்லா டப்பாக்களும் காலியாக இருந்தன.

கல்லூரிக்குள் நுழைந்தான் கோவிந்தசாமி.

ஜன்னல் கதவுகள் விரிந்த இறக்கைகளைப் போன்று திறந் திருந்தன. கவிதையைப் பற்றி அவள் எதுவும் சொல்லவில்லை என்பது மூளையில் கேள்வியான ஏக்கத்தோடு பதிவு பெற் றிருந்தது.



'அதானே, கவிதை தந்த பிறகு சந்திக்கவே இல்லை. காலேஜ் லீவ் முடிஞ்சி இன்னைக்கு தானே வர்றேன். லீவா இருந்த இரண்டு நாளும் என் கவிதையை மார்போடு அணைச்சி அணைச்சி வைத்துக் கொண்டு, திரும்பத் திரும்ப படிச்சிருப் பாள். சாதாரண காதல் கவிதையா அது... வைரமுத்து, பழனி பாரதி, மு.மேத்தா எல்லோருடைய கவிதையிலிருந்தும் சுட்டதாச்சே...'

ஜன்னலருகே உடம்பெல்லாம் காதல் கமழ போய் நின்றான்.

''ஹலோ கோபி, எப்படி இருக்கீங்க? ரெண்டு நாளா உங்களைப் பார்க்காம பைத்தியம் பிடிச்ச மாதிரி ஆகிப் போச்சு'' ஸ்நேகலதா கண்களில் காதல் காட்டி கூறினாள்.

கோவிந்தசாமி மயங்கினான். ''நான் கவிதை எழுதிக் கொடுத்தேனே... அதை லீவ்ல திரும்பத் திரும்ப படிச்சிருப் பீங்களே...?'' கேட்கும் போதே கண்கள் சொருகப் பார்த் தான். கவிதையைப் பற்றி ஏகமாய்ப் பாராட்டுவாள் என்ற எதிர்பார்ப்பும் மனம் முழுவதும் வியாபித்திருந்தது.

''கவிதையா?'' எதுவும் தெரியாதது போல் கேட்டாள்.

முகம் வாடிற்று. ''என்னங்க... லாஸ்ட் டைம் மீட் பண் ணப்போ தந்தேனே பொக்கேயெல்லாம் வச்சி... அப்படியே மனசைக் குழைச்சி எழுதினேங்க...'' கண்கள் இருண்டன.

''ஓ... அதுவா? ஸாரி டியர். அதைக் குப்பையில் போட் டுட்டேன்.''

''என்ன, என்ன?'' துடியாய்த் துடித்தான். முகம் கறுத்தது வியர்த்தது.

அவனுடைய பரிதாபமான நிலையைப் பார்த்து, சடக் கென்று பேச்சை மாற்றினாள்.

''அப்படி குப்பையில் போட்டுட்டேன்னு சொல்லிடுவேன்னு நினைச்சீங்களா. அதான் இல்லை. பத்திரமா என் இதயத்துல வைச்சிருக்கேன். இன்னும் அதை வாசிக்கலை. நான் கண்ணால கவிதையை வாசிக்கிறதைவிட நீங்க உங்க வாயால வாசிச்சா உயிரோட்டமா இருக்கும்னு எதிர்பார்க்கிறேன். உங்க குரல் அப்படி ஒரு தேனா இனிக்கிறது.''

திடீரென ஆயிரம் வாட்ஸ் பூக்கள் இதயத்தில் விளக்குகளாய் பூத்த மாதிரி ஒளிர்ந்தான். ''ஓ தாராளமா வாசிக்கிறேங்க. ஆனா இங்கே முடியாதே. ஜன்னல் தடுக்குதே.. உள்ளே நீங்க உட்கார்ந்திருக்கீங்க. வெளியே பிச்சைக்காரன் மாதிரி நிற்கிறேன்.''

ஸ்நேகா சிரித்தாள். உள் அர்த்தத்தோடு, கோவிந்தசாமியை மேலும் அலைய வைக்க வேண்டுமென்று மனம் குரங்காய் ஆடிற்று.

''எனக்கும் நாம ரெண்டு பேரும் தனியா சந்தித்துப் பேசணும்னு ரொம்ப ஆசை. வர்ற சண்டே மெட்ராஸ் வர்றீங்களா? மெரீனா பீச்ல உங்களுக்காகக் காத்திருக்கேன். கடற்கரை மணற்பரப்புல படகு மறைவுல உங்க மடியில தலை வைச்சி நான் படுத்திருக்க, நீங்க கவிதை வாசிக்கணும். உலகமே மறந்து நான் அந்தக் கவிதையில் ஊறணும்'' கிறங்க வைக்கிற மாதிரி கூறினாள்.

கோவிந்தசாமிக்கு தரையில் நிற்கிற மாதிரி இல்லை. ஸ்நேகலதாவின் வார்த்தைகள் காதில் விழ, விழ சிலிர்த்துக் கொண்டே போனான்.

''நிஜமாத்தான். சண்டே டெப்னட்டா சென்னை, மெரீனா, பீச், படகு மறைவு உங்க மடியில் படுத்து, கவிதை... சரி சரி புரொபஸர் வந்துட்டார். நீங்க புறப்படுங்க'' என்று டக்டக்கென்று கூறி ஜன்னல் கதவுகளை மூடினாள்.



கோவிந்தசாமி வானத்தில் மிதக்கிற உணர்வோடு நகர்ந்தான்.

ஸ்நேகலதாவை நோக்கித் தோழிகள் சூழ்ந்து கொண்டார்கள்.

''இது ரொம்ப மோசம்?''

''என்னடி மோசம்?''

''அநியாயமா அவன் மனசைக் கெடுக்கறே?''

ஸ்நேகலதா பெரிதாகச் சிரித்தாள். ''அவன் மனசை நான் கெடுத்தனா? அவன் மனசை அவனே கெடுத்துக்கிறாண்டி. நானென்ன செய்யட்டும்! அவனுக்குப் புத்தி வேணாம். முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா?''

''ஏய்... ரோட்ல போறவனை நீ தாண்டி வலியக் கூப்பிட்டு ஐ லவ் யூ சொன்னே?''

''நான் சொன்னா அவன் நம்பிடறதா புத்தி வேணாம்.''

''ஆமாண்டி சண்டே நீ மெரீனா பீச்சுக்குப் போகப் போறியா?''

''நானா? ச்சீ... அந்த நாய் அலையட்டும். மெரீனா பீச் முழுவதும் நாக்கைத் தொங்கப் போட்டு அலையட்டும்.''

''பாவம்டி.''

''என்னடி பெரிய பாவம்?''

''வேணாம் ஸ்நேகா, இதுவரை வேணாம். இத்தோட கட் பண்ணு.''

''நீங்க சொல்லவே வேண்டியதில்லை. இனிமே அவன் வர்ற நேரத்துக்கு ஜன்னலைத் திறக்கவே மாட்டேன். அவன் ஏமாந்து போக வேண்டியதுதான்!'' என்றாள் தீர்மானமாய்.

கோவிந்தசாமியை ஏமாற்றியதை நினைத்து நினைத்துச் சிரித்தாள்.

கூரியர் அலுவலகம்.

வழக்கம்போல் மானேஜரின் முன்பு நின்றான் கோவிந்தசாமி.

''என்ன பிரதர், என்ன மேட்டர்?''

''ஆயிரம் ரூபாய் அட்வான்ஸ் வேணும் ஸார். அவங்க மெரீனா பீச் வர சொல்லி இருக்காங்க'' வெட்கத்துடன் கூறினான்.

மானேஜர் அவனை ஏற இறங்கப் பார்த்தார். ''பிரதர் ரொம்ப தமாஷ் பண்றீங்க. இனிமே வேணாம். நீங்க சம்பளம் வாங்கி அஞ்சு மாசம் ஆகுது. முன்னாடியே அட்வான்ஸ் அட்வான்ஸ்ன்னு வாங்கி காலி பண்ணிட்டீங்க. கம்பெனிக்கு பத்தாயிரம் பாக்கி!''

''காதல் கை கூடற வரைக்கும் ஸார். அப்புறம் கழிச்சுடுவேன்.''

''காதலுக்கு ரொம்ப செலவு பண்றே...?''

''அவங்க கோடீஸ்வரங்க ஸார். இந்த செலவு ரொம்பக் குறைச்சல்.''

''கோடீஸ்வரின்னா அவளைச் செலவு பண்ணச் சொல்லுங்க பிரதர். லவ் பண்றதுக்குச் சம்பளம் தரச் சொல்லுங்க...''

கோவிந்தசாமி கோபமானான். ''ஸார்! நான் காதல் விபச்சாரி கிடையாது. லேடீஸ் கிட்ட பணம் வாங்கிட்டு லவ் பண்றதுக்கு? கண்ணியமானவன். பணக்காரிங்கிறதுக்காக நான் லவ் பண்ணலை... காதல் என்கிற உணர்ச்சிக்கு எதுவுமே முக்கியமில்லை. பணத்தைவிட தங்கத்தைவிட வைரத்தை



விட இந்த உலகத்தை விடப் பெரிது காதல்'' கண்களை விரித்துக் கத்தினான்.

இப்படி கோபம் காட்டுகிற இவனுக்கு பதிலடி சரியாக கொடுக்க வேண்டும் என்று மானேஜர் எண்ணினார். ''ஸாரி பிரதர்! என்கிட்ட காசு இல்லை. பணத்தை விட, தங்கத்தை விட, வைரத்தைவிட, இந்த உலகத்தை விட காதல் பெரிது. அதுக்கு மெட்ராஸ் போய் மெரீனா பீச்ல காதல் பண்ணணுமா? நம்ம ஊர் சுடுகாட்டுக்குப் போங்க. சமாதிகள் மேல உட்கார்ந்து பண்ணுங்க... அங்கிருக்கிற பிணங்களுக்கும் பணம், தங்க, வைரம், இந்த உலகம் எதுவும் வேணாமாம்'' சொல்லி விட்டு நக்கலாகச் சிரித்தார்.

''ஸார்! ஏமாத்திடாதீங்க...''

''ஸாரி பிரதர், சொன்னா சொன்னதுதான். காசு கிடையாது.''

''உறுதியாகச் சொல்கிறீங்களா...?''

''உறுதியாக, இறுதியாக, நிச்சயமாக, சத்தியமாகத் தர முடியாது என்றால் தர முடியாது.''

கேட்கிற போதெல்லாம் கொடுக்கிற காசு காய்ச்சி மரமாக இருந்த மானேஜரே கை விரித்து விட்ட பிறகு வேறு யார் உதவுவார்? தளர்ந்து விட்டான். பணம் இல்லாமல் எப்படி?

முகம் சுவற்றில் மாட்டிய காலண்டர் மாதிரி தொங்கி விட்டது. வேதனையோடு வந்தான்.

அவனோடு பணிபுரிகிற நண்பர்கள் மும்முரமாகப் பணி புரிந்து கொண்டிருந்தார்கள்.

தபால் உறைகளைப் பார்சல்களைப் போக வேண்டிய ஊர்களுக்கு தனித்தனியாகப் பிரித்துப் பிரித்து வீசிக் கொண்டிருந்தார்கள்.

கோவிந்தசாமிக்கு அளவு காட்ட முடியாத அளவிற்கு கோபம் புட்பால் விளையாடுகிற மாதிரி தபால்களை உதைத்தான்.

''டேய் மாம்ஸ் உனக்கு என்ன ஆச்சு?'' என்றான் ஒருத்தன்.

''ஒயர் எதாவது கட்டாயிடுச்சா?'' என்றான் இன்னொருத்தன்.

''இதுக்குதான்டா லவ்ஸ்ல பூர வேணாம்னு அட்வைஸ் பண்றது. பார்த்தியா பஞ்ச்சர் ஆயிட்டே... என்ன சமாச்சாரம்?'' ரகுபதி அருகே வந்து தோளைத் தொட்டான்.

கோவிந்தசாமிக்கு அழுகை வந்தது அவனின் அந்த அழுகை மற்றவர்களுக்கு சிரிப்பை வரவழைப்பதாக இருந்தது.

''டேய் மச்சான் என்னடா ஆச்சு?'' என்று ஒருத்தன் கிண்டலாய்க் கேட்க.

''குழந்தை அழுது'' என்றான் இன்னொருவன்.

''வுட்வார்ஸ் கொடுக்கச் சொல்லு.''

''என்ன ஆச்சு...?'' உள்ளறையிலிருந்து வந்தது குரல்.

''குழந்தை அழுது.''

''வுட்வார்ட்ஸ் கொடுக்கச் சொல்லு.''

- இப்படி மூன்று தலைமுறை ஆண்கள் உரையாடினார்கள்.

- அவர்களின் அப்படிப்பட்ட உரையாடல் கோவிந்தசாமிக்கு மேலும் அழுகையைத் தருவதாக இருந்தது.

பிறகு நண்பர்கள் அனைவரும் கூட்டாய் சேர்ந்து அவரவர்களிடம் இருக்கும் பணத்தைக் கொடுத்தார்கள். சிலர் நூற்றியொரு ரூபாய், சிலர் ஐம்பத்தொன்று ரூபாய், சிலர் பத்து ரூபாய், சிலர் ஐந்து ரூபாய் என்று திருமணத்திற்கு மொய் வழங்குவது போல் வழங்கினார்கள்.



''இன்னும் யாருப்பா மொய் போடறவங்க?''

கம்பெனிக்கு டீ கொண்டு வந்த பையன் ''என்ன ஸார் மொய் எழுதறீங்க யாருக்குக் கல்யாணம்'' என்றான்.

''இது கல்யாண மொய்யில்லை. காதல் மொய். நீயும் போடறீயா?''

''என்கிட்ட அம்பது பைசாதான் இருக்கு.''

''கொடு.''

மானேஜர் வந்தார்.

''ஐம்பது பைசா கூட மொய் போடலாமா? எனது ஒரு பிப்ட்டி ஃபைவ்'' என்று ஐம்பத்தைந்து பைசா கொடுத்தார். கோவிந்தசாமி அவரை முறைத்துப் பார்த்தான்.

மொத்தமாக பணம் வசூலித்து ஒரு கர்ச்சீப்பில் மூட்டையாகக் கட்டி வாழ்த்திக் கொடுத்து வழி அனுப்பி வைத்தார்கள்.

அழகாய் உடுத்திக் கொண்டான். கறுப்புக் கண்ணாடி, தொப்பி, இடுப்பில் பெல்ட், காலில் வெண்ணிற ஷூ என்று அமர்க்களமாய் சென்னை வந்தான்.

பூக்கடை பஸ் நிலையத்தில் பஸ்ஸிலிருந்தும் இறங்கும் போது வேதனையோடு அவ்விடத்தைப் பார்த்தான். நம்ம ஊர்ல என்ன அழகா பெரிய பஸ் ஸ்டேண்டு இருக்கு இங்கு இவ்ளோ மோசமா இருக்கே...!''

பொழுது விடிந்த நேரம் மெரீனா பீச் வந்தடைந்தான். கண்கள் ஸ்நேகலதாவைத் தேடிற்று. தொந்தியோடு சிலர் அதைக் குறைப்பதற்கு 'வாக்கிங்' போய்க் கொண்டிருந்தார்கள். தொந்தி இல்லாமல் உடம்பில் சதையே இல்லாமல்

எலும்பும் தோலுமாய் இருந்த சிலரும் வாக்கிங் போனார்கள். வாட்டசாட்டமான இளைஞர்களும் இளைஞிகளும் மிதமாக ஓடினார்கள். அவளைக் காணவில்லை.

'எங்கே அவள்?'

வெயில் ஏறிற்று. வியர்வை வழிந்தது. கர்ச்சீப்பால் துடைத்து, முகத்திற்கு பவுடர் பூசிக் கொண்டான். தலை சீவிக் கொண்டான். கடற்கரை முழுவதும் அலைந்து அலைந்து தேடினான்.

பொழுது தான் ஏறிற்று. உச்சி வெயில் தீய்த்தது. மனிதர்களின் நடமாட்டம் குறைந்தது. மாலைதான் வருவாளென்று எண்ணிக் காத்திருந்தான்.

மாலை நேரமும் வந்தது. அவள் வரவில்லை. கோடை கால வெம்மையைப் போக்கக் கூட்டம் கூடிற்று. ஜனத்திரள் அதிகரித்தது. உல்லாசப் பயணிகள் நிறைய வாகனங்கள். பல வகையான மனிதர்கள். அவளை மட்டும் காணவில்லை. கடற்கரை முழுவதும் நடந்து நடந்து கால்கள் வலித்தன. உடல் தளர்ந்தது. மனம் வலிக்காமல் மனம் தளராமல் தேடினான்.

இருளும் கவ்வியது. அதைத் துடைப்பதற்கு வண்ண வண்ண விளக்குகள் ஒளிர்ந்தன.

மேலும் இருள் கூடிற்று. இரவின் அழுத்தம் அதிகரித்தது. மனிதர் கூட்டம் குறைந்தது. 'இனி வரமாட்டாள்' என முடிவெடுத்தான். பெரிய ஏமாற்றம். அவனை அவனே பரிதாபமாக எண்ணிக் கொண்டான். இன்றைக்கெல்லாம் நூறு முறை முகத்திற்கு பவுடர் பூசி இருப்பான். நூறு முறை தொப்பியைக் கழற்றி தலை சீவி இருப்பான். எல்லாம் தண்டம். இனி வரமாட்டாள் என கடைசியாக முடிவெடுத்தான்.

ஆத்திரத்தில் தலையைக் கலைத்துக் கொண்டான். அவனுக்குள் பைத்தியமாகி விட்டது போன்று உணர்வு.



ஏமாற்றத்தோடு திரும்பியவன் நண்பர்களிடம் காதலியுடன் ஆடிப்பாடி கொண்டாட்டமாய் இருந்ததாகப் பொய் சொன்னான்.

# 6

மறுநாள்!

கூரியர் தபால்களை எடுத்துக்கொண்டு கோவிந்தசாமி கல்லூரிக்குள் நுழைந்தபோது ஜன்னலின் கதவு மூடிக் கொண்டது. தவித்துப் போனான். ஏமாற்றத்தோடு திரும்பினான்.

ஒவ்வொரு நாளும் தொடர்ந்து இதே ஏமாற்றம்தான்.

தானே தாடி வளர்ந்து கொண்டது. கண்களைச் சுற்றிக் கருவளையம், வறண்ட பூமி, பாலைவனம், பட்டமரத்தின் கீழ் என்று சோகத்தை ஓவியமாய் காட்டுகிற இடத்திற்கெல்லாம் போய் காதல் வேதனையில் பாட்டு வாசித்தான்.

ஒரு நாள்! காலையிலேயே கல்லூரிச் சாலைக்கு வந்து விட்டான். அவளை எப்படியும் பிடிப்பதென்று.

மாணவிகளோடு ஸ்நேகலதா கல்லூரிக்கு வந்து கொண்டிருந்தபோது எதிரே போய் நின்றான்.

அவள் ஓரப் பார்வையால் பார்த்துவிட்டு, பாராதவள் போல் நடந்து வந்தாள். உள்ளுக்குள் குரூரச் சிரிப்பு. பேயின் புன்னகை.

மாணவிகளோடு என்னவோ பேசியபடி கடந்து போனாள். அவனைக் கண்டு கொள்ளவில்லை.

துவண்டு போனான்.

வேறு வழியின்றி ''ஹலோ!'' என்றவாறு பின் தொடர்ந் தான்.

அவள் காதில் வாங்கவில்லை.

தொடர்ந்து ''ஹலோ! ஹலோ!'' என்று கூவினபடி தொடர்ந் தான்.

ஸ்நேகலதாவும் பொறுமை இழந்து நின்றாள். ''வர வர பிச்சைக்காரங்க அதிகமாயிட்டாங்க...'' என்று கூறியபடி திரும்பினாள். ''நல்லா வாட்ட சாட்டமாத்தானே இருக்கே... உழைச்சிச் சாப்பிடேன். மூட்டைத் தூக்கு, வண்டி இழு, காகிதம் பொறுக்கு, சுண்டல் வியாபாரம் செய். இப்படிப் பிச்சை எடுக்கிறியே?'' பர்ஸிலிருந்து நூறு ரூபாய் தாள்கள் ஐந்து எடுத்தாள். அவனை நோக்கி வீசினாள். ரூபாய்கள் பறந்தன. முகத்திலொன்றும் மார்பிலொன்றும் ஒட்டியது. மீதி பறந்து தரையில் விழுந்தது.

''இனிமே இப்படி பிச்சை எடுக்காதே. இந்தக் காசை வைச்சி ஏதோ தொழில் செய்து பிழைச்சிக்கோ. நான்சென்ஸ்...!'' திமிராய் கூறிவிட்டு நகர்ந்தாள்.

நெருப்பில் விழுந்தவன் போல் வெந்து நின்றான் கோவிந்த சாமி.

கூரியர் அலுவலகம்.

நண்பர்களுக்கு மத்தியில் சோகத்தின் சின்னமாய் உட்கார்ந் திருந்தான் கோவிந்தசாமி.

''ஆழம் தெரியாம காலை விடக் கூடாதுன்னு அந்தக் காலத்துல சொல்லி இருக்காங்க.. காலை மட்டுமில்லை, மனசை யும் ஆழம் தெரியாம விடக் கூடாது'' என்றான் ஒருத்தன்.

''விரலுக்கேத்த வீக்கம்னும் சொல்லி இருக்காங்க. ஆளுக் கேத்த காதல். கோடீஸ்வரியைக் காதலிக்கலாமா?



''மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாம். வயது அப்படி மச்சான். எவளைப் பார்த்தாலும் லவ் தோணும். இளைஞன் கண்ணுக்குத் தெரிஞ்சதெல்லாம் காதல்.''

''காற்றுள்ள போதே தூத்தி விடுன்னு சொல்லியிருக்காங்க... அவ ஐ லவ் யூன்னு சொன்ன போதே தாலி கட்டிட்டு இருக்கணும். இப்போ பார்த்தியா மனம் மாறிட்டா.''

ஆள் ஆளுக்குப் பழமொழி கூறி நோகடித்தார்கள்.

''அய்யோ..'' அவன் கத்தினான். ''என் வேதனையைச் சொல்லி உங்ககிட்ட வழி கேட்டா, இப்படி வெந்த புண்ணுல வேலைப் பாய்ச்சறீங்களே.''

மானேஜர் அருகே வந்தார். அவனுடைய தோளைத் தட்டினார். ''டோன்ட் வொர்ரி பிரதர். முயற்சி திருவினை யாக்கும். ட்ரை அகெய்ன் இந்த பரந்த உலகத்தில் ஒன்லி ஒன் கேர்ள்தானா? வேற ஒருத்தி கிடைக்க மாட்டாளா?''

''அவளைத் தவிர என்னால வேற யாரையும் மனசால கூட நினைச்சுப் பார்க்க முடியலை. முடியாது. எப்பவும் அவதான் என் காதலி ஸார்!''

''நீ திருந்த மாட்டே பிரதர். போ! போய் அவகிட்ட டெய்லி பிச்சை எடு.'' மானேஜர் கத்தினார். ''ஐநூறு ஐநூறா கிடைக்கும். சீக்கிரம் லட்சாதிபதி ஆயிடுவே.''

அடுத்த நாள்.

கல்லூரிச் சாலை.

வெறும் பிச்சைக்காரர்களால் நிரம்பி வழிந்தது.

ஸ்நேகலதா தோழிகளோடு நடந்து வந்தபோது அவளைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''ஹலோ! பிச்சை போடுங்க'' கத்தினார்கள்.

''ஹலோ!'' பெரிய கூச்சல்.

நேற்று கோவிந்தசாமிக்கு ஐநூறு பிச்சை போட்ட விஷயம் அவர்களுக்கு தெரிந்து, வந்து குவிந்து விட்டார்கள்.

பாதையில் நடக்க முடியவில்லை. பிச்சைக்காரர்களின் சுற்றி வளைப்பு.

செலுலாரை எடுத்து போலீஸிற்கு போன் செய்தாள்.

சில நிமிடங்களில் போலீஸ் வேன் வந்து பிச்சைக்காரர் களைத் துரத்தியது.

பேராசிரியர் இன்னும் வகுப்பறைக்குள் நுழையவில்லை. வகுப்பறையா குழாயடியா என்று சந்தேகிக்கும்படியாக மாணவிகள் கூடிக் கலந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

''நீ செய்றது சரியில்லை ஸ்நேகலதா. ரோட்ல போறவனை அழைச்சு ஐ லவ் யூ சொல்லி, மனசைக் கெடுத்து நாசமாக் கிட்டியே..'' தோழி கேட்டாள்.

ஸ்நேகலதா சிரித்தாள். ''இதெல்லாம் விளையாட்டுடி. ஆண்டவனே பல அவதாரம் எடுத்து திருவிளையாடல் செய்ய லியா? அது மாதிரித்தான். கடவுள் செய்தா காவியமா ஏத்துப் பீங்க. நான் செய்தா குற்றம் சொல்றீங்களா?''

''கடவுள் யாருக்கும் நம்பிக்கை துரோகம் பண்ணலையே.. கடைசி நேரத்துல சுயரூபம் காட்டிடுவாரே...''

''நானும் என் சுயரூபம் காட்டிட்டேன். கோடீஸ்வரியான நான் பிச்சைக்காரனைக் காதலிப்பேனா? இந்தா ஐநூறு ரூபா பிச்சை எடுத்துக்கோ, பிழைச்சுக்கோன்னு வீசி எறிஞ்சிட் டேனே?''

''நீ பணத் திமிர்ல பேசறே?''

''ஆமாடி எனக்கு பணத்திமிர்தான். ஏன் இருக்கக் கூடாதா? படிச்சவனுக்கு அறிவுத்திமிர் இருக்கும். பதவில இருக்கிற வனுக்கு அதிகார திமிர் இருக்கும். சாதாரண தொழிலாளிக்கு தொழில் திமிர் இருக்கும். என்கிட்ட இருக்கிறது பணம். அந்த திமிர் நிறைய இருக்கும்தான். பணத்திமிரோட வயசுத் திமிர்னு ஒண்ணு இருக்கு. ரெண்டும் இப்போ ஜோடி சேர்ந்து கலக்குது.''



''அழகுத் திமிரும் இருக்குடி. மத்தவங்களைவிட அழகா இருக்கிற திமிர்.''

''யெஸ், யெஸ்,'' அலட்டலாய், திமிராய்ப் பார்த்தாள். நெற்றியில் விழுந்து தொங்கிய முடியைத் தள்ளி விட்டாள். கீழுதட்டை மடித்துக் கடித்தாள்.

''எல்லாத் திமிரும் இருக்கலாம்டி. அதனால மத்தவங்க பாதிக்கக் கூடாது. அது முக்கியம். இன்னொருத்தனைப் பைத்திய மாக்கறியே, அது என்னடி நியாயம்?'' லாவண்யா கேட்டாள்.

''அது அவனோட மடத்தனம். என்னோட தவறு எதுவு மில்லை. நான் ஆயிரம் பேருக்கு 'ஐ லவ் யூ' சொல்லி இருக் கேன். இன்னும் ஆயிரம் பேருக்கு 'ஐ லவ் யூ' சொல்வேன். எல்லாம் விளையாட்டு. என்னோட ராஜ குமாரனை என் அப்பாதான் தீர்மானிப்பார். கோடீஸ்வரனா. கண்ட கழுதை யெல்லாம் என் கணவனாகிவிட முடியாது.''

கோவிந்தசாமி தினமும் கல்லூரிக்குப் போவதும் ஜன்னல் கதவுகள் மூடி இருப்பதும் உலகையே வெறுக்க வைத்தன. அவனால் மறக்க முடியவில்லை. இன்று கல்லூரிக்குள் நுழைந் தான். வழக்கம் போல் ஜன்னல் மூடி இருந்தது. வெறும் மூடிய ஜன்னலைப் பார்த்துவிட்டுத் திரும்பிப் போக மனம் வர வில்லை. எதற்கும் தயாரான ஒரு முடிவிற்கு வந்திருந்தான். நேரே வகுப்பறைக்குள் நுழைந்தான். மாணவிகள் நிரம்பியிருந் தார்கள்.

பறவைகளின் இருப்பிடத்தைப் போன்று 'கீச் கீச்' சென் றிருந்த அறை, அவனைப் பார்த்ததும் நிசப்தமாயிற்று. பறவை

களின் பார்வை அவனை நோக்கித் திரும்பிற்று. ஜன்னலோரம் அமர்ந்தபடி சிரித்துத் தோழிகளிடம் பேசிக் கொண்டிருந்த -

ஸ்நேகலதாவின் இருப்பிடத்தை நோக்கி மெதுவாக ஒவ் வொரு அடியாக எடுத்து வைத்து நடந்தான்.

'என்ன செய்யப் போகிறான்?'

கூர்மையாய் கவனித்தார்கள். மொத்த மாணவிகளும்.

அவளின் அருகே வந்து நின்றான். படபடத்த இதயத்தை அப்படியே பிரதிபலித்த அவளுடைய கண்களைச் சற்றும் இமைக்காமல் பார்த்தான். தைரியத்தின் சின்னமான ஸ்நேக லதாவிற்கு இனம் புரியாத நடுக்கம் உருவாகி வியர்த்தது. மதம் ஏறின யானை மாதிரி தெரிந்தான்.

''ஐ லவ் யூ, ஐ லவ் யூ, ஐ லவ் யூ, ஐ லவ் யூ.''

மூச்சு விடாமல் பல முறை கூறிவிட்டு, பிறகு மூச்சு வாங்கிக் கொண்டு நின்றான். பார்வையானது அவளைக் குத்தும் வகை யில் நின்றது.

மூச்சைக் கொஞ்சம் இழுத்து விட்டுக் கொண்டு மீண்டும் கூறினான். அதையே.

ஸ்நேகலதா பெரிய அவமானமாக நினைத்தாள். கோபம் அவள் முகத்தில் நெருப்பாய் மின்னிற்று. எழுந்து நின்றாள். அவன் விடாமல் மந்திரம் போல் 'ஐ லவ் யூ' கூறினான்.

''ஸ்டாப் இட்'' கத்தினாள்.

அவன் நிறுத்தவில்லை.

தளராமல் மறு கன்னத்தைக் காட்டியபடி மந்திரமாய் ஓதினான்.

அவளும் தளரவில்லை. மறு கன்னத்திலும் அறைந்தாள்.

அவன் மீண்டும் கன்னத்தைக் காட்டினான்.



திரும்பத் திரும்ப அதே நாடகம்.

அனைத்து மாணவிகளும் அதிர்ந்தார்கள். ஸ்நேகலதாவின் தோழிகள் அவளை இழுத்துப் பிடித்தார்கள்.

''ப்ளீஸ் போங்க சார்! இது கிளாஸ் ரூம்'' என்று ஒரு மாணவி கெஞ்சலுடன் கேட்டாள்.

ஒரு பைத்தியக்காரனைப் போன்று அவன் ''ஐ லவ் யூ, ஐ லவ் யூ'' என்று கூறிக்கொண்டே வெளியே வந்தான்.

கூரியர் அலுவலகத்தில் நண்பர்கள் குழு கொதித்தது.

''மனுஷனாடா நீ? அவகிட்ட அடி வாங்கினு வந்து நிக்கறியே!

''ரெண்டு கன்னமும் தக்காளிப்பழம் மாதிரி செவந்திருக்கு.''

''ஆம்பிளைதானே நீ. திரும்பி ஒரு அறை அறைஞ்சிருந்தா எல்லா பல்லும் விழுந்திருக்காதா?''

''நீ தானேடி எனக்கு ஐ லவ் யூ சொன்னே. ஏன் சொன் னேன்னு அறைஞ்சிருக்கணும். வாய் உடைஞ்சி இனி எவனுக் கும் அவ 'ஐ லவ் யூ' சொல்லக் கூடாது.''

''நாம இவ்ளோ பேசறோம். அவன் ஏதாவது பேசறானா பார். புளி மூட்டை மாதிரி உட்கார்ந்திருக்கான்.''

''ஏண்டா உன் உடம்புல சூடு சொரணை எதுவும் கிடை யாதா? அடி வாங்கிட்டு வந்திருக்கியே.''

கோவிந்தசாமி அவர்கள் அனைவரையும் விழிகளைச் சுழற்றிப் பார்த்தான். யாரும் பேச வேண்டாம் என்று வாய்க்கு விரலைக் கொண்டு போய் பொத்தினான்.

''அவ என்னை அறைஞ்சதுக்கு நான் சந்தோஷப்படறேன். அறையற சாக்கிலயாவது அவ என்னைத் தொட்டாளே அதுக்காக...'' என்றான்.

நண்பர்கள் அவனை முறைப்பாய்ப் பார்த்தார்கள்.

''காதல் எல்லா மனுஷனையும் பைத்தியமாக்கும்தான். இப்படியெல்லாம் பைத்தியமாக்கக்கூடாது. இது டூ மச். ப்ரதர்! பொழைக்கிற வழிகளைப் பாருங்க. அந்தப் பொண்ணு தான் உன்னை லவ் பண்ணலைன்னு தெரியுது. அப்புறம் எதுக்கு இந்த அடாவடி வம்பு? மறந்துடு பிரதர்.''

மானேஜர் கோவிந்தசாமியின் கன்னத்தை வருடியவாறு கூறினார்.

''ஸாரி, நான் அவளை லவ் பண்றேன்.''

''திருந்துப்பா.''

''மாட்டேன். என் உயிர் போனாலும் நான் மாறமாட்டேன்.

அவளை லவ் பண்ணுவேன்.''

''இன்னும் நீ அடி வாங்க வேண்டியது நிறைய இருக்குன்னு நினைக்கிறேன். ஆண்டவர்தான் உன்னைக் காப்பாத்தணும்'' என்று கடைசியாகக் கூறிவிட்டு மானேஜர் நகர்ந்து போனார். நண்பர்கள் அவனைப் பரிதாபமாகப் பார்த்தார்கள்.

ஸ்நேகலதாவைச் சுற்றி அவளின் தோழிகள்.

''விளையாட்டு வினையாகிப் போச்சு பார்த்தியா? பாம்பு கடிக்காதுன்னு நினைச்சி புத்துல கையை விடறது ஆபத்து. ஒரு புத்துல பாம்பு இல்லைன்னாலும் இன்னொரு புத்துல பாம்பு இருக்கும்'' என்றாள் ஒருத்தி.

''நிஜமாவே பாவம்டி. அவனை அப்படி அறைஞ்சிருக்கக் கூடாது'' என்றாள் இன்னொருத்தி.

''ப்ளீஸ் வேற எதையாவது பேசுங்க போரடிக்காதீங்க...'' என்றாள் ஸ்நேகலதா.

''என்னடி மனுஷி நீ. இவ்ளோ ஈஸியா இருக்கே. அவன் வெறித்தனமா இருக்கான். க்ளாஸ் ரூமுக்குள்ளேயே நுழைஞ் சிட்டவன் அடுத்த கட்டமா எதுனாலும் செய்வான்.''



''என்ன பெரிசா செய்வான்? எங்க அண்ணன் கிட்ட சொன்னா அடுத்த நிமிஷத்துல எலும்பை எண்ணிடுவார்.''

''ஸ்நேகலதா! கொஞ்சம் யோசிடி. தவறு உன் பேர்லயும் இருக்கு. ரோட்ல போறவனைக் கூப்பிட்டு ஐ லவ் யூ சொன்னது உன்னோட தப்பு.''

''நான் எத்தனையோ பேருக்கு சொல்லி இருக்கேன்.''

''மத்தவங்களால உனக்குப் பிரச்சினை கிடையாதே.''

''இவனால பிரச்சினைன்னு சொல்றியா? டோன்ட் வொர்ரி. நான் சந்திக்கிறேன். அவனா, நானான்னு பார்த்துடறேன்.''

''வேணாம்டி பிடிவாதம் வேணாம்.''

''அந்தப் பரதேசியை நான் லவ் பண்ணணும்னு சொல்றியா?''

''இல்லை. நீ லவ் பண்ண வேணாம். அவன் கிட்ட ஒரு ஸாரி கேட்டுக்க. அது போதும். நடந்ததை அவகிட்ட விளக்க மாச் சொல்லிடு.''

''என்னால முடியாது. என்னை ஆயிரம் பேர் லவ் பண்ணு வாங்க. ஒவ்வொருத்தர் கிட்டேயும் போய் மன்னிப்பு கேட்க முடியாது. நான் நானா இருக்கத்தான் விரும்பறேன். என்னை கேவலமாக்கிடாதீங்க. அவன் என்ன பண்ணுவான், நான் பார்க்கிறேன்'' பிடிவாதமாகக் கூறினாள்.

மேலும் பேசி அவளை மாற்றுவது எளிதான காரியமல்ல என்று பின் வாங்கினார்கள். அமைதியானார்கள் தோழிகள்.

அதேவேளை. இந்த விஷயத்தை இப்படியே விடவும் முடியாதென்பதால் கோவிந்தசாமியிடம் அவர்களாக நேரில் சென்று பேச முடிவெடுத்தார்கள், ஸ்நேகலதாவின் தோழிகள்.

ஸ்நேகலதாவின் தோழிகள் கோவிந்தசாமியைத் தேடிக் கொண்டு கூரியர் அலுவலகத்திற்கு வந்தார்கள்.

சோர்வாய் அமர்ந்திருந்தவன் அவர்களைப் பார்த்து மெல்லப் புன்னகை காட்டினான்.

''ஸ்நேகலதா சார்பா உங்ககிட்ட மன்னிப்புக் கேட்க வந்திருக்கோம்.''

''ஸ்நேகலதாவா?'' தெரியாத பெயர் போல் இருந்தது அவனுக்கு.

''ஆமா அவ பேர் ஸ்நேகலதாதான் எதிலயும் அவளுக்கு விளையாட்டு. அதனாலதான் பேரைக்கூட கோவிந்தம்மான்னு சொன்னா.''

''ஸ்நேகலதாவா! பேர் ப்யூட்டிபுல் நேம்'' அவனுக்கு சோகத்திலும் முகம் மலர்ந்தது.

''மன்னிச்சிடுங்க ஸார்! ஸ்நேகலதா சார்பா நாங்க மன்னிப்பு கேட்க வந்திருக்கோம்.''

''எதுக்கு? அதெல்லாம் வேணாம். அவங்க யார், நான் யார்... மன்னிப்பெல்லாம் கேட்கிறதுக்கு... அவங்க என்னோட லவ்வர்.'' என்றான்.

தோழிகள் தலையில் அடித்துக் கொண்டார்கள்.

''ப்ளீஸ். நீங்க உங்க பிடிவாதத்தை விட்டுடறது நல்லது. ஸ்நேகலதா உங்களை எப்பவும் லவ் பண்ண கிடையாது. இதுக்கு முன்னேயும் இல்லை. இனியும் இல்லைதான். உங்களுக்கு ஐ லவ் யூ சொன்னது விளையாட்டுக்கு. அது போல நிறைய பேருக்குச் சொல்லி இருக்கா. காலேஜ் ஸ்டுடன்ட்டுக்கு இது சகஜம். எது விளையாட்டுன்னு தெரியாம விளையாடுவாங்க. அவ பண்ணது தப்புதான். அவளோட சார்பா நாங்க மன்னிப்பு கேட்டுக்கிறோம். மறந்துடுங்க.''

அவன் சீற்றத்தோடு கத்தினான். ''முடியாது. என்னால மறக்க முடியாது. நான் விட மாட்டேன். அவங்களை நான் விட மாட்டேன்.''



''ப்ளீஸ்! சொன்னா கேளுங்க. உங்களால ஜெயிக்க முடியாது. தோத்துடுவீங்க. குருவியை சுடற மாதிரி சுட்டுத் தள்ளிடுவாங்க.. அவங்க கோடீஸ்வரங்க. பணத்தால எதுவும் பண்ணுவாங்க.''

''சாகறேன். காதலுக்காகச் சாகறேன்.''

''இது பைத்தியக்காரத்தனம். நாங்க சொல்றதைக் கேளுங்க.''

''கேட்க மாட்டேன்'' உறுதிபடச் சொன்னான்.

ஸ்நேகலதாவின் தோழிகள் சோர்ந்து போனார்கள்.

''உங்களைக் கடவுள்தான் காப்பாத்தணும். கடவுளை வேண்டிக்கிறதைத் தவிர எங்களுக்கு வேறு வழி தெரியலை'' என்று கடைசியாகக் கூறிவிட்டு, வாடிய முகங்களோடு நகர்ந்தார்கள்.''

''நாம என்னடி செய்ய முடியும்?''

**கோ**விந்தசாமி மேலும் தீவிரமானான். எல்லோரின் பார்வைக்கும் அவன் பைத்தியக்காரனைப் போன்று காணப்பட்டான். கையில் ஒற்றை ரோஜாப் பூவோடு கல்லூரியின் முன்பு நின்று விட்டான்.

''ஸ்நேகலதா ஐ லவ் யூ...'' என்று கத்தினான். அவனுடைய இந்தச் செயல் கேலிக் கூத்தாய்த் தெரிந்தது.

எல்லா மாணவிகளும் நின்று அவனைப் பார்த்து விட்டுப் போனார்கள்.

ஸ்நேகலதா காரில் வந்து கொண்டிருந்தாள்.

கார் வரும் திசையை நோக்கித் திரும்பினான்.

கோவிந்தசாமியைப் பார்த்த ஸ்நேகலதா அதிர்ந்தாள். கோபத்தில் மூக்கு வியர்த்தது. ''டிரைவர்! அவன் மேல காரை ஏத்திடு'' என்றாள்.

டிரைவர் பயந்து நடுங்கினான்.

கோவிந்தசாமி சாலையின் நடுவே அசையாமல் நின்றான்.

''ஸ்நேகலதா ஐ லவ் யூ...'' என்று அவன் கத்திய கத்தல் பாய்ந்து வந்து அவளின் செவியைத் தாக்கிற்று. மேலும் கோபமடைந்தாள்.

''அவனைக் கொன்னுடு டிரைவர்!'' ஆவேசமாகக் கத்தினாள். ''உனக்கு எத்தனை லட்சம்னாலும் நான் தர்றேன். தைர்யமா ஏத்து.''

கார் அவனை நோக்கிச் சீறிற்று.

கோவிந்தசாமி தன்னை நோக்கி கார் வருவதை அறிந்தும் துளியும் பயம் இல்லாமல் ஒற்றை ரோஜாப் பூவோடு நின்றான்.

மாணவிகள் கூட்டமாய் நின்றார்கள். அதிர்ச்சி கலந்த நெஞ்சோடு என்ன நடக்கப் போகிறது? என்று பார்த்தார்கள்.

பறந்து வந்த கார் கோவிந்தசாமியை நெருங்கி வந்ததும் நின்று விட்டது.

''டிரைவர்!'' கத்தினாள்.

''ஸாரி! என்னால கொலை செய்ய முடியாது'' டிரைவர் தலை கவிழ்ந்தபடி கூறினான்.

கோவிந்தசாமி காரின் முன்பு அசையாமல் நின்று ''ஸ்நேகலதா ஐ லவ்யூ'' என்று மீண்டும் மீண்டும் கத்திக் கொண்டிருந்தான்.

ஸ்நேகலதா செல்லுலாரை எடுத்தாள். போலீஸிற்கு தகவல் அனுப்பினாள். சில நிமிடங்களில் போலீஸ் ஜீப் வந்தது. கோவிந்தசாமியை அள்ளிப் போட்டுக் கொண்டு போனது.

ஸ்நேகலதாவின் அண்ணன் போலீஸ் ஸ்டேஷன் வந்து இன்ஸ்பெக்டரிடம் பேசி, அவரிடம் கொஞ்சம் கரன்ஸி தள்ளினான்.



போலீஸ் அடி அடி என்று அடித்தது. ஒவ்வொரு அடிக்கும் ''ஐ லவ் யூ' ஸ்நேகலதா!'' என்றான்.

கோவிந்தசாமி குண்டர் சட்டத்தில் ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனை பெற்றான்.

## 7

கோவிந்தசாமி இப்படி ஆகும் என்று கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. தன் பக்கம் நியாயம் இருக்கிறது. அதைக் கூறினால் ஏற்றுக் கொள்வார்கள் என்றுதான் நம்பினான்.

''தவறு என்னோடது இல்லை ஸார். முதல்ல என் மனசைக் கலைச்சது ஸ்நேகலதாதான்.'' என்று போலீஸிடம் எவ்வளவோ கெஞ்சினான். போலீஸ் இவனுடைய வார்த்தையைக் கேட்கிற மாதிரி இல்லை. அவன் வாயைத் திறக்கிற போதெல்லாம் முஷ்டியால் குத்து விட்டது.

பணம் பெரிது! உண்மையை விட, சட்டத்தை விட, மனிதத் தன்மையை விடப் பணம் பெரிது.

குண்டர் சட்டத்தில் ஓராண்டு சிறைத் தண்டனை!

நடிகை சுஷ்மா கணவனிடம் கூறினாள். ''இது தப்புங்க. இந்தத் தண்டனை அதிகம். தவறு அந்தப் பையனோடது மட்டும்னா இந்த தண்டனை சரிதான். ஸ்நேகலதா மேலயும் தவறு இருக்கு. வழியில போறவனை அழைச்சி இவளா ஐ லவ் யூ சொன்னது தப்புதானே?''

''தப்புதான்! காலேஜ் ஸ்டுடண்ட்ஸ்னா இது மாதிரி தப்பெல்லாம் நிறையச் செய்யணும். செய்யலேன்னா காலேஜ் போறதுக்கு அர்த்தமே கிடையாது.''

''காலேஜ் போறது படிக்கிறதுக்குப் பட்டம் வாங்கிற துக்கு.''

''இல்லை. லைஃபை என்ஜாய் பண்றதுக்கு... ஏழைங்க, மிடில் கிளாசுங்கதான் காலேஜுக்கு படிக்கப் போவாங்க... ஏன்னா படிச்சாதான் வேலைக்குப் போக முடியும். எங்களை மாதிரி பணக்காரங்க போறது டைம் பாஸுக்கு. எங்க லெதர் கம்பெனில இருநூறு பேர் வேலை செய்றாங்க. பாதிப் பேருக்கு மேல டிகிரி முடிச்சவங்கதான்... அவங்களுக்கு வேலை தர்ற எங்கப்பா எவ்ளோ படிச்சார் தெரியுமா? அந்தக் காலத்துல ஆறாம் வகுப்பு. பிஸினஸ்ல லட்ச லட்சமா சம்பாதிக்கிறார். படிச்சவங்களுக்குச் சம்பளம் எவ்வளவு தெரியுமா? ஆயிரத்திலிருந்து பத்தாயிரத்துக்குள்ள.''

''ஸ்நேகலதா அந்தப் பையன்கிட்ட ஐ லவ் யூ சொல்லி, அவன் மனசைக் கெடுத்தது சரின்னு சொல்றீங்களா?''

''ஆயிரம் ரூபா சம்பளத்துக்குக் கூரியர்ல தபால் டெலிவரி பண்ற ஒரு பையனை அவ லவ் பண்ணியிருந்தாத்தான் பெரிய தப்பு.''

''அவன் மனசைக் கெடுத்திருக்காளே.''

''அது விளையாட்டுடி.''

''நல்ல அண்ணன், நல்ல தங்கச்சி. கடவுள்தான் காப்பாத் தணும்.''

''எங்களையா?''



''உங்க கிட்ட மாட்டிக் கொண்டுத் தவிக்கிறவங்களை...'' சுஷ்மா பேசிப் பலனில்லை என்று அமைதியாகி விட்டாள்.

கோவிந்தசாமியின் அம்மா படுத்த படுக்கையாகி விட்டாள். ஒரே மகன், எவ்வளவோ கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கினாள். எத்தனையோ கனவுகள் கண்டாள். மகன் வேலைக்குப் போவான். நிறைய சம்பாதிப்பான். கலயாணம் செய்து கொண்டு ஊர் மெச்ச வாழ்வான், என்று. அந்தக் கனவுகள் எரிந்து சாம்பலாகி விட்டது.

கூரியரில் வேலை செய்யும் கோவிந்தசாமியின் நண்பர்கள் தாம் அவ்வப்போது வந்து பார்த்து விட்டு ரொட்டி பால் வாங்கித் தந்து விட்டுப் போனார்கள். சாப்பிட முடிந்தால் தானே? மகனைப் பற்றிய வேதனையிலே உடம்பில் வலுவின்றிப் போனது. சாதாரணக் காய்ச்சலாகத் தொடங்கிய நோய் மஞ்சள் காமாலை, பார்வைக் குறைவு, நெடிய இருமல் என்று பல நோய்களைச் சேர்த்துக் கொண்டு மரணப் படுக்கையில் தள்ளிற்று.

நண்பர்கள் டாக்ஸி வைத்து அம்மாவைக் கொண்டு போய் அரசாங்க மருத்துவமனையில் சேர்த்தார்கள்.

ஒரு வக்கீலைப் பார்த்து மனு போட்டு போலீஸ் காவலோடு அம்மாவைப் பார்ப்பதற்காக கோவிந்தசாமியை அழைத்து வந்தார்கள்.

இரண்டு பக்கமும் இரண்டு துப்பாக்கியுடனான போலீஸ்காரர்களைப் பார்த்ததும், கையில் விலங்கோடு, முகத்தில் தாடியோடு மகனைப் பார்த்ததும் அம்மாவால் தாங்கமுடியவில்லை.

இப்படியெல்லாம் மகனைப் பார்க்கவா பெற்றெடுத்தாள்.

அதை விட உயிரை விடலாம் என எண்ணி இறந்தாள்.

''அம்மா!'' கதறி அழுதான். ''உன்னைக் காப்பாத்த வேண்டிய நானே உனக்கு எமனாயிட்டனே...'' கதறினான்.

என்ன பலன்?

நண்பர்களின் உதவியோடு, போலீஸ் காவலோடு அம்மாவின் அடக்கத்தை முடித்துச் சிறைக்குத் திரும்பும் போது, நண்பர்கள் நிறுத்தினார்கள்.

''போதும்டா கோவிந்தா... பட்டதெல்லாம் போதும். இதுக்கு மேலயாவது திருந்திடு.''

''இப்போ நீ அனுபவிக்கிற சிறைத் தண்டனை எதுக்கு தெரியுமா? எந்தத் தவறும் செய்யாம இந்தத் தண்டனைக் கிடைச்சிருக்கு. எதுக்குத் தெரியுமா? அளவுக்கு மீறி ஆசைப் பட்டதுக்கு. காதலுக்கு கண்ணில்லைதான். ஆனால் பொருளாதாரச் சிந்தனை இருக்கு. கோடீஸ்வரன் பொண்ணை ஏழை காதலிக்கிறது சினிமாக் கதைக்கு நல்லா இருக்கும். நிஜத்துல இப்படித்தான் கம்பி எண்ண வைக்கும்.''

கோவிந்தசாமி பதில் பேசாமல் நின்றான்.

''சிறைத் தண்டனையை விடக் கொடுமையானது அம்மா இறந்தது. அம்மாவின் உயிரை விட ஸ்நேகலதாவின் காதல் பெரிசா இருக்கும்னு நினைக்கிறியா?''

''......... ......... .........''

''இறந்தது அம்மா மட்டுமில்லை. உன் மனசுல ஸ்நேகலதா மேல இருந்த ஈர்ப்பும் சாகட்டும்... அதுதான் உன் வருங்காலத்துக்கு நல்லது.''

''...............''

''ஜெயிலுக்குள்ள சும்மா இருக்கும் போது ஸ்நேகலதாவையே நினைச்சிட்டிருக்காதே... நினைக்கிறதுக்கு நிறைய விஷயம் இருக்கு. உன் வருங்காலத்தை நிறைய நினைச்சிட்டிரு. கூரியர் வேலை சம்பாதிக்கிறது மட்டுமில்லாம வேற பிஸினஸும் பண்ணலாம்னு யோசி. நாலு பேர் பார்ட்னரா சேர்ந்து டிராவல் ஏஜென்ஸி வைக்கலாம். அல்லது சர்ப்டித்தூள்னு ஏஜென்ஸி எடுக்கலாம். நிறைய பணம் பண்ணலாம். கோவிந்தராஜ்! ஸ்நேகலதா மாதிரி பணத்திமிர் பிடிச்சதுங்க என்னதான் அழகா இருந்தாலும் குரங்கு மாதிரி தெரியலை? நல்ல குணமா இருக்கிற பெண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணி வைக்கிறோம்.''



''................''

''பொம்பளைன்னா எல்லாம் ஒண்ணுதாண்டா... எலும்பாலயும் சதையாலயும் கிடக்கிற உடம்புதான். ஸ்நேகலதா ஸ்பெஷலா தங்கத்தாலயோ வைரத்தாலயோ இழைச்சவ கிடையாது. தங்கம், வைரம்னா அது குணத்துல இருக்கணும். ஸ்நேகலதா இரும்புடா, துருப்பிடிச்ச இரும்பு. மறந்துடு.''

''................''

''புத்திமதி சொல்லி அறுக்கறதா நினைக்காதே. எங்களால முடிஞ்சது இதுதான். வேறு வழியில் உனக்கு உதவி செய்ய முடியாது. கையாலயோ கொம்பாலயோ அடிச்சா தடுக்கலாம். பணத்தால அடிக்கிறவங்களை எங்களால என்ன செய்ய முடியும்? சட்டமும், காக்கிச் சட்டையுமே வளைஞ்சிடுது. நாங்க ஏழைங்க, ஸ்நேகலதா அண்ணனை எதிர்க்க முடியாது. உனக்குதான் அறிவுரை சொல்ல முடியும். பாயவர்ற மாட்டை எதிர்க்காம ஒதுங்கிடறது நல்லது.''

கோவிந்தசாமி மௌனமாக இருந்தான். நண்பர்கள் மாறி மாறிக் கூறினதைக் காதில் வாங்கிக் கொண்டானா இல்லையா என்று அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

காவலுக்குத் துப்பாக்கியோடு வந்த போலீஸ்காரர்கள் நேரமாகிவிட்டது என்று நச்சரித்தார்கள். எனவே விடை பெற்றார்கள்.

சிறைக்குள் கோவிந்தசாமி மீது பெரிய அனுதாபம் இருந்தது. எல்லாக் கைதிகளும் அவனை வேதனையாய் பார்த்தார்கள்.

பொய்க் கேஸில் உள்ளே கைதிகள் நிறைய இருந்தார்கள். ஆனால் அவர்கள் நிரபராதிகள் கிடையாது. ஏற்கனவே இரண்டு முறை திருடி விட்டு உள்ளே வந்தவர்கள். மூன்றாவதாக திருடாமலேயே போலீஸாரின் ஜோடனை வழக்கால் தண்டனை பெற்றவர்கள். அடுத்த முறையும் திருட்டுத் தொழில் செய்து அனுபவித்த தண்டனையை சரியாக்கிக் கொள்வார்கள். கோவிந்தசாமி அப்படி இல்லையே... 24 காரட் நிரபராதி!

யாரிடமும் பேசாமல் மவுனமாகவே இருந்தான்.

சிறை உணவை ரொம்பக் குறைவாகத்தான் உண்பான். தட்டில் வாங்கி வருவதோடு சரி. செல்லிற்கு வந்ததும் வேறு யாருக்காவது தந்து விடுவான். அதனால் கைதிகளிடம் உயர்ந்தவன் ஆனான்.

அங்கே சோற்றுக்குத்தானே பிரச்சினை. அளவாய்ப் போடப் படுகிற உணவு பலருக்குப் போதாமல் அவதிப்படுவார்கள்.

சிறை நூலகத்தில் வெகு நேரம் இருப்பான். செய்தித் தாள்கள், வார இதழ்கள் ஒன்றுவிடாமல் வாசிப்பான். ஆனால் யாரிடமும் வாய் திறந்துப் பேசமாட்டான்..

அவன் இருந்த செல்லில் மணிகண்டன் என்கிற ஆயுள் தண்டனை சிறைவாசி இருந்தான். இரண்டு கொலைகள் செய்தவன். அவன்தான் அங்கே பாஸ். சும்மா எல்லோரையும் மிரட்டிக் கொண்டிருப்பான்.

கோவிந்தசாமின் மவுனத்தைக் கலைக்க வேண்டுமென்று முடிவு செய்து அவன் அருகே போய் நின்றான் மணிகண்டன்.

"என்னடா மவுன சாமியார் ஆயிட்டியா? இப்படியே இருந்தா மெண்ட்டல் ஆய்டுவே பேசு. எதனா பேசு." என்றான்.

"......................"



"இன்னைக்கு நீ வாயைத் திறக்கிற வரைக்கும் விட மாட்டேன். ஏதாவது பேசு." தொடர்ந்து நிர்பந்தம் செய்தான்.

# 8

ஜெயில் அதிகாரியிடம் மணிகண்டன் முறையிட்டான். "ஸார்! இவன் பைத்தியம்! மெண்ட்டல் கேஸ்! இவனை உள்ளே வைச்சிருக்கிறது தப்பு."

"என்னப்பா என்ன பண்றான்?"

"ஒண்ணும் செய்றதில்லை. யார் கூடவும் பேசறதில்லை. பழகறதில்லை. அவனைப் பேச வையுங்களேன் பார்க்கலாம். என்னைப் பார்த்து அவன் சொல்றான் ஸ்நேகலதா ஐ லவ் யூன்னு..."

"என்னவோ பாவம் விடு. யாருக்கும் தொல்லை தராம இருந்தா போதும். பேசாத பைத்தியக்காரனால ஆபத்து ஏதுமில்லையே..."

"இப்போதைக்கு ஏதும் இல்லை, இப்படியே விட்டா வேற மாதிரி மாறுவதற்கு வாய்ப்பிருக்கே... ஸார்! ஆஸ்பிட்டல் அனுப்பினா நல்லது. தெளிஞ்சுடும். இப்படியே விட்டா முத்திடும். பாவம் ஸார், சின்ன வயசு. காப்பாத்திடுங்க ஸார்."

"ம் சூப்பிரெண்டண்ட் அய்யாகிட்ட சொல்றேன்." ஜெயிலர் போனார்.

சர்க்கஸ் கோமாளியைப் பார்ப்பதைப் போல் கைதிகள் அனைவரும் கோவிந்தசாமியைப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

அன்று மாலை சூப்பிரெண்டண்ட் வந்த போது ஜெயிலர் விஷயத்தை கூறினார். அழைத்து வரச் சொல்லி உடனே கட்டளை இட்டார், அவர். கோவிந்தசாமி சூப்பிரெண்ட்டின் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

சிகரெட் புகைத்தபடி அவர் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவரின் எதிரில் கொண்டு போய் நிறுத்தப்பட்டான்.

''உன் பேர் என்னடா?'' என்று உரக்கக் கேட்டார்.

மௌனமாக நின்று அவரைப் பார்த்தான்.

''சொல்லுடா உன் பேரென்ன?''

பதில் சொல்லவில்லை. அவரையே பார்த்தான்.

அவர் எழுந்து நின்று ''அடி வாங்காதே... உன் பேர் சொல்லு.''

அதட்டினார்.

''ஸார் கேட்கிறார் இல்லையா, சொல்லுடா...'' ஜெயிலர் பக்கத்திலிருந்து கத்தினார்.

கோவிந்தசாமி இருவரையும் மாறி மாறிப் பார்த்தான். பிறகு அழுத்தமான உச்சரிப்பில் ''ஸ்நேகலதா ஐ லவ் யூ'' என்றான்.

சூப்பிரெண்ட்டண்ட் கோபமாகப் பார்த்தார். ''நடிக்கிறியா? உன்னை மாதிரி இங்கே ஆயிரம் பேர் நடிக்கிறவனுங்க இருக்காங்க... ஜெயில்லிருந்து வெளியே போறதுக்கு இப்படியெல்லாம் பிளான் பண்ணா ஆகுமா? நெஞ்சு வலின்னு கத்துவான். ஆஸ்பிட்டல் அனுப்பி வைச்சா அங்கே எஸ்கேப்பாகறதுக்கு ட்ரை பண்ணுவான். அல்லது சும்மாவே பத்து நாள் பெட்ல இருந்து, சொந்த பந்தமெல்லாம் வரவழைச்சி ஆக வேண்டிய காரியத்தையெல்லாம் பார்த்துட்டு வருவானுங்க... அப்படி ஆக்ஷன் பண்றியா? உன்னை நாங்க பைத்தியம்னு



நினைச்சி ஆஸ்பிட்டல் அனுப்பி வைக்கணுமா?'' உரக்கக் கத்தினார்.

அவர் சொல்வது எதையும் புரிந்து கொள்ளாதவனாக, அவருடைய கண்களையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய பார்வை பார்ப்பவரைக் கலங்கடிப்பதாக இருந்தது. அவன் மீது பரிதாபம் எழுப்புவதாக இருந்தது.

''சொல்லுடா நடிக்கிறியா?''

''...................''

''டேய் வாயைத் திறந்து சொல்லு.''

''ஸ்நேகலதா ஐ லவ் யூ!''

சூப்பிரெண்டன்ட் கோபமாய் முறைத்துப் பார்த்து விட்டு, ''ஆஸ்பிட்டல் அனுப்ப வேண்டியதுதான்.'' என்றார். ''எதுக்கும் பாதுகாப்புப் பலமா இருக்கட்டும்.''

கைதிகளை கோர்ட்டிற்கோ, மருத்துவமனைக்கோ அழைத்துப் போவதாக இருந்தால் ஒரு கைதிக்கு இரண்டு போலீஸ்காரர்கள் வீதம் பாதுகாப்பிற்குப் போவார்கள். குற்றவாளியின் தன்மையைப் பொறுத்து எண்ணிக்கை கூடும்.

கோவிந்தசாமி பயப்படும்படியான குற்றவாளி இல்லை என்றாலும் அவனுடைய அமைதியே பயம் ஊட்டின.

கடலோர அலைகளின் ஆர்ப்பரிப்பை விட, கடலுக்குள்ளான அமைதி பயமூட்டுபவை.

ஆழ்கடலின் அமைதியாய் பயமூட்டினான் கோவிந்தசாமி.

மருத்துவமனை செல்ல ஏற்பாடு செய்யப்பட்டன.

மறுநாள் காலை.

ஆளுக்கொரு துப்பாக்கியோடு நான்கு போலீஸ்காரர்கள்.

ஜீப்பில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டார்கள்.

மன நல மருத்துவமனைக்கு.

கல்லூரி வாழ்க்கை ஸ்நேகலதாவிற்கு முடிந்தது.

விடுமுறை! வழக்கமான விடுமுறை அல்ல. கடைசி ஆண்டின் படிப்பு முடிந்ததால் இது நிரந்தர விடுமுறை.

ரிசல்ட் வந்த பிறகுதான் மேற்கொண்டு படிப்பதா இல்லையா என்பதைப் பற்றியும் என்ன படிப்பது என்பதைப் பற்றியும் ஆலோசிக்க முடியும். எந்த ஆலோசனையாக இருந்தாலும் அது மற்ற மாணவிகளுக்குதான். கல்வியைப் பற்றி கொஞ் சமும் ஆர்வம் இல்லாத ஸ்நேகலதாவிற்கு என்ன கவலை? உல்லாசமாய் பொழுதைக் கழிப்பதற்கு கல்லூரி இல்லையே என்பதுதான் பெருங்கவலை.

'ஏப்ரல் மேயிலே பசுமையே இல்லை காய்ஞ்சு போய்ச்சுடி'- என்று வீட்டுக்குள் உட்கார்ந்திருந்தாள்.

தோழிகள் யாரும் கூட வரவில்லை.

அண்ணன் வீட்டிற்குப் போக முடிவு செய்து, வீட்டில் அனுமதி பெற்றுப் புறப்பட்டாள். புறப்படுவதற்கு முன் தொலை பேசியில் வருகையைத் தெரிவித்தாள்.

இன்ட்டர் சிட்டி எக்ஸ்பிரஸில் ரிசர்வ் செய்து பயணப் பட்டாள்.

பயணம் என்பது ஒரு நல்ல அனுபவம். பயணமே வாழ்க்கை யாகக் கொண்டு தினசரி பயணத்தில் ஈடுபடுபவர்களுக்கு அந்த ஏகாந்தமான அனுபவம் கிடைப்பதில்லை. நண்பர் களோடு சேர்ந்து கார்ட்ஸ் விளையாடுவார்கள் அல்லது சந்தனக் கட்டை வீரப்பனைப் பற்றியோ, இந்த முறை தேர்தலில் யார் ஜெயிக்க வேண்டும் என்பதைப் பற்றியோ இந்திய கிரிக்கெட் வீரர்களின் யோக்கியதை பற்றியோ, மனைவி யோடு கார்கில் பற்றியோ பேசிச் சிரித்தபடி பயணிப் பார்கள்.



ஜன்னலோரம் அமர்ந்து பார்வையால் இயற்கையின் வண்ணங்களை ரசித்தபடி, உள்ளுக்குள் பற்பல எண்ணங் களைக் கொஞ்சமாய் அசைபோடுவதுதான் பயண சுகம்.

எழுதிய பரீட்சையில் நிறையத் தாள்கள் மீண்டும் எழுதக் கூடியதாக இருக்கும் என்று நினைக்கும் போது வருத்தம் முதல் முறையாக உருவாயிற்று.

'எப்படியெல்லாம் ஆட்டம் போட்டேன். எத்தனைப் பேரை தவிக்க வைத்தேன். அந்த நேரத்தில் ஒழுங்காகப் படித்திருக் கலாமே.'

அப்படி நினைக்கும் போதே கோவிந்தசாமி நினைவிற்கு வந்தான்.

'பாவம்' என்று உதடுகள் உச்சரித்துக் கொண்டன.

'முட்டாள்! எது நிஜம், எது பொய்யென்று கண்டுபிடிக்க முடியாத கோழை.'

'விளையாட்டுக்கு ஐ லவ் யூ சொன்னதைக் கூட அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.'

'பாவம்' மீண்டும் ஒரு முறை உதடு உச்சரித்துக் கொண்டது.

'இப்போ எப்படி இருக்கானோ? போலீஸ்கிட்ட எவ்வளவு அடி வாங்கினானோ?'

'முட்டாள்! தேவையா உனக்கு?'

பயணம் முழுதும், கோவிந்தசாமியுடன் நிகழ்த்திய நாடகங் களும், கடைசியாய் அவன் அனுபவித்த தண்டனைகளும் ஞாபகத்தில் சுழன்றது.

'அண்ணன் தான் இதில் ரொம்பத் தப்புப் பண்ணிட்டார். போலீஸ்கிட்ட பணம் தந்து ஒரு வருஷம் சிறை தண்டனை வாங்கித் தந்துட்டார்.''

''சும்மா கண்டிச்சதோட விட்டிருக்கலாம்.'

யோசித்துக் கொண்டே வந்ததில் பயணம் செய்ததே தெரியாமல் பயணம் அமைந்து விட்டது.

சென்னை சென்ட்ரல் இரயில்வே ஸ்டேஷனில் இன்ட்டர் ஸிட்டி எக்ஸ்பிரஸ் நின்றது.

அவளை வரவேற்று அழைத்துப் போவதற்கு அண்ணி சுஷ்மா மலர்ந்த முகத்தோடு வந்து நின்றிருந்தாள்.

''ஹாய் அண்ணி!''

''ஹாய் ஸ்நேகா!''

சூட்கேஸை தரையில் வைத்து விட்டு அண்ணியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

யாரோ இரண்டு பெண்கள் அருகே வந்து ''மேடம்! நீங்க நடிகை சுஷ்மாதானே?'' என்றார்கள்.

''ஸாரி! நான் சுஷ்மா இல்லை. பிரேமா.''

''நீங்க அப்படியே சுஷ்மா மாதிரியே இருக்கீங்க அழகா!''

''தாங்க்ஸ்! நிறைய பேர் அப்படிதான் சொல்றாங்க. கண்ணாடில என் முகத்தைப் பார்க்கும் போது அப்படித் தெரியலை.'' அவர்களிடம் புன்னகைத்தாள்.

பெரிதாய் ஏமாந்தவர்கள் போல் கிளம்பினார்கள்.

அவர்கள் போனதும் ஸ்நேகலதா கேட்டாள். ''எதுக்கு அண்ணி அவங்ககிட்டப் பொய் சொன்னீங்க?'' என்று.

''நான்தான் சுஷ்மான்னு அவங்ககிட்ட சொல்லியிருந்தா இங்கேயே பேச நின்னுடுவாங்க.. நான் நடிச்ச படங்கள் சிலதைச் சொல்லி அதுல உங்க நடிப்பு இப்படி இருந்தது அப்படி இருந்ததுன்னு புகழ்ந்து தள்ளுவாங்க.''

''புகழட்டுமே...''

''அதெல்லாம் நிஜம் கிடையாது ஸ்நேகா. பொய். என்னை மட்டும் கிடையாது. எந்த நடிகையைப் பார்த்தாலும் புகழ்வாங்க.''



சிவப்பு சட்டை அணிந்த சுமை தூக்கும் தொழிலாளி ஓடி வந்தான். அவனிடம் பெட்டியைக் கொடுத்தாள் ஸ்நேகலதா.

''எண்பத்தைஞ்சி இருபத்தியேழு கார்கிட்டப் போங்க.'' என்றாள் சுஷ்மா. இருவரும் நடக்கத் தொடங்கினார்கள்.

போர்ட்டர் பெட்டியை எடுத்துக் கொண்டு வேகமாய் நடந்தான்.

''அண்ணி. புகழ்றவங்க உங்களை மட்டும்தான் புகழணும் மத்தவங்களைப் புகழவே கூடாதுன்னு சொல்றீங்களா?''

''ஸாரி! நான் அப்படிச் சொல்லலை. இவங்க சினிமாக் காரங்களை பார்த்தாதான் புகழ்வாங்க. சினிமா நடிப்பு எனக்குப் பெரிய விஷயமாப் படலை. இங்கே திறமைசாலிகளுக்கு நடிக்கிற வாய்ப்புக் கிடைக்கிறதில்லை. வாய்ப்பு கிடைச்சவங்க நடிக்கிறாங்க. அவ்வளவுதான். ஒரு சிறந்த நடிகைக்குப் பின்னாடி கதை, காமிரா, இணை டைரக்ஷன், மேக்கப்னு பல விஷயம் இருக்கு. இதுல ஏதாவது ஒண்ணு ஒத்துப் போகலைன்னாலும் நடிகையோ, அவளோட நடிப்போ அவ்ளோதான். நடிகர், நடிகைகளுக்கு மட்டும் நிறைய ரசிகர்கள் இருப்பது இந்த நூற்றாண்டின் பெரிய மோசடின்னு நினைக்கிறேன். மாறிட்டு வருது ஸ்நேகா, டைரக்டருக்கு தனியா, காமிராமேனுக்கு தனியா இசையமைப்பாளருக்கு தனியா இப்போ ரசிகர்கள் இருக்காங்க... நான் ஒண்ணு சொல்லட்டுமா ஸ்நேகா? என்னை விட நீ ரொம்ப அழகா இருக்கே. உன்னை ஏன் அவங்க பாராட்டிட்டுப் போகக் கூடாது. சினிமால நடிக்கற ஒரே காரணத்துக்காக நான் அவர்களுக்குப் பெரிசாத் தெரியறேன்.''

வெளியே காருக்கு அருகே போர்ட்டர் பெட்டியோடு நின்றிருந்தான்.

''டிக்கில வைக்கணுமா மேடம்?''

''வேண்டாம். பின் ஸீட்ல வைச்சிடுங்க.''

காரின் பின் கதவைத் திறந்து விட்டாள். போர்ட்டர் பெட்டியை வைத்து விட்டுக் கைகளைக் கட்டிக் கொண்டு நின்றான்.

''எவ்ளோ?'' என்றாள்.

''நீங்களே தாங்க மேடம்.'' இப்போது அவன் தலையைக் கோதினான்.

''ஏன் பிக்ஸ்டா ஒரு ரேட் வைக்க மாட்டீங்களா? பஸ் டிக்கெட் இரயில் டிக்கெட் மாதிரி?''

''எப்படி மேடம் முடியும்? எக்ஸ்பிரஸ் ட்ரெயினுக்கு ஒரு டிக்கெட், பாசஞ்சர் ட்ரெயினுக்கு ஒரு டிக்கெட், எக்ஸ்பிரஸ்ஸிலேயே நாலு ரகமா, இருக்கு. ஏ.சி.க்கு ஒரு டிக்கெட், ஃபர்ஸ்ட் கிளாசுக்கு ஒரு டிக்கெட், செகண்ட் கிளாசுக்கு ஒரு டிக்கெட், ரிஸர்வேசனுக்கு ஒரு டிக்கெட்.''

''நல்லாப் பேசறீங்க...'' ஐம்பது ரூபாய்த் தாளை எடுத்து நீட்டினாள்.

ஐம்பது ரூபாய் வாங்கிக் கொண்ட போர்ட்டர். ''உங்களோட ஒரு படத்துல நடிச்சிருக்கேன் மேடம். ஸ்டண்ட் ஸீன்ல...''

''என்னது?''

''நிஜமாத்தான் மேடம். இப்பவும் சினிமா ஆசைதான். சான்ஸ் கிடைக்கிறதில்லை. எப்பவோ ஒரு முறை சான்ஸ் கிடைக்கும். அதுக்காகப் பட்டினியும் பசியுமா அலையணும். வெறுத்துப் போய் இப்படி வந்துட்டேன். ஸாரி மேடம். உங்க டைமை வேஸ்ட் பண்றேன்.'' காரின் முன் கதவைத் திறந்து விட்டான்.

''தாங்க்ஸ்.'' என்று கூறின சுஷ்மாவுக்கு மனம் தவித்தது. என்ன செய்ய முடியும்? ஸ்நேகலதாவை உட்கார வைத்து விட்டு சுற்றிக் கொண்டு வந்து ட்ரைவர் ஸீட்டில் அமர்ந்தாள்.



''டிரைவர் வரலையா அண்ணி?''

''நான்தான் வேணாம்னு சொல்லிட்டேன். மூணாவது மனுஷன் இடையே இருந்தா நாம ஃப்ரீயாப் பேசிக்க முடியாது.'' கார் மெல்ல நகர்ந்தது.

''அண்ணன் இல்லையா?''

''புதுசா ஒரு படம் விலைக்கு வருது. ப்ரிவியூ பார்க்கப் போயிருக்கார்.''

''ஏன் அண்ணி ஒரு மாதிரியா இருக்கீங்க...?''

''ஒண்ணுமில்லை அந்தப் போர்ட்டரை நினைச்சேன். இது போல அடிக்கடி மூட் அவுட் ஆகறதுதான். கொஞ்ச நேரத்துல சரியாயிடும். இதாவது பரவால்லை. பெரிய பெரிய அறிவாளிங்க டைரக்டராகற வாய்ப்பு இல்லாம ஓட்டல்ல பெஞ்ச் துடைக்கிறாங்க தெரியுமா? எல்லாத்துக்கும் அதிர்ஷ்டம் வேணும் ஸ்நேகா. நீ பணக்கார வீட்ல பொறந்தது பெரிய அதிர்ஷ்டம்.''

''நான் டிரைவ் பண்ணட்டுமா?''

''வேணாம். அடுத்தடுத்து நிறைய சிக்னல் வரும். பழக்கமானவங்களுக்குதான் ஈஸி.''

சுஷ்மா சொன்னது போலே ஸ்டேஷனுக்குள்ளிருந்து வெளியே வந்ததுமே சிக்னல்.

''சிவப்பு கலரு ஜிங்குச்சா...'' என்றாள் ஸ்நேகலதா.

அவர்களின் காருக்கு முன்னே அந்தப் போலீஸ் வேன் நின்றிருந்தது. அதைப் பெரிதாய் இருவரும் நினைக்கவில்லை.

ஆனால் போலீஸ் வேனிலிருந்த கோவிந்தசாமி ஸ்நேகலதாவைப் பார்த்து விட்டான்.

''ஸ்நேகலதா ஐ லவ் யூ... ஸ்நேகலதா ஐ லவ் யூ...'' கத்தினான். வேனின் இரும்புக் கதவைத் திறந்து குதிப்பதற்கு

முயற்சி செய்தான். போலீஸ்காரர்கள் அவனை இழுத்துப் பிடித்து பலமாக அடித்தார்கள்.

ட்ராபிக் போலீஸ் அருகே ஓடி வந்து ''என்னப்பா மேட்டர்?'' என்றான்.

''சேது படம் பார்த்தீங்களா ஸார்? இது அந்த மாதிரி பிரச்சினை. லவ் பெய்லியர்! மென்ட்டல் ஆயிட்டான். இப்ப தான் ஆஸ்பிட்டல் போய் வர்றோம். டாக்டர், இவன் மென்ட்டல் இல்லை. நார்மல்தான்னு சொல்லித் திருப்பி அனுப்பிட்டார். இப்போ தொல்லை பண்றான்.''

கோவிந்தசாமி போலீஸ்காரர்களைப் பார்த்தான். ''நிஜமாத் தான் நான் மென்ட்டல் இல்லை. நான் நல்லா இருக்கேன். கார்ல உட்கார்ந்து இருக்கிறதுதான் ஸ்நேகலதா. ப்ளீஸ் என்னை அடிக்காதீங்க... ஸ்நேகலதா ஐ லவ் யூ...'' கத்தினான்.

போலீஸ்காரர்கள் காரைப் பார்த்தார்கள்.

''அது... அது நடிகை சுஷ்மாதானே...?''

''ஆமா.''

''பக்கத்துல இருக்கிறது அவங்க தங்கையா இருக்கணும். இந்தப் பரதேசிக்கு அவங்க லவ்வரா?'' கோவிந்தசாமியை கோபமாய் பார்த்தான் போலீஸ்.

''டேய் வாயை மூடிட்டு அமைதியா வா! இல்லை. வாயை உடைச்சிடுவேன்.''

கோவிந்தசாமி வாயை மூடுவதாக இல்லை. மீண்டும் கத்தினான்.

இரண்டு போலீஸ்காரர்கள் சேர்ந்து அடித்தார்கள்.

ஸ்நேகலதா முகம் வாடிற்று. போலீஸ் வேனில் அவன் தான் என்பது புரிந்தது.

சுஷ்மா நெருப்பில் விழுந்த மாதிரி துடித்தாள்.



தலையை வெளியே நீட்டி எட்டிப் பார்த்தாள்.

''குட்மார்னிங் மேடம். மறுபடியும் சினிமால நடிக்க மாட்டீங்களா?''

ஒரு போலீஸ்காரன் கேட்டான்.

''ஸ்நேகலதா ஐ லவ் யூ!'' கோவிந்தசாமி கத்த மீண்டும் அடி விழுந்தது.

''ப்ளீஸ் அடிக்காதீங்க..'' என்றாள் சுஷ்மா.

''என்ன பண்றது மேடம்... நாங்களும் இவ்ளோ நேரம் அடிக்காம பொறுமையாத்தான் இருந்தோம். பைத்தியம் ரொம்ப ஓவராயிடுச்சு.''

''மேடம் நான் பைத்தியமில்லை. உங்களுக்குத் தெரியாதா?

''நான் பைத்தியமா இருக்கிறது ஸ்நேகலதா மேல. ஸ்நேகலதா ஐ லவ் யூ?'' கோவிந்தசாமி கத்தினான்.

சிக்னல் மாறிற்று.

போலீஸ் வேன் வேகமாய் நகர்ந்தது.

சுஷ்மா கண்ணீர் வடிய ஸ்நேகலதாவைப் பார்த்தாள். ஸ்நேகலதா கல்லைப் போல் உட்கார்ந்திருந்தாள்.

## 9

**போ**லீஸ் வேன் வளைந்து பாலத்தில் ஏறி சிறைச்சாலை நோக்கி போயிற்று.

கார் மெதுவே நேராய் நகர்ந்தது.

கோவிந்தசாமிக்கு அழுகை பீறிட்டு வந்தது.

வேனின் கம்பிகள் கோர்த்த சுவற்றில் தலையை இடித்துக் கொண்டு அழுதான்.

போலீஸ்காரர்கள் அவனை இழுத்துப் பிடித்தார்கள்.

''ப்ளிஸ், நான் அழறதுக்காகவாவது சுதந்திரம் தாங்க... சத்தியமா நான் பைத்தியம் கிடையாது. தெளிவா இருக்கேன். கார்ல நடிகை சுஷ்மா பக்கத்துல உட்கார்ந்திருந்தது ஸ்நேகலதா!... என்னோட ஸ்நேகலதா!''

''என்னடா சொல்றே?''

''நம்புங்க ப்ளீஸ்.''

வேன் சிறைச்சாலைக்குள் நுழைந்தது.

''எங்க ட்யூட்டி முடிஞ்சது. இதுக்கு மேல நாங்க நம்பி னாலும் உனக்கு ஏதும் பலனில்லை. நம்பலைன்னாலும் பல னில்லை.''

வேன் நின்றது.

கோவிந்தசாமியை இறக்கி, அழைத்துப் போய் சிறைக் காவலர்களிடம் ஒப்படைத்து, டாக்டர் தந்த மெடிக்கல் ரிப் போர்ட்டை தந்தார்கள்.

சுஷ்மாவினால் காரை ஒரே சிந்தனையோடு ஓட்ட முடிய வில்லை. இதயம் கனத்தது.

''ஸ்நேகா நீ டிரைவ் பண்றியா?''

''ஸாரி அண்ணி!'' ஸ்நேகலதாவும் சோகமாய் இருந்தாள்.

காரை மெதுவாக ஓட்டினாள். இருவரும் அதன்பின் எதை யும் பேசிக் கொள்ளவில்லை.

பங்களாவிற்கு வந்து சேர்ந்தார்கள்.



காரிலிருந்து இறங்கி இருவரும் பங்களாவிற்குள் நுழையும் வரை கூட நடக்க முடியாத வண்ணம் இதயம் சிதைந்து இருந்தது. உடம்பிலிருந்து ஒவ்வொரு பாகமும் தனித்தனியாக விலகி விட்டதைப் போன்று தவிப்பு உண்டாயிற்று.

ஹாலில் சோபாவில் சரிந்து விட்டார்கள்.

''பார்த்தியா ஸ்நேகா, ஒரு பையனோட வாழ்க்கை சிதைஞ்சு போச்சு.''

''அவன் முட்டாள் அண்ணி. இந்த உலகம் தெரியாதவன்.'' எங்கேயோ பார்த்துக் கொண்டு சொன்னாள்.

''அவன் இப்படி ஆனதுக்கு யார் காரணம்?''

''நான்தான்.''

''பாவம் இல்லையா?''

''பாவம்தான். ஆனால்.''

''ஆனால்?''

''நான் வேற மாதிரி திங்க் பண்றேன் அண்ணி.''

'' என்ன மாதிரி?''

''அவன் அறிவாளி கிடையாது. என் விசயத்துக்காக பைத் தியம் ஆயிட்டான்னு சொல்றது கரெக்ட் இல்லை. எந்த விசயத்துக்கும் பைத்தியமாயிடக் கூடியவன் அவன்.''

''அப்படிச் சொல்ல முடியாது ஸ்நேகா. காதல் கொடுமை யானது. அது எப்பேர்ப்பட்டவனையும் பைத்தியமாக்கிடும்.''

''அவனை நான் காதலிக்கலையே...''

''உன்னை அவன் காதலிச்சிருக்கானே...''

''நானென்ன செய்ய முடியும்?''

''காரணம் நீ தானே ஸ்நேகா. அது உன்னைக் கொல்லுமே.''

''இல்லை; நான் காரணம் இல்லை.'' திடீரென ஆவேச மடைந்து கத்தினாள்.

''கூல் டவுன் ப்ளீஸ். நான் உன்னை குற்றவாளிக் கூண்டுல நிற்க வைச்சிடலை. சைலன்ட்டா போயிட்டிருந்தவன் மனசுல சஞ்சலம் உண்டு பண்ணது நீதான்னு சொல்ல வந்தேன்.''

''நானில்லை.'' மீண்டும் கத்தினாள்.

''ப்ளீஸ்.'' எழுந்து ஸ்நேகலதாவின் தலையைக் கோதினாள். ''மனசை அமைதியாய் இருக்க விடு.''

''என் மனசு அமைதியாத்தான் இருக்கு.''

''மனசு அமைதியா இருந்தா குரல் பெரிசா வராது.''

''என்னோட குரல் எப்பவும் பெரிசுதான்.''

''ஹார்லிக்ஸ்?''

''வேண்டாம்.''

''கூல்ட்ரிங்ஸ்.''

''எதுவும் வேணாம். இப்போ இருக்கிற மன நிலைக்கு விஷம் இருந்தா சாப்பிடுவேன்.''

''அய்யோ ஸ்நேகா. அப்படிப் பேசாத. அப்படி நினைக் கவும் நினைக்காதே.''

''வேறென்ன செய்றது அண்ணி; என்னை நீங்க குற்ற வாளியா நினைக்கிறீங்க...? நான் ஆயிரம் பேர்கிட்ட விளை யாட்டா ஐ லவ் யூ சொல்லி இருக்கேன். அத்தனை பேருமா பைத்தியமாயிட்டாங்க. அத்தனை பேருமா என் பின்னாடி அலையறாங்க...? சொல்லுங்க... இவனுக்கு அறிவு இல்லை. முட்டாள். பைத்தியமாயிட்டான். நான் என்ன செய்ய முடியும்.''

ஸ்நேகலதாவின் மனம் நொந்து போயிருப்பதைப் புரிந்து கொண்டாள் சுஷ்மா. மேலும் அவளைக் கிளறினால் தாங்க



மாட்டாள் என்பது புரிந்தது. அதோடு அந்த விஷயத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று முடிவெடுத்தாள்.

''நீ சொல்றது ரொம்ப சரி ஸ்நேகா. இப்பதான் நான் அதை திங்க் பண்றேன். ரெண்டு பேரும் தனியா சந்திச்சு ஒரு வார்த்தை பேசக் கிடையாது. கடிதங்கள் பரிமாறிக்கலை. அப்படி இருக்கும் போது அவன் இது போல ஆயிட்டது முட்டாள் தனம்தான். அவன் ஏற்கனவே பைத்தியக்காரன்தான். இப்ப தான் அதை யோசிச்சுப் பார்க்கிறேன். சனியன் தொலை யட்டும் விடு.'' என்று ஸ்நேகலதா சமாதானமடைவதற்காக கூறினாள்.

ஸ்நேகலதா சோபாவிலேயே சுருண்டு படுத்தாள். குருவி போல் அவள் ஒடுங்கினதைப் பார்க்கும் போதே அவளின் மனம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்பது புரிந்தது.

சுஷ்மா அவளின் தலையைக் கோதி விட்டாள் ''நீ எதும் வருத்தப்படாதே ஸ்நேகா.''

''வருத்தமில்லை அண்ணி. அநியாயமா அவன் போலீஸ் காரங்க கிட்ட அடி வாங்கறானேன்னுதான் ஃபீலிங்.''

''அவன் நடத்தை அப்படி. போலீஸ்காரங்க அவங்க ட்யூட் டியைப் பார்க்கணும் இல்லையா? தப்பிச்சுப் போயிடுவான்னு பயம். அவன் தப்பிச்சுப் போயிட்டா போலீஸ்காரங்களுக்கு வேலை போயிடும்.''

''இந்தக் கூத்தெல்லாம் நம்ம முன்னாடியா நடக்கணும்?''

''என்ன செய்றது, இன்னைக்கு இப்படி நடக்கணும்னு விதி.''

''லீவாச்சே ரிலாக்ஸா இருக்கணும்னு வந்தேன்.''

''மற, மறந்திடு. ரிலாக்ஸா இருக்கலாம். காபி சாப்பிடேன்.''

''வேணாம்.''

''இல்லை. காபி சாப்பிடு. நான் கொண்டு வர்றேன்.'' சுஷ்மா எழுந்து காபி கொண்டு வர உள்ளே போனாள்.

சிறை வாழ்க்கை என்பதே பெரிய தண்டனை. அதோடு கைதி அடி வாங்குவதென்றால்... சிறைக்குள் சின்னஞ்சிறு தவறுக்கெல்லாம் கூட பெரிய தண்டனைதான். தர்ம அடி! அதர்ம அடிக்கெல்லாம் ஏன் தர்ம அடி என்று பெயர் வைத்தார்களோ...!

மருத்துவமனைக்கு அழைத்துப் போன போலீஸ்காரர்கள் கோவிந்தசாமியை திரும்பவும் அழைத்து வந்து ஜெயிலுக்குள் விடும் போது அதிகாரியிடம் புகார் செய்தார்கள். ''ஸார்! இவனுக்குப் பைத்தியம் கிடையாது. ரொம்ப நல்லா இருக்கான். டாக்டரும் நார்மல்னு சொல்லிட்டார். ஆனா ரொம்ப கலாட்டா பண்றான் ஸார்! சென்ட்ரல் இரயில்வே ஸ்டேஷன் முன்னாடி சிக்னலுக்கு நின்னப்போ ரொம்ப அடம் பண்ண ஆரம்பிச்சிட்டான். வேன் கதவை உடைச்சி ஜம்ப்பாகப் பார்க்கறான்.''

அதிகாரி எப்பவும் உச்சமான கோபத்தில் நிலைப்பவர், குற்றவாளிகளை மேய்த்து மேய்த்து கடுமையான முகத்துக்காரராய் தெரிபவர். அவருடைய பார்வை ஒன்று போதும்; உடம்பு அனலாகி விடும். அடிப்பதற்கு ஆரம்பித்தாரென்றால் அவ்வளவுதான், துணி துவைக்கிற மாதிரிதான் அங்கங்கே தோல் கிழிந்து விடும்.

அப்படிதான் அடித்து துவைத்து கிழித்தெடுத்தார்.

கோவிந்தசாமி அதற்கெல்லாம் அஞ்சாதவனாகவே இருந்தான். சினிமா ஹீரோ மாதிரி அடி வாங்கிக் கொண்டே, விடாமல் ஸ்நேகலதாவிற்கு காதல் சொல்லிக் கொண்டிருந்தான்.

பாதி பிணமாக்கி செல்லில் கொண்டு வந்து போட்டார்கள்.

ஆயுள் கைதி மணிகண்டன் கேட்டான். ''ஏன், ஏன் ஏண்டா இப்படி அடி வாங்கி சாகற? ஏன் பைத்தியம் மாதிரி நடந்துக்கற...?''



''அதுல ஒரு சுகம்! எங்கேயும், எப்போதும், யார் கிட்டேயும் ஸ்நேகலதா லவ் யூன்னு சொல்றது சுகம். என் உயிர் போற வரைக்கும் அப்படித்தான் சொல்லிட்டிருப்பேன். எத்தனை பேர் அடிச்சாலும் சரி. வெட்டிப் போட்டாலும் சரி. நான் மாற மாட்டேன். மனிதர்கள் கிட்ட மட்டுமில்லை. மண், மலை, ஆறு, குளம் எல்லாத்துக்கிட்டேயும் அதைத்தான் சொல்வேன்.'' கண்களை உருட்டிக் காட்டி கூறினான்.

ஸ்நேகலதாவின் அண்ணன் சாய்குமார் அன்று இரவு வெகு நேரம் கழித்து வீட்டிற்கு வந்தான்.

சுஷ்மாவும், ஸ்நேகலதாவும் தூங்காமல் விழித்திருந்தார்கள். தூக்கம் வந்தால்தானே...

சாய்குமார் தினமும் தாமதமாக வருபவன்தான். தங்கை வந்திருக்கும் விஷயத்தை 'செல்' மூலம் சொல்ல வைத்தாள்! ஆனாலும் அதே நேரம் கழித்துதான் வந்தான்.

தினம், தினம் விருந்து, உற்சாகபானம்! ''இப்படி உடம்பை கெடுத்துக்கலாமா!'' என்று சுஷ்மா கேட்டாள்.

''பிஸினஸ் அப்படிப்பட்டது. நான் என்ன செய்யட்டும்...? தண்ணில இருந்தாத்தான் பிஸினஸ் ஒத்து வருது. தள்ளாடும் போது தான் ஸ்டெடியா முடிவு பண்றான். புரொடியூஸர்.'' என்றான்.

''மத்தவங்களுக்கு ஊத்தி விடுங்க. நீங்க ஏன்?''

''மனுஷனுக்கு மந்தையாட்டோட புத்திடி.... ஏதாவது ஒரு ஆடு முன்னே போகணும். அதைத் தொடர்ந்துதான் பின்னாடி போகும் மத்த ஆடுங்க. அப்படித்தான், நான் கொஞ்சம் தெளிச்சுகிட்டாதான் அவன் முழுசா நனையறான்.''

''எல்லாத்துக்கும் தயாரா பதில் வைச்சிருப்பீங்க. அதுக்காகத்தான் உங்ககிட்ட எந்தக் கேள்வியும் கேட்கறதில்லை. ஸ்நேகா வந்திருக்கும் போதாவது சீக்கிரம் வரலாமேன்னுதான்...''

''நான் லேட்டா வந்ததுக்கு ஸ்நேகாவும்தான் ஒரு காரணம். அவளுக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்துட்டேன். அவனும் புரொட் யூசர்தான். நாலு படம் எடுத்திருக்கான். நாலும் சில்வர் ஜூப்ளி! அவனுக்கு நான்தான் ஃபைனான்ஸ் பண்ணேன். இப்போ அவன் பத்து பேருக்கு ஃபைனான்ஸ் பண்ணுறான். கூடவே ரியல் எஸ்டேட்டும் நடத்தறான். பொண்ணு பார்க்க ரெண்டு நாள்ல வருவாங்க... நைன்ட்டி நைன் பர்சன்ட் முடிஞ் சிடும்.''

''எனக்கு அலையன்ஸா, இப்போ என்ன அவசரம்?'' அவசரமாகக் குரல் கொடுத்தாள் ஸ்நேகலதா.

''போதும் ஜாலியா லைஃப்பை என்ஜாய் பண்ணு. பொம் பளைக்கு காலா காலத்துல கல்யாணம் நடந்துடணும்.'' என் றான்.

''வேணாம்ண்ணா.''

''ஏன்... நிறைய பேரை ஜெயிலுக்கு அனுப்ப வேண்டி இருக்கா?'' சிரித்துக் கொண்டே கேட்டான்.

ஸ்நேகலதாவிற்கு முகம் வாடிற்று.

## 10

மறுநாள்.

ஆயுள் கைதி மணிகண்டன் கோவிந்தசாமியிடம் சொன்னான்.

''எப்பவும் அறிவாளியா இருக்கனும். அதுதான் முக் கியம். பைத்தியக்காரன் மாதிரி 'ஸ்நேகலதா ஐ லவ் யூ', ஸ்நேகலதா ஐ லவ் யூ'ன்னு கத்தறதில் அர்த்தம் கிடையாது. நீ



கூச்சல் போட்டா அவ லவ் பண்ணிடுவாளா? கண்ட இடத்தி லெல்லாம் கத்தினா அவளுக்குத் தெரியுமா? கிடைக்கலையா மறந்துடணும். மறக்க முடியலையா அடையறதுக்கு என்ன வழியோ அதைச் செய்யணும். அடைய முடியலையா மற்ற யாரும் அடைய முடியாத படிக்கு பண்ணிடனும். அப்படிச் செய்றதை விட்டுட்டு பைத்தியம் மாதிரி கத்திட்டிருந்தா அடி வாங்கியே சாக வேண்டியதுதான்.''

போலீஸ்காரர்களிடமும் ஜெயில் அதிகாரிகளிடமும் அடி வாங்கி அங்கங்கே கிழிந்த உடம்போடு படுத்துக் கொண் டிருந்தான் கோவிந்தசாமி. பரிதாபமாகக் காணப்பட்டான்.

''நீ கவலைப்படாத. எவ்ளோ பெரிய பணக்காரியா இருந் தாலும் அவளை உன்னோடு சேர்த்து வைக்க வேண்டிய பொறுப்பு என்னோடது. என் தண்டனை காலமும் முடிஞ்சி வந்திட்டிருக்கு. வெளியே வந்து உனக்கு ஹெல்ப் பண்றேன். மறுபடியும் கொலை செய்ற சூழ்நிலை வந்தாலும் நான் வருத்தப்படப் போறதில்லை. ஜெயில் வாழ்க்கை எனக்குப் பழக்க மாயிருச்சு. நாற்பத்தைஞ்சு வயசுக்கு மேல வெளியே போய் நான் என்ன சாதிக்க முடியும்? சொந்தம் பந்தம்னு எனக்காக யாருமே கிடையாது. இதுக்கு மேல் கல்யாணம் பண்ணி குடும் பம் நடத்த முடியும்னும் தோணலை. அப்படி ஒரு கெட்ட கனவு எனக்கு கிடையாது. எனக்காக நான் வாழ ஒன்றுமில்லை. உனக்காக ஏதாவது செய்றேன். தைரியமா இரு. பைத்தியம் பிடிச்சவனா உளர்றதை நிறுத்து. என்ன செய்யலாம் எப்படி ஜெயிக்கலாம்னு யோசி.''

தரையில் மௌனமாக முடங்கிக் கொண்டிருந்தான் கோவிந்த சாமி.

அப்போது ஜெயில் வார்டன் வந்தார். ''டேய் மென்ட்டல், உன்னைப் பார்க்க யாரோ வந்திருக்காங்க.''

அவன் பேசாமல் முடங்கிக் கொண்டிருந்தான். ''டேய் உன்னைத்தான்...'' கையில் வைத்திருந்த லாட்டியை இரும்புக் கேட்டில் தட்டினார்.

மணிகண்டன் கோவிந்தசாமியை உலுக்கினான். ''எழுந்திரு கோவிந்தசாமி யாரோ வந்திருக்காங்களாம். போய்ப் பாரு.''

அடி வாங்கின உடம்பு எழ முடியாமல் தவித்தது. கண்களை உருட்டிப் பார்த்தான்.

மணிகண்டன் அவனைக் கைத்தாங்கலாகப் பிடித்துத் தூக்கி நிறுத்தினான். நிற்க முடியாமல் கீழே விழுந்து விடுவான் போலிருந்தது. நடப்பதற்கு முடியாமல் சிரமப்பட்டான்.

''ஸார்! இன்னொரு நாளைக்கு வந்து பார்க்கச் சொல்லுங்களேன், இவன் தான் முடியாம இருக்கானே...''

''வந்திருக்கிறவங்க வி.ஐ.பி! மினிஸ்டர் சிபாரிசில் வந்திருக்காங்க...''

மணிகண்டன், கோவிந்தசாமியை உலுக்கினான். ''கோவிந்தா! கொஞ்சம் தம் கட்டு. உன்னைப் பார்க்க யாரோ வி.ஐ.பி. வந்திருக்காங்களாம். உனக்கு ஏதோ நல்லது நடக்கும்னு என் மனசுக்குத் தோணுது.''

உடம்பில் வலு கூட்டி, கண்களை அகல விரித்துப் பார்த்தவனை மணிகண்டன் தூக்கி நிறுத்தினான். ''போய் வா!'' என்றான்.

மெல்ல மெல்ல விந்தி விந்தி நடந்து வந்தான்.

ஜெயில் அதிகாரியோடு பேசியபடி உட்கார்ந்திருந்த வி.ஐ.பி. சுஷ்மா!

அவனைப் பார்த்ததும் எழுந்து நின்றாள்.

சுஷ்மாவின் கண்களில் கண்ணீர் திரண்டது. தவறேதும் செய்யாமல் அடி வாங்கி இருக்கிறான் என்கிற வருத்தம் நிலைகுலைய வைத்தது.

''இப்படியா அடிக்கிறது?'' அதிகாரியைப் பார்த்து சுஷ்மா கேட்டாள்.



''நாங்க வேணும்னே யாரையும் அடிக்கிறதில்லை மேடம். மொத்தப் பேரும் கைதிகள்தான். கைதிகள்ல யார் நல்லவங்க, யார் கெட்டவங்கன்னு பிரிச்சுப் பார்க்க முடியாது. அவங்க அமைதியா இருந்தா நாங்களும் அமைதியா இருப்போம். ஃபிரண்டா பழகுவோம். அவங்க அத்து மீறினா நாங்களும் அத்து மீறினாத்தான் முடியும். இவன் எங்களை ரொம்ப குழப்பிட்டான். பைத்தியம் மாதிரி சேட்டை பண்ணான். டாக்டர் கிட்ட போனா பைத்தியம் கிடையாதுன்னு சொல்லிட்டாராம். இப்படி ஒரு நிலைல நாங்க என்ன நினைப்போம். இவன் தப்பிக்கணும்னே இப்படியெல்லாம் நாடகம் போடறான்னுதான் நினைச்சாகணும். அப்படி நினைக்கிறதுக்கு காரணமா எங்களுக்கு பல முன் அனுபவங்கள் இருக்கு, பல கைதிகள் தப்பிச்சிப் போயிருக்காங்க, போக ட்ரை பண்ணி இருக்காங்க...'' அடித்தது சரிதான் என்பதை நிலை நிறுத்த விளக்கத்தை விரிவாக வழங்கினார்.

காற்று கடற்கரையில் வீசுகின்ற மாதிரி வீசிற்று.

வெளியே எந்தக் காற்று வீசிக் கொண்டிருக்கிறதோ, அதே காற்றுதான் சிறைக்குள்ளும் வீசிக் கொண்டிருக்கிறது. ஆனால் சுவாசம் செய்கிறவனிடம்தான் மாற்றங்கள் இருக்கின்றது. உள்ளே கைதி சுவாசிக்கிறான். வெளியே கைதாகாதவர்கள் சுவாசிக்கிறார்கள்.

சுஷ்மா பெரிதாக மூச்சை இழுத்து விட்டு விட்டு கோவிந்தசாமியைப் பார்த்தாள்.

அவன் தலை கவிழ்ந்து நின்றிருந்தான்.

''தம்பி! எதுக்காக இப்படி அடி வாங்கி சாகணும், உலகத்தில் வேறு பெண்ணே கிடையாதா? கிட்டாத பொருளுக்கு ஏன் வெறித்தனமா அலையற?'' மென்மையான, வசீகரமான குரலால் சொன்னாள்.

அவனால் வாயைத் திறந்து பேச முடியவில்லை. அப்படி இருந்தும் சிரமப்பட்டுக் கூறினான் ''ஸ்நேகலதா ஐ லவ் யூ!''

''பாருங்க மேடம், நீங்களே பாருங்க. இப்படிப் பேசறவனை என்ன செய்ய முடியும்?'' ஜெயில் அதிகாரி கோபமாக கூறினார்.

''தம்பி! நான் இப்போ வந்திருக்கிறது. உன்னோட நலனுக்காக. என்கிட்ட கொஞ்சம் தெளிவா பேசினா உனக்கு உதவி செய்ய முடியும். நான் ஸ்நேகலதாவோட அண்ணி. அது உனக்குத் தெரியும்னு நினைக்கிறேன். ஸ்நேகலதாவை மனசார லவ் பண்றது நிஜம்னா இப்படி தேய்ஞ்ச ரிக்கார்ட் மாதிரி திரும்பத் திரும்ப ஒன்னையே ஒப்பிக்கிறதை நிறுத்து.''

''என் வாயைத் திறந்து வேற பேச முடியலை மேடம். அவ்வளவு நொந்து போய் இருக்கேன்.'' என்றான் கோவிந்தசாமி.

''உன் பாதிப்புகள் எனக்குத் தெரியும். அதுக்காக இப்படி 'குணா' மாதிரி பண்ணிட்டிருந்தா பலன் என்ன கிடைக்கும்?''

''பலன் கிடைக்காதுன்னு எனக்கு எப்பவோ தெரியும். அதனால்தான் நான் இப்படிப் பைத்தியமா உளறிட்டிருக்கேன். என்னை யார் யாருக்கு தெரியுமோ, அவுங்க அத்தனை பேருக்கும் நான் எப்படித் தெரியணும் தெரியுமா? 'ஸ்நேகலதா ஐ லவ் யூ, ஸ்நேகலதா ஐ லவ் யூ'ன்னு புலம்பறவனா தெரியணும். ஸ்ரீராமஜெயம் சொல்ற ஹனுமான் மாதிரி! வேற எந்த பலனும் கிடைக்காது. நான் மௌனமா இருந்தா மட்டும் என்ன கிடைக்கப் போகுது? ஒண்ணும் கிடைக்காது. திரும்பத் திரும்ப அடி வாங்கறனே. திரும்பத் திரும்ப ஜெயிலுக்கு வர்றனே... என்னைக்காவது யார்கிட்டயாவது கொஞ்சம் அதிகமா அடி வாங்கி செத்துப் போறனே... ஆனா என்னை யார் யாருக்கு தெரியுமோ, அவங்க அத்தனை பேருக்கும் நான் 'ஸ்நேகலதா ஐ லவ் யூன்னு சதா சொல்லிட்டிருக்கிறது தெரியணும்.'' உணர்ச்சிவசப்பட்ட நிலையில் ஆவேசம் பொங்கக் கூறினான்.

சுஷ்மாவும், ஜெயில் அதிகாரியும் சில நிமிடங்கள் அப்படியே கல்லாகி விட்டார்கள்.



'இப்படியெல்லாம் கூட காதல் பாடாய் படுத்துமா?'

'விளையாட்டு எப்படியெல்லாம் வினையாகி இருக்கிறது.'

.''தம்பி உன்கிட்ட ஒண்ணு கேட்கிறேன். அதுக்கு சரியா பதில் சொல்லு. நீ நிஜமாவே ஸ்நேகலதாவை லவ் பண்றியா. அல்லது பழி வாங்கற நோக்கத்தோட செயல்படறியா?''

சுஷ்மாவின் முகத்தை ஒரு தரம் ஏறிட்டுப் பார்த்து விட்டு தலைகவிழ்ந்து கொண்டு கூறினான். ''உயிரையே விடற அளவுக்கு நான் ஸ்நேகலதாவை லவ் பண்றேங்க.''

''அது நிஜமா இருந்தா இனிமே இந்த 'குணா' குணத்தை அடியோட விட்டுடு. உனக்கு நான் ஹெல்ப் பண்றேன். ஸ்நேகலதாகிட்ட பேசறேன். இப்படியே இருந்தா உன்னை வெறுக்கத் தான் முடியும். நார்மலா இரு.''

தலை கவிழ்ந்தபடியே இருந்தான்.

''கல்யாணம் ஆயிட்டா எப்படிக் காப்பாத்துவே?''

''மூட்டை தூக்கியாவது என்னால காப்பாத்த முடியுங்க...''

''இதெல்லாம் ரொம்ப ரொம்ப பழைய டைலாக். இந்த மாதிரி பேசி லவ் பண்ணின காலம் காணாமப் போயாச்சு. இதை மாத்திக்கோ. தண்டனை முடிஞ்சு வெளியே வந்து பணம் சம்பாதிக்கப் பாரு. நல்லதா பிஸினஸ் பண்ணு. உனக்கு தேவையான ஹெல்ப் நான் பண்றேன். கார், பங்களா வாங்கு. நல்லா ட்ரெஸ் பண்ணு. ஸ்நேகலதாவை உனக்கு கல்யாணம் பண்ண வேண்டியது என்னோட பொறுப்பு.''

கோவிந்தசாமி மௌனமாய் நின்றான்.

ஜெயில் அதிகாரியைப் பார்த்து கூறினாள். ''தப்பா எடுத்துக் காதீங்க ஸார். இனிமே அடிக்காதீங்க. இந்தத் தம்பியை மட்டுமில்லை. யாரையும் அடிக்காதீங்க. குற்றவாளியா யாரும் பிறக்கறதில்லை. நல்லவனாவோ, கெட்டவனாவோ ஒரு மனுஷன் வாழ்றதுக்கு அவனோட வாழ்க்கை சூழ்நிலை காரணமா இருக்கு.''

சுஷ்மா சொல்வதைக் காதில் வாங்காத மாதிரி ஜெயில் அதிகாரி ''டைமாச்சுங்க மேடம். புறப்படலாமா?'' என்றார்.

உள்ளுக்குள் சிரித்துக் கொண்டே ''புறப்படறேன் ஸார்.'' என்றாள் ''தம்பி! நான் சொன்னது கவனம்'' என்றாள் கடைசி வார்த்தையாக.

சுஷ்மா புறப்பட்டு போனாள். சினிமாவில் நூறு வித காதல் செய்தாயிற்று. நிஜத்தில் ஒரு காதலை வாழ வைக்க வேண்டு மென்று எண்ணினாள்.

ஸ்நேகலதாவைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வருவதாக சாய்குமார் திட்டவட்டமாகக் கூறிவிட்டான்.

பிற்பகல் நேரத்தில் ஐந்து பேர் வரலாம் என்று கணிப்பாகக் கூறினான். ஊருக்கு போன் போட்டு அப்பா அம்மாவிற்கு தகவல் தெரிவித்து விட்டான். அவர்களும் 'உன் விருப்பம்' என்று பதில் கூறி விட்டார்கள்.

இரண்டு பலகாரம், இனிப்பாய் ஒன்று, காரமாய் ஒன்று நெய் யில் செய்ததாய் கடையிலிருந்தே வாங்கி வந்து வைத்து விட்டான். வீட்டில் தயாரிக்க வேண்டியது சூடும், சுவையுமாக காபி மட்டும்தான். அடுத்ததாக ஸ்நேகலதா அலங்கரிக்கப் பட வேண்டும்.

சாய் குமார் மதியம் ஒரு மணிக்கு வந்து விடுவதாகக் கூறிவிட்டு அலுவலகம் கிளம்பி விட்டான்.

''அண்ணி! எனக்கு இப்போ கல்யாணம் வேணாம்னு அண்ணன் கிட்ட சொல்லுங்களேன்.''

''எனக்கு தைரியம் போதாது ஸ்நேகா. நீயே அவர்கிட்ட சொல்லிவிடு.''

''இப்படின்னு தெரிஞ்சிருந்தா நான் இங்கே வந்திருக்க மாட்டேன்.''

மிகுந்த கவலையோடு கூறினாள்.



''ஏன் ஸ்நேகா, நீ அந்தப் பையனை லவ் பண்றியா?'' பேசுவ தற்கு இதுதான் சந்தர்ப்பம் என்று சுஷ்மா தொடங்கினாள்.

''த்தூ.... அவனையா? என்ன அண்ணி சொல்றீங்க.. என்னைப் பார்த்தா உங்களுக்கு அவ்ளோ கேவலமாத் தெரியுதா?''

''என்ன கேவலம்?''

''என் வசதி எங்கே, அவன் வசதி எங்கே? என் செருப்பைத் தொடைக்கிற தகுதி கூட அவனுக்குக் கிடையாது.''

அறை வாங்கின மாதிரி ஆகி விட்டாள் சுஷ்மா.

''அவன் உன் மேல உயிரையே வைச்சிருக்கான் போல தெரியுது ஸ்நேகா.''

''அதுக்கு நான் பொறுப்பில்லை. காலமெல்லாம் ஜெயில்ல இருந்தே சாகணும்னு அவன் விதி. அதுக்கு யார் என்ன பண்ண முடியும்?''

''பிறகு ஏன் கல்யாணம் வேணாம்னு சொல்ற?''

''கொஞ்ச நாளைக்கு ஜாலியா இருக்கத்தான்.''

''அந்த பையன் ரொம்ப பாவமாத் தெரியறான் ஸ்நேகா. அவனோட இந்த நிலைக்குக் காரணமே நீதானே...?''

''பாருங்க அண்ணி. இது போலச் சொன்னா எனக்கு கோபம் தான் வரும். ஏன் மறுபடியும் மறுபடியும் அப்படியெல்லாம் சொல்றீங்க...?''

''ஸாரி!''

''இனிமே அப்படிச் சொல்லாதீங்க அண்ணி. படிப்பறிவு இல்லாதவன்! காலேஜுக்குப் படிக்க வந்திருந்தா அவனுக்கு ஸ்டூடண்ட்ஸோட அரட்டை புரிஞ்சிருக்கும். தற்குறிதானே...?'' ஸ்நேகலதா சொல்லி விட்டுத் தலை உயர்த்தி சுழலும் மின் விசிறியைப் பார்த்தாள். அதனுடைய வேகமான சுழற்சியைப் போன்று அவளுடைய மனதை ஈடுபடுத்திப் பார்த்துக் கொண் டாள்.

''நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன் அண்ணி!''

''என்ன ஸ்நேகா?''

''அண்ணன் சொல்ற மாப்பிள்ளையை கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கேன்.''

''ஏன், ஏன்?''

''அவனை நான் லவ் பண்ணலைன்னு நிரூபிக்க அது ஒன்றுதான் வழி.''

''யாருக்கு நிரூபிக்கணும்... எனக்கா?''

''அப்படித்தான்னு வைச்சுக்குங்களேன்.''

''ஸ்நேகா! நீ என்னைத் தப்பா நினைக்கிறே...''

''போதும் அண்ணி. ஆர்க்யூமெண்ட் வேணாம்.''

சுஷ்மா மௌனமானாள்.

மாப்பிள்ளை வீட்டார் வந்தார்கள். அவர்களிடமும் பணக்காரத்தனம் பளிச்சிட்டது.

ஸ்நேகலதா அனேக அலங்காரங்களுடன் அவர்களை நமஸ்கரித்தாள்.

பெண்ணைப் பிடித்து விட்டதாக, பார்த்த நொடியில் பார்வைகளால் பேசிக் கொண்டார்கள். பணவசதிகளும் பிடித்திருந்தது.

வேகமாக நாள் குறித்தார்கள்.

வேகமாக அந்த நாளும் வந்தது.

வெகு விமரிசையாக திருவிழாவாய் நடத்தப்பட்டது அந்தத் திருமணம்.

சினிமா உலகத்திலிருந்தும், அரசியல் உலகத்திலிருந்தும் அனேகம் பேர் வந்து ஆசியும், அன்பளிப்பும் வழங்கினார்கள்.

ஸ்நேகலதா கர்வத்தோடு சந்தோஷப்பட்டாள்.

புதுக் கணவனோடு இழைந்த சந்தோசத்தில், கோவிந்தசாமி சிக்னலில் பண்ண கலாட்டாவையும் சாய்குமார் காதில் போட்டு வைத்தாள்.



சிறையில் கோவிந்தசாமி இருந்த செல்லிற்குப் புதிதாக இரண்டு கைதிகள் வந்திருந்தார்கள்.

அவர்களைப் பார்த்ததும் மணிகண்டனுக்குப் புரிந்து விட்டது.

அவர்கள் வந்தார்களென்றால் உள்ளே ஒரு கொலை நடக்கவிருக்கிறது.

''அனுப்பறதுக்கு ஆளுங்க வந்துட்டாங்க. தப்பிக்கிற வழியைப் பாரு. நெஞ்சுவலி, வயித்து வலி எதையாவது சொல்லி ஆஸ்பிட்டல் போயிடு. இங்கே இருக்காதே...'' மெதுவான குரலில் சொன்னான்.

''ஸ்நேகலதா ஐ லவ் யூ!'' என்றான் பதிலுக்கு.

''சாவுடா மகனே... நான் என்ன பண்ண முடியும்?''

மணிகண்டன் எண்ணியபடிதான் நடந்தது.

புதியதாக வந்த இரண்டு கைதிகளும் கோவிந்தசாமியிடம் வந்தார்கள்.

''நீ தான் கோவிந்தசாமியா?''

''ஸ்நேகலதா ஐ லவ் யூ!''

''கரெக்ட் நீதான்...'' என்றவன் சத்தமான குரலில் ''என்னடா சும்மா கிடந்தா அசிங்கமாத் திட்ற'' என்று நெஞ்சில் குத்தினான்.

கோவிந்தசாமி நெஞ்சைப் பிடித்து கொண்டு ''ஸ்நேகலதா ஐ லவ் யூ'' என்றான்.

''என்னையே உதைக்கிறியா?'' என்றபடி, இன்னொருத்தன் கோவிந்தசாமியின் வயிற்றில் உதைத்தான்.

''ஸ்நேகலதா ஐ லவ் யூ'' என்றான். குரல் வலுவிழந்தது.

அதற்கு பின் மூன்று முறைதான் உதைத்தார்கள்.

பேச முடியாமல் தரையில் சரிந்தான்.

''ஸ்நேகலதா ஐ லவ் யூ'' கொஞ்ச கொஞ்சமாய் செத்துக் கொண்டிருந்தான்.

ஸ்நேகலதாவிற்கு முதல் இரவு!

பால் சொம்போடு நுழைந்தாள்.

மலர்களாலேயே அமைக்கப்பட்ட சிறப்பு கூடமாய் காட்சி யளித்தது. அந்த அறை. சினிமாக்காரர்கள் இல்லையா?

படப்பிடிப்பிற்கு 'செட்' போடுகிற ஆர்ட் டைரக்டரை அழைத்து முதலிரவு அறையை அலங்கரிக்க வைத்திருந்தார்கள். கண் ணிற்குத் தெரிகிற எல்லா இடமும் பூவால் செய்யப்பட்ட தாகவே இருந்தது.

ஸ்நேகலதாவும் ஒரு பூவாய், பால் சொம்போடு நுழைந்தாள்.

மாப்பிள்ளை சொம்பை வாங்கி வைத்து விட்டு, அவளின் கரத்தைப் பிடித்து மெதுவாய் இழுத்துக் கட்டிலில் உட்கார வைத்தான். அன்பின் உச்சத்தில் மெல்லிய குரலில் ''ஸ்நேக லதா ஐ லவ் யூ'' என்றான்.

நெஞ்சில் இடி விழுந்த மாதிரி ஒரு 'படார்!'

விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள்.

''ஸ்நேகலதா ஐ லவ் யூ!'' அவன் மீண்டும் சொன்னான்.

விழிகளை மேலும் விரித்தாள்.

''ஸ்நேகலதா ஐ லவ் யூ!'' அவன் இரண்டு கைகளையும் விரித்து கண்களை மூடி கூவினான்...

''ஆ... ஆ... ஆ...'' என்று பெரிதாய்க் கத்தினபடி பூக்களை வாரி வாரி இறைத்தாள்.

மாப்பிள்ளை பயந்தான். நடுங்கினான். கதவைத் திறந்து ஓடினான்.

ஸ்நேகலதா இப்போது மன நல மருத்துவமனையில் இருக்கிறாள்.

''ஐ லவ் யூ'' ''ஐ லவ் யூ'' என்று யாரைப் பார்த்தாலும் சொல்லிக் கொண்டு திரிகிறாள் பைத்தியமாக...

✡

# குடும்பம் ஒரு கோயில்



## 1

மல்லிகைப் பூ வாசம் குப்பென்று தாக்கிற்று. முகத்தில் தங்க முலாம் பூசின மாதிரி மஞ்சள் பூசிக் கொண்டிருந்தாள். மஞ்சளும் இதயத்தைக் கொத்துகிற வாசம் தந்தது. என்றைக் கும் இழக்காத புன்னகை அவளிடம்.

ரேவதி!

இருபத்து நான்கு மணி நேரமும் பார்த்துக் கொண்டே இருந்தாலும் அலுக்காத முகம். இருபத்து நான்கு மணி நேரம் என்ன, இருபத்து நாலாயிரம் மணி நேரங்கள் பார்த்துக் கொண் டிருந்தாலும் அலுக்காது.

இந்த உலகத்தில் தமிழரசனுக்குப் பிடித்த ஒரே விஷயம் அவனுடைய மனைவி.

''ஆமாம். நான் எப்பவும் புது மாப்பிள்ளைதான். ஏன்னா எப்பவும் நீ புதுப் பொண்ணாவே இருக்கே.''

''இருந்துடப் போறேன்...'' வெட்கப்பட்டாள்.

''சத்தியமா ரேவதி.''

''இன்னும் நூறு வருஷத்துக்கு இதே பொய்தான் சொல்லப் போறீங்க... கிழவன் கிழவி ஆயிட்டுப் பல்லெல்லாம் விழுந்து பொக்கையாகி, முகமெல்லாம் சுருங்கிக் கோலூன்றி நடக்கிற காலத்தில் கூட இதைத்தான் சொல்லப்போறீங்க புதுப் பெண்ணா இருக்கேன்னு.''

பெரிதாகச் சிரித்தான் தமிழரசன், ரேவதியும் சிரித்தாள்.

இறுக்கி அணைத்தான்.

''மனசுதான் ரேவதி எல்லாத்துக்கும் காரணம். எல்லாம் முடிஞ்சாச்சுன்னு நினைச்சா முடிஞ்ச மாதிரி தோணும். இன்னும் ஒண்ணுமே முடியலைன்னு நினைச்சா ஒவ்வொரு நாளும் இப்பத்தான் தொடங்கின மாதிரித் தோணும்.''

''நீங்ககூட இன்னைக்குத்தான் கல்யாணம் ஆன மாப்பிள்ளை மாதிரி இருக்கீங்க.''

சில வினாடிகள் அவளைப் பார்த்தான். அடுத்து அவளை இறுக்கி அணைத்துக் கன்னத்தில் முத்தம் பதித்தான்.

''ரேவதி.''

''ம்''

''எனக்கு இன்னும் கல்யாணமே ஆகலை...''

''என்னது?'' செயற்கையாய் அதிர்ச்சியை முகத்தில் காட்டினாள்.



''ஆமா ரேவதி, இன்னும் எனக்குக் கல்யாணம் ஆகலை. அடுத்த வருஷம் இந்த நாள்லதான் கல்யாணம்.''

''என்ன சொல்றீங்க?''

''ஆமா, அந்த நினைப்புலத்தான் இருக்கணும். எல்லோரும் கல்யாண நாளை ஒவ்வொரு வருஷமும் போனதுக்காக கொண்டாடுவாங்க. நாம ஒவ்வாரு வருஷமும் கல்யாண நாள் வருதுன்னு சந்தோஷமாக் கொண்டாடலாம்.''

''ஆகட்டும். உங்களுக்குக் கல்யாண நாள் வருஷத்துக்கொரு முறையா வருது.., தினமும்தான்.''

''உன்னை மாதிரி அழகான பொண்டாட்டி கட்டினவன் அத்தனை பேருக்கும் தினம் தினம் கல்யாணம்தான்.''

''நான் அழகா?''

''சந்தேகமா? வரும். அப்படிச் சந்தேகம் வருதே அதுக்குப் பேருதான் அழகுக்கு அழகு.''

மீண்டும் அணைத்துக் கொண்டான்.

இன்னொரு முத்தம் பதித்தான்.

''விளக்கு?''

''வேணாம் அணைச்சிடுங்க.''

''பார்த்தியா மூணு வருஷம் கழிந்தும் உனக்கு வெட்கம் போகலை.''

''போகாது.''

குழல் விளக்கை அணைத்துவிட்டு மிகச் சன்னமாய் ஒளிக்கும் இரவு விளக்கைப் போட்டான். ரேவதி பெருமூச்சு விட்டாள்.

''எத்தனை நாளைக்கு ஏமாத்த முடியும்?

''எத்தனை நாளைக்கு இந்த அரை இருட்டு மந்திரத்தை பயன்படுத்த முடியும்?''

'என்னைக்காவது தெரிஞ்சுட்டா...'

கண்களில் இலேசாய்க் கண்ணீர் சுரந்தது ரேவதிக்கு.

அவனுக்குத் தெரியாமல் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

'என்மேல எவ்ளோ அன்பு வைச்சிருக்கார்.'

'அன்பா? உயிரையே வைச்சிருக்கார்?

'பாவம், இல்லை?' மனம் அலைந்தது.

'தெரிஞ்சா எவ்ளோ வேதனைப்படுவார்.

'எத்தனை நாளைக்கு ஏமாத்த முடியும்?'

'என்னைக்காவது வெளிச்சம் வேணும்னு அடம் பிடிச்சார்னா... என்ன செய்றது?''

தமிழரசன் பொங்கும் தேனருவியில் நீந்திக் கொண்டிருந்தான்.

'ரேவதி.'

'ம்.'

'இன்னைக்கு இரவு முழுதும் தூங்காம முழிச்சிருக்கலாமா?'

சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிற?''

''இந்த வசனத்தை டெய்லிதான் கேட்கிறேன். இன்னும் கொஞ்ச நேரத்துல குழந்தை மாதிரி தூங்கப் போறீங்க.''



''இன்னைக்குத் தூங்க மாட்டேன் பாரேன்.''

''பாக்கலாம்.''

ஆனால் தூங்கிப்போனான்.

அவளும் தூங்கினாள். மிகவும் எச்சரிக்கையாக நேர்த்தியுடன் உடைகளை உடுத்திக் கொண்டு. திடீரென்று தமிழரசன் விழித்துக் கொண்டு குழல் விளக்கைப் போட்டுவிட்டு ரேவதியை ஆடைவிலகிய நிலையில் பார்த்துவிட்டால் அவ்வளவுதான். இடிந்து விடுவான். அதற்காகவே அந்த எச்சரிக்கை.

விடிவதற்குள் எழுந்து விடுவாள். குளித்துவிட்டு வேறு உடை அணிந்து கொள்வாள். தொண்ணூற்றி ஒன்பது சதவீதம் சுடிதார்தான். அணிவாள். அதுதான் உடம்பை முற்றிலும் மறைக்கும். புடவை அப்படி மறைக்காது. இடை, வயிறு, முதுகு என்று பல இடங்களை மறைக்க முடியாது. ரேவதியின் தலைவிதி அதெல்லாம் மறைக்க வேண்டிய, மறைத்தே ஆக வேண்டிய பகுதிகளாகப் போயிற்று.

பட்டுப்புடவை மாதிரி அணிந்து கொள்ளும்போது பரவாயில்லை. அது தடிப்பாக இருப்பதால் உடம்பை நன்றாக மறைக்கும். சில புடவைகள் கண்ணாடி மாதிரியே இருக்கும்.

ரேவதி உடைகளைப் பார்த்து பார்த்துத் தேர்வு செய்வாள். உடம்பை மறைக்கிற மாதிரி.

மறைக்காவிட்டால் ஆகுமா?

வாழ்க்கை போய் விடுமே.



## 2

தமிழரசனின் அம்மா ஊரியிலிருந்து வந்திருந்தாள்.

அலுவலகம் போவதற்காக தமிழரசன் தயாராகிக் கொண்டிருந் தான். அவனை அம்மா அழைத்தாள்.

''தமிழ்.''

''என்னம்மா.''

''உன்கிட்டப் பேசனும்டா.''

''பேசலாம்மா.''

அம்மா எதைப் பேசப் போகிறாளென்று அவனுக்கு புரியாமல் இல்லை. உலகில் எல்லா அம்மாக்களும் இதைத்தான் பேசு வார்கள்.

''டிபன் பண்ணிட்டே பேசலாமா?''

''ஏன், ஆபீசுக்கு நேரமாச்சா?''

''ஆமாம்மா.''

''சாயந்தரம் சீக்கிரம் வந்துரு. பேசலாம்.''

''இப்பவே பேசலாம்மா.''

அம்மா ஊருக்குப் போகாமல் நின்று விடுவாளோ என்கிற கவலையில் சொன்னான். ஆபீஸிற்கு வேண்டுமென்றால் கொஞ்சம் தாமதமாகப் போய் மானேஜரிடம் ஸாரி சொல்லி விடலாம். அம்மா பேசுவதாக மாலை நின்று விட்டால் அவ் வளவுதான். ரேவதி அம்மாவோடு படுத்துக் கொள்வாள்.



தமிழரசன் மட்டும் தனியாகப் படுத்தாக வேண்டும். ரேவதியை அணைத்தவாறு படுத்து பழக்கமாகிவிட்டு தனியே படுத் தால் துளியும் தூக்கம் வருவதில்லை. புரண்டு புரண்டு படுப்ப தாக இருக்கிறது. அம்மா புறப்பட்டுப் போய் விட்டால் நல்லது. அதனாலேயே இப்போதே பேசலாம் என்றான்.

கணவனும் மனைவியும் எந்தத் தொல்லைகளும் இல்லாமல் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே திருமண மான ஒரு மாதத்திற்குள் தனிக்குடித்தனம் வந்து விட்டான். வேலையைக் காரணம் காட்டி, டிரான்ஸ்ஃபர் கிடைக்காது எனக் கூறி, ஓட்டல் சாப்பாடு சாப்பிட்டு அல்சர் வந்து விட் டதையும் செருகி தனிக்குடித்தனச் சாதனையை நிகழ்த்திக் கொண்டான். அம்மா இப்படித்தான் மாதத்திற்கொருமுறை வந்து விடுவாள். ஒரு நாள் அல்லது இரண்டு நாள் தங்கி இருந்து விட்டுப் போவாள்.

அந்த ஒரு நாள் இரண்டு நாள் ரேவதியைப் பிரிந்திருப்பதே அவனுக்கு முடியாது.

அம்மாவின் அருகில் வந்து அமர்ந்தான்.

''சொல்லுமா...''

''ஒண்ணும் அவசரமில்லை தமிழ். சாயந்தரமா பேசிக் கலாம்.''

''அப்பாவையும் அழைச்சிட்டு வர்றதுதானம்மா.''

''அவரைக் கூப்பிட்டேன். வரலை.''

''நீ இங்கே வந்துட்டா, சாப்பாட்டுக்கு என்ன செய்வார்? அழைச்சிட்டு வந்திருக்கலாம்.''

''நான் என்ன செய்யட்டும் தமிழ்? கூப்பிட்டேன்... அவர் கேட்டாதானே? ஓட்டல்ல சாப்பிட்டுத் தொலையட்டும்.''

''வேணாம்மா. பாவம் அப்பா. நீங்க ஊருக்கு புறப்படுங்க. அவருக்கு ஒட்டல் சாப்பாடே பிடிக்காது.'' எப்படியாவது அம்மாவை அனுப்பி வைக்க வேண்டுமென்று கூறினான்.

''நான் போற மாதிரி இல்லை. ஒரு வாரத்துக்கு இங்கே தங்கிட்டுப் போறதா இருக்கேன். என்னைத் துரத்தாதே.''

மனம் அடித்துக் கொண்டது.

''அம்மா ஒரு வாரம் தங்கப் போறாளா?''

'ஒரு வாரத்துக்கு ரேவதியும் நானும் தனித் தனியாப் படுக்கணுமா?'

'அம்மாவை நிறுத்தக் கூடாது. எப்படியாவது துரத்தணும்.'

'அடப்பாவி! உனக்குத் தாயைவிட மனைவி முக்கிய மாடா?'

'தாய்ப்பாசம் நெஞ்சில் இருக்குடா... மூணு வருசம் ரேவதியோட நெருக்கமா இருந்து தொலைச்சிட்டேன். ஒரு நாள் பிரியறதே. கஷ்டமா இருக்கும்.'

அவனுக்குள் அவன் பேசிக் கொண்டான்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. அலுவலகத்திற்கு தாமத மானது.

எழுந்து சமையலறைக்குப் போனான்.

ரேவதி சப்பாத்தி சுட்டுக் கொண்டிருந்தாள்.

சாம்பல் நிற நைட்டியில் இருந்தாள். அதிகாலை எழுந்து குளித்துவிட்டு பளிச்சென்று இருந்தாள்.

அப்படியே தழுவிக் கொண்டான்.



''அம்மா வரப் போறாங்க. விடுங்க.''

''வர மாட்டாங்க. அம்மாவுக்குத் தெரியாதா சின்னஞ் சிறு சுங்கன்னு...''

''இருந்தாலும் எனக்குச் சங்கடமா இருக்கு.''

''அதுக்காக இந்த அழகு தேவதையை பக்கத்துல வைச்சி கிட்டு நான் சாமியாராட்டம் சும்மா இருக்கணுமா?''

''அம்மா ரெண்டு நாள் தங்கி இருப்பாங்க... அப்புறம் போயிடுவாங்க அதுவரைக்கும் கையைக் காலைக் கட்டினு சும்மா இருங்க.''

''அம்மா எதுக்கு வந்திருக்காங்க தெரியுமா?''

''தெரியும்.''

''உன்னை இன்னைக்கு உண்டு இல்லைன்னு பண்ணிடப் போறாங்க.''

''அதான் பயமா இருக்குங்க.''

''நான் ரெடியா இருக்கேன். உனக்கு சம்மதம்னா சரி.''

''இப்போதைக்கு வேணாங்க.''

''அம்மாகிட்ட நீயே சொல்லிடு.''

''முயற்சிக்கிறேன். அம்மாவைக் கூப்பிடுங்க. சாப்பிட லாம்.''

அம்மாவும். மகனும் அமர்ந்து சப்பாத்தி சாப்பிட்டார்கள்.

சாப்பிட்டு முடிந்ததும் தமிழரசன் ஆபீஸ் புறப்பட்டான். புறப்படும்போது சமையறையில் கொஞ்சம் ரேவதியை இம்சித்தான். ரேவதியும் தமிழரசனின் அம்மாவும் தனியே வீட்டில் உட்கார்ந்தார்கள்.

''ரேவதி.''

''சொல்லுங்க அத்தை.''

''கல்யாணமாகி மூணு வருஷம் ஓடிப் போச்சு.''

''........''

''இன்னும் அமைதியா இருக்கீங்களே...''

''ரெண்டு வருஷம் போகட்டும் அத்தை.''

''எதுக்கு?''

''..........''

''ரெண்டு வருஷம் எதுக்கு?''

''பிளாட் வாங்கி வீடு கட்டலாம்னு இருக்கார். கட்டி முடிச்சதும் அப்புறம்.''

''வேணாம். வீடு எப்போது வேணும்னாலும் கட்டிக்கலாம்.

''குழந்தை அப்படி இல்லை. காலா காலத்துக்குப் பெத்துக்கணும்.''

''இன்னும் ரெண்டு வருஷங்க..''

''வேணாம். பத்து மாசத்துல குழந்தை வேணும். இல்லேன்னா நான் மோசமா ஆயிடுவேன்.'' கோபத்துடன் கூறினாள்.

''அத்தை.''

''ஆமா. இன்னியிலிருந்து கருத்தடைக்குப் பண்ணிட்டு வந்த முயற்சியை விடுங்க.

''இன்னும் ரெண்டே வருஷம் அத்தை.''

''தேவையில்லை.''

''அத்தை!''



''எதுவும் பேச வேணாம். குழந்தைங்கிறது. சாதாரண விஷயமில்லை. தெய்வம் தர்றது. தெய்வமா தரும்போது பயன்படுத்திக்கணும். அப்புறம் நாம கேட்கும்போது தெய்வம் தர மாட்டார். எனக்குப் பாத்தியா. வீடு நிறையக் குழந்தைகள் வேணும்னு நினைச்சேன். கடவுள் ஒண்ணோட நிறுத்திட்டார். நீயாவது நாலஞ்சி பெத்துக்குவேன்னு நினைச்சா தள்ளிப் போடறீங்க...''

''ரெண்டு வருஷம்''

''கதையே வேணாம். அப்புறம் நான் ராட்சஸியா மாறிடுவேன்.''

''அத்தை...''

''ஆமாம். அப்புறம் உன் மேல நான் சந்தேகப் பட வேண்டி இருக்கும். குழந்தை பெத்துக்கிற தகுதி உனக்கு இல்லையான்னு நினைக்கத் தோணும்.'' கண்டிப்புடன் கூறினாள்.

அதிர்ந்தாள் ரேவதி.

உடம்பு முழுதும் ஒரு நெருப்புக் கட்டி ஓடிற்று. நெஞ்சுக்குள் பெட்ரோல் ஊற்றிக் கொளுத்திவிட்ட மாதிரி ஆயிற்று. சடக்கென்று வியர்த்துப் போனது.

''சொல்லிடு. உன் உடம்புல ஏதேனும் கோளாறு இருந்தாலும் சொல்லிடு. நல்ல ஆஸ்பிட்டலா பார்க்கலாம்.''

''அப்படி எதுவும் இல்லை அத்தை'' அவசரமாக மறுத்துச் சொன்னாள்.

''அப்புறம் ஏன் தள்ளிப் போடறீங்க?''

''............''

''இனிமேத் தள்ளிப்போட வேணாம்.''

தலையாட்டி வைத்தாள்.

மனம் எரிந்தது.

உள்ளுக்குள் அழுதாள்.

'என்ன செய்வேன்?'

'இப்போது உடம்பை மறைத்து வருகிற மாதிரி, குழந்தை பிறக்கும்போது அதன் பிறகு மறைக்க முடியுமா?''

'எந்த நேரமும் குழந்தைக்குப் பால் தந்தாக வேண்டும். அப்போது அந்த ரகசியம் அம்பலமாகிவிட்டால்...'

'ஆண்டவா! என்ன செய்வேன்?'

'நல்ல புருஷன், நல்ல வாழ்க்கை இதை இழந்து விடுவேனா?'

'கடவுளே! நீதான் வழி விடணும்.'

'மூணு வருஷம் கட்டிக்காத்த ரகசியம், காலமெல்லாம் கட்டிக் காப்பாத்தணும்.' தலை வெடிக்கும் போலிருந்தது.

'எனக்கு மட்டும் ஏன் இப்படி அமையணும்?'

'எந்த ஜென்மத்துல என்ன பாவம் செஞ்சேன்?'

'கடவுளே!'

'அவருக்கு மட்டும் விஷயம் தெரிஞ்சா அவ்ளோதான். என் மேல உயிரையே வைச்சிருக்கார். எல்லாம் பறிபோயிடும்.' உள்ளுக்குள் நடுக்கம் உருவானது. நினைவுகள் நகர்ந்து நகர்ந்து பின்னோக்கிப் போனது.

'அந்த சம்பவம் மட்டும் தன் வாழ்வில் நடந்திருக்கா விட்டால்...'

இந்த பயமில்லை.'

'ஏன்? எனக்கு மட்டும் ஏன் அப்படி உண்டாகணும்?'

உள்ளுக்குள் தவித்தாள்.





3

ரேவதிக்கு அப்போது பதினாறு வயது. டீன் ஏஜ் பருவம் என்கிறார்களே அந்த சந்தோஷப் பருவத்தின் தொடக்கம். குட்டி மானைப் போல் தைரியமான, துள்ளிக் குதித்து ஓடுகிற மனநிலை. கற்பு பயமோ, வெட்கமோ வாழ்க்கை பற்றிய ஆசையோ எதுவுமற்ற வயது. அன்பையும் பாசத்தையும் வாரிப் பொழிகிற பெற்றோர். நல்ல உடை, நொறுக்குத் தீனி, விளையாட்டுப் பொருட்கள் எதற்கும் குறைவில்லை. ஒரே பெண். செல்லத்திற்கும் பஞ்சமில்லை. சுற்றுலா தலமாக மாறி வரும் ஏலகிரி மலை அவருக்கு தொழிலை அள்ளிக் கொடுத்தது.

ஏலகிரி மலையில் சினிமாத் துறையைச் சேர்ந்த நடிகர்கள், டைரக்டர்கள் பலர் எஸ்டேட்டுகளை வாங்கிப் போட, ஆம்பூர், வாணியம்பாடியில் இருக்கும் லெதர் கம்பெனி கோடீஸ்வரர்கள் பெரிய பெரிய ஓட்டல்கள், பங்களாக்கள், விடுதிகள், கெஸ்ட் ஹவுஸ்கள் கட்டத் தொடங்கி விட்டார்கள். சினிமாக்காரர்களுக்குப் போட்டியாக...

அதற்கு ஏற்றாற்போல பள்ளிக் கூடங்கள் நிறைய உருவாயின.

எந்தக் கட்டிடங்கள் கட்டுவதாக இருந்தாலும் அது குமாரவேல் கைக்கு வந்தது.

உரிமையாளர் காசோலை மட்டும் தந்து விட்டால் போதும், எல்லா வேலைகளையும் குமாரவேல் பார்த்துக் கொள்வார். கட்டிடம் கட்டுவதற்கு அரசாங்கத்திடம் அனுமதி

வாங்குவதிலிருந்து மொத்த வேலையும், பார்த்துக் கொள்வார். பக்காவாகக் கட்டிடம் முடிந்து உரிமையாளரின் கைக்கு சாவிக் கொத்து போய்ச் சேர்ந்து விடும். ஏலகிரி மலை என்பதால் கருங்கல் சுலபமாகக் கிடைத்தது. செங்கற்கள் மலை அடி வாரமுள்ள ஜோலார் பேட்டையிலிலேயே கிடைத்தது. சிமெண்ட் வேலூரிலிருக்கும் கம்பெனிக்கு ஒரு போன் அடித் தால் போதும் பறந்து வந்து விடும். மணல்தான் பிரச்சினை. வாணியம்பாடி ஆம்பூர் அருகில் மணல் எடுத்தால் உறுதி வராது. தோல் தொழிற்சாலைக் கழிவுகளால் மணலும் கெட்டுப் போயிருந்தது. அந்தப் பகுதி மணல்களை பயன்படுத்தி கட் டிடம் கட்டினால் இருபது வருடத்தில் கட்டிடம் உதிர்ந்து விடும். நான்கு பர்கோ லாரிகளை வாடகைக்கு எடுத்து வைத்துக் கொண்டிருந்தார். எந்த நேரமும் கிருஷ்ணகிரி அருகே இருந்து மணல் கொட்டுவதுதான் லாரிகளின் வேலை.

குமாரவேல் வெகு சீக்கிரத்தில் பணக்காரராக ஆகிப் போனார்.

ஆனால் பணத் திமிர் இல்லை.

சாதாரண வாழ்க்கை

கதர்வேட்டி, கதர்சட்டைதான். நெற்றியில் சந்தனக் கீற்று, எல்லோரிடமும் இனிமையுடன் பழகுவார். நூற்றுக்கணக் கில் அவரிடம் வேலைக்காரர்கள் இருந்தார்கள். வேலைக் காரர்களைத் தன் குடும்பத்தில் ஒருத்தராகத்தான் பாவித்தார். வேலை நேரத்தில் எவரேனும் சோர்ந்து காணப்பட்டால் சோர்ந்திருப்பதற்கான காரணம் என்னவென்று விசாரிப்பார். மனக்கவலையின் முக அடையாளம் தான் சோர்வு என்று அவருக்குத் தெரியும்.

கவலையற்று இருக்கும் மனிதனால் தான் காரியங்கள் சாதிக்கமுடியும் கவனத்துடன் இருக்க முடியும்.



கவனமற்று இருப்பவனால் கச்சிதமாக வேலை செய்ய முடியாது. கட்டிட வேலை என்பது மிக மிகக் கவனமாகச் செய்ய வேண்டிய வேலை. மூன்றாவது மாடியில் வேலை நடந்து கொண்டிருந்தால், மூன்றாவது மாடிக்கு தரையிலிருந்து மெட்டீரியல் போயாக வேண்டும். சிமெண்ட் மூட்டைகளைக் கயிற்றில் கட்டி, கிணற்றில் தண்ணீர் சேந்து வைப்பதைபோல் ராட்டினத்தில் இழுப்பார்கள். கவனமாகச் செய்யாவிட்டால், கயிற்றில் முடிச்சு அவிழ்ந்து கீழே இருப்பவரின் தலையில் இறங்கிவிடும். உயிருக்கு ஆபத்து கிரிக்கெட் பந்தைப் போல் செங்கற்களைத் தூக்கிப் போட்டு கேட்ச் பிடிக்க வேண்டும். ஒரே சமயத்தில் இரண்டு செங்கற்களை அடுக்காய் பிடித்துப் போடுவார்கள். முழு கவனத்துடன் செய்யவேண்டிய தொழில் கட்டிடத் தொழில்.

எனவே தொழிலாளர்கள் கவலையற்று இருக்க வேண் டும் என்று எண்ணினார். கவலையற்று இருந்தால் கவனமாகப் பணியாற்ற முடியும்.

''உனக்கு என்னப்பா பிரச்சினை?'' என்று சோகமான முகத்தோடிருக்கும் பணியாளரை அழைத்துத் தானாகக் கேட்பார்.

நிறையப் பேர் தன் சொந்தப் பிரச்சினையைச் சொல்ல முன்வருவதில்லை.

''பொஞ்சாதி கோபிச்சினு அம்மா வூட்டுக்குப் போயிட்டா ஸார்.'' என்று சொல்வதென்றால் கஷ்டம்தானே...

'பொஞ்சாதி கோபிச்சினுப் போயிட்டாளா... நீ என்ன செஞ்சே?' என்று அடுத்த கேள்வி வரும்.

தன் குற்றத்தை ஒப்புக்கொள்ள இங்கே எந்த ஆணும் தயாராக இல்லை.

''என்ன பிரச்சினை சொல்லுப்பா...''

''ஒண்ணுமில்லை... சார்...!''

''முகம் காட்டுதே..''

''.................................''

''நானும் உன்னைப் போல் மனுஷன்தான். எனக்குப் பிரச்சினைகள் உண்டு. தைரியமா சொல்லு. சால்வ் பண்ண என்னால ஆன உதவி செய்ப்ரேன்.''

''பொஞ்சாதிகூட சண்டை விஷயம்தானே...?''

''எல்லா வீட்லயும் இருக்கிற விஷயம்தானே...??

''கோபிச்சுனு அம்மா வீட்டுக்குப் போயிடுச்சி...

''போகட்டும்; ரெண்டு நாள்ல கோபம் தீந்துவிடும். திரும்பி வந்துடுவா''

''இல்லை ஸார். நாலுபேர் வேடிக்கை பார்க்கத் தாலியைக் கழட்டி விசிறி அடிச்சிட்டுப் போயிட்டா...''

''நீ அடிச்சிருப்பே...''

''..........................'' தலை கவிழ்ந்து நின்றான்.

''பிரச்சினை வந்தா பேசித் தீத்துக்கணும்பா. பொண்டாட்டியை அடிக்கக்கூடாது. ஆம்பளைக்கு வலிமை இருக்குன்னு 'கை நீட்டி அடிக்கிறோம். பொம்பளை திருப்பி அடிக்க முடியாம தாலியைக் கழட்டிப் போடறா... அப்படின்னா என்ன அர்த்தம்?''

''..............................''

''நீ கட்டின தாலி என் கழுத்துல இருக்கிறதாலேதானே உரிமையோட என்னை அடிக்கிற... இந்தா உன் தாலி. இனிமே



நான் உன் மனைவி இல்லை. என்னை அடிக்காதேன்னு அர்த்தம்.''

''.......................''

''எல்லாத்துக்கும் அளவு இருக்கும். அளவு மீறினா விஷம். எவ்ளோ அடிச்சாலும் அடி வாங்கினு புருசனோட பொண்டாட்டி குடித்தனம் நடத்தினக் காலம் போயிடுச்சு. பொம்பளைக்குச் சம உரிமை கேட்கிற காலம் இது. மனைவி என்கிற போது சம உரிமை தந்தே ஆகணும். நம்ம இன்பம் துன்பம் இரண்டையும் பங்குப் போட்டுக்கிறவ பொண்டாட்டி தான்.''

தலை கவிழ்ந்து அமைதியாக நின்றான்.

இப்படித்தான் தொழிலாளிகளுக்கு பல உதவிகள் செய்வார்.

வட்டி இல்லாமல் அசலைக் கூலியில் கொஞ்ச கொஞ்சமாகக் கழிக்கிற வகையில் பண உதவி செய்வார்.

தொழிலாளர்கள் என்பது பெரிய முதலீடு. உழைப்பு பெரிய வருமானம். எனவே தொழிலாளர்கள் மனம் நோகாமல், தொழில் செய்ய உதவிகள் செய்தார்.

நல்லவர்களை எல்லோரும் நல்லவர்களாக நினைத்து விடுவதில்லை.

மகாத்மா காந்தியைக் கொல்வதற்குக் கூட இந்த மண்ணில் எதிரிகள் இருந்தார்கள்.

அன்னை இந்திராவைக் கொல்வதற்குக் கூட அவருடைய மெய்க்காப்பாளனே பொய்க்காப்பாளனாய் மாறிப் போனான்.

அப்படித்தான்.

கான்ட்ராக்டர் குமரவேலுக்கு எதிரிகள் இருந்தார்கள்.

குறிப்பாய்க் கார் டிரைவர் மதன்.



# 4



மதன்!

வட நாட்டு இந்தியனைப் போன்ற சிவப்பு நிறம். ஆறடி உயரம் நீள நீளமான கைகள். தலைவாழை இலையைப் போல் சுருள் சுருளாய் காணப்பட்ட முடிகள். சுருளாமல் செதுக்கிய மீசை. பொந்துக்குள்ளிருந்து தலையை மட்டும் வெளியே காட்டும் பாம்பினைப் போன்ற கண்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன் என்றால் அவனை நம்புவதற்கு முடியாது.

ஆனால்,

நல்ல தமிழ் பேசினான்.

சொந்த ஊர் இந்தியாவின் தெற்கு எல்லையான கன்னியா குமரி மாவட்டம் என்று கூறினான். அப்பாவோடு போட்ட சண்டை காரணமாக இரயிலேறி விட்டான். குமரியில் ராவு ஏறி படுத்தவன் விழித்த போது ஜோலார்பேட்டை இரயில்வே ஸ்டேஷனில் இரயில் நின்று கொண்டிருந்தது. இதுவரை டிக்கெட் பரிசோதகர் வராதது மனதில் நிம்மதி அளித்தது. இரவுப் பயணம் என்பதால் பரிசோதகர் வராமல் இருந்திருக்கலாம். இனி பகல் பயணம், ஜோலார் பேட்டையிலிருந்தோ காட் பாடியிலிருந்தோ. அரக்கோணத்திலிருந்தோ டிக்கெட் பதிசோதகர் இரயிலில் ஏற வாய்ப்பிருக்கிறது. அதற்காக கொஞ்சம் பயந்து ஜோலார்பேட்டை இரயில் நிலையத்தில் இறங்கிக் கொண்டான்.



வயிறு பசித்தது.

சட்டைப் பையில் டீக்கும், பிஸ்கட்டிற்கும் சரிக்கட்டுகிற அளவிற்கு சில்லரை, நடக்கும் போது ஆடியது.

தோசையோ, இட்லியோ சாப்பிடுவதற்கு சில்லரைகளை மட்டும் நம்பிக்கொண்டு போகமுடியாது. ஒரு இட்டிலி மூன்று ரூபாய் இருக்கலாம். ஒரு தோசை பத்து ரூபாய் இருக்கலாம் என எண்ணிக் கொண்டான்.

சட்டைப் பையில் கையை விட்டு சில்லரைகளை எண்ணி னான்.

ஆறு ரூபாய் தேறிற்று.

இரயில் பாதையை ஒட்டி இருக்கும் கம்பி வேலிக்குள் நுழைந்து வெளியே வந்தான். முறையான நுழைவு வழியில் வந்தால் டிக்கெட் பரிசோதகர் பிடித்துக் கொள்வார் என்கிற பயம்.

இரயில்வே ஸ்டேஷனை விட்டு வெளியே வந்து நின்ற போது இருட்டு விலகிப் போகாமலேயே இருந்தது.

நடக்கும்போது ஆறு ரூபாய் சில்லரைகள் ஆடிற்று. அதன் சத்தம் எரிச்சலைத்தான் கொடுத்தது. வாரி கையிலெடுத்துக் கொண்டான். அப்பா மீது உள்ள கோபம் சில்லரை மீதெல் லாம் போயிற்று. அம்மாவிடம் கேட்டிருந்தால் நூறோ இரு நூறோ தந்திருப்பாள். ஆனால் அனுப்பி வைத்திருக்க மாட்டாள். 'போகாதே... போகாதே என் மகனே' என்று புலம்பி இருப் பாள். அம்மா உயிருக்கு நிகராய்ப் பாசத்தை மதன் மீது வைத் திருந்தாள். மதன் எது செய்தாலும் அவன் மீது அம்மாவிற்குக் கோபம் வராது. அப்பாவும் அப்படியே இருக்க முடியாது. மகன் ஏதேனும் வேலைக்குப் போய்ச் சம்பாதிக்க வேண்டும் என்று அவருக்கு ஆசை. டிரைவிங் கற்றுக் கொண்டு, டாக்ஸி டிரைவராய் இருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை.

அப்பா நினைத்தால் சொந்தமாக ஒரு அம்பாஸிடர் காரை வாங்கிக் கொடுக்கலாம். கைப்பணத்தை இழப்பதற்கு முடியா விட்டாலும், வங்கியில் ஸ்யூரிட்டி கையெழுத்துப் போட்டு லோன் வாங்கிக் கொடுத்திருக்கலாம். அப்பா அதற்குத் தயாராக இல்லை.

அப்பாவின் அகலமான பார்வைக்கு டாக்சி டிரைவராய் இருப்பதென்பதும், ஆட்டோ டிரைவராய் இருப்பதென்பதும் ரௌடிகள், பொறுக்கிகள் மட்டுமே செய்கிற தொழில். மதன் மாதிரி நல்ல தந்தைக்கு மகனாகவும், பெருமை மிகுந்த குடும்பத்தின் வாரிசாகவும் இருக்கிறவன் அந்த மாதிரி ரவுடித் தனமான, பொறுக்கித்தனமாக வேலைக்குப் போகவே கூடாது என்பது அப்பாவின் சட்டமும், தீர்ப்பும்.

அப்பா நினைக்கிறபடிதான் சூழ்நிலையும் இருந்தது.

டாக்ஸி டிரைவர் வேலை என்பது நேரத்திற்குத் தூங்க முடியாமல் நேரத்திற்குக் குளிக்க முடியாமல் நேரத்திற்கு சாப்பிட முடியாமல் தவிக்க வைத்தது. அவசரமாகக் கக்கூஸ் போகலாம் என நினைக்கிற போதுதான் ஒரு பார்ட்டி வரும். கக்கூஸ் போகிற அவசரத்தையும் நிறுத்தி விட்டு டாக்ஸி ஓட்டவே மனம் ஓடும். இல்லையென்றால் வருமானம் போகும் உடல் உபாதை கொடுத்துக் கொண்டிருக்கும். இந்த உபாதை வேதனையில் பயணம் செய்கிற கஸ்டமரோடு இன்முகத் தோடு பேச இயலாமல் முகத்தை விகாரமாய்க் காட்டி, மிரட்டி வாடகை வசூலிக்க வேண்டி வரும். அந்த மாதிரி சமயத்தில் டாக்ஸி டிரைவர் இயல்பாகவே ரௌடியைப் போல்தான் தோன்றுவான்.

சரியான நேரத்திற்குத் தூங்கி, சரியான நேரத்திற்குச் சாப்பிட்டு, சரியான நேரத்திற்குக் குளித்து, சரியான நேரத் திற்கு மலம் கழித்துச் சரியாக வாழ்பவன் முகம் சரியாக இருக்கும். அழகாகவே இருக்கும். எல்லாமே மாறி மாறி செய்பவர் களுக்குத் தன்னாலேயே முகம் விகாரமாகி விடும். எல்லோர் மீதும் கோபப்படச் சொல்லும் புத்தி.



மதன் அப்படித்தான் இருந்தான்.

அப்பா நல்லதையே சொன்னாலும் ஏற்றுக் கொள்ளாமல் எதிர்ப்புக் காட்டினான்.

டாக்ஸி டிரைவர் தொழிலுக்குப் போகக் கூடாது என்று பலமுறை சொல்லிப் பார்த்தார் கேட்கவில்லை.

''வேணாண்டா மதன் சொன்னாக் கேளு நம்ம குணத் துக்கு அந்த வேலை வேணாம்.''

''வேணாம்னா என்னை எதுக்கு டிரைவிங் கத்துக்க அனுப்பி வைச்சே..?''

''கத்து வச்சிக்கிறது நல்லதுடா...சைக்கிள் ஓட்டறது கார் ஓட்டறது நீச்சல் அடிக்கிறது மனுஷனுக்கு அவசியம். சமய சந்தர்ப்பத்துக்கு உதவும் இப்போ நிலைமைக்கு கம்ப்யூட் டரும் தெரிஞ்சு வைச்சுக்கணும். அதுக்காக அதே தொழி லுக்குத்தான் போயாகணும்னு நினைக்கிறது, முட்டாள்த் தனம்.

''உன் பேர்ல அஞ்சு லட்ச ரூபா பேங்க்ல போடறேன். அடகு கடை வைச்சுக்கோ... தங்க நகை, வெள்ளிக் கொலுசு, பித்தளைப் பாத்திரம் வந்தா அடகு வைச்சுக்கிட்டு பணம் தா. திருப்பி வாங்கிட்டுப் போனா வட்டி, வாங்கலேன்னா வித்துடலாம். நஷ்டத்துக்கு இடமில்லாத ஒரே வியாபாரம் அடகு வியாபாரம்தான்.''

''எனக்கு வேணாம். அஞ்சு லட்சம் ரூபா வேணாம். ஒரு அம்பதாயிரம் கொடு. செகண்டுலே கார் வாங்கிக்கிறேன் பத்தாயிரம் செலவு செஞ்சு சிங்காரிச்சுக்கலாம். டெய்லி நூறு ரூபா தர்றேன்...''

''நான் சொல்லும் பேச்சைக் கேட்காமப் பொறுக்கத்தான் போவேன்னு அடம் பிடிக்கிறியா? இன்னும் காருன்னு சொன்னே வாயை உடைச்சிடுவேன்..''

''டாக்ஸிதான் ஓட்டுவேன்...'' அதற்கு மேல் பேசவில்லை. வீட்டை விட்டு வந்து விட்டான். டாக்ஸி ஸ்டாண்டிலேயே வீட்டிற்குப் போகாமல் நின்று விட்டான்.

பத்து தினங்களுக்குப் பிறகு அப்பா வேறு விதத்தில் களம் இறங்கினார்.

டாக்ஸி முதலாளியை சந்தித்து 'இனிமே என் மகனுக்கு டாக்சி தராதீங்க' என்று கூறி விட்டார்.

பெரிய பணக்காரர், சந்தர்ப்பத்தில் அவரிடம் வட்டிக்குப் பணம் வாங்க நிற்க வேண்டி வரும். அவரைப் பகைத்துக் கொள்ள முடியாது. எனவே டாக்ஸி முதலாளி, மதனை நிறுத்தி விட்டார். அப்பா, சொன்னதாகச் சொல்லாமல் 'ஊரிலிருந்து என் மச்சான் வந்திருக்கான் மதன். மனைவி யோட தம்பி, அவனுக்கு வேற வேலை ஏதும் இல்லை. டாக்ஸி ஓட்டறதாச் சொல்றான். நீ நின்னுக்கோ சாரி...'' என்று கூறி விட்டார்.

டாக்ஸி முதலாளி மீது கோபத்தோடு வீடு திரும்பினான்.

இரண்டு தினங்கள் எங்கேயும் போகாமல் வீட்டிலேயே உட்கார்ந்து சாப்பிட்டான், தூங்கினான்.

''ஒரு டாக்சி வாங்கிக் கொடுப்பா...''

''என்னால முடியாது. மோட்டார் சம்பந்தமா எதுவும் வேணாம். டாக்சியா வேணாவே வேணாம். அது தொல்லை சமாச்சாரம். நல்லவன் போலத் தெரிவான். பாஸஞ்சர்னு ஏத்திக்குவே, சூட்கேஸ்ல தங்கமோ, சந்தனமோ, கடத்து வான். மாட்டிக்குவே. டாக்சி போயிடும். நீயும் போலீஸ்ல



மாட்டுவே. பேப்பர்ல பேர் வந்து அவமானமாயிடும். அந்தத் தொழிலே வேணாம். இந்தக் காலத்துல டிரான்ஸ்போர்ட் சரியில்லை. ஆக்சிடண்ட் சுலபமா நடக்குது. உட்கார்ந்த இடத் துல சம்பாதிக்கிறதப் பாரு... டாக்சி ஒட்றது பிடிக்காமத்தான் உன்னை வேலையிலிருந்து துரத்தச் சொன்னேன்.''

அப்பாதான் தன்னை வேலையில் சேர்க்க வேண்டா மென்று டாக்சி முதலாளியிடம் சொல்லி இருக்கிறார் என்கிற விஷயம் அப்போதுதான் புரிந்தது.

அந்த நிமிடமே வீட்டை விட்டு வெளியே வந்து விட்டான்.

எதைப் பற்றியும் யோசிக்கவில்லை.

கையில் இருந்தது. அந்த ஆறு ரூபாய் சில்லரைகள்தான்.

ஜோலார்பேட்டை இரயில்வே ஸ்டேசனை விட்டு வெளியே வந்து நின்றான்.

வரிசையாக டீக்கடையும், ஓட்டல்களும், பெட்டிக் கடை களும்...

வயிறு ரொம்பவும் பசித்தது.

''ஆறு ரூபாய்க்கு என்ன சாப்பிட முடியும்? டீயும் பிஸ் கெட்டும் தவிர.''

ஆனால் டீயும் பிஸ்கட்டும் பசியைப் போக்கும் என்பதில் துளியும் நம்பிக்கை கிடையாது.

இரண்டு இட்லிகளையாவது சாப்பிட்டு வயிறு நிரம்ப தண்ணீரைக் குடித்துக் கொள்ளலாம் என்று எண்ணினான்.

'கோல்டன் கபே' என்று எழுதப்பட்ட ஓட்டலுக்குள் நுழைந் தான்.

முன் எப்போதும் வந்திராத ஊர். தெரிந்த முகமென்று இருப்பதற்கு வாய்ப்பே இல்லாத ஊர்.

ஊர் எதுவாக இருந்தாலென்ன மனிதர்கள் இருக்கும்போது. மனிதர்கள் இல்லாத ஊர் இங்கே எது?

கேரள நாயரின் ஓட்டல்.

கேரளக்காரர்கள் மதனுக்குப் புதிதல்ல.

மலையாளமும் புதிதல்ல.

வயசான சர்வர் மலையாள வாடையிலான தமிழில் வாய் வழியாகவும் மூக்கு வழியாகவும் சேர்ந்தா மாதிரி ''என்னா வேணும்?'' என்றார்.

'ஒரு இட்லி என்ன விலை?' என்று மலையாளத்தில் கேட்டான்.

''ஒரு ரூபாய்.''

ஆச்சர்யப்பட்டான். இவ்வளவு பெரிய இரயில்வே ஸ்டேஷன் உள்ள நகரத்தில் ஒரு இட்லி ஒரு ரூபாயா?

ஆறு இட்லி சாப்பிட்டான்.

வயிறு புடைத்துக் கொண்டது.

ஆறு இட்லிகளைச் சாப்பிட்டு முடிப்பதற்கு முன் சர்வரிடம் பனிரெண்டு முறை பேசி விட்டான். ஊரை விசாரித்து, உறவுகளை விசாரித்து, தன் ஊரையும் தன் உறவுகளையும் கூறினான்.

கேரள நாயருக்கு எல்லா ஊரிலும் சொந்தக்காரர்கள் இருந்தார்கள்.

மதனின் ஊரான குழித்தலையில் நாயரின் சகோதரியும், சகோதரி புருஷனும் இருந்தார்கள். அவர்களைப் பற்றி நாயர் நலம் விசாரிக்க, மொத்த சங்கதியும் புட்டு புட்டு வைத்தான். ஒரு ஆப்பாயில் முட்டையும் சிக்கன் பிரையும் கொண்டு



வைத்தார். ''என்னிடம் இதுக்கெல்லாம் காசு கிடையாது'' என்றான்.

''வேண்டாம் பேசாமல் சாப்பிடு'' என்றார்.

பழம் நழுவி பாலில் விழுந்த மாதிரி.

'சேட்டா? உங்க மைத்துனருக்கு நெற்றியில் கொம்பு முளைத்த மாதிரி சதை இருந்ததே... அதை ஆபரேஷன் செய்து நீக்கி விட்டார் தெரியுமா?''

''அப்படியா? லெட்டர் கூடப் போடவில்லை. ம். இந்த முகவரி அவர்களுக்குத் தெரியவும் தெரியாது. இந்த ஓட்டலுக்கு வேலைக்கு வந்து இரண்டு வாரங்கள் தான் ஆனது. இதற்கு முன் திருப்பத்தூரில் ஒரு ஓட்டலில் வேலை செய்தேன். அங்கே லெட்டர் வந்திருக்கலாம்...''

மேலும் ஒரு ஆம்லேட் வந்தது.

வயிறு நிறைந்தது தொண்டை வரை நின்றது.

மூச்சு விடுவதற்குக் கூடச் சிரமமாக இருந்தது.

அவ்வளவு அடர்த்தியாகி விட்டது வயிறு.

''இங்கே எதற்கு வந்தாய்?'' கடைசியாக இந்தக் கேள்வியைக் கேட்டார்.

உண்மையை அப்படியே சொல்வதற்கு சுயமரியாதை தடுத்தது. ஓசியில் ஆம்லெட் ஆப்பாயில், சிக்கன் பிரை முழுங்கி விட்டு இவ்வளவு கூட சுயமரியாதை இல்லை என்றால் எப்படி?

என்ன பொய் சொல்லலாம் என்று சடாரென்று நொடியில் யோசித்து சொன்னான். ''உங்களை மாதிரிதான் சேட்டா! மனைவி குழந்தைகளை சொந்த ஊரை விட்டுட்டுப் பணம் சம்பாதிக்க இங்கே வந்து வேலை செய்யலையா அப்படித்

தான்... ஊர்ல எதுவும் வேலை இல்லை. சேட்டா மெட்ராஸ் போனா வேலை கிடைக்கும்னு புறப்பட்டு வந்துட்டேன். குருவாயூரப்பன் என்னை இங்கே இறக்கிட்டான்.''

''என்ன வேலை தெரியும்?''

''டிரைவிங்.''

''டிரைவிங்? ஓட்டல் வேலை எதுவும் தெரியாதா?''

''தெரியாது சேட்டா. டிரைவிங்கில் எக்ஸ்பர்ட்.''

''மெட்ராஸ் போகனுமா?''

''இல்லை சேட்டா வேலை கிடைச்சா இங்கே நின்னுடு வேன். டாக்சி ஓட்டுவேன்.''

''அப்படியா? வெளியே ஓட்டலுக்கு முன்னாடி நின்று கொண்டிரு நான் வர்றேன். டாக்சி ஸ்டாண்டில் சொல்லி விடறேன்.''

''ரொம்ப நன்றி சேட்டா.''

''நன்றி எதுவும் எனக்கு வேணாம். வேலை செய்தால் சரி.''

வெளியே வந்து காத்திருந்தான்.

அரை மணி நேரம் கழித்து ஓட்டலில் கூட்டம் குறைந்த போது நாயர் வெளியே வந்தார். மதனை அழைத்துக் கொண்டு டாக்சி ஸ்டாண்டிற்குப் போய், தெரிந்தவர்களிடம் மதனுக்கு வேலை கேட்டார்.

''நாயரே... டாக்ஸி ஸ்டாண்டுலே வேலை இல்லை; வேணும்னா காண்ட்ராக்டர் குமாரவேலுவிடம் அழைத்துப் போ... புதிதாகக் கார் வாங்கி இருப்பதால் டிரைவர் தேவை யாம்.''

அழைத்துப் போனார்....

மதன் டிரைவராகி விட்டான்.



ரொம்ப முக்கியமான வேலை. ரேவதியைப் பள்ளிக் கூடம் அழைத்துப் போவது.



காண்டிராக்டர் குமாரவேல் ஜோலார்பேட்டையிலிருந்த வீட்டை, வாடகைக்கு விட்டு விட்டு ஏலகிரி மலைக்கு குடித் தனம் போய் விட்டார். நிறையக் கான்டிராக்ட் ஏலகிரி மலை யில்தான் கிடைத்தது.

ரேவதி ஜோலார்பேட்டை பள்ளிக்கூடத்தை விட்டு ஏலகிரி மலை வர மறுத்துவிட்டாள். அதனால் தினமும் பஸ்ஸில் போய் வர வேண்டி வந்தது. ஆனால் பஸ்ஸை முழுமையாக நம்ப முடியாது. ஏர்பின் வளைவுகள் கொண்ட மலைப் பாதை என்பதால் பேருந்து வேகமுடன் சரியான நேரத்திற்குப் போய்ச் சேர முடிவதில்லை.

பள்ளிக் கூடத்திற்குத் தாமதமாகப் போவதும், பள்ளிக் கூடத்திலிருந்து வீட்டிற்குத் தாமதமாகத் திரும்புவதுமாக இருந்தாள்.

குமாரவேலுவிற்குச் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்து கிடைத்துவிட்டது.

கோல் உயரக் கொடி உயர வேண்டும் அல்லவா, அந்தஸ்துக் கூடும் போது அடிப்படை வசதி, கூடியே ஆகவேண்டும். லட்சாதிபதி ஆகும்போது கார், செலுலார், கம்ப்யூட்டர் என்பது அடிப்படை வசதி, கோடீஸ்வரன் ஆகும்போது குடும்பத்தி

விருக்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கார், ஒவ்வொரு பங்களா என்பது அடிப்படை வசதி.

குமாரவேலு தன்னுடைய அந்தஸ்திற்குக் கார் அவசியம் என்பதை, போதை மாதிரி மூளையில் ஏற்றிக் கொண்டார். கார் தேவைப்படுகிறதா இல்லையா என்பது பிரச்சினை இல்லை. கார் வைத்துக் கொண்டிருப்பது மரியாதை.

மரியாதைக்காகக் கார் வாங்கினார்.

ஒரே மகளும் செல்ல மகளுமான ரேவதியை பள்ளிக் கூடத்திற்கு அழைத்துப் போகவும். பள்ளிக் கூடத்திலிருந்து அழைத்து வருவதும் காரின் முக்கிய வேலை.

வயசான டிரைவரைத்தான் எதிர்பார்த்தார். ஐம்பது வயதிலிருந்து அறுபது வயதிற்குள் இருக்கும் படியாக... கிடைக்கவில்லை. வயசான டிரைவர் கிடைக்கும்வரை தற்காலிகமாக இவன் செய்யட்டும் என்று மதனை வேலையில் நியமித்து விட்டார்.

பணிவுக்கு மறுபெயர் மதன் என்கிற மாதிரி நடந்து கொண்டான். கைகளைக் கட்டிக் கொண்டு நிற்பதும் வாய் திறந்து பேசாமல் இருப்பதும் ரேவதியை அவ்வளவாகக் கண்களால் கூடப் பார்க்காமல் கண்ணியமாய் நடப்பதுமாய் இருந்தான்.

குமாரவேல் மதனை எண்ணிப் பெருமையடைந்தார்.

இடையில் ஒரு வயசான டிரைவர் வேலை கேட்டு வந்ததற்கு வேண்டாம் என்று கூறிவிட்டார். அவ்வளவு நல்ல பெயர் எடுத்திருந்தான்.

லட்சக்கணக்கில் பணத்தை வங்கியிலிருந்து எடுத்து வருவதற்கும் மதனையே நம்பி அனுப்பி வைத்தார்.

மூன்று மாதங்கள்.



மதன் முழுமையான நம்பிக்கை பெற்றுக் கொண்டான்.

நிரந்தரப் பகைவர்களும் இல்லை. நிரந்தர நண்பர்களும் இல்லை என்கிற மாதிரி நிரந்தர நல்லவர்களும் இல்லை. நிரந்தரக் கெட்டவர்களும் இல்லை.

சொந்தங்களை விட்டு, சொந்த ஊரை விட்டு ஓடி வந்த போது இனி வாழ்க்கை என்னாகும் என்கிற பயம் அவனிடத்தில் இருந்தது. ஒரு வேலை கிடைத்தபோது அதைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற ஜாக்கிரதை உணர்வு இரத்த நாளங்களில் இருக்கும். வேலை உறுதியானதாகி இனி கவலை இல்லை என்றானதும் மனம் அலை பாயத் தொடங்கி விடும்.

மதனுடைய மனமும் அலை பாய்ந்தது.

சொந்த ஊரையும், பெற்றோரையும், வீட்டையும் நினைத்துக் கொள்ளத் தூக்கம் போய்விட்டது.

ஏலகிரி மலையிலேயே சின்னதாக ஒரு அறை வாடகைக்கு எடுத்துத் தங்கிக் கொண்டிருந்தான்.

ஓட்டலில் சாப்பாடு.

முதலில் வசதியற்ற அறையாகவும், சுவையற்ற உணவாகவும்தான் தோன்ற ஆரம்பித்தது. அதன் தொடர்ச்சியாக பிடிப்பற்ற வாழ்க்கை என்பதாய் நெஞ்சைக் குத்திற்று.

மூன்று ஆயிரம் சம்பளம், ஓட்டல் பில் ஆயிரம் அறை வாடகை முன்னூறு. மிச்சமுள்ள பணம் அவனைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்க ஆரம்பித்தது.

ஏலகிரி மலையைச் சுற்றிப் பார்க்க நிறைய இளஞ்ஜோடிகள் வந்தார்கள். கண்ட இடத்தில் எல்லாம் உட்கார்ந்து கட்டியணைத்து விளையாடி மனதை மேலும் கொத்தி எடுத்தார்கள்.

ஒரு நாள் -

இரண்டு சக்கர வாகனத்தில் வந்த காதல் ஜோடி. பஸ்ஸில் மோதி சக்கரங்களில் நசுங்கி செத்துப் போக, அதைப் பார்த்து விட்ட மதனிற்குச் சுத்தமாக இரவுத் தூக்கம் போய் விட்டது. தனி அறையில் தனி ஆளாகப் படுப்பதற்கு பயந்தான்.

இரண்டு மூன்று தினங்கள், பயமும் தூக்கமின்மையும் நீடித்தது.

பகலில் காரை ஓட்டுவது சிரமமாகத் தெரிந்தது. கண்கள் எரிந்தது. புத்தி முள் வலையில் மாட்டிக் கொண்ட பறவை போல் தவித்தது.

அன்று எப்படியாவது தூங்கியே ஆகவேண்டுமென்று முடி வெடுத்தான்.

காரை ஷெட்டில் நிறுத்தி விட்டு அறைக்குப் புறப்படும் போது கால் பாட்டில் பிராந்தியும், கோழி வறுவலும் வாங்கிக் கொண்டு, ஓட்டலில் சாப்பாட்டை பொட்டலமாய்க் கட்டி எடுத்துக் கொண்டான். ஒரு பாக்கெட் - சிகரெட்.

அன்று பாதி இரவு கவலைகளற்று பிணம் போல் தூங் கினான்.

நள்ளிரவு இரண்டு மணிக்கு விழிப்பு வந்தது. அதற்குமேல் தூங்க முடியவில்லை. மிச்சமிருந்த சிகரெட்டை ஊதித் தள்ளி னான்.

மறுநாள் அரை பாட்டில் பிராந்தி.

இரண்டு முறை குடித்தான்.

அப்படியே தொடர்ந்தது.

நாள் ஒன்றுக்கு நூற்றியம்பது ரூபாய் பிராந்திக்கும், சிக ரெட்டுக்கும் இருப்பு காசு இரண்டு மாதங்களுக்குத் தாங்கிற்று.

மூன்றாம் மாதம் பதினைந்து நாட்கள்தான் காசிருந்தது.



குடிக்காமலும் இருக்க முடியவில்லை.

சம்பளம் வாங்கித் தருவதாகக் கூறி பிராந்திக் கடையில் கடன் வைத்தான்.

சம்பளம் வாங்கி பிராந்திக் கடைக்கு மட்டும்தான் கடன் செலுத்த முடிந்தது. ஓட்டல் பாக்கியும், அறை வாடகையும் தர முடியவில்லை. அடுத்த மாதம் சேர்த்துத் தருவதாகக் கூறினான்.

அடுத்த மாதம் சம்பளம் வாங்கின போதும் பிராந்திக் கடை பாக்கிக்குத்தான் சரியாகப் போனது.

அறை வாடகைக்கும், ஓட்டல் பாக்கிக்கும் வேறு இடத்தில் வட்டிக்கு கடன் வாங்கினான்.

மாதம் தவறாமல் கடன் வாங்க வேண்டியதாயிற்று.

முழு நேர குடிகாரனாகவும் மாறிப் போனான்.

பேண்ட் பாக்கெட்டில் பிராந்தி பாட்டில் வைத்துக் கொண்டு, கொஞ்ச கொஞ்சமாய், தனிமை கிடைக்கும் போதெல்லாம் குடித்தான்.

யாரிடமும் அதிகம் பேச்சுக் கொடுக்காமல் தானுண்டு தன் வேலையுண்டு என்றிருந்தாலும் பகலில் அதிக போதை இல் லாமல் குடித்ததாலும் மதன் குடிகாரனாய்த் தெரியவில்லை.

நல்லவனாகவே இருந்தான்.

ஆறு மாதங்களில் கடனின் தொகை ஏறிக் கொண்டு போய் விட்டது.

ஐம்பதாயிரம்.

பணம் கொடுத்தவன் திருப்பிக் கேட்டு நச்சரித்தான்.

பணம் பெரிய பிரச்சினையாகி விட்டது.

பணம் வேண்டும்.

பணம் வேண்டும். பணத்திற்கு என்ன வழி?

குறுக்கு வழியால்தான் முடியும் என்று புத்தி சொன்னது அதிலும் குற்ற வழி.

மிதமாய்க் குடித்துவிட்டு யோசித்தான்.

கொள்ளையடித்தால்தான் அவ்வளவு பணம் கிடைக்கும்.

அவனுக்குத் தெரிந்த ஒரே வீடு முதலாளி வீடுதான். குமாரவேல் வீட்டில் கொள்ளையடிப்பது சாதாரண விஷய மல்ல. மேலும் அவர் வீட்டில் பணத்தை வைப்பதில்லை. பேங்கில்தான்.

'பேங்கிலிருந்து பணம் எடுத்து வர அனுப்பும்போது அதைக் கையாடிவிட்டால்..'

'அத்தோடு ஓட வேண்டியதுதான்.... விஷயம் வெளியே தெரியாமல் மாட்டிக் கொள்ளாமல் செய்ய வேண்டும். பேங்கிலிருந்து எடுத்து வரும் பணத்தை கையாடி விட்டால் சுலபமாகத் தெரியும் அதுமட்டுமில்லை. ஐம்பதாயிரத்துக்குள் தான் செக் தருகிறார். செய்றதைச் செய்றோம். பெரிய அமௌண்ட்டாகச் செய்ய வேண்டும். ஐந்து லட்சம் பத்து லட்சம் இப்படி....

'ஐந்து லட்சம்... பத்து லட்சமா?'

'ஆமா, எனக்கு அது பெரிய தொகை குமாரவேலுக்கு சின்னத் தொகை.'

'என்ன வழி?'

'ஒரே வழிதான் இருக்கு. ரேவதியைக் கடத்திட்டு போய், மிரட்டிப் பணம் கேட்கணும்.'

'அய்யய்யோ... உண்ட வீட்டுக்குத் துரோகம் இல்லையா?'



'துரோகம்தான் வேற வழி இல்லையே..'

'கான்ட்ராக்ட்ல சம்பாதிச்ச காசுதானே.... மூட்டை தூக்கி, கூலி வேலை செஞ்சா சம்பாதிச்சான்.'

அவன் செய்யத் துணிந்த குற்றத்திற்கு அவனே சமாதானம் செய்து கொண்டான்.

தனி நபராய்ச் செய்ய முடியாது என்கிற கேள்வி அடுத்து உண்டானது.

துணைக்கு யாராவது அவசியம் வேண்டும்.

ஊரிலிருக்கும் பழைய நண்பனைக் கடிதம் எழுதி வரவழைத் தான்.

அவன் பெயர் சேனாதிபதி. சேனா என்று அழைப்பார்கள். அவனும் டாக்ஸி டிரைவர் தான். பண நெருக்கடி ஏற்படும் போது சின்னச் சின்னக் குற்றங்கள் செய்திருக்கிறான். வழிப் பறி. இரவு நேரப் பயணிகளிடம் வாட்ச் மோதிரம். செயின் போன்றவற்றைப் பறிப்பது.

சேனாவும் அதிகமான உயரம், மாநிறம், நீளமான கழுத்து, எப்பவும் இளந்தாடி அழகுக்காக பிரேம் இல்லாத கண்ணாடி அணிந்திருந்தான்.

இரண்டு நாள் இரவுகள் அறையில் உட்கார்ந்து திட்டம் போட்டார்கள்.

அதன்படி.

ஜோலார்பேட்டை அருகே ஒதுக்குப் புறமாய்த் தனியாய் இருக்கும் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்தார்கள், ரேவதியை கடத்திக் கொண்டு போய் மறைத்து வைப்பதற்காக.

அன்று திங்கட்கிழமை.

ரேவதியை அழைத்துக் கொண்டு போய் வழக்கம்போல் பள்ளிக் கூடத்தில் விட்டான்.

பள்ளிக் கூடம் ஆரம்பித்த அரைமணி நேரம் கழித்து, ஜோலார்பேட்டை ஜங்ஷனுக்கு அருகிலிருந்த டெலிபோன் பூத்திலிருந்து பள்ளிக் கூடத்திற்கு போன் செய்தான்.

தலைமையாசிரியர்தான் போனை எடுத்தார்.

'மேடம்! உங்க ஸ்கூல்ல ப்ளஸ் டூ படிக்கும் கே.ரேவதி யோட அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக், ஸீரியஸா இருக்கார். ரேவதியைக் கொஞ்சம் அனுப்பி வைங்க... கார் அனுப்ப முடியாது. அவரை ஆஸ்பிட்டல் கொண்டு போறோம். பஸ்ல திருப்பத்தூர் ஜி.எச்.சுக்கு வரச் சொல்லுங்க...''

''நீங்க யார் பேசறது?''

''நானா, ரேவதியோட அப்பாகிட்ட வேலை செய்றேங்க மேஸ்திரி.''

''பேர்.''

''செங்கல்ராமன்.''

வகுப்பில் உட்கார்ந்து பாடம் கவனித்துக் கொண்டிருந்த ரேவதியை அழைத்து விபரங்கள் சொல்லி அனுப்பி வைத்தார் தலைமையாசிரியை.

ரேவதி பதட்டத்துடனும், துக்கத்துடனும் பஸ் ஸ்டாண்ட் நோக்கி ஓடினாள்.

அங்கே காரில் மதன் காத்திருந்தான்.

''வா ரேவதி!'' கார் கதவைத் திறந்து விட்டான்.

''அப்பா... அப்பா...'' ரேவதியால் பேசவும் முடியவில்லை. ''அப்பா எப்படி இருக்கார். எங்க இருக்கார்?'' காரில் ஏறி உட்கார்ந்தாள்.

''டாக்டர் கிட்ட சேர்த்திருக்கோம். திருபத்தூர் ஆஸ்பிட்டல் போறவரைக்கும் தாங்க மாட்டார்னு இங்கேயே ஒரு டாக்டர் கிட்ட சேர்த்திருக்கோம். புது டாக்டர்.''



ரேவதிக்குத் துக்கம் பீறிட்டது.

'கடவுளே! அப்பாவைக் காப்பாத்து ஹார்ட் அட்டாக்குனு சொல்றாங்களே... என்ன ஆகுமோ... கடவுளே!'

கார் விரைந்தது.

இரயில்வே கேட்டில் அரை மணி நேரம் லேட்டாக வந்த பிருந்தாவனத்திற்காக ஐந்து நிமிடம் கார் நிற்க வேண்டி இருந்தது. ஒவ்வொரு நொடியும் ரேவதி மனம் படாத பாடு பட்டது.

பிருந்தாவனம் கடந்ததும். ''சீக்கிரம் மதன் அண்ணா... சீக்கிரம்'' என்றாள்.

மதனை எப்போதும் அண்ணா என்றுதான் அழைப்பாள் மரியாதைக் குறைவாக 'ஏய் டிரைவர்' இப்படிப் போ! அப்படிப் போ என்றெல்லாம் பேசினதில்லை.

ரேவதி அதிகமாக வாய் திறந்தும் பேசுவதில்லை. காரில் பயணம் செய்யும் போது கூடப் புத்தகத்தை பிரித்து வைத்துக் கொண்டு வாசித்து வருவாள். இல்லையென்றால் காரின் கண்ணாடிக் கதவுகளை திறந்து வைத்துக் கொண்டு ஏலகிரி மலையின் எழில் கொஞ்சம் இயற்கை அழகை ரசித்துக் கொண்டு போவாள்.

இரயில்வே கேட்டைக் கடந்ததும் கார் வேறு திசையில் போவதை உணர்ந்து' என்ன மதனண்ணா இந்தப் பக்கம்!' என்றாள்.

''இங்கதாம்மா டாக்டர் இருக்கார். புது டாக்டர்''

''எனக்குத் தெரிஞ்சி இந்த பக்கம் வீடுகளே இல்லையே...''

''புதுசா உருவாகி வருதும்மா..? சந்தோஷ் நகர்னு பேர். டாக்டர் அங்கதான் வீட்டைக் கட்டி இருக்கார்.''

மதன் மீது ரேவதிக்கு சந்தேகம் உண்டாகவில்லை. அத னால் அவன் சொன்னதை நம்பினாள்.

'வேகமா போ மதன் அண்ணா!'' என்றாள்.

மதனுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. 'எத்தனை நம்பிக்கையோடு மறுப்புச் சொல்லாமல் வருகிறாள். அண்ணா என்று அழைக்கிறாள். இவளைக் கடத்திப் போகிறோமே...' என்று.

''என்ன செய்வது பணத்திற்கு வேறு வழி இல்லை. கடன் கொடுத்தவன் சித்ரவதை செய்கிறான்.

கார் அந்த வீட்டின் முன்பு நின்றது.

''இங்கதாம்மா.''

ரேவதி அவசரமாக கார் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

தனி வீடு.

ஒரு டாக்டர் குடியிருக்கும் வீடு போலவே அது இல்லை.

கார் வந்த மண்சாலைக்கு மேற்கே இரயில்பாதை இருந்தது. மண் சாலைக்குக் கிழக்கே அந்த வீடு. வீட்டை ஒட்டிப் பெரிய அளவில் கொய்யாத் தோப்பு. தோப்பின் காவல்காரன் தங்கு வதற்கான வீட்டைப் போலவே இருந்தது.

''வாம்மா... உள்ளே போகலாம்.''

''இது ஆஸ்பிட்டல் போலவே தெரியவில்லையே...''

''ஆஸ்பிட்டல் கிடையாது. டாக்டர் தங்கி இருக்கிற வீடு... உள்ளே வந்து பாரேன்.''

அப்போது கூட துளிச் சந்தேகம் வரவில்லை அவளுக்கு.

மதன் முன்னே நடக்க அவனைத் தொடர்ந்து ரேவதி நடந்து போனாள்.

உள்ளுக்குள் சங்கடம் இருக்கத்தான் செய்தது மதனுக்கு.



மனதில் கொடூரமான தைரியத்தை வரவழைத்துக் கொண்டான்.

ரேவதி உள்ளே வரும்வரைக் காத்திருந்தான். வந்ததும் ஓங்கித் தலையில் இடி இறங்கின மாதிரி ஒரு அடி வைத்தான். அடுத்த நொடி மயங்கிச் சரிந்தாள்.

சேனா உள்ளறையிலிருந்து வந்தான். ரேவதியைப் பார்த்து பார்வையை அகலமாக்கி ''லட்டு! லட்டு மாதிரி இருக்காடா...'' என்றான்.

''தப்பான பார்வையில் பாக்காத... பாப்பாவைப் பத்திரமா சேர்த்துரணும். பணம் மட்டும்தான் நமக்கு முக்கியம்.''

''சரிம்மா.''

''நான் அரை மணி நேரத்துல ஏலகிரி மலைக்குப் போய் சேர்ந்துடுவேன். இன்னும் ஒரு மணி நேரம் கழிச்சு போன் பண்ணணும். இந்த நெம்பருக்கு.'' வெள்ளை சீட்டில் நெம்பர் எழுதிக் கொடுத்தான். ''இது குமாரவேலோட ஆபீஸ் நெம்பர். அவர்தான் பேசறாரான்னு கன்பார்ம் பண்ணிட்டுப் பேசணும். 'உன் பொண்ணைக் கடத்தி கொண்டு வந்து வைச்சிருக்கேன். பத்து லட்சம் ரூபா தந்தாத்தான் விடுவிப்பேன். பணத்தை எந்த இடத்தில் கொடுக்கணும்னு நான் அடுத்த போன் பண்றேன்னு சொல்லிவிட்டுப் போனை வைச்சிரு. குமாரவேல் ஸ்கூலுக்குப் போன் பண்ணி கடத்தினது நிஜமான்னு தெரிஞ்சுக்குவார். போலீசுக்குப் போலாமான்னு யோசிப்பார். போலீசுக்குப் போனா உன் பொண்ணை உயிரோட பாக்க முடியாதுன்னும் எச்சரிக்கணும்..''

''சரிம்மா..''

''புறப்படறேன். உனக்கு அப்பப்போ போன் பண்ணி தகவல் சொல்றேன்?

'சரிம்மா.'

''ரேவதி பத்திரம். என் தங்கச்சி மாதிரி.''

''போடா டைலாக் பேசாத. உனக்குத் தங்கச்சின்னா எனக்கு கல்யாணம் பண்ணிக்கிற முறையாகுது.''

''பல்லைப் பேத்துருவேன்.''

''போ மச்சி, பாப்பா பத்திரமா இருப்பா.''

மதன் காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

மிக வேகமாய்ப் பறந்து ஏலகிரி மலைக்குப் போனான். குமாரவேல் ஆபீஸில் உட்கார்ந்து இருந்தார். நல்லபிள்ளை மாதிரி காரை ஷெட்டில் நிறுத்தி விட்டு ஆபீஸில் உட்கார்ந்தான்.

நெஞ்சில் மணி அடிக்க, சேனா குமாரவேலுவிற்கு பண்ணப் போகும் போனிற்காகக் காத்திருந்தான்.

இடையில் பல போன்கள்.

பன்னிரெண்டு மணிக்குச் சரியாக சேனாவின் போன். போனில் விஷயம் கேட்கக் கேட்க குமாரவேல் முகம் இறுகிற்று.

போன் துண்டிக்கப்பட்டது.

குமாரவேல் மதனை நோக்கினார்.

''ரேவதியை ஸ்கூல்ல விட்டுட்டு வந்தியா?'' வடிந்த குரலில் கேட்டார்.

''ஆமா ஸார்!'' என்றான். மனதின் நடுக்கத்தை வெளிக்காட்டாமல் ஸ்கூலுக்குப் போன் செய்தார்.

தலைமையாசிரியைதான் பேசினார். ''உங்களுக்கு ஹார்ட் அட்டாக்குனு போன் வந்தது ஸார். எப்படி அனுப்பி வைக்காம இருக்க முடியும்?''



ஒன்றும் புரியாமல் தவித்தார். ஒரே மகள், ஆசை மகள்.

வேதனை தாங்க முடியாமல் கண்ணீர் இறங்கிற்று. மனைவிக்குத் தெரிந்தால் அவ்வளவுதான் தவமிருந்து பெற்ற குழந்தை. அழுதே செத்து விடுவாள்.

வெளியே பொது ஜனங்களுக்கு தெரிந்தாலும் அவமானம். ரேவதிக்குக் கல்யாணம் ஆக வேண்டி இருக்கிறது.

பணத்தை தந்து விடுவது என முடிவு செய்தார்.

சேனாவிடமிருந்து அடுத்து போன் வந்தது.

''சொல்லு! என் பொண்ணு பத்திரமா இருக்கட்டும். எவளோ பணம் வேணும்?''

''பத்து லட்சம்.''

''பெரிய தொகை.''

''தொகை பெரிசா? உன் பொண்ணு...?''

''என் பொண்ணும் முக்கியம்தான்...''

''பேரம் பேசாம பணம் கொண்டு வா''

''எங்கே வரட்டும்?''

''நீ வராத, உன் டிரைவர் கிட்ட பணத்தைக் கொடுத்து கார் அனுப்பு உன் பொண்ணை அனுப்பி வைக்கிறேன்.''

''சரி!''

மதனிடம் பணத்தைக் கொடுத்து அனுப்பினார்.

மதன் மனதில் பெரிய உற்சாகம் ரொம்ப ஈஸியாக பணம் கைக்கு வந்து விட்டது.

பத்து லட்சம்.

'சேனாவுக்கு ஐம்பதாயிரமோ, ஒரு லட்சமோ, தந்து விட்டு அனுப்பி விட வேண்டும் ரேவதிக்குக் கொஞ்சம் கொஞ்சம்

கார் ஓட்டத் தெரியும் காரை அவளிடம் கொடுத்து அனுப்பி விட்டு பணத்தை எடுத்துக் கொண்டு எங்கேனும் வெளியூர் போய் பிழைத்துக் கொள்ளலாம்.' கற்பனை செய்ய இனித்தது.

காரை வேகமாக இயக்கினான்.

அந்த வீட்டை அடைந்தான்.

உள்ளே நுழையும்போது ரேவதியின் பயங்கரக் கதறல் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

ரேவதியின் உடைகளை பிரித்து விட்டு கைகளையும் கால் களையும் கட்டிப் போட்டு விட்டு மிருகமாய் வதைத்துக் கொண் டிருந்தான் சேனா.

மதனிற்கு இரத்தம் பொங்கிற்கு. அங்கிருந்த கட்டையை எடுத்து சேனாவின் தலையில் போட்டான். சேனா செத்துப் போனான்.

ரேவதியைக் காப்பாற்றி காரில் கொண்டு போய் சேர்த்து விட்டு, காவல் நிலையம் போய் சரண்டர் ஆனான்.

பின் சிறையில் இருக்கிறான்.



## 6



**வா**ழ்க்கையில் ஏற்படும் சில சம்பவங்கள் ஞாபகத்தில் இல்லாமல் கனவைப் போல் கரைந்து போகும். மறந்து போகும்.

ரேவதி வாழ்க்கையில் நடந்த இந்தச் சம்பவம் மறக்கக் கூடியது அல்ல.



மூன்று மாதங்கள மருத்துவ மனையில் தங்கி உடம்பை கவனிக்க வேண்டி இருந்தது.

இப்போது நினைத்தாலும் ரேவதிக்கு உடம்பு அதிர்ந்து விடுகிறது.

'கடவுளே...!'

'எப்படிப்பட்ட மிருகத்தனம் அது.'

கைகளையும், கால்களையும் கட்டிப் போட்டு விட்டு, உடல் மொத்தத்தையும் கடித்துக் குதறி விட்டான். நாயிடம் அகப்பட்ட பசுவின் பிணத்தைப் போல, கழுகிடம் அகப்பட்ட கன்றின் மாமிசம் போல ரேவதி அந்தக் கொடியவனிடம் மாட்டிக் கொண்டாள்.

மதன் வருவதற்குக் கொஞ்சம் தாமதமாகி இருந்தாலும் செத்துப் போயிருப்பாள்.

இரத்தத்தில் தோய்த்து எடுக்கப்பட்ட மல்லிகைச் செண்டு போலிருந்தாள்.

உருட்டுக் கட்டையை எடுத்து சேனாவின் உயிர் பிரியும் வரை ஓங்கி ஓங்கி அடித்து விட்டு, ரேவதியின் கைக் கட்டு களையும் கால் கட்டுகளையும் அவிழ்த்து விட்டு உடைகளை எடுத்துப் போட்டான்.

'மன்னிச்சிரு ரேவதி, இப்படி நடக்கும்னு நான் எதிர் பார்க்கலை பணத்துக்கு மட்டும்தான் ஆசைப்பட்டேன். இந்தப் பாவியை மன்னிச்சிடும்மா'' அங்கேயே ரேவதியின் கால் களைப் பிடித்துக் கொண்டு கதறினான்.

குற்றுயிரும், கொலை உயிருமாய் இருந்த ரேவதி பேசுவ தற்குக் கூட பலம் இல்லாமல் கண்ணீர் வடித்தாள்.

காரில் அள்ளிப் போட்டுக் கொண்டு, ஏலகிரி மலை வந்து வீட்டின் முன் காரை நிறுத்தி விட்டு நேரே போலீஸ் ஸ்டேஷன் போய் விட்டான்.

ரேவதியின் எதிர்காலம் பாழாகி விடும் என்றென்னிய குமாரவேல் ரேவதி கடத்தப்பட்ட விஷயமோ, சேனாவால் சீரழிக்கப்பட்ட விஷயமோ வெளியில் சொல்ல வேண்டாம் என்று மதனிடம் கேட்டுக் கொண்டார்.

மதன் சேனாவைக் கொலை செய்ததாக மட்டும் கூறி போலீஸில் சரணடைந்தான்.

ஆயுள் தண்டனைக் கைதியாய் சிறையில் இருக்கிறான்.

ரேவதி பள்ளிக் கூடத்தை விட்டு அத்தோடு நிறுத்தப் பட்டாள். அவளுக்கும் மேற்கொண்டு பள்ளிக்கூடம் போக விருப்பமில்லை. பள்ளிக்கூடம் என்றில்லை வீட்டை விட்டு வெளியில் வரவே பிடிக்கவில்லை.

ஒரு கைதியைப் போல் வீட்டுக்குள் அடங்கி இருந்தாள்.

நான்கைந்து வருடங்கள் நகர்ந்து ஓடி விட்டது.

ரேவதிக்குக் கல்விதான் இல்லை என்றாகி விட்டது. டாக்டராக்க வேண்டும் இஞ்சினியராக்க வேண்டும் என்று எப்படியொரு கனவினை நெஞ்சில் வளர்த்திருப்பார். ஆசைகள் எல்லாம் தீயில் விழுந்து சாம்பலாகிவிட்டது.

கல்யாணமாவது சிறப்பாகச் செய்ய வேண்டும். கல்யாண வாழ்க்கையிலாவது ரேவதி சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று மாப்பிள்ளை தேட ஆரம்பித்தார்.

ரேவதி மறுத்தாள்

''எனக்குக் கல்யாணம் வேணாம்பா.''

''அப்படியெல்லாம் சொல்லாத ரேவதி. உன்னை இப்படியே பட்டுப் போன செடியைப் பாக்கிற மாதிரிப் பார்த்திட்டு



இருக்கணுமா? எதையும் மனசுல நினைச்சுட்டு வருந்திட்டு இருக்காதே... அது ஒரு விபத்து. அது ஒரு கனவு மறந்துடு''

''என்னால் மறக்க முடியலைப்பா...''

''மறக்கணும்னா ஒரே வழி கல்யாணம்தான். கணவன் குழந்தைகள்னு ஆயிட்டா எல்லாம் மறந்து போயிடும்.''

''எனக்கு வேணாம்பா.''

''எனக்கு வேணும்மா ரேவதி. நான் நாலைஞ்சி குழந்தைகளைப் பெத்துக்கலை. எனக்கு நீ மட்டும்தான். என்னுடைய வாரிசுகள், என்னுடைய சந்ததிகள் உன் மூலம்தான் உருவாகணும். என் பேரப்பிள்ளைகளை நான் பார்த்தே ஆகணும்.''

அப்பாவோடு அம்மாவும் சேர்ந்து அழ, மறுக்க முடியவில்லை.

மௌனமாய் இருந்தாள்.

அப்பா அலுவலகம் சென்றதும் அம்மா மட்டும் தனியாக இருக்கும் போது, அருகே சென்றாள் ரேவதி.

'அம்மா!''

''என்ன ரேவதி!''

''அப்பாதான் எனக்குக் கல்யாணம் பண்ணணும்னு முனைப்பா இருக்கார்னா நீங்களுமா?''

''ஏம்மா ரேவதி அப்பாவுக்கு ஆசை இருக்கிற மாதிரி எனக்கும் ஆசை இருக்காதா? செத்து இன்னொரு பிறவி எடுத்ததா நினைச்சுக்கோ ரேவதி.''

''நான் வேணும்னா இன்னொரு பிறவி எடுத்ததா நினைச்சுக்கலாம் அம்மா என் உடம்பு மறுபிறவி இல்லையே. அதே தானே... உடம்பிலிருக்கிற வடுக்களை எப்படிம்மா மறைக்க முடியும்? சொல்லும்மா... வடுக்களை மறைக்க முடியாதும்மா புருசன் கிட்ட உடம்பையும் மறைக்க முடியாது.''

ரேவதியின் இந்தச் சொற்களால் அம்மா ஆடி விட்டாள்.

நிஜம்.

எந்த மனைவியும் எந்தப் புருசனிடமும் உடம்பை மறைக்க முடியாது.

மனதை வேண்டுமானால் மறைத்து விடலாம். உடம்பை மறைக்க முடியாது.

அம்மா இந்த நெருடலான தகவலை அப்பாவிடம் கூறினாள்.

குமாரவேல் சென்னை, ஐதராபாத், பெங்களூர் என்று பெரிய பெரிய மருத்துவனைகளுக்கு ரேவதியை அழைத்துப் போனார்.

உடம்பில் சில இடங்களுக்கு திரவ மருந்து.

சில இடங்களுக்கு பிளாஸ்டிக் சர்ஜரி.

இப்படி பல வைத்தியங்கள்.

மருத்துவம் என்பது என்னதான் முன்னேறினாலும் ஒரு நோய்க்குச் சாப்பிடும் மருந்தினால் இன்னொரு நோய் உருவாகக் கூடியதாகவே இருக்கிறது.

மாத்திரைகளாலும் மருந்தாலும் ரேவதிக்கு அலர்ஜிதான் உண்டானது.

உடம்பின் மற்ற இடத்தில் கொப்புளம் போடுவதும், சீழ் வடிவதுமாக ஆனது. சுத்தமாக எல்லா மருத்துவத்தையும் நிறுத்திவிட்டு அமைதியாகி விட்டார்கள்.

அதுதான் ரேவதியை நடுங்க வைத்தது.

உள்ளது உள்ளபடி உண்மையைக் கூறி திருமணம் செய்து வைப்பது என்று முடிவு செய்தார். பெண் பார்க்க வந்த மாப்பிள்ளைகளிடம் நடந்தது நடந்தபடி உண்மையைக் கூறினார்.



போய் தகவல் கூறுகின்றேன் என்று போய் விட்டார்கள். திரும்பவில்லை.

ஆயிரம் பொய் சொல்லி கல்யாணம் ஃபார்முலாவை பயன் படுத்துவது தான் ஒரே வழி என்று இனி அந்த விஷயத்தை யாருக்கும் சொல்லக் கூடாது என்று முடிவெடுத்தார்கள்.

தமிழரசன் ரேவதியைப் பெண் பார்க்க வந்தான். பார்த்த மாத்திரத்தில் அவனுக்குப் பிடித்து விட்டது. இவர்களுக்கும் பிடித்து விட்டது.

பொய் எதுவும் சொல்லவில்லை.

உண்மையைத்தான் சொல்லாமல் மறைத்தார்கள்.

திருமணம் நடந்தது.

ஆரம்பத்தில் ரேவதி பயந்தாள்.

இருட்டில் மட்டும்தான் கணவனோடு கூடினாள்.

தமிழரசனின் நீண்ட நாள் கெஞ்சலுக்குப் பிறகு இலேசான வெளிச்சத்தை தருகிற விளக்குக்கு மட்டும் சம்மதித்தாள்.

வடு மார்பில் மட்டுமில்லை. மார்பறைக்குள்ளிருந்தும் ரேவதியை வாட்டிக் கொண்டிருக்கிறது.

மூன்று ஆண்டுகள் எந்தப் பிரச்சினையுமின்றி ஓடிப் போய் விட்டது.

கூடை கூடையாய் சந்தோஷம்.

தமிழரசன் உயிரையே வைத்திருக்கிறான்.

ஒரு இரவு கூட அவனால் பிரிந்திருக்க முடியவில்லை.

'ரேவதி, ரேவதி...' என்று ஜெபித்துக் கொண்டிருக்கிறான்.

அந்த மோசமான சம்பவத்தைக் கொஞ்சமாய் மறந்தும் இருக்கிறாள்.

சுத்தமாய் மறக்க வேண்டும் என்று நினைக்கிறாள்.

எப்படி முடியும்?

மனதைச் சாகும் வரை மறைக்கலாம். உடம்பை எப்படி மறைக்க முடியும்? குறிப்பாகக் குழந்தை பிறந்து விட்டால் எப்படி மறைக்க முடியும்?

ரேவதிக்கும் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கொள்ளை ஆசை இருக்கிறது.

குழந்தை பிறந்தால், குழந்தைக்குப் பால் கொடுத்தே ஆக வேண்டும். அப்போது தமிழரசன் பார்க்க வாய்ப்பிருக்கிறது. பார்த்தால் சந்தேகம் வரும். எப்படி இந்த வடுக்கள் என்று கேள்வி கேட்பான். என்ன சொல்ல முடியும்?

ஊரிலிருந்து வந்த மாமியார் கண்டிப்புடன் கூறிவிட்டுப் போய் விட்டார்.

'இன்னும் பத்து மாசத்துல குழந்தை வேணும்' என்று. ரேவதிக்கு ரொம்பக் குழம்பிற்று.

தமிழரசனும் சொல்லி விட்டான்.

"ஆமாம் ரேவதி! நான் ஆபீஸ் போயிட்டா நீ தனியா வீட்ல இருக்கே ஒரு பேபி இருந்தா அதோட பொழுது கழியும். எனக்கும் குழந்தை ஆசை வந்தாச்சு" குதித்தான்.

ரேவதிக்கு ஒன்றும் புரியவில்லை.

அப்பாவுக்கு போன் போட்டாள்.

"அம்மாவை அழைச்சிட்டு உடனே வாங்கம்மா... முக்கிய மான விஷயம்."

அன்று மாலையே குமாரவேல் மனைவியை அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தார்.



தமிழரசன், மாலை நேரம் என்பதால் வீட்டில்தான் இருந் தான். ஆபீஸிலிருந்து அப்போதுதான் வந்திருந்தான்.

"வாங்க மாமா! வாங்க அத்தை!" இன்முகத்தோடு வர வேற்றான்.

ஆனாலும் மனதில் சங்கடம் இருந்தது.

'இப்பத்தான் அம்மா போனாங்க... அதுக்குள்ள மாமியாரும், மாமனாரும் வந்துட்டாங்களே... பொழுது சாய வந்த மழை யும், விருந்தாளியும் போகாதுன்னு சொல்வாங்க... ராத்திரி தனிப் படுக்கைதான்' மனதில் - புலம்பினான்.

"என்ன மாமா போன் கூட பண்ணாம திடீர்னு.."

ரேவதி வரச் சொல்லி போன் செய்ததை அவர் கூற வில்லை.

"உங்களைப் பார்க்கணும்னு ஞாபகம் வந்துச்சுப்பா... வந்துட்டோம்."

சற்று நேரத்தில் காபி கொண்டு வந்து கொடுத்தாள் ரேவதி.

காபி பருகினதும் சமையலறையிலிருக்கும் ரேவதியுடன் பேசுவதற்கு அம்மா நுழைந்தாள்.

மெல்லிய குரலில் கேட்டாள். "என்ன ரேவதி. எதுக்கு அவசரமா வரச் சொல்லி போன் பண்ணே?"

"விரிவா பேசணும்மா... ராத்திரி படுக்கையில் பேசலாம். இல்லேன்னா நாளைக்கு அவர் ஆபீஸ் போனதும் பேசலாம்."

"என்ன விஷயம் சொல்லு ரேவதி? எனக்கு மனசுக்கு கஷ்டமா இருக்கு"

'பெரிசாக் கஷ்டப்படற மாதிரி ஒன்னுமில்லைம்மா, ராத்திரி தூங்கும்போது பேசிக்கலாம்."

அதற்கு மேல் அப்போது ஏதும் கேட்கவில்லை.

இரவு ஒன்றாக அமர்ந்து உணவை முடித்தார்கள். அதன் பிறகு ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

சினிமா, அரசியல், கார்கில் போர், நடந்து முடிந்த உலகக் கோப்பைப் போட்டி எல்லாம் பேசி முடித்து விட்டு படுக்கப் போனார்கள்.

தமிழரசனும், குமாரவேலுவும் மாடி அறைக்குப் போனார்கள்.

ரேவதியும், அம்மாவும் கீழ் அறையிலேயே படுத்துக் கொண் டார்கள்.

''இப்போ சொல்லு ரேவதி, என்ன விஷயம்?''

''எங்க மாமியார் ஊர்ல இருந்து வந்தாங்கம்மா.''

''வந்து...?''

''பெரிசா ஒரு குண்டு போட்டிருக்காங்க...''

''குண்டா... என்ன குண்டு?'' சின்னதாக அதிர்ந்தது அம்மாவின் முகம்.

''இன்னும் பத்து மாசத்துல குழந்தை வேணும்னு கண்டிஷன் போட்டிருக்காங்க...''

அம்மாவின் முகம் திடீரென மலர்ந்து கொண்டது.

''இதுதானா குண்டு?'' புன்னகைத்துக் கொண்டே கேட்டாள்.

''ஆமாம்மா.''

''நானும் அதே குண்டைத்தான் போடப் போறேன். இன்னும் பத்து மாசத்துல குழந்தை பெத்துக்க...''

''அம்மா''

''ஆமா ரேவதி ஒரு பெண் தாயாகும் போதுதான் முழுமை யடையறாள்''



''எனக்கும் புரியுதும்மா... முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா?''

''நீ ஒண்ணும் முடம் இல்லை ரேவதி.''

''என்னம்மா புரியாமப் பேசற...''

''என்ன புரியணும்?''

''மூணு வருஷமா மறைச்ச விஷயம் தெரிஞ்சிடாதா?''

''என்ன தெரிஞ்சிடும். குழந்தை.... பிறந்தா எப்படித் தெரியும்?''

''என் உடம்புல இருக்கிற காயம், வடு எதுவும் அவர் பார்த்ததில்லை. குழந்தை பிறந்தா பார்க்க வாய்ப்பிருக்கும். அதாவது குழந்தைக்கு பால் தரும்போது பார்க்க மாட்டாரா?''

அம்மா பெரிதாகச் சிரித்தாள்.

''என்னம்மா சொல்ற?''

''நீ சொல்றது சிரிப்பாத்தான் இருக்கு. மிரண்ட கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாத் தெரியுமாம். அப்படித்தான் இருக்கு நீ சொல்றதும்... கல்யாணமாகி மூணு வருஷம் ஆகுது. இன்னும் உன் உடம்பை மாப்பிள்ளை பார்க்கலைங்கிறது ஆச்சரியமா இருக்கு. ஒரு வேளை விரதம் இருக்கீங்களா?''

''இல்லைம்மா நான் லைட்டைப் போட விடறதில்லை.''

அம்மா சற்று மௌனமாக இருந்தாள்.

''பயப்படாத ரேவதி. தைரியமா குழந்தை பெத்துக்க... ஏழாம் மாசத்திலேயே சீமந்தம் பண்ணி அழைச்சிட்டு போயிடு வோம். குழந்தை பிறந்ததும் ஆறு மாசம் அங்கதான்... ஆறு மாசத்துல குழந்தைக்கு பால் மறக்கடிச்சிடலாம். சும்மா ஃபீல் பண்ணாத...'' அம்மா தைரியம் கூறினாள்.

நன்னடத்தைக் காரணமாக தண்டனை குறைக்கப்பட்டு மதன் விடுதலை ஆனான்.

அவன் மனதில் முழுக்க ரேவதி எப்படி இருக்கிறாள் என்ற சிந்தனைதான் ஓடிற்று.



## 7

மறுநாள் காலை.

குமாரவேல் தம்பதிகள் புறப்படத் தயாரானார்கள்.

''என்ன மாமா ராத்திரிதான் வந்தீங்க, காலையிலேயே போறேன்னு சொல்றீங்களே... ஒரு வாரம் இருந்துட்டுப் போங்க...''

இப்போதே புறப்பட்டுப் போனால் போதும் என்றிருந்தது. சும்மா மேல் பூச்சுக்கு அப்படிச் சொன்னான்.

''எங்கேப்பா நிற்கிற மாதிரி இருக்கு? இருக்க இருக்க வேலை பளு அதிகமாயிட்டே போகுது. நாங்க புறப்பட றோம். நீங்க ரெண்டு பேரும் ஊருக்கு வாங்க.''

''எனக்கும் எங்கே மாமா டைம் இருக்கு? காலையில் ஆபீஸ் புறப்படறேன். சாய்ந்தரம்தான் திரும்பறேன்.''

''ஞாயிறு லீவ்தானே வாங்களேன்.''

''பார்க்கலாம் மாமா.''

''பார்க்கலாம் இல்லை, வரணும். அவசியம் வரணும்.''

''..................''

''மாமியார் ஊர் ஏலகிரி மலையில் இருந்தும் வராம இருக்கிறது ஆச்சரியமா இருக்கு. ஏலகிரி மலையைச் சுத்திப் பார்க்க எவ்வளவோ பேர் குடும்பம் குடும்பமாக வர்றாங்க.



நீங்கதான் வரத் தயங்கறீங்க... இந்த வருஷம் 'ஏரில தண்ணீர் வத்தாம நிறைஞ்சிருக்கும். போட்டெல்லாம் நிறைய விட்டிருக்காங்க... அவசியம் வரணும்.''

இவ்வளவு சொல்லி மறுக்க முடியாது எனத் தோன்றிற்று.

''சரி மாமா வர்றோம்.'' என்றான்.

குமாரவேல் தம்பதிகள் புறப்பட்டார்கள்.

அவர்கள் புறப்பட்டுப் போவதற்காகத்தான் ஆர்வம் பொங்கக் காத்திருந்தான்.

இரண்டு நிமிடத்திற்கெல்லாம் குதிக்க ஆரம்பித்தான். சீழ்க்கை ஒலி எழுப்பிக் கொண்டே வெளிக் கதவை மூடிவிட்டு உள்ளே வந்தான்.

தமிழரசன் ஆபீஸ் கொண்டு போவதற்காக மதிய உணவை டப்பாவில் வைத்துக் கொண்டிருந்த ரேவதியை அப்படியே அள்ளினான். அவள் சற்றும் எதிர்பாராதிருந்ததால் இலேசாய் திகிலடைந்தாள்.

''என்னங்க இது விடுங்க...''

''விட மாட்டேங்க...''

''அய்யோ, ஆபீசுக்கு டைமாச்சு.''

''ஆபீஸா? அய்யாவுக்கு இன்னைக்கு ஹோம் வோர்க். வீட்டுப்பாடம்.''

இடுப்பிற்குக் கீழே அவளை வளைத்துப் பிடித்து அந்தரத்தில் தூக்கினான். கூரையில் தொங்கிக் கொண்டிருக்கும் ஃபேன் தலைக்கு முட்டும் போல் இருந்தது.

''ப்ளீஸ் இறக்கி விடுங்க.''

இறக்கி அப்படியே கைகளில் ஏந்திக் கொண்டான், குழந்தையை ஏந்துவதைப் போல... ரேவதி கால்களால் நீச்சலடித்தாள். அவன் விடுவதாக இல்லை.

''ப்ளீஸ்'' என்றவளை, மேலும் பேசவிடாமல் இதழ்களைக் கவ்வினான். தேன் உறிஞ்சினான்.

ரேவதி தமிழரசனின் முதுகை வலிக்க வலிக்கத் திருகினாள். அவனுக்கு அது வலிக்கவே இல்லை. அவளை அப்படியே அள்ளிக் கொண்டு படுக்கை அறைக்குப் போனான். மெத்தையில் கிடத்தினான்.

''விளையாடாதீங்க ஆபீசுக்கு போகணும்.''

''இன்னைக்கு லீவ்.''

''வேணாம்...''

''வேணாம்...''

''ஆபீஸ் போயிட்டு வாங்க... ராத்திரிக்குதான்.''

''நாலு நாளா ஏமாத்திட்டே... மூணு நாளா என்னோட அம்மா இடைஞ்சலா இருந்தாங்க. ஒருநாள் உன்னோட அப்பா அம்மா இடைஞ்சல்.''

''ஒத்துக்கறேன். ராத்திரி வராமலா போயிடுது.''

''எனக்கு இப்போ வேணும்.''

''பகல்ல எனக்குப் பிடிக்காது தெரியுமில்லை.''

''ஏன்?''

''வேணாம்.''

''ப்ளீஸ்...''

''ப்ளீஸ் வேணாங்க...''

''இதுக்கு மேல என் விருப்பம்தான். பொண்டாட்டி ராஜ்ஜியம் இனி கிடையாது. புருஷன் ராஜ்ஜியம் பகலானாலும், இரவானாலும் என்னோட இஷ்டத்துக்கு நீ சம்மதிக்கணும். இனிமே ராத்திரிலயும் வெளிச்சம்தான். வெள்ளையா பளிச்சினு ட்யூப் லைட்டை போட்டுனு என் தேவதையோட சிலை மாதிரி இருக்கிற உடம்பை ரசிக்கணும்.''

ரேவதிக்கு தலை சுற்றிற்று.

அடி வயிற்றிலிருந்து பாம்பு சீறலுடன் எழுந்த மாதிரி பயம் எழுந்தது. நெஞ்சில் அடைப்பு ஏற்பட்ட மாதிரி ஆனது. உடனுக்குடன் கண்ணீர் மாலை கன்னத்தில் இறங்கிற்று.



சத்தமாகவே அழ ஆரம்பித்தாள்.

தமிழரசன் துடித்துப் போனான்.

'ரேவதி! என்ன இது எதுக்கு அழற?''

''................''

''ப்ளீஸ் சொல்லிட்டு அழு. எதுக்கு அழற?''

அவள் அழுகையை நிறுத்தவில்லை.

''ரேவதி! என்னை வேதனைப்படுத்தற...'' கன்னத்தை துடைத்து விட்டான். பக்கத்தில் உட்கார்ந்து தலையை மடியில் தூக்கி வைத்துக் கொண்டான். ''சொல்லு ரேவதி! என்ன ஆச்சு?''

''பகல்லயோ வெளிச்சத்திலேயோ எனக்கு பிடிக்கலைங்க... ஒருவித பயம் உண்டாகுது. நடுக்கம் வந்துடுது'' தேம்பலுடன் கூறினாள்.

''என்ன இது குழந்தை மாதிரி. அழாதே... சரி! நான் ஆபீஸ் போறேன். தைரியமா இரு.''

கட்டிலிலிருந்து கீழே இறங்கினான்.

தமிழரசன் முகம் வாடின மாதிரி இருந்தது.

குழந்தையின் கையிலிருந்து சாக்லேட்டை பறித்த மாதிரி இருந்தான். உடைகளை மாற்றிக் கொண்டு புறப்பட்டான்.

ரேவதி எழுந்து உட்கார்ந்தாள்.

''புறப்படறேன் ரேவதி.''

''ம்.........''

''கொஞ்சம் சிரிக்க மாட்டியா?''

கன்னத்தைத் துடைத்துக் கொண்டு செயற்கையாய் புன்னகையை வரவழைத்துக் காட்டினாள்.

''புறப்படறேன். போய் சாயந்திரம் வர்றேன். நீ கொஞ்சம் யோசிக்கணும் ரேவதி.''

''................''

''நாம ரெண்டு பேரும் கணவன் - மனைவி. நமக்குள்ளே ஒளிவு மறைவு எதுக்கு?''

'கல்யாணமாகி மூணு வருஷம் ஓடிப் போச்சு இன்னும் எதனால உனக்கு அச்சம்?''

''....................''

''மெல்ல மாத்திக்க, குழந்தை இருட்டுக்குப் பயப்படற மாதிரி நீ வெளிச்சத்துக்குப் பயப்படாத மாறிடு.''

ரேவதி கனத்த நெஞ்சோடு கூரையைப் பார்த்தாள்.

''மாறிடணும் ரேவதி. இல்லேன்னா அதுவே மனநோயா மாறிடும்.''

தமிழரசன் புறப்பட்டுப் போனான்.

ரேவதி கட்டிலில் கவிழ்ந்து படுத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

கல்யாணத்திற்கு ஏன் ஒத்துக் கொண்டோம் என்றானது.

இனி தினம் தினம் தொல்லை செய்யப் போகிறான் என்று நினைக்கப் பயம் கூடிற்று-உடம்பெல்லாம் நடுங்கிற்று. நரம்பு களில் தேள் கொத்தின மாதிரி தவிப்பு உண்டானது.

அழுகைதான் மேலும் மேலும் கூடிற்று.

'பெண்ணாய்ப் பிறப்பதே பாவம்...''

''ஆணாய் பிறப்பது உத்தமம்.''

'பெண் கண்ணாடி மாதிரி, சின்னக் கீறல் விழுந்தாலும் போச்சு. ஆண் அப்படி இல்லை இரும்பு மாதிரி!'

மாலை அலுவலகத்திலிருந்து வரும்போதே ஒருவித ஏகாந் தத்துடன் வந்தான் தமிழரசன்.

''என்ன ரேவதி, ஏன் ஒரு மாதிரியா இருக்கே?''

''இல்லைங்க நல்லா இருக்கேன்.''

''பொய் பேசாத... முகத்திரையில் எல்லாம் தெரியுது. வாடி இருக்கு.''

''இல்லைங்க..''



ஆபீஸ் பையை சோபாவில் போட்டுவிட்டு ரேவதியை அணைத்துக் கொண்டான். கன்னத்தை நாக்கால் பிரஸ் செய் தான். ''கொஞ்சம் கொஞ்சமா மாறிக்கோ கண்ணம்மா... புருஷன் பொண்டாட்டிக்குள்ள இரவு வேற பகல் வேறயா...''

நெஞ்சு வெடிக்கும் போலானது.

அசதி போகக் குளித்துவிட்டு வந்தான்.

டி.வி.யில் இருவருமாய் நிகழ்ச்சிகள் பார்த்தார்கள்.

இரவு கவிழ்ந்தது.

இருவரும் கூடினார்கள்.

கர்ப்பத் தடைக்காக தினம் தினம் சாப்பிட்ட மாத்திரையை இன்று சாப்பிடவில்லை.

ஊடலுடன் கூடிய கூடல் வெகுவாய் இனித்தது.

உலகம் மறந்தார்கள்.

ஏதோ ஒரு லோகத்தில் பறந்தார்கள்.

அடையாளம் தெரியாத மாதிரி இருந்தான் மதன்.

இங்கே குடிகாரனாய் இருந்தபோது கன்னங்களெல்லாம் உப்பிக் கொண்டிருந்தது. உடம்பில் சதை போட்டிருந்தது தொப்பை விழுந்திருந்தது. இப்போது அவைகள் எல்லாம் காணாமல் போயிருந்தன. கறுத்திருந்தான். கொஞ்சமாய் தாடி வைத்துக் கொண்டிருந்தான். தாடியைத் தாண்டியும் கன்னத்தில் பள்ளம் தெரிந்தது. முன் பக்கம் வழுக்கையும் போட்டிருந்தது.

வேலூர் மத்தியச் சிறைச்சாலையிலிருந்து நேரே ஏலகிரி மலைக்குதான் வந்தான்.

ஏழு வருடங்கள் உலகின் எந்தத் தொடர்பும் இல்லாமல் கூண்டுக்குள்ளேயே போய் விட்டது.

இவ்வளவு காலம் அனுபவித்த சிறை தண்டனை அவனுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. ரேவதி அனுபவித்த சித்ரவதைக்கு முன்னே இந்தத் தண்டனை சாதாரணம்.

'என்னால்தானே...'

மௌனமாக அழுதாள்.

நெஞ்சுக்குள்ளேயே அழுதாள்.

தமிழரசன் தூங்கிப் போனான்.

ரேவதிக்குத் தூக்கம் வரவில்லை.

மனம் உருண்டு உருண்டு புரண்டது.

'எத்தனை நாளைக்கு மறைக்க முடியும்?'

'கத்திரிக்காய் முத்தினால் கடைத் தெருவுக்கு வந்தே தீரும். மறைக்கவே முடியாது'

'ஏதாவது பொய் சொல்லி விட்டால்...?'

'என்ன பொய் சொல்வது?'

'பொய்யா இல்லை? சின்ன வயசில் தீ பிடித்துக் கொண்டது அந்தத் தழும்புதான் இது என்று சொல்லி விட்டால்...'

'தீப்புண் போலவா இருக்கிறது? நகத்தால், பற்களால் குதறியது...

'அய்யோ' நினைக்க நினைக்கப் பதறியது.

'என்ன பொய் சொல்வது?'

'ஏன் இத்தனை நாள்மறைச்சேன்னு கேட்டா... உடம்புல ஊனத்தை வைச்சிட்டு... வெட்கப்படற மாதிரி நடிச்சியான்னு கேட்டா... என்ன சொல்றது?

'அப்படிக் கேட்பாரா?'

'என்மேல் உயிரையே வைச்சிருக்கிறவர் இப்படி மறைச்சதைப் பெரிய துரோகமா நினைப்பாரா?'

முடிவில் -

'அவரிடம் உண்மையைச் சொல்லிடறதுதான் நல்லது. கொஞ்சம் கொஞ்சமா மனசுக்குள்ள போராடறதை விட, காலமெல்லாம் வேதனைப் படறதைவிட, ஏதாவது பொய்யைச் சொல்லி அதைத் தெளிவா சொல்ல முடியாமத் தவிக்கிறதை விட, சொல்லிடறது உத்தமம்' என்று முடிவெடுத்தாள்.



தமிழரசன் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

அப்போதே அவனை எழுப்பி எல்லா உண்மைகளையும் கக்கி விட வேண்டும் என்கிற அரிப்பு உண்டானது.

எழுப்பவில்லை.

ஒரு நல்ல சூழ்நிலையில், சந்தோஷமான கணத்தில் சொல்ல வேண்டும் என்றெண்ணிக் கொண்டாள்.

மறு நாள் விடிந்தது.

சொல்லிவிட வேண்டும் என்று முடிவெடுத்த காரணத்தினால், நாக்கு துடித்துக் கொண்டே இருந்தது.

அன்று சனிக்கிழமை.

'ரேவதி?'

'என்னங்க?'

''நாளைக்கு சன்டே.'

''ஆமாம் என்ன சந்தேகம்?'

'ஏலகிரி மலைக்கு போகப் போறோம். உன்னோட அப்பா கூப்பிட்டதுக்குப் போன, மாதிரியும் இருக்கும். நமக்கும் சுற்றுலா போன மாதிரியும் இருக்கும்.''

''சரிங்க.''

''அட சந்தோஷத்தைப் பாரு. அம்மா ஊருக்கு போறதுன்னா பொம்பளைங்களுக்குக் கொண்டாட்டம்தான்...''

**ம**தன் ஏலகிரி மலையில் நாடோடி மாதிரி அலைந்து கொண்டிருந்தான்.

சிறையிலிருந்து விடுதலையானபோது கொஞ்சம் காசு கொடுத்திருந்தார்கள். அதைத்தான் சிறுக சிறுகச் செலவழித்துக் கொண்டிருந்தான்.

மும்பை, கல்கத்தா என்று எங்கேயாவது வெளி மாநிலத்து நகரங்களுக்குச் சென்று, ஏதாவது வேலை செய்து பிழைத்துக் கொள்ள வேண்டும் என்கிற திட்டம் இருந்தது.

முன்னதாக ரேவதி எப்படி இருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஒரு ஆசை.

ரேவதியைப் பற்றி யாரிடம் விசாரிப்பது என்றும் அவனுக்குப் புரியவில்லை.

இரண்டு முறை குமாரவேலைப் பார்த்தான். சாலையில் அவர் காரில் போய்க் கொண்டிருந்தார். மதன் முகத்தை திருப்பிக் கொண்டான். மதன் மீது அவருக்குக் கோபம் தீர்ந்திடாமல் இருக்க வேண்டும். தீர்ந்து போகுமா?

காரை குமாரவேலுதான் ஓட்டிக் கொண்டு போனார். அதிலிருந்து ஒன்றைத் தெரிந்து கொண்டான். இனி அவர் எந்த டிரைவரையும் நம்பப் போவதில்லை என்று.

**ஞா**யிற்றுக் கிழமை.

காலை பத்து மணிக்கெல்லாம் ஏலகிரி மலைக்கு வந்து விட்டார்கள் தமிழரசனும் ரேவதியும்.

இவர்களின் வருகைக்காக குமாரவேல் வெளியே எங்கேயும் போகாமல் காத்திருந்தார்.

''வாங்க... வாங்க... பரவாயில்லையே. வந்துட்டீங்களே...

''ஏன் மாமா அப்படிக் கேட்கிறீங்க?''

''வர மாட்டீங்களோன்னு நினைச்சேன். அடிக்கடி வந்து போனாத்தானே... எங்களுக்கு யார் இருக்காங்க..? நீங்கதானே; ஏலகிரி மலைல அஞ்சு பில்டிங் இருக்கு. எதுக்கு? யாருக்கு? உங்களுக்குதானே..? வந்து பார்த்துக்கவே கஷ்டப்படறீங்க... வாரத்துக்கு ஒரு நாளாவது வந்து போலாமில்லையா?''

தமிழரசன் புன்னகைத்தான்.

பிறகு நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அம்மா சமையல்காரியை வைத்துக் கொண்டு சைவம், அசைவம் என்று கலக்கி இருந்தாள்.

மூச்சு முட்டும் வரை சாப்பிட வைத்தார்கள். சாப்பிட்ட பிறகு ஒரு மணி நேரம். ஆழ்ந்து தூங்கினார்கள். தூங்கி எழுந்ததும் குளித்து விட்டு உடை மாற்றிக் கொண்டு ஏலகிரி மலையைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார்கள். இஞ்ச் இஞ்ச்சாய் பார்த்த இடம்தானே. பசுமை சூழ்ந்த பிரதேசங்களை நூறு முறை, ஆயிரம் முறை, லட்சம் முறை பார்த்தாலும் சலிப் பேற்படாது.



பங்களாவிலிருந்து வெளியே வந்தார்கள்.

குமாரவேல் கார் எடுத்துப் போகச் சொன்னார். கார் சாவியைக் கொடுத்தார்.

இருவரும் காரில் வந்து உட்கார்ந்தார்கள்.

ரேவதிக்கு காரில் தினமும் பள்ளிக்கூடம் போய் வந்தது. மதன் ஜோலார் பேட்டையில் அந்த ஒதுக்குப்புறமான வீட்டிற்கு டாக்டர் வீடு என்று அழைத்து போனது. அங்கே சேனா குதறி எடுத்தது. மொத்தமும் ஞாபகத்தில் வந்து குத்திற்று. நெஞ்சம் வெடிக்கும் போலிருந்தது. கண்களில் கண்ணீர் முட்டிற்று. காரை இயக்கிக் கொண்டிருந்த தமிழரசனின் தோளில் சாய்ந்து கொண்டாள். தோளில் கண்ணீர் துளி பட்டது.

''என்ன ரேவதி?''

''ஒண்ணுமில்லைங்க..''

''அம்மா ஊருக்கு வந்து, புருசனோடு கார்ல ஊர் சுத்தற சந்தோஷத்துல ஆனந்தக் கண்ணீரா?''

''சொல்றேங்க. எங்கேயாவது தனியா போலாம். உங்க கிட்ட நிறையப் பேசணும்.''

''நிறைய இருக்குங்க... நெருப்பை கட்டி வைச்சமாதிரி என் மனசுல கட்டி வைச்சிருக்கறதை இப்போ கொட்டப் போறேன்.''

''என்ன ரேவதி புதிர் போடற...?''

''புதிர்தாங்க...'' மேலும் அவளுக்குக் கண்ணீர் வந்தது.

என்ன சொல்லப் போகிறாளென்று தமிழரசனுக்கு குழப்பம் உண்டானது.

'போட் ஹவுஸ் போலாமா?''

'ம்.'

காரை படகுத் துறைக்கு ஓட்டினான்.

மே, ஜுன் கோடைக்காலம் நகர்ந்தும் கூட, ஏரியில் பளிச் சென்று தண்ணீர் நிறைந்து கொண்டிருந்தது.

காரிலிருந்து இறங்கி இருவரும் படகை ஓட்டிப் போனார்கள். 'வாங்க ஸார்.' படகுக்காரன் பற்கள் தெரிய வரவேற்றான். இதுபோன்ற இளஞ்ஜோடிகள்தான் கேட்ட காசைத் தருவார்கள். கூடுதலாகவும் காசு கேட்க முடியும்.

''நீ போட்ல இருந்து இறங்கிக்க... நானே ஓட்டிக்கிறேன்.'' என்றான் தமிழரசன்.

''ஏரி ரொம்ப ஆழம் ஸார்.''

''எனக்குப் படகோட்டவும் தெரியும். நீச்சலும் தெரியும்.''

படகுக்காரர் இறங்கி கொண்டார். தமிழரசன் ரேவதி இருவரும் படகேறி உட்கார்ந்தார்கள்.

பூங்காவில் பலா மரத்திற்கு அடியில் உட்கார்ந்து, 'எவ்ளோ பெரிய பழம்! மேல விழுந்தா என்னாகும்? என்று யோசித்துக் கொண்டிருந்த மதன். ரேவதியையும் தமிழரசனையும் பார்த்து விட்டான்.

முழுமையாகப் பார்ப்பதற்குள் அவர்களின் படகு நகர்ந்து விட்டது. அது உன் புருஷனா? சந்தோஷமா இருக்கியா? அது போதும் எனக்கு. இதயத்தில் மத்தாப்பூ பொங்கிற்று.

இருவரின் முகங்களையும் சரியாகப் பார்க்கவில்லை.

'கடைசியாக ஒருமுறை அவர்களின் முகங்களைப் பார்த்து விட்டு, இந்த ஊரை விட்டே, இந்த மாநிலத்தை விட்டே எங்கே யாவது போய்விடவேண்டும். என்று சொல்லிக் கொண்டான்.

அவனும் இன்னொரு படகை நோக்கி வந்து, ஏறி உட்கார்ந்து அவனே துடுப்புப் போட்டுக் கொண்டு நகர்ந்தான்.

ரேவதி கண்ணீர் பொழிய, பொழிய நடந்ததையெல்லாம் கூறினாள். மனம் சுத்தமான மாதிரி இருந்தது.

கேட்டுக் கொண்டிருந்த தமிழரசன் நெஞ்சில் எரிமலை உருகிற்று. கண்களில் நெருப்பு எரிந்தது. முகம் கறுத்துப் போயிற்று. பற்களைக் கடித்துக் கொண்டான். 'அடிப்பாவி! உன்கிட்ட இந்த ஒரு கதைதான் இருக்கா? இன்னும் நிறைய இருக்கா? எவன் கிட்டேயோ கெட்டுப் போயிட்ட நீ எனக்கு எப்படி மனைவி ஆகலாம்? நான் எவ்ளோ சுத்தமானவன்



தெரியுமா? என் குடும்பம் எவ்ளோ ஆச்சாரமானது தெரியுமா? உங்கப்பன் ஏமாத்தி என் தலையில் கட்டிட்டான்.'' கன்னத் தசைகள் ஆடித் துடித்தது.

ரேவதி கலங்கிப் போய்விட்டாள். தமிழரசனிடமிருந்து இப்படியொரு திராவகமான வீச்சு வரும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

''மன்னிச்சிடுங்க...'' என்றாள். அதற்கு மேல் பேச முடியவில்லை.

''உன்னை மாதிரி தாசியை மன்னிக்கவே கூடாது.'' ரொம்ப ஆவேசமாய் தமிழரசன் ரேவதியின் கழுத்தை நோக்கி கைகளைக் கொண்டு போனான்.

பயந்து, நடுங்கி, எழுந்து நின்றாள். தமிழரசனும் எழுந்தான். ரேவதியின் கழுத்தைப் பிடித்தான். அவள் திணறினாள். மூச்சுக்குத் தடுமாறினாள்.

பார்த்துக் கொண்டிருந்த மதன், 'டேய்...'' என்று கத்தினான். படகை வேகமாக இயக்கினான். யாரோ பார்த்து விட்டார்கள் என உணர்ந்த தமிழரசன், ரேவதியை படகிலிருந்து கீழே தள்ளி விட்டு படகை வேகமாக இயக்கிக் கொண்டுப் போனான்.

மதன் பெரிதாக கூச்சல் போட்டு விட்டு, ஏரியில் குதித்தான்.

வேகமாய் நீந்திக் கொண்டு, ரேவதி விழுந்த இடத்திற்குப் போனான். மூழ்கினான்.

ரேவதியை மீட்டுக் கொண்டு வந்து, படகில் சேர்த்தான். அவள் நிறையத் தண்ணீர் குடித்து விட்டிருந்தாள். அதை வெளியேற்றினான்.

கரையை நோக்கிக் கூச்சல் போட்டான்.

நான்கைந்து படகுகள் அவர்களை நோக்கி வந்தது.

மதனின் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது. 'இப்பத்தானே ரேவதி சந்தோஷமா இருக்கான்னு சந்தோஷப் பட்டேன். அடுத்த நிமிஷமே இப்படி ஆகிப் போச்சே...' நெஞ்சு அடைக்கும் போலிருந்தது.

தமிழரசன் தப்பித்து போவதற்காக தூரத்தில் போய்விட்டான்.

மதன் வேறு படகுக்காரர்களிடம் ரேவதியை ஒப்படைத்து விட்டு தமிழரசனை நோக்கிப் படகில் பறந்தான்.

அவனுக்குள் இனம் புரியாத ஒரு பேய் நுழைந்து கொண்டது.

வெறி?

கொலை வெறி?

தன்னை 'அண்ணா அண்ணா' என்றழைத்த ரேவதி, தன்னால் சீர்குலைந்ததால் வேதனையடைந்தான். சிறையிலிருந்த காலம் முழுவதும் ரேவதியைப் பற்றியே கவலையுற்றிருந் தான். ரேவதி நன்றாக வாழ வேண்டுமென்று ஒவ்வொரு நாளும் கடவுளை வேண்டிக்கொண்டிருந்தான். அவளுக்கு இப்படி யொரு இன்னொரு கொடுமை என்றதும் தாங்க முடிய வில்லை. இரத்தத்தில் வெறி மிருகங்களாய் ஏறிக் கொண்டது.

படகினை வேகமாக இயக்கினான்.

தமிழரசன் அவனுடைய படகைக் கரையோரம் நிறுத்தி விட்டு ஓடினான்.

மதனும் பின் தொடர்ந்து ஓடினான்.

காடு,

புதர்,

பாறைகள்,

எல்லாம் கடந்து தமிழரசன் மதனிடம் மாட்டிக் கொண்டான்.

கல் தடுக்கி கீழே விழுந்த தமிழரசன் மீது, மதன் பெரிய கல்லை ஓங்கிப் போட்டான். தலை நசுங்கியது. கால்களும் கைகளும் துடித்தது. செத்துப் போனான்.

மதன் மீண்டும் சிறைக்குப் போனான்.

அவன் கம்பிகளை எண்ணிக் கொண்டிருக்கவில்லை.

தன்னையே எண்ணிக் கொண்டிருக்கிறான். தான் செய்தது சரியா என்று எண்ணிக் கொண்டிருக்கிறான்.

ரேவதி காப்பாற்றப்பட்டாள், விதவையாய் தமிழரசனோடு கடைசியாய் கூடியதில் வயிற்றில் குழந்தை உண்டாகி இருந்தது.